ஸ்ரீ:



ஸ்ரீஸூக்திமாலா மலர்-4.

பரமகாருணிகரான
பெரியவாச்சான்பிள்ளை
அருளிச்செய்த

# முதல் திருவந்தாதி வ்யாக்யானம்

[பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டுடன், கூடியது]

★

பதிப்பாசிரியர்:-

K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், அட்வகேட்,

★

கிடைக்குமிடம்:-

...ருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீநிவாஸம்பிரஸ், புத்தூர், திருச்சி.



302

॥ श्रीः ॥

श्रीमते रामानुजाय नमः ॥

श्रीमत्कृष्णसूरये नमः ॥

பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திமாலா  மலர் 4.

பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை

அருளிச்செய்த

# முதல் திருவந்தாதி வ்யாக்யானம்.

[ப்ரமாணத்திரட்டுடன் கூடியது.]

[பதவுரையுடனும் அருப்பதவுரையுடனும் கூடியது.]

UNIVERSITY EXTENSION LIBRARY
17 OCT 1962
MADURAI

***

பதிப்பாசிரியர்.—

K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

***

விலை ரூ. **1—14—0**

தபால் கூலி (ரிஜிஸ்டர் மூலம்) அணு 6.

## பொய்கையாழ்வார் திருநக்ஷத்ர தனியன்.

तुलायां श्रावणे जातं काञ्च्यां काञ्चनवारिजात् ।
द्वापरे पाञ्चजन्यांशं सरोयोगिनमाश्रये ॥

துலாயாம் ஶ்ராவணே ஜாதம் காஞ்ச்யாம் காஞ்சநவாரிஜாத் ।
த்வாபரே பாஞ்சஜந்யாம்ஶம் ஸரோயோகிநமாஶ்ரயே ॥

काञ्च्यां सरसि हेमाब्जे जातं कासारयोगिनम् ।
कलये यः श्रियःपत्यूरविन्दीपमकल्पयत् ॥

காஞ்ச்யாம் ஸரஸிஹேமாப்ஜே ஜாதம் காஸார யோகிநம் ।
கலயே யः ஶ்ரிய:பத்யூரவிந்தீபமகல்பயத் ॥

### வாழித்திருநாமம்.

செய்ய துலா வோணத்திற் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சி மாநகரம் செழிக்கவந்தான் வாழியே
வையந்தகளி நூறும் வகுத்துறைத்தான் வாழியே
வனசமலர்க்கருவதனில் வந்தமைந்தான் வாழியே
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன்முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே.

## பெரியவாச்சான் பிள்ளை திருநக்ஷத்ர தனியன்.

सकलद्राविडाम्नायसारव्याख्यानकारिणम् ।
श्रावणे रोहिणीजातं कृष्णसंज्ञमहं भजे ॥

ஸகலத்ராவிடாம்நாயஸாரவ்யாக்யாநகாரிணம் ।
ச்ராவணே ரோஹிணீஜாதம் க்ருஷ்ணஸம்ஜ்ஞமஹம் பஜே ॥

### வாழித்திருநாமம்.

தண்மை சிங்கம் ரோகிணி நாள் தழைக்க வந்தோன் வாழியே
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே
மறை நாலின் பொருள்தன்னைப் பகுத்துரைத்தான் வாழியே
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே
அபயப்ரதராஜர் தாள் அனவரதம் வாழியே.

---

20107

ஸ்ரீ:

# முகவுரை.

---

"முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி" என்றும் "காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா" என்றும் பெருமை பெற்றதும், பிரமன் அசுவமேதயாகம் செய்த இடமுமாகிய ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தில் சொன்னவண்ணம் செய்தபெருமாள் (யதோக்தகாரீ) ஸந்நிதியில் பொற்றாமரைப் பொய்கையில், பதுமமலரில், பரஞ்சோதியான பதுமநாபனின் பஞ்சாயுதங்களில் பிரதமாயுதமான பாஞ்சஜந்யாம்ஶராய், துலா (ஐப்பசி) மாதத்தில், திருவோணத்திருநாளில் பொய்கைப்பிரான் கவிஞர் போரேறு திருவவதரித்தருளினர். எம்பெருமானும் அவருடைய பாரிஷதர்களும் வருவதைப் படைபோர்புக்குமுழங்குமப் பாஞ்சசன்னியம் காட்டுவது போல், மற்ற ஆழ்வார்களுக்கு முன் அவதரித்து, இவ்வாழ்வார் மற்றவர்கள் அவதரிக்கப்போவதைக் காட்டியருளினர். "ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணும் ஹ்ருதயாநி வ்யதாரயத்" [அந்த கோஷம் திருதராஷ்ட்ரபுத்ரர்களின் ஹ்ருதயங்களைப் பிளந்தது.] என்கிறபடியே பரமதஸ்தர்களின் ஹ்ருதயங்களைப் பரதத்வநிர்ணயம் செய்து பேதித்தார்.

"யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை"

என்று ச்வேதாச்வதர உபநிஷத்தில் சொல்லியபடியே, தன்னுடைய நாபீகமலத்தில் நான்முகனாகிய பிரமனை முதலில் படைத்துப் பண்டை நான் மறைகளை அவனுக்கு உபதேசித்ததைப்போல், இவ்வாழ்வாரையும் பத்மத்தில் அவதரிப்பித்துப் புதுமறைகளாகிய தமிழ்வேதங்களை இவ்வாழ்வாருக்கு முதலில் உபதேசித்து, இவர்மூலமாக அவற்றை அவதரிப்பித்தருளினன் நாராயணன். சக்ரவர்த்தித்திருமகனாகிய பெருமாளால் திருவாராதனம் செய்யப்பெற்ற ரங்கநாதன் பெரிய பெருமாள் என்ற பெயர்பெற்றதுபோல், பரகாலகவியினால் "செந்தமிழ் பாடுவார்" என்றும், படைத்தான்கவியாகிய நம்மாழ்வாரால் "செஞ்சொற்கவிகாள்" என்றும், "இன்கவிபாடும் பரம கவிகள்" என்றும் பாடப்பட்ட பெருமையும் இவருக்கு உண்டு. முதலாழ்வார்கள் மூவரிலும் முதல்வர் இவரே. "திருவோணத்தான் உலகாளும் என்பார்களே" என்று பெரியாழ்வாரால் மங்களா

சாஸனம் செய்யப்பட்டதும், பகவானுடைய நக்ஷத்ரமானதுமான திருவோணத்தில் திருவவதரித்த பெருமை இவ்வாழ்வார் ஒருவருக்கே உண்டு. ஓடித்திரியும் யோகியான இவர் யோகாப்யாஸத்தினுல் ஆயிரக்கணக்கான வருஷங்கள் எழுந்தருளியிருந்து மண்ணுய்ய, மண்ணுலகில் மனிசருய்ய, வன்பெருவானகமுய்ய, அமரருய்ய ஸ்ரீவைஷ்ணவதர்மத்தைப் பரவச்செய்து, ஜ்ஞானப்ரதமான பாஞ்சஜன்யத்தைப்போல், முதல் திருவந்தாதி பாடி, ஞானச்சுடர்விளக்கேற்றி வையத்தை வாழ்வித்தருளினுர். "அடியார்கள் குழாங்களை— உடன்கூடுவதென்றுகொலோ" என்று ஆசைப்பட்டிருக்கும் அச்சுதன் இம்முதலாழ்வார்கள் மூவரும் இடைகழியில் சேர்ந்தபோது திருமகளும் தானுமாகக் கூடி நின்று நெருக்கியகாலத்தில் முதலில் பாடப்பட்ட பெருமையையுடைய பிரபந்தம் இது. திருப்பல்லாண்டைப் போல் எம்பெருமான் ஸேவைஸாதிக்கும்போது அவன் முன்னிலையில் பாடப்பெற்ற பெருமை இப்பிரபந்தத்துக்கும் உண்டு. "வருத்தும் புறவிருள் மாற்றவெம் பொய்கைப் பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத் திரித்தன்றெரித்த திருவிளக்கு" என்று திருவரங்கத்தமுதனர் திருவாய்மலர்ந்தருளிய இராமானுசநூற்றந்தாதி பாசுரத்தில் இப்பிரபந்தத்தின் பெருமை பேசப்பட்டது. சுடராழியானடிக்கே சூட்டிய சொல் மாலையாகிய இப்பிரபந்தத்தின் பெருமை "ஆராயும் சீர்மைத்தோ" என்னுப்படி இருந்தாலும் இங்கு சுருங்கச் சொல்லப் படுகிறது. 'மண்ணுகிய பூமி மாயையின் மயக்கமே; நீர்நிறைந்த கடலும் கானல் நீரே; உலகமும் உருவெளித் தோற்றமேயொழிய உண்மையல்ல; ஒன்றே தத்துவம்; அதற்கு ரூபம், குணம், சேஷ்டிதங்கள் முதலிய ஒன்றும் கிடையாது' என்கிறவர்களுடைய பிடரியைப் பிடித்துத்தள்ளுவதுபோலிருக்கிறது 'வையம் தகளியா' என்கிற முதல் பாசுரம். 'ஜந்மாத்யஸ்ய யத:' எனப்பட்ட ஜகத்ஸ்ருஷ்டி முதலிய தொழிலுக்கு உபகரணங்களாகிய ஸர்வஜ்ஞத்வ ஸர்வ ஶக்தித்வங்களாகிய குண முண்டென்று உணர்த்தப்படுகிறது. 'வையம்', 'வார்கடல்' என்று லீலாவிபூதி காட்டப்படுகிறது. 'சுடராழியான்' என்று அஸாதாரணமான திவ்யமங்களவிக்ரஹம் தெரிவிக்கப்படுகிறது. நித்யவிபூதியோகமும் உணர்த்தப்படுகிறது.

'சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை' என்பதினால் பாமாலை பாடுவது பரமபுருஷார்த்தம் என்னும் மறையின் முழுப் பொருள் மாந்தர்களுக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது. "நெறி வாசல் தானேயாய் நின்றானை" என்று அவனே உபாயமும் உபேயமும் என்று உரைக்கப்படுகிறது. "இறையும் நிலனும் இருவிசும்பும் காற்றும் அறைபுனலும் செந்தீயுமாவான்" என்றும் மற்றும் பல விடங்களிலும் ஸர்வசரீரியாயிருப்பவன் புருஷோத்தமனென்று காட்டப்படுகிறது. "வாயவனையல்லது வாழ்த்தாது....காணா கண் கேளா செவி" என்றும், "திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன்" என்றும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முக்யலக்ஷணமான மறந்தும் புறந்தொழாமை கோஷிக்கப்படுகிறது.

இந்த பிரபந்தத்தில் பிரதிபாதிக்கப்படும் பொருளாகிய ஸ்ரீமந் நாராயணனின் பெருமையையும், எதிர்த்தட்டாக எடுக்கப்படும் எருத்துக்கொடியுடையானுடைய எளிமையையும், "அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள் ஊர்தி, உரை நூல் மறை உறையும் கோயில்—வரை நீர், கருமமழிப்பளிப்பு கையது வேல் நேமி உருவமெரி கார் மேனி ஒன்று" என்று பலவிதமாகப் பாரோரறியப் பாடியிருக்கிறார் பொய்கையாழ்வார். அழிப்பவன் அரன்; அளிப்பவன் அச்சுதன். அரனைவிட்டு அகலவேண்டும்; நாரங்கள் சேருமிடமான நாராயணனையே நாடவேண்டும். மூடாத்மாவான மாடு மலையாளிக்கு வாஹனம்; வேதஸ்வரூபியான விஹங்கராஜன் விஷ்ணுவுக்கு வாஹனம். பசுபதியைப் பேசுவது பௌருஷேயமான பாசுபதாதி ஆகமங்கள்; விஷ்ணுவை விளங்கவைப்பவை அநாதியான, அபௌருஷேயமான வேதங்கள். 'அறுத்துத்தா பொசுக்கித்தா' என்னும் கடினஹ்ருதயமுடைய கண்ணுதலோனுக்கு இருப்பிடமோ கடினமான கயிலை மலை; 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம்' என்று, பக்தியுடன் கொடுக்கும் நீர்போரும் என்கிற நீர்மையையுடைய நாராயணனுக்கு இருப்பிடம் இனிமையான பாற்கடல். கல்நெஞ்சையுடைய கயிலையம்பதிக்குக் கொலைத்தொழில். காக்கும் தொழிலினன் கண்ணபிரான். சிவனுடைய ஆயுதமோ சூலாயுதம்; அகாரவாச்யனுடைய ஆயுதமோ அருளாழி. "ரூபமேவாஸ்யைதந்மஹிமாநம்

வ்யாசஷ்டே" [இவனுடைய உண்மை மஹிமைகளை உருவமே உணர்த்தும்.] என்றும், "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்றும் சொல்லுகிறபடியே "பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்" என்கிற விக்ரஹவைலக்ஷண்யமுடையவன். கண்டவர்கண் குளிர்ந்து கண்படைத்த பிரயோசனம் பெற்றோமென்று களித்துக் கூத்தாடும்படியாயிருக்கும் இவனுடைய வடிவழகு. 'காணிலும் உருப்பொலார்' என்று பூச்சாண்டிபோலிருக்கும் புராரியின் நெருப்புக்கக்கும் உருவம் காணக்கண் கூசும்படியாயிருக்கும்.

"யத்கடாக்ஷாதயம் ஜந்துரபுநர்ஜந்மதாம் கத:" என்று வாதிகேஸரி அழகியமணவாளஜீயர் அருளிச்செய்தபடியே அபார கருணாம்ருத ஸாகரரான பெரியவாச்சான் பிள்ளை இப்பிரபந்தத்திற்கு இரண்டு படியாக வியாக்கியானம் செய்யநேர்ந்தது நமது பாக்யமே. நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கு ஸபாதலக்ஷக்ரந்தமாகிய பாரதக் கணக்கிலே வியாக்கியானம் செய்தருளிய நாலாயிரப்பெருக்கரான ஸ்ரீமத் க்ருஷ்ணஸூரி க்ருஷ்ணத்வைபாயனராகிய வியாஸரோ அல்லது ஸ்ரீஜயந்தியில் உதித்த ஸ்ரீகிருஷ்ணரேயோ என்று இவருடைய பிரபாவத்தைப் பார்த்த பெரியோர்கள் பணித்தருள்வர்கள். "விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களாக உள்ளவர்களுக்கு, திருப்பல்லாண்டு முதலிய திவ்யப்ரபந்தங்களையொழிய வேறு கதியில்லை; அன்றியும் பூர்வாசார்யஸம்ப்ரதாய பரம்பரையாக வந்த திவ்யப்ரபந்ததாத்பர்யங்களை அறிந்துகொள்வதற்கு, பெரியவாச்சான் பிள்ளை செய்தருளின வியாக்கியானங்களையொழிய வேறு கதியுமில்லை. ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் பெரியவாச்சான் பிள்ளை ஸம்பந்தப்பட்டு அவருக்கு சிஷ்யகோடிகளாகவேயிருப்பார்கள்." என்று ஆழ்வாராசாரிய வைபவக்ரந்தத்தில் பெரியவாச்சான் பிள்ளையின் பெருமை பேசப்பட்டிருக்கிறது.

कलिवैरिकृपापात्रं कारुण्यैकमहोदधिं ।
श्रीकृष्णप्रवणं वन्दे कृष्णासूरिमहागुरुम् ॥

கலிவைரிக்ருபாபாத்ரம் காருண்யைகமஹோததிம் ।
ஸ்ரீக்ருஷ்ணப்ரவணம் வந்தே க்ருஷ்ணஸூரிமஹாகுரும் ॥

[கலிவைரிதாஸரென்னும் திருநாமத்தையுடைய நம்பிள்ளையின் கருணைக்குப் பாத்ரபூதரும், காருண்யத்திற்கு ஒரே கடலாயிருப்பவரும்; ஸ்ரீக்ருஷ்ணனிடமே ஈடுபட்டிருப்பவருமான பெரியவாச்சான் பிள்ளையென்னும் பேராசிரியரை வணங்குகிறேன்.]

இங்ஙனம்,
தொண்டரடிப்பொடி,
கி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.

விரோதி
மாசியில் திருவோணம்.

## முதல் திருவந்தாதி வ்யாக்யாந ப்ரமாண அநுக்ரமணிகை.


அ

அக்நிஹோத்ரா 27
அக்ரதஸ்தேகமி 90
அதராமோ 94
அத்யுத்கடை: 88
அத்வைவநஷ்டம் 22
அநஶ்நந் 59
அந்த: ப்ரவிஷ்ட: 17
அந்தரிக்ஷகத: 45
அவஶா: ப்ரதி 36
அவஶ்யமநு 69
அவஷ்டப்ய 43
அஸங்நேவ 102
அஸ்மாந்ஹந்தும் 95
அஸ்மாபி: துல் 89
அஸ்யேஶாநா 78

ஆ

ஆத்மாநம்மாது 48
ஆத்மாவா 83
ஆநயைநம்ஹரி 86
ஆப்ரயாநாத் 28

ஏ

ஏகாம்தரணிமா 91
ஏஷஏவஸாது 98

க (क)

காலேஷ்வபி 32

ग

குணநாமாகர: 25

ச (च)

சஞ்சலம்ஹி 13

ஜ (ज)

ஜாயமாநம்ஹி 18
ஜாயஸ்வ 62
ஜுஷ்டம்பதா 74

த (त)

ததபஶ்யமஹம் 96
ததுபர்யபி 53
தத்தஸ்ய 60
தத்ஜ்ஞாந 72
தமஸ: பரமோ 16
தஸ்யதீரா: 75
தஸ்யயதா 99
தஸ்யாஹப்ரிக்ர 13
தேநமைத்ரீ 30
த்ருணீக்ருத 71
த்யஜாபட 57
த்வயிகிஞ்சித் 93

द

தேவர்ஷி 80
தேவநாப்வவ்ரு 20
தைவீஹ்யேஷா 19
த்விஷதந்நம் 34

घ

தர்மஜ்ஞ:ஶரணு 30

ந (न)

நகஶ்சிந் 1
நஜாயதே 61
நமேமோகம் 24
நக்ஷமாமி 87
நிர்விஶேஷசிந் 7
ந்யாநுக்ருஹீ 5

ப (प)

பதிம்விஶ்வ 8
பரமாபதமா 52
பரம்த்ரு 15
பாண்டரஸ்யா 66
பிதரம்ரோச 37
பிஶாசா 11
புஷ்பாங்கரா 44
ப்ரக்ருஷ்ட 67
ப்ரபவதி 55

व

பஹுவோந்ருப 26
பஹுஶாகா 41
ப்ரஹ்மவிதாம் 58

भ

பஸ்மச்சந்ந: 77

ப்ரேஷோதேதி 6
ப்ராதரிகச்சதி 42

ம (म)

மதுஸூதந 56
மநஸாது 40
மமப்ராணஹி 34
மஹாத்மாநஸ் 70
மாஶுச: 39
மூடோயம் 63

ய (य)

யதோவாசோ 10
யதிவா 86
யஶ்சராமம் 31
யஸ்த்வாம் 35
யஸ்யாத்மா 68
யஸ்ஸர்வஜ்ஞ: 9
யஜ்ஞேநதாநேந 29
யுவதிஶ்சகுமா 82
யுவாகுமார: 81
யேயதாமாம் 46

ர (र)

ரமமாணவநே 54
ராஜஸம்ஶ்ரய 79

வ (व)

வத்யதாம் 88
வர்ஷேணபீஜ 85
வாமாங்குஷ்ட 49
வித்யாந்யா 73
விஶதேததந 51
விஷயாவிநிவர் 15
விஜ்ஞாயப்ர 84
வேதஶாஸ்த்ரா 4
வேதாஹம் 64

ஶ (श)

ஶாந்தோதா 100
ஶாஸ்த்ரயோ 3

ஸ (स)

ஸகோஷோ 21
ஸங்கைஸ்ஸு 65
ஸத்யஸங்கல்ப: 23
ஸத்வாத் 14
ஸந்தமேநம் 102
ஸர்வபூஷண 76
ஸர்வரஸ: 92
ஸாமாந்யலக்ஷ்யா 97
ஸுவர்ணரஜதா 47
ஸ்ருஷ்டஸ்த்வம் 42
ஸதந்யம்தத் 12
ஸ்வேநரூபேண 33

ஹ (ह)

ஹுத்வாத்மாநம் 101

ஜ்ஞ (ज्ञ)

ஜ்ஞாநதீபேந 2

UNIVERSITY EXTENSION
★ MADURAI ★

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

# முதல் திருவந்தாதி

## தனியன் வ்யாக்யாநம்.

---

முதலியாண்டானருளிச்செய்த தனியன்.

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழ்நூற் றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

## தனியன் பதவுரை.

கைதைசேர்—தாழைகள் நெருங்கிச் சேர்ந்திருக்கிற, பூம்பொழில்—அழகிய சோலைகளாலே சூழப்பட்ட, கச்சி நகர்—காஞ்சீ நகரத்தில், வந்து உதித்த—திருவவதரித்த, பொய்கைப் பிரான்—பொய்கையாழ்வார் என்னும், கவிஞர் போர் ஏறு—கவி ஸிம்ஹமானவர், வையத்து—இவ்வுலகிலுள்ள, அடியவர்கள்—அடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்கள், வாழ—வாழும்படியாக, அரும் தமிழ் நூற்றந்தாதி—(அர்த்த நிர்ணயம்பண்ண) அரிதாய், தமிழிலுள்ள நூற்றந்தாதியை, பரிந்து—அன்புடன் கூடியவராய், படி—பூமியிலே, விளங்கச் செய்தான்—பிரகாசிக்கும்படி செய்தருளினார்.

அவதாரிகை:—(கைதைசேரித்யாதி) இவ்வாழ்வார், * "क इति ब्रह्मणो नाम तेन तत्राऽञ्चितो हरिः। तस्मात्काञ्चीति विख्याता पुरी पुण्यविवर्धनी॥" (க இதி ப்ரஹ்மணோ நாம தேந தத்ராऽஞ்சிதோ ஹரி:। தஸ்மாத் காஞ்சீதி விக்யாதா புரீ புண்யவிவர்த்தநீ) என்னும்படியான காஞ்சீபுரியில் புஷ்கரணியில் புஷ்கரத்திலே விஷ்ணு நக்ஷத்ரத்திலே ஆவிர்ப்பவித்து திவ்யப்ரபந்த தீபமுகேந லோகத்தில் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கி வாழ்வித்தபடியைச் சொல்லுகிறது இதில்.

---

* காஞ்சீமாஹாத்ம்யம்.

வ்யாக்யாநம்:— (கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான்) இத்தால் இவர் ஜந்ம வைபவம் சொல்லுகிறது. (கைதை) கேதகை—தாழை. "கைதைவேலிமங்கை" என்றும், ‡ "கொக்கலர்தடந்தாழைவேலி" என்றும் சொல்லுமாப் போலே. அதுதான் நீர்நிலங்களிலேயாயிற்று நிற்பது. "தாழை தண்ணாம்பல் தடம்பெரும் பொய்கைவாய்" என்னும்படி, § 'அம்பூந்தேனிளஞ்சோலை' சூழ்ந்த கச்சிவெஃகாவில் பொய்கையிலே எம்பெருமான் பொன்வயிற்றில் பூவேபோன்ற பொற்றாமரைப் பூவிலே ஐப்பசியில் திருவோணநாளாயிற்று இவரவதரித்தது. பத்மஜனான பூவனைப்போலேயாயிற்று பொய்கையாரான இவர் பிறப்பும். (வந்துதித்த) என்கையாலே, ஆதித்யோதயம் போலேயாயிற்று இவருதயமும். * "வருத்தும் புறவிருள் மாற்ற வெம் பொய்கைப்பிரான்" என்னக்கடவதிறே. பொய்கையிலே அவதரிக்கையாலே அதுவே நிரூபகமாயிருக்கை. அதுதான் ஸரஸ்வதீ பயஸ்விநியாய் ப்ரவஹித்த ஸ்தலமாயிற்று. தத்தீரமான பொய்கையென்கை. (பொய்கைப்பிரான்) மருபூமியில் பொய்கைபோலே எல்லார்க்கும் உபகாரகராயிருக்கை. a தீர்த்தகரராய்த் திரியுமவரிறே.

கவிஞர் போரேறாகையாவது:— கவிச்ரேஷ்டரென்றபடி. முதலாழ்வார்கள் மூவரினும் முதலானவராகையாலே, ஆதிகவி என்னும்படியான அதிசயத்தை உடையராயிருப்பர். b படைத்தான் கவியாலும், பரகால கவியாலும், c "செஞ்சொற்கவிகாள்" என்றும், "செந்தமிழ் பாடுவார்" என்றும், கொண்டாடப்படுமவராய், நாட்டிற்கவிகளுக்கும் விலக்ஷணகவியாயிருப்பர். "இது பொய்கையார் வாக்கினிற்கண்டுகொள்க" என்றிறே தமிழர் கூறுவது. அந்த ஏற்றமெல்லாவற்றையும் பற்ற கவிஞர் போரேறு என்கிறது.

ஏவம் வித வைலக்ஷண்யத்தை உடையவர், வைஷ்ணவர்கள் வாழும்படி ஸ்நேஹத்தாலே விலக்ஷண ப்ரமாண நிர்மாணம் பண்ணினபடி சொல்லுகிறது, (வையத்தடியவர்கள் வாழ அரும் தமிழ் நூற்றந்தாதி படி விளங்கச் செய்தான் பரிந்து) என்று. வைத்தடியவர்களாகிறார்—பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்கள்.

‡ திருவாய். (4-10-8). § திருவிருத்தம்-26. * இராமாநுச-8.
a இரா. திருவ. (14). b திருவாய். (3-9-10). c திருவாய். (10-7-1).

அவர்கட்கேயிறே வாழவேண்டுவது. d வானத்தணியமரர்க்கு வாழ்வு நித்யமாயிறே இருக்கிறது. இத்தாலே, இவர்கள் வாழுகையாவது:— சேஷத்வவிபவத்தை ஸ்வாநுஸந்தாநத்தாலே உண்டாக்குமதான ப்ரபந்தமென்கை. * "நின்தாளிணைக்கீழ்வாழ்ச்சி" என்னக்கடவதிறே. இவ்வநுஸந்தாநமே வாழ்வாகவுமாம். அருந்தமிழ் நூற்றந்தாதியாவது:— அர்த்த நிர்ணயத்தில் வந்தால் அரிதாய், தமிழான ப்ரகாரத்தாலே ஸுலபமாய், அதுதான் நூறுபாட்டாய், அந்தாதியாயிருக்கை. உடையவர் நூற்றந்தாதிக்கேற்றம் எட்டுப்பாட்டாயிருக்கும்.

(அருந்தமிழ்நூற்றந்தாதி) அதுதான் வெளிறுயிருக்கையன்றிக்கே அரிதாய், ஸம்ஸ்க்ருதமாயிருக்கையன்றிக்கே அஸம்ஸ்க்ருதமான த்ராவிடமாய், ஆயிரம் ஐந்நூறுயிருக்கையன்றிக்கே நூறுயிருக்கை. அன்றிக்கே (வையத்தடியவர்கள் வாழ வரும் தமிழ் நூற்றந்தாதி) என்றுகவுமாம். அப்போது வையத்தடியவர்கள் வாழ வருமதான தமிழ் நூற்றந்தாதி என்று நிர்வஹிக்கக்கடவது.

நூற்றந்தாதி படிவிளங்கச்செய்கையாவது:— (வையந்தகளியா) என்று தொடங்கி, ஓரடியுஞ்சாடுதைத்த முடிவாக அருளிச்செய்த திவ்யப்ரபந்ததீபத்தாலே பூதலமெங்கும் நிர்மலமாம்படி நிர்மித்தாரென்கை. வருத்தும் புறவிருள் மாற்ற வெம்பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையுங் கூட்டி ஒன்றத் திரித்தன்றெரித்த திருவிளக்காகையாலே; படியிலே— பூமியிலே, ப்ரகாசிக்கும்படி செய்தருளினாரென்றுகவுமாம். அன்றிக்கே படியென்று உபமானமாய் த்ராவிடவேதத்துக்குப் படிச்சந்தமாயிருக்கும்படி செய்தருளினாரென்னவுமாம். விளக்கம்—ப்ரகாசம். படி—என்று விக்ரஹமாய், § "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்" என்னும்படி, கண்டறியும்படி செய்தாரென்றுகவுமாம். பரிவுடனே செய்கையாவது—சேர்ந்தவிஷய ஸ்நேஹத்தாலே என்னுதல்; பரவிஷய ஸ்நேஹத்தாலே என்னுதல். "செய்ய சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை" என்றாரிறே. † ஸ்நேஹத்தாலேயிறே விளக்கெரிவது. இத்தால், அவர் திவ்யப்ரபந்தோபகாரகத்வத்தால் வந்த உபகாரகௌரவம் சொல்லி ஈடுபட்டதாயிற்று. 1.

இயற்பா முதல் திருவந்தாதியின் தனியன் வ்யாக்யாநம் முற்றிற்று.

---

d இர. திருவ. (2). * திருவாய். (3-2-4). § மூன்றும் திருவ. (1).
† ஸ்நேஹம்—(1) அன்பு; (2) எண்ணெய்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த

# முதல் திருவந்தாதி வ்யாக்யாநம்.

---

श्रीमत्कृष्णसमाह्वाय नमो यामुनसूनवे।
यत्कटाक्षैकलक्ष्याणां सुलभः श्रीधरस्सदा॥

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே।
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ்ஸதா॥

## வ்யாக்யாந அவதாரிகை.

ஆழ்வார்களிற்காட்டில் பகவத்விஷயத்திலுண்டான அவகாஹநத்தாலே, முதலாழ்வார்கள் மூவரையும் நித்யஸூரிகளோபாதியாக நினைத்திருப்பார்கள். "இன்கவிபாடும் பரமகவிகள்", "செந்தமிழ் பாடுவார்" என்னும் இவர்களவதரித்தது ஓரோதேசங்களிலேயாகிலும் காலப்பழமையாலே இன்னவிடமென்று நிச்சயிக்கப் போகாது. † "பேயரே யெனக்கியாவரும் யானுமோர்பேயனேயெவர்க்கும்" பகவத்விஷயத்திலவகாஹியாதாரெல்லாரும் தமக்குப் பேயராயிருப்பர். அவர்கள் நிலையில் தாம் நில்லாதபடியாலே, அவர்களுக்குத் தாம் பேயராயிருப்பர். இப்படியாலே, பகவத்விஷயத்தில் அவகாஹியாதாரிருக்குமிடத்திற்காட்டில் ஸ்தாவரங்களுள்ள காடே அமையுமென்றிருப்பர்கள். ‡ "ஆன்விடையேழன்றடர்த்தார்க்காளானாரல்லாதார் மானிடவரல்லரென்றென்மனத்தே வைத்தேனே". ஸர்வேச்வரன் திருவுள்ளம் ஊற்றுமறுத்தவளவிலும் க்ருபையைப் பண்ணும் கர்முடைய மனஸ்ஸிலும் கொடுமையை வைத்தேனென்கிறார். இனியவர்கள் மனுஷ்யரல்லரென்று செப்பிலும்

---

† பெருமாள் திரு. (3-8). ‡ பெரிய திரு. (11-8-9).

கல்லிலும் வெட்டிக்கொள்ள அமையும். § “ சிறந்தார்க்கெழு துணையாம் செங்கண்மால் நாமம், மறந்தாரை மானிடமா வையேன் ” என்னும்படியே, அறிவு நடையாடாதவர்களிருக்குமிடத்தில் வஸிக்கு மதில், காட்டிலே வர்த்திக்கவமையுமென்று காடுகளிலே வர்த்திப்பர்கள். இங்ஙனே செல்லுகிற காலத்தில், ஒரு மழையையும் காற்றையுங்கண்டு திருக்கோவலூரிலே ஒரு இடைகழியிலே ஒருத்தர் புக்குக் கிடக்க, இருவராவார் சென்று, “ ஒருவர் கிடக்குமிடம் இருவரிருக்கப் போரும் ” என்றிருக்க, மூவராவார் சென்று, “ இருவரிருக்குமிடம் மூவர்க்கு நிற்கப்போரும் ” என்று மூவரும் நிற்க, இருவர் வந்து நெருக்க, * (நீயும் திருமகளும்) † “ தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேலென்னடியாரதுசெய்யார் ” என்னும் நீயும், உன் பரிகரம் ‡ சென்று நலியப்புக, (1) “ न कश्चिन्नापराध्यति ” (ந கஶ்சிந் நாபராத்யதி) என்று ஏறிட்டுக்கொண்டு நோக்கும் திருமகளும். (நின்றுயால் குன்றெடுத்துப்பாயும் பனிமறைத்த பண்பாளா) மலையெடுத்து உடம்பிலே விழுகிற மழையைக் காத்த நீர்மையை உடையவனே! உடம்பிலே விழுந்த மழையை மலையெடுத்துப் பரிஹரித்தபோது பிறந்த ஹர்ஷம் போலேயாயிற்று இவர்கள் நெருக்குப்பெற்றபோது இவனுக்கிருந்தபடி. (வாசல்கடைகழியா வுட்புகா காமருபூங்கோவலிடை கழியேபற்றியினி) காமுகரானவர்கள், உகந்தவிஷயங்களிலே போகச்சொன்னாலும் தூணைக்கட்டிக் கொண்டு நிற்குமாப்போலே, இவ்வாசலுக்குப் புறம்போக மாட்டுகிறிலன்; உள்ளுப்புகுர மாட்டுகிறிலன். (இனி) இப்போது. இப்படி இருவருமாகத் தங்களை நெருக்கப்புக்கவாறே, தம்மையொழிய வேறே சிலர் நெருக்குகிறாருண்டென்று, ஜ்ஞாநமாகிற விளக்கை ஏற்றினார். (2) “ ज्ञानदीपेन भास्वता ” (ஜ்ஞாநதீபேந பாஸ்வதா). விளக்குண்டானாலும் ஜ்ஞாநமில்லையாகில் பதார்த்தங்களை விவேகிக்கப்போகாது.

முதலாழ்வார்க்கு ஜ்ஞாநம் பிறந்தபடி சொல்லிற்று. இருவராவார்க்கு, ஜ்ஞாநம் முற்றி பக்தியானபடி சொல்லிற்று. மூவராவார்க்கு, பக்தியுடையராய் அவனையொழியச் செல்லாதவர்

§ இர. திருவ. (44). † பெரியாழ். திரு. (4-9-2). * முத. திரு. (86).
‡ பரிகரம்-ஹநுமான்.

களுடைய ஸாக்ஷாத்காரம் பிறந்தபடி சொல்லிற்று. இம்மூவர்க்கு மர்த்தமொன்றே. மூன்று ருஷிகள் கூடி ஒரு வ்யாகரணத்துக்குக் கர்த்தாக்களானாற்போலே கர்த்ருபேதமுண்டேயாகிலும் அர்த்த சரீரம் ஒன்று; த்ரிமுநி வ்யாகரணமென்னுமாப்போலே.

---

அரும்பத விளக்கம்:— ப்ரவேசே வக்த்ருவைலக்ஷண்யத்தை அருளிச்செய்கிறார் (ஆழ்வார்களித்யாதி). நினைத்திருப்பர்கள்— ஆசார்யர்கள் என்றபடி. இப்படி நினைக்கைக்கு ஜ்ஞாபகமேது? என்ன, ஆழ்வார்கள் கொண்டாடுகையாலே என்கிறார் (இன்கவிபாடு மித்யாதி). அவதரித்தவர்களை நித்யஸூரிகளென்று நினைக்கப் போமோ? என்ன அருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி).

இன்னவிடமென்றும், இங்குள்ளார் அங்குள்ளாரென்றும் நிச்சயிக்கப்போகாமையாலே, அங்குள்ளாரென்றே நினைத்திருப்ப ரென்றபடி. அன்றிக்கே, ஆழ்வார்கள்தான், அவர்கள் ஊரைப் பேரைச் சொல்லாமல் கவியையிட்டு நிரூபிப்பானென்? என்ன அருளிச்செய்கிறார் (இவர்களித்யாதி). இவை இரண்டு ஸங்கதியும் ஸ்வரஸமன்று; * பிழையும் தெரியாது; வந்தவிடங்களிலே கண்டு கொள்வது. இப்படிப்பட்டவர்கள் காட்டிலே திரிவானென்? என்ன அருளிச்செய்கிறார் (பேயரே எனக்கித்யாதி). ஆனாலும், சாஸ்த்ர வச்யரான மநுஷ்யரை விட்டுக் காட்டிலே போகக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (ஆன்விடையேழன்றித்யாதி).

இருவர் வந்து நெருக்கினாரென்னுமதுக்கு ஜ்ஞாபகமேது? என்ன அருளிச்செய்கிறார் (நீயும் திருமகளுமென்று). (வெறுந்தீபம் போராதோ? ஜ்ஞாநதீபம் வேணுமோ? என்ன அருளிச்செய்கிறார் (விளக்குண்டானாலுமித்யாதி).

ஒருவனுக்கே ஜ்ஞாநபக்தி ஸாக்ஷாத்காரமாகிற மூன்றும் வேண்டுகையாலே, (மூவர்க்கும் அர்த்தமொன்றென்கிறது). வக்தா மூவராயிருக்க, ஒன்றாகிறபடி எப்படி? என்ன; அருளிச்செய்கிறார் (மூன்று ருஷிகளித்யாதி). வ்யாகரணம்—சப்தசாஸ்த்ரம்.

---

* 'ஞானப் பெருமையாலே' என்பதே சரியான பாடம் என்று சிலர் சொல்லுவர்.

1. வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

பதவுரை:— வையம் தகளியா—பூமி அகலாகவும், வார் கடலே நெய்யாக—அதைச் சூழ்ந்திருக்கும் கடலே நெய்யாகவும், வெய்ய கதிரோன் விளக்காக—உஷ்ணமான கிரணங்களையுடைய ஸூர்யனவன் விளக்காகவும், செய்ய சுடர் ஆழியான் அடிக்கே—சிவந்த ஒளியையுடைய சக்ராயுதத்தையுடைய எம்பெருமானுடைய திருவடிகளிலே, 'இடர் ஆழி நீங்குக' என்று—'(இவ்வுலகிலுள்ள) இடர்க்கடல் நீங்கவேணும்' என்று, சொல் மாலை—சொற்களாலான பாமாலையை, சூட்டினேன்—சாத்தினேன்.

முதற்பாட்டு அவதாரிகை:— 'தகளி' என்றும் 'விளக்கு' என்றும், 'நெய்' என்றும் வர்ணிக்கிறபடி எங்ஙனே? என்னில்; ஜகத்தானது ஸாவயவத்வாத் கார்யமென்னக்கடவது; கார்யமானது கர்த்ருமத்தாகக் கடவது; அந்த கர்த்தா சங்கசக்ர கதாதரனென்கிறது. (3) "शास्त्रयोनित्वात्" (ஶாஸ்த்ரயோநித்வாத்) என்று ஆநுமாநிகரை சாஸ்த்ரகாரர் தூஷிக்கச்செய்தே, இங்கு ஆநுமாநிகமாகக் கொள்ளும்படி எங்ஙனே? என்னில்; (4) "वेदशास्त्राऽविरोधिना। यस्तर्केणाऽनुसन्धत्ते स धर्मं वेद नेतरः॥" (வேதஶாஸ்த்ராऽவிரோதிநா। யஸ்தர்க்கேணாऽநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:) என்று, வேதசாஸ்த்ரங்களோடு விருத்தமான தர்க்கம் நிஷேதிக்கப்படுகிறது; அவிருத்தமானது ஸ்வீகரிக்கப்படுமென்று சொல்லுகையாலே, அது தர்க்கமாகக் கொள்ளுகிறது. (5) "न्यायाऽनुगृहीतस्य वाक्यस्याऽर्थनिश्चायकत्वात्" (ந்யாயாऽநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்யார்த்தநிஶ்சாயகத்வாத்) என்கிறபடியே.

வ்யாக்யானம்:— (வையந்தகளியா) ஸாவயவமுமாய் கார்யமுமாகையாலே, வையம் தகளி என்கிறது. (வார்கடலே நெய்யாக) வார்கடல்—சூழ்ந்தகடல். பூர்ணமான கடலென்னவுமாம். நதியினாலே ஜலம் புகுந்ததென்று பூர்ணமாகாதிருக்கையாலும், இல்லையென்று குறையாதிருக்கையாலும், பூமிக்கு உயர்ந்திருக்கச்செய்தே பூமியை அழிக்கமாட்டாமையாலும், கார்யமென்று தோற்றுகையாலே, நெய்யாகக் கொள்ளுகிறது. (வெய்யகதிரோன் விளக்காக) முப்பது

நாழிகையிலொருநாழிகை குறையவும் ஏறவும் நிற்கப்போகாமையாலே (6) "भीषोदेति सूर्यः" (பீஷோதேதி ஸூர்ய:) என்று, ஈஶ்வரகார்யபூத னென்று தோற்றுகையாலே, விளக்கு என்று சொல்லிற்று,— தன்னையும் காட்டி ஈஶ்வரனையும் ப்ரகாசிப்பிக்கையாலே, வெய்ய கதிரோன் என்று விளக்கினுடைய ஸ்தாநத்திலே சொல்லுகையாலே, இப்படிக்கு ஸகலத்துக்கும் அவன் சேஷி, ஸகலமும் அவனுக்குக் கார்யதயா சேஷமென்றறிந்தால், அங்குத்தைக்கு அஸாதாரண பரிசர்யை பண்ணும்படி சொல்லுகிறது மேல். (செய்யசுடராழி) செய்யசுடரென்றது—ஶ்யாமமான திருமேனிக்குப் பகைத்தொடை யாயிருக்கை. இத்தால் (7) "निर्विशेषचिन्मात्र ब्रह्म" (நிர்விசேஷ-சிந்மாத்ரம் ப்ரஹ்ம) என்கிற பக்ஷத்தைத் தவிர்க்கிறது. இதராயுதங் களையுடைய தேவதாந்தரங்களையும் வ்யாவர்த்திக்கிறது. (அடிக்கே) என்று விக்ரஹவத்தையைச் சொல்லுகிறது. அடி என்றத்தாலே, தம்முடைய சேஷத்வம் சொல்லுகிறது. (சூட்டினேன் சொன்மாலை) பரிமளம் மாறுதமாலையைச் சூட்டினேன்; "சொற்றொடை" என்னுமாப்போலே. (இடராழி நீங்குகவேயென்று) இடர்க்கடலானது வற்றவேணுமென்று; தாபத்ரயத்தாலே தப்தரானவர்கள் இதைக் கற்றுத் தம் வழியே போந்து இடர்க்கடலைப் பிழைப்பார்களென்று. அன்றிக்கே, அவனைப் பேசப்பெறாத தம்முடைய இடர் போக வென்றுமாம்.

மற்றையாழ்வார்களில் இவர்கள் ஜ்ஞாநப்ரதாநராய், பரதசை யோடு உகந்தருளின இடங்களோடு வாசியறக் கடல்கோத்தாற்போலே இவர்களுடைய பக்தி எங்குமொக்க வ்யாபித்திருந்ததேயாகிலும், விண்ணகத்தில ஆறு எங்குமொக்கப் பரந்து வாராநிற்க நீருக்கு ஓரிடத்திலே நோக்காமாப்போலே, திருவுலகளந்தருளினவிடத்திலும் திருமலையிலும் ஊன்றியிருக்கும். இவர்கள், "பேயரேயெனக்கி யாவரும்" என்னுமாப்போலே, ஸம்ஸாரிகளோடு பொருந்தாமை யாலும், ஸ்தாவரங்களுக்கு விபரீத ஜ்ஞாநமில்லாமையாலும், அவற்றோடே பொருந்திக் காடுகளிலே வர்த்திப்பர்கள். யத்ராஸாயங் க்ருஹராய் அஸ்தமித்தவிடத்தே உறங்கி ஒருவரையொருவர் அறியாமல் திரியாநிற்பர்கள்.

இவர்களைக்கூட்டி இவர்கள் தன்னை அனுபவித்து, ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு, வழிந்தசொல்லாலே தானும் ஜகத்தும் வாழ வேணுமென்று நின்றான் எம்பெருமான். யாத்ருச்சிகமாக ஒரு இடைகழியிலே பெருங்காற்றும் மழையும் கண்டுபுக்க ஒருவர் கிடக்க, மற்றொருவர், "ஒருவர் கிடக்கிறவிடம் இருவர்க்கு இருக்கலாம்" என்றார். மற்றையவர், "இருவரிருக்குமிடம் மூவர்க்கு நிற்கலாம்" என்றார். இவர்களை எம்பெருமானும் பிராட்டியும் புகுந்து நெருக்குகிறார்கள். (வாசல்கடைகழியாவுட்புகா) இவர்கள் ஸம்பந்தமில்லாத புறம்பும் உள்ளும் காட்டுத்தீயோடொக்கும். நம்மையொழிய நெருக்கினாரை அறிய ஒரு ப்ரகாசம் வேணுமென்ன உண்டாக்குகிறார் இவர்களிலே ஒருவர். (3) "पतिं विश्वस्य" (பதிம்விஶ்வஸ்ய) எனகிறபடியே, ஸ்ரீய:பதியே ஜகத்துக்கு நிர்வாஹகரென்கிறார் ஒருவர்; விஷயத்திலே ஈடுபட்டு பக்திரூபமான விளக்கேற்றினார் ஒருவர்; அது உடையார்க்கு அவன் காட்டக்காணும் வடிவை ஸாக்ஷாத்கரித்தாரொருவர். ஜ்ஞாநபக்தி ஸாக்ஷாத்காரங்கள் மூன்றும் அடைவே ஒருவர்க்குப் பிறந்ததானாலோ? என்னில்; ஒண்ணாது; வ்யாகரணத்துக்கு மூன்று கர்த்தாக்களுண்டானாற்போலே மூவருங்கூடி இவ்வர்த்தத்தை நிலையிட்டார்கள். அநுமாநமுகத்தாலே இழிகை தர்ஶநத்துக்கு விருத்தமன்றோ? என்னில்; வேதசாஸ்த்ர விருத்தமான அநுமாநம் இங்கு தவிருகிறது. (4) "वेदशास्त्राऽविरोधिना। यस्तर्केणानुसन्धत्ते" (வேதஶாஸ்த்ராऽவிரோதிநா। யஸ்தர்க்கேணாऽநுஸந்தத்தே।) என்று சாஸ்த்ரத்தோடு சேரும் அநுமாநமிது. ஸாவயவத்வாத்கார்யம்; கார்யம் விசித்ரமாகையாலே, கர்த்தாவும் ஆஶ்சர்யஶக்தியுக்தனாகவேணும்.

(வையந்தகளியா) பூமி கடினையாகையாலே தகளியாக்கிற்று. (வார்கடல்) த்ரவ த்ரவ்யமாகையாலே நெய்யாகக்கொண்டது. (வெய்யகதிரோன்) தேஜ:பதார்த்தமாகையாலே விளக்காகக்கொண்டது. இம்மூன்றும் பஞ்சபூதங்களுக்கும் உபலக்ஷணம். (வையம்) பெரிய வெள்ளத்திலே ஒரு கழல் மிதக்குமாப்போலே, பூமி ஜலத்திலே நிற்கும்போது இதுக்கு ஓரடி வேண்டாவோ? (வார்கடல்) பூமியை அபிபவியாதே நிற்கும்போது ஓரடிவேண்டாவோ? (வெய்ய கதிரோன்) முப்பதில் ஒன்று ஏறுதல் குறைதல் செய்யாதபோதே;

(6) "भीषोदेति सूर्यः" (பீஷோதேதி ஸூர்ய:) ஆகவேண்டாவோ? (9) "यस्सर्वज्ञः" (யஸ் ஸர்வஜ்ஞ:) இத்யாதிகளில் சொல்லுகிறவனாக வேண்டாவோ? (செய்யவித்யாதி) இதுக்கொரு நாதனுளன் என்றிருந்தால் அடிமை செய்யவேண்டும். (சுடராழியான்) ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும் ஜகத்தில் ஏகதேச ஸம்பந்தமுண்டே? என்னில்; அத்தை வ்யாவர்த்திக்கிறது. ரூபாதிகளில்லையென்னும் வாதிகளை நிரஸ்தராக்குகிறது. (அடிக்கே) பிராட்டியல்லரே; முறை தப்பாதபடி வேணுமே. (சூட்டினேன் சொல்மாலை) (10) "यतो वाचो निवर्तन्ते" (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்கிற விஷயத்தை மறுபாடுருவப் பேசிப்பண்டில்லாத அழகும் உண்டாக்கினேன். (இடரித்யாதி) என்னை உளனுக்குகைக்காக. சொல்லாதிருக்கை இடர். †"இடரார் படுவார்" இத்யாதிவத் குணத்தை அநுஸந்திக்கிலும் ப்ரகாரிபர்யந்தமாயிருக்கும் இவர்களுக்கு.

மாறனேரிநம்பி, "எம்பெருமானை மறக்க விரகில்லையோ? என்றாராம். ஜகத்தினிடர்தீருகை அர்த்தாத் ஸித்தம். 1.

---

அரு:— முதற்பாட்டு. தகளியானது ஸாவயவமும் கார்யமுமாயிருக்கையாலே, தகளியோட்டை ஸாம்யம். ஸமுத்ரம் மர்யாதை கெடாதிருக்கையாலே, ஒருத்தன் ஆஜ்ஞையாலே உண்டானது என்று அதினுடைய கார்யத்வம் தோற்றுகிறது. ஆதித்யன் அவன் ஆஜ்ஞையிலே நடக்கையாலே தன்னை சேஷத்ரவ்யமாகக் காட்டி ஈஶ்வரனை ஶேஷியாகப் ப்ரகாசிப்பிக்கிறானென்றபடி.

திரியவும் விஶதமாக புத்தியிலே ஏறுகைக்காக ப்ரவேசந் தொடங்கிப் பாட்டுக்கர்த்தம் அருளிச்செய்கிறார், (மற்றையாழ்வார்களிலித்யாதி).

வையந்தகளிக்கு கார்யகாரணம் சொல்லிற்றுக் கீழ்; இங்கு ஸ்வபாவபரமாக யோஜிக்கிறார் (பூமி கடினையாகையாலேயித்யாதி). புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு ஏத்தினால் இடர் போமோ? என்ன; அருளிச்செய்கிறார் (இடரார்படுவாரித்யாதி). கார்யரூபமான ஜகத்தை அநுஸந்தித்தால், ஸர்வேஶ்வரனை அறியப்போமோ? என்ன; அருளிச்செய்கிறார் (குணத்தையித்யாதி).

---

† முத. திரு. (78).

எத்தைக்கண்டாலும் அவனுகத் தோற்றுமென்னுமதுக்கு ஸம்வாதமாக ஒரை திஷ்யமருளிச்செய்கிறார் (மாறனேரி இத்யாதி). 1.

2. என்று கடல்கடைந்த தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை யுணரேன்நான்—அன்ற
தடைத்துடைத்துக் கண்படுத்த வாழி இதுநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த பார்.

பதவுரை:— கடல் கடைந்தது—பாற்கடலைக் கடைந்தது, என்று—எந்த நாள்? (இன்றன்றோ என்றபடி); நீர் ஏற்றது—(தான) ஜலத்தை ஏற்றுக்கொண்டது, எவ்வுலகம்—எந்த உலகத்திற்காக? (இவ்வுதகத் திற்காகவேயன்றோ என்றபடி); அதனை—அவற்றை, ஒன்றும்—சிறிதும், நான் உணரேன்—நான் அறியமாட்டேன்; அது—அந்தக் கடலானது, அன்று—ஸ்ரீராமாவதாரகாலத்தில், அடைத்து—அணை கட்டி அடைத்து, உடைத்து—(ராவணஸம்ஹாரத்திற்குப் பிறகு) உடைத்து, கண்படுத்த—(எப்போதும்) கண்வளர்ந்தருளுகிற, ஆழி—ஸமுத்ரம்; இது—(நீரேற்றுப்பெற்ற) இவ்வுலகம், நீ படைத்து—நீ ஸ்ருஷ்டித்து, இடந்து—(வராஹரூபியாய்) குத்தி யெடுத்து, உண்டு—(ப்ரளய காலத்தில்) புசித்து, உமிழ்ந்த—பின்பு வெளியிட்ட, பார்—பூமி.

இரண்டாம் பாட்டு:— (என்று) இன்னமும் திரையும் நுரையும் மாறிற்றோ? (எவ்வுலகம்) லோகாந்தரத்திதேயோ? அடிச்சுவடு தெரியாதோ? (ஒன்றுமதனையுணரேன் நான்) அன்று எங்கே போனேனோ? (உணரேன் நான்) அன்றைக்கு எனக்கென்னவோ ஒரு விஷயந்தேடி அந்தரப்பட்டேன். (அன்றித்யாதி) ஒன்றேயோ? பருத்திபட்ட பன்னிரண்டும் பட்டதில்லையோ? உணரேன் என்று இழந்த நாளைக்கு சோகிக்கிறார்.

கார்யாத்காரணாநுமாநம் வேணுமோ அவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்கள் கிடக்கச்செய்தே? (என்று) கடைந்த நுரையும் திரையும் மாறிற்றோ? (கடைந்தது) கடையப்புக்குக் கைவாங்கின வர்களை ஈஶ்வரனாகக் கொள்ளவேணுமோ? (எவ்வுலகம் நீரேற்றது) இன்று மஹாபலியாலே நோவுபடாநின்றதோ? அவனடிச்சுவடு

மாறிற்றே? * "வாமனன்மண்ணிது" என்னும்படி தோற்றுகிற தில்லையோ? இவ்வுலகமன்றோ நீரேற்றது என்கிறது. (ஒன்றுமதனை யுணரேன் நான்) இச்சேஷ்டிதங்கள் கிடக்கக் கார்யாத்காரணு நுமாநம் பண்ணித்திரியவோ நான்? அன்றிக்கே, "ஒன்றுமதனையுணரேன்" என்றது அதிமாநுஷசேஷ்டிதங்களைக்கண்டு † "எத்திறம்" என்று மோஹிக்கிறாராகவுமாம். "என்று கடல்கடைந்ததெவ்வுலகம்" என்றது, எல்லாச் செயல்களுக்கும் உபலக்ஷணம். "என்று" என்றது, ஜ்ஞாநவைஷம்யம் சொல்லுகிறது. ஜ்ஞாநமாவது—யத்தேசகால ஸம்பந்திதயா யாதோரர்த்தம்தோற்றிற்று, தத்தேசகால ஸம்பந்திதயா அவ்வர்த்தத்தைக் காட்டுகையிறே. (அன்றித்யாதி) நீ அணையடைத்துத் திருவில்லாலே அழித்து உண்டாக்கின கடலிலே. கண்படுத்த—கண்வளர்ந்த ஆழி. உடைத்து—ஸம்ஹரித்து என்னவுமாம். (இதுவித்யாதி) இல்லாதவன்று ஸ்ருஷ்டித்து ப்ரளயங்கொள்ள அண்டபித்தியில் நின்றும் ஒட்டுவிடுவித்து, ப்ரளயம் வருகிறதென்று ஏற்கவே திருவயிற்றிலே வைத்து வெளிநாடு காணப்புறப்பட விட்டபார்.

இது என்றது—தாமிருந்த பூமியாகையாலே. அது என்றது—அத்தோடு ஸம்பந்தித்த கடலாகையாலும், அஸந்நிஹிதமாகையாலும். "ஆழி—அது" என்றந்வயம். ‡ செய்யுடையவனன்றோ க்ருஷி பண்ணுவான்; அல்லாதார்க்கும் ஈச்வரத்வ ப்ரஸங்கமுண்டாகில், இதிலே அவர்களுக்கும் ஒரு தொழிலுண்டாகாதோ? 2.

---

அரு:— இரண்டாம் பாட்டு.— என்று எவ்வுலகம் என்றது, ஸ்வரத்திலேயாய், இன்றன்றோ? இவ்வுலகமன்றோ? என்று ப்ரத்யக்ஷமாய்த் தோற்றுகிறது. மூலத்திலே அர்த்தமாக்கி, (பன்னிரண்டும் பட்டதில்லையோ?) என்று சுருக்கினபடி. என்று எந்தக்கடல் கடைந்தது; என்று அந்த ஸமுத்ரத்தை அடைத்து உடைத்துக் கண் படுத்தது; எவ்வுலகம் நீரேற்றது; இந்த பார் நீ படைத்து, இடந்து, உண்டு, உமிழ்ந்த இவை ஒன்றுமதனையுணரேன் நான்; என்று அந்வயமாக்கி அருளிச்செய்கிறார் (உணரேனென்றித்யாதி).

---

* திருவாய் (4-4-1). † திருவாய் (1-3-1). ‡ செய்—வயல்.

இரண்டாம் யோஜனைக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (கார்யாத்காரணாநுமாநமித்யாதி). அநுமாநம் கீழ்ப்பாட்டிலே. எவ்வுலகம் என்றது, இவ்வுலகமென்கைக்கு. ஜ்ஞாபகமேது ? என்ன, அருளிச்செய்கிறார் (இன்று மஹாபலியாலே இத்யாதி). "அதனை" என்றது—கீழ்ச்சொன்ன அநுமாநமாதல்; இப்பாட்டிற் சொன்ன சேஷ்டிதமாதல். மேலே அநுவாதத்திலே எல்லாச் செயல்களும் சொன்னால், இங்கு எடுக்கிறவிடத்திலும், என்று அது அடைத்தது ? எவ்வுலகம் படைத்திடந்துண்டுமிழ்ந்தது ? என்று சொல்ல வேண்டாவோ ? என்ன, அருளிச்செய்கிறார் (என்று கடல் கடைந்த தெவ்வுலகமித்யாதி). "என்று" என்று கண்டாற்போலேயிருக்க, ப்ரஶ்நரூபமாகையாலே, அன்று செய்ததும் இப்போது செய்தாற் போலே இருக்கையாலே, (ஜ்ஞாநவைஶத்யம்) என்கிறது. அன்று செய்தது இப்போது தோற்றுகை ஜ்ஞாநமோ ? என்ன, அருளிச் செய்கிறார் (ஜ்ஞாநமாவதித்யாதி).

இது—அது—என்று ஸந்நிஹிதமாகவும் அஸந்நிஹிதமாகவும் சொல்லுவானென் ? என்ன, அருளிச்செய்கிறார் (இதுவென்றது தாமித்யாதி). அத்தோடு—க்ஷீராப்தியோடு. அடைத்துடைத்துக் கண்படுத்தவாழி அது; படைத்திடந்துண்டுமிழ்ந்த பார் இது; என்றந்வயம். என்று இவையெல்லாம் செய்தருளிற்று; அன்று அந்தந்தக் காலங்களிலே, ஒன்றுமதனை—அவற்றுளொன்றையும், உணரேன்—அறிந்தேனில்லை என்றபடி. 2.

---

3. பாரளவு மோரடிவைத் தோரடியும் பாருடுத்த
நீரளவுஞ் செல்ல நிமிர்ந்ததே—சூருருவின்
பேயளவு கண்ட பெருமான் ! அறிகிலேன்
நீயளவு கண்ட நெறி.

பதவுரை:— ஓர் அடி—ஒப்பற்ற ஒரு திருவடியை, பார் அளவும் வைத்து—பூமியுள்ள வரையிலும் வைக்க, ஓர் அடியும்—மற்றொரு திருவடியும், பார் உடுத்த—அண்டத்தைச் சூழ்ந்திருக்கும், நீர் அளவும்—ஆவரண ஜலம் வரையில், செல்ல—செல்லும்படி, நிமிர்ந்தது—உயர்ந்தது; சூர் உருவின் பேய்—தெய்வப் பெண்ணின் வடிவையுடைய பேயான பூதனையுடைய, அளவு கண்ட—(உயிருக்கு எல்லையைக் கண்ட, பெருமான்—உபகாரகனே ! நீ அளவு கண்ட

நெறி—நீ செய்து முடித்த செயல்களை, அறிகிலேன்—அளவிட்டு அறியமாட்டுகிறிலேன்.

அவ:— மூன்றாம் பாட்டு. (பாரித்யாதி) அப்பூமியையுடைய அளந்தானென்று இவனுக்கு ஈஶ்வரத்வம் சொல்ல, அளக்கைக்கு விஷயமுண்டாகிலன்றோ ? என்கிறார்.

வ்யா:— (பாரளவுமோரடிவைத்து) பூமியுள்ளவளவுமோரடி வைத்து. (ஓரடியுப்) வைத்த அடியைச் சொல்லவுமாம்; மற்றை யடியாகவுமாம். (பாருடுத்த) "பௌவநீருடையாடையாகச்சுற்றி" என்கிறபடியே, பூமியை ஆவரித்த ஜலத்தைக் கடந்தென்னவுமாம்; மேலில் அண்டத்தைச் சூழ்ந்த ஜலத்தளவும் சென்றதென்னவுமாம். (சூருருவித்யாதி) "சூருமணங்குந்தெய்வப்பெண்" என்கிறபடியே, விலக்ஷணமான வடிவென்கிறது. பேயைத் தெய்வப்பெண்ணென்ன லாமோ? என்னில்; (11) "पिशाचादेवयोनयः" (பிஶாசா தேவயோநய:) என்று பிசாசங்களையும் தேவயோநியிலே கூட்டுகையாலே ஆம். (பேயளவுகண்ட) பேயாக பரிச்சேதித்த. பேயாக பரிச்சேதிக்கை யாவது—முடிக்கையென்று பொருளாமிறே. (பெருமான்) பூதனையை முடித்து ஒருசேஷியை ஜகத்துக்குத்தந்தாய். (12)"स्तन्यं तद्विषसंमिश्रं रस्यमासीज्जगद्गुरोः" (ஸ்தந்யம் தத் விஷஸம்மிஶ்ரம் ரஸ்யமாஸீஜ்-ஜகத்குரோ:) (அறிகிலேனித்யாதி) நீ செய்த ஓரோ செயலை என்னால் பரிச்சேதிக்கப்போகிறதில்லை. அன்றியே, மஹாபலியாலே அபஹ்ருதையான பூமியை அளந்து உன் திருவடிகளிலே இட்டுக்கொண்டாற் போலே என்னை உன் திருவடிகளிலே இட்டுக்கொண்டு, பூதனையைப் போக்கினாற்போலே என்னுடைய விரோதியைப்போக்கி என்னை விஷயீகரித்தபடி அறிகிலேனென்னவுமாம்.

பாரளவும்—அளவிலே குசைதாங்கின அருமை. உடுத்த நீரளவும்—ஆவரணஜலம். பேயளவு—எல்லை. பெருமான்—அச்செயலாலே என்னை உண்டாக்கினவன். நீ சிலரைப் பரிச்சேதிக்கும்போது வருத்தமில்லை; உன்னைப் பரிச்சேதிப்பார் முடிந்தே போமித்தனை. தாயைப் பேபாக்கினபடி. நீ அளவிட்டுவைத்த உபாயம் உணரா தொழியப்பண்ணுகிறாயோ ? உணரப்பண்ணுகிறாயோ ? 3.

அரு:— மூன்றாம் பாட்டு. கீழ்ச்சொன்ன இரண்டுக்கும் அநுகுணமாக இரண்டர்த்தமருளிச்செய்கிறார் (பௌவநீரித்யாதி).

பார்—பூமியாதல், அண்டபித்தியாதல். ஆவரித்தஜலம்—ஸமுத்ரோதகம். நெறி—செயலாதல்; உபாயமாதல். குசைதாங்குகை—கடிவாளத்தை விட்டுப் பிடிக்குமாப்போலே மட்டிலே நிறுத்துகை. எல்லை காண்கை—முடிக்கை. அளந்தத்தையும் பேயை முடித்தத்தையும்பற்ற அருளிச்செய்கிறார் (நீ சிலரை இத்யாதி). 3.

---

4. நெறிவாசல் தானேயாய் நின்றானை யைந்து
பொறிவாசல் போர்க்கதவஞ் சாத்தி—அறிவானும்
ஆலமரநீழ லறம்நால்வர்க் கன்றுரைத்த
ஆலமமர் கண்டத் தரன்.

பதவுரை:— அன்று—முன்னொரு ஸமயத்தில், ஆல மரநீழல்—ஆலமரத்தின் நிழலிலே, நால்வர்க்கு—அகஸ்த்யர், தக்ஷர், புலஸ்த்யர், கச்யபர் என்னும் நால்வருக்கும், அறம் உரைத்த—தர்மத்தை உபதேசித்தவனும், ஆலம் அமர் கண்டத்து—விஷத்தைக் கொண்டிருக்கும் கழுத்தையுடையவனுமாகிய, அரன்—சிவன், ஐந்து பொறி வாசல்—ஐந்து ஞானேந்திரியங்களுடைய த்வாரங்களிலுள்ள, போர்க் கதவம்—அடைக்கவொண்ணாத கதவுகளை, சாத்தி—அடைத்து, நெறி வாசல் தானேயாய் நின்றானை—உபாயமும், ப்ராப்யமும் தானேயாக இருக்கிற எம்பெருமானை, அறிவான் ஆம்?—அறிந்துவிடுவனோ? (அறியமாட்டான் என்றபடி).

அவ:— நாலாம் பாட்டு. நீரறிந்திலீராகில் ஈஶ்வரனறியானோ? என்ன; "எம்பெருமான் ப்ரஸாதமடியாகப் பிறந்த அறிவுடைய நான் தடுமாறுனின்றேன், தபஸ்ஸமாதியாலே பெற்ற அறிவுடையவன் உபதேசிப்பதே!" என்று க்ஷேபிக்கிறார்.

---

வ்யா:— (நெறியித்யாதி) நெறியான வாசல்; உபாயமான வாசலென்னவுமாம். "நெறி" என்று உபாயமாய், "வாசல்" என்று உபேயத்தைச் சொல்லிற்றாய், உபாயமும் உபேயமும் தானேயாய் நின்றவனையென்றுமாம். இப்போது இது சொல்லுகிறது: ப்ராப்தி அவனையொழிய உண்டாகிலன்றோ அறிவும் அவனையொழிய உணர்வது என்கைக்காக. (ஐந்துபொறிவாசல்) ஒன்றையடக்கில்

ஒன்று திறக்குமென்கை. நீரையடைக்கப் புக்கால் ஓரிடமடைக்க ஓரிடம் கோழைப்படுமாப்போலே. (13) "चञ्चलं हि मनः" (சஞ்சலம் ஹி மந:) என்கிறபடியே. (போர்க்கதவம்) அடைக்கப்புக்கால், ஒண்ணாதபடி பொராநின்ற கதவம். 'சாத்தி" என்றது—அடைக்கப் போகாமையாலே. 'அறிவானும்' என்று க்ஷேபிக்கிறார். (ஆலமா நீழல்) தான் தபஸ்ஸு பண்ணின ஆலமாநிழலிலே. தான் பகவத் ஸம்பந்தம் பண்ணுவதற்கு முன்னே சிஷ்யபரிக்ரஹம் பண்ணுவாரைப் போலே. ஸர்வஜ்ஞனை அஜாதசத்ருவுக்கு ப்ரஹ்மஜ்ஞாநமின்றியே இருக்கிற பாலாகி உபதேசித்தாற் போலே. (அறம்) ஸமாஶ்ரயண ப்ரகாரம். (நால்வர்க்கு) அகஸ்த்ய புலஸ்த்யாதிகளுக்கு. (ஆலமமர் கண்டத்தரன்) தாமஸகுணத்துக்குச் சேர்ந்தது செய்யுமதல்லது (14) "सत्वात्सञ्जायते ज्ञानं" (ஸத்வாத் ஸஞ்ஜாயதேஜ்ஞாநம்) என்கிறபடியே கதற அவன் கடவனோ? என்கிறார்.

(நெறிவாசல்) ஸ்வரூபாநுரூபமான உபாயமென்றுமாம். (ஆய் நின்றனை) ஸித்தம். (சாத்தி) வருந்திச் சாத்தலாமித்தனை; தாளிட வொண்ணாது, முகத்திலே அறையும். நல்ல விஷயங்காட்டாவிடில் குதறுகொட்டும். (15) "परं दृष्ट्वा निवर्तते" (பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே). பண்ணவிடில் உபாயமுண்டோ? (அறிவானும்) படபடென சிக்ஷைக்கொள்ளுமத்தனையல்லது அறிவுக்கு அடை வுண்டோ? சீராமப்பிள்ளைக்கு பட்டர், "இதுவே தாரகமாக விருக்கிற ஸாதுவை நலியாதே" என்றருளிச்செய்தார். நால்வர்—தக்ஷாதிகள். (ஆலமரித்யாதி) எம்பெருமான் கொடுத்த வெளிச் செறிப்பு மாத்ரத்தையும் விஷஹரணசக்தியையும் கொண்டு இத்துறையிலே இழியப்போமோ? 4.

---

அரு:— நாலாம் பாட்டு. "ஈஶ்வராத் ஜ்ஞாநமந்விச்சேத்" என்று, ஈஶ்வரனாகச் சொல்லப்பட்ட ருத்ரன் அறியானோ? என்ன; "அறிவானும்" என்கையாலே க்ஷேபம் தோற்றுகிறது.

கோழைப்படுகை—நெகிழ்ந்து கரைகை. பண்ணுவதுக்கு—தனக்குண்டாவதுக்கு முன்னே என்றபடி. "அறிவானும்" என்று இவனுக்கு ஜ்ஞாநஹீநத்வம் சொல்லுகையாலே; இவன் உபதேசிக்கிற

தற்கு இதுவுமொரு த்ருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞனை லித்யாதி). § அஜாதசத்ரு—தர்மபுத்ரன். இந்தவிடம் தெரியாது.

ஆதிக்கு—தக்ஷப்ரஜாபதி, கஶ்யபப்ரஜாபதி. குதறுகொட்டியான இந்த்ரியங்கள் எப்போது நிவ்ருத்தமாம்? என்ன, அருளிச்செய் கிறார் (பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே) என்று. துர்க்ரஹமான இந்த்ரியங்களை நிக்ரஹிக்க வேண்டுவானென்? என்ன, அருளிச் செய்கிறார் (பண்ணுவிடிலித்யாதி). ஸர்வேஶ்வரனை அறிகைக்கு உபாயமுண்டோ? என்றபடி. ருத்ரன் அறிவு கேட்டாலே துரபிமாநி என்கைக்கு ஸம்வாதமாக ஓரைதிஹ்யம் அருளிச்செய்கிறார் (சீராமப் பிள்ளைக்கு இத்யாதி). பிள்ளை, ருத்ரனுடைய துரபிமாநத்தையிட்டு அநேகமாக நிந்திக்க, அவனுக்கு அது தாரகங்காணும்; அவன் வழி ஏன் போகிறீர்? என்றார் பட்டர் என்றபடி. இத்துறையிலே ஸர்வேஶ்வரனை அறியப்போமோ? அறிவானும் என்றந்வயம். 4.

5. அரன் நாரணன்நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார் மேனி யொன்று.

பதவுரை:— நாமம்—பெயர், அரன்—(ஒருவனுக்கு) ஹரனென்பது; நாரணன்—(ஒருவனுக்கு) நாராயணனென்பது; ஊர்தி—வாஹனம், ஆன் விடை—(ஒருவனுக்கு) ஜ்ஞானமற்ற எருது; புள்—(ஒருவனுக்கு) வேதசரீரனான கருடன்; உரை—ப்ரமாணம், நூல்—(ஒருவன் விஷயத்தில்) புருஷனால் செய்யப்பட்ட ஆகமம்; மறை—(ஒருவன் விஷயத்தில்) வேதம்; உறையும் கோயில்—வசிக்குமிடம், வரை—(ஒருவனுக்கு) கடினமான மலை; நீர்—(ஒருவனுக்கு) குளிர்ந்த கடல்; கருமம்—தொழில், அழிப்பு—(ஒருவனுக்கு) ஸம்ஹாரம்; அளிப்பு—(ஒருவனுக்கு) ரக்ஷணம்; கையது—கையிலிருக்கும் ஆயுதம், வேல்—(ஒருவனுக்கு) வேல்; நேமி—(ஒருவனுக்கு) அருளார் திருச் சக்கரம்; உருவம்—வடிவு, எரி—(ஒருவனுக்கு) நெருப்புப் போன்றது;

§ இக்கதை ப்ருஹதாரண்யக உபனிஷத்தில் நான்காம் அத்தியாயத்திலும், கௌஷீதகி உபனிஷத்தில் மூன்றாவது அத்தியாயத்திலும் காணப்படுகிறது.

கார்—(ஒருவனுக்கு) மேகம் போன்றது; ஒன்று மேனி—(இவ் விருவரில்) ஒருவன் மற்றவனுக்கு சரீரம்.

அவ:— ஐந்தாம்பாட்டு. நாட்டிலே ஈஶ்வரனாக நிச்சயித்துப் போருகிறவனை "அறிவானும்" என்று நீர் சொல்லுகிறபடி எங்ஙனே? என்னில்; அவ்வீஶ்வரத்வம் போலே காணுங்கோள் அறிவும் என்கிறார்.

வ்யா:—(அரன் நாரணன் நாமம்) ஒருத்தனுக்கு நாமம் அரன்; ஒருத்தனுக்கு நாமம் நாராயணன். ஸ்ருஷ்டமான ஜகத்து தீம்பிலே கைவளர்ந்து தன்னை முடித்துக் கொள்ளப்புக்கால், அத்தை ஸம்ஹரிக்கைக்காக அவன் கொண்டவடிவுக்கு ப்ரகாரபூதனான தான் அரனாகிறான். ஈஶ்வரன் கையடைப்பாகக் கார்யம் செய்யுமிடத்திலும் அழியும் லீலா விபூதியிலே இவனுக்கு அந்வயம், மானுவிக்கு நிர்வாஹகரானாரைப் போலே. (நாரணன்) உபய விபூதியும் தனக்கு வாஸஸ்தானமாய் அவற்றுக்கு ஆலப்பனமாயிருக்கு மென்றிட்டு, "நாராயணன்" என்று திருநாமம். (ஆன்விடை புள்ளூர்தி) கைக் கொளாண்டிகளைப்போலே ஒருத்தனுக்கு ஒரு எருது வாஹநம்; ஒருத்தனுக்கு ஒரு வேதாத்மாவாயிருந்துள்ள பெரியதிருவடி. (உரை நூல்மறை) ஒருத்தனுக்கு உத்கர்ஷம் சொல்லுவது ஆகமம்; ஒருத்தனுக்கு உத்கர்ஷம் சொல்லுவது அபௌருஷேயமான வேதம். (உறையுங்கோயில் வரைநீர்) தன் காடிந்யத்துக்குச் சேர்ந்த மலை ஒருவனுக்கு வாஸஸ்த்தானம்; தன்னுடைய தண்ணளிக்குச் சேர்ந்த நீர் ஒருவனுக்கு. (கருமமழிப்பளிப்பு) ஒருவனுக்குக் கர்மம் அழிக்கை; ஒருவனுக்குக் கர்மம் ரக்ஷை. அழிக்கை என்றால் அதொன்றிலும் நிற்கும். அளிப்பு என்றால் அழிக்குமதிலும் செல்லும். (கையதுவேல் நேமி) ஒருவனுக்கு ஆயுதம் பிணந்தின்னிகளைப் போலே வேல்; ஒருவனுக்கு ஆயுதம், (16) "तमसः परमो धाता शङ्खचक्रगदाधरः" (தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ர கதாதர:) என்கிற ஆயுதம். கிலாத்துக் குறிபகவன், பட்டரை, பரமபதத்திலும் ஈஶ்வரன் சதுர்புஜனா யிருக்கு மென்னுமிடத்துக்கு ப்ரமாணமுண்டோ? என்று கேட்க; (16) "तमसः परमो धाता शङ्खचक्रगदाधरः" (தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர:) என்று பேசாநின்றதிறே என்றருளிச்செய்ய,

அவன் கோபிக்க, "ப்ரமாண கதியிருந்தபடி இது, ப்ரஸங்கராமித் தனையிறே" என்றருளிச் செய்தார். (உருவமெரிகார்) ஒருவனுக்கு வடிவு எரி; ஸம்ஸாரதப்தனைச் சென்றவனுக்கு நெருப்பிலே விழுமாப் போலே. ஒருவனுக்கு வடிவு கார்; தப்தனைச் சென்றவனுக்கு ஒரு நீர்ச்சாவியிலே வர்ஷித்தாற் போலே ஶ்ரமஹரமான வடிவு. (மேனியொன்று) இப்படி விஸத்ருசமாயிருக்கையாலே, ஒன்று சரீரம்; ஒருத்தன் சரீரி. (17) "अन्तःप्रविष्टश्शास्ता जनानां सर्वात्मा" (அந்த: ப்ரவிஷ்டஶ் ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா) என்றால், "ஸர்வஞ்சாஸ்ய ஶரீரம்" என்று தோற்றுமாப்போலே, ஒருத்தன் சரீரம் என்றால், ஒருத்தன் சரீரி என்று தோற்றுமிறே.

அவ:— ஜ்ஞாநமில்லாமையாலே இவனைஶ்வர்யமும் ஆறல்பீற லென்கிறார்.

வ்யா:— (அரன்) சிலரை நசிப்பிக்குமவனொருவன். (நாரணன்) ததீயத்தையொழிய உளனாகாதவனொருவன். †"நீயென்னையன்றியிலை". (ஆன்விடை) அநைஶ்வர்யஸூசகம். (புள்) ‡ "கெருடவாகனனும் நிற்க"; இவன் ஐஶ்வர்யஸூசகம். (உரை) ஆப்திகேட்கவேண்டில் விப்ரலம்பாதிதோஷதூஷிதம். (மறை) அபௌருஷேய நித்ய நிர்த் தோஷ ஶ்ருதி. (வரை) காடிந்யத்துக்கு ஸத்ருசமானவிடம். (நீர்) தண்ணளிக்குத் தக்கவிடப். (கருமம் அழிப்பு) நசிப்பிக்கை. (அளிப்பு) ரக்ஷிக்கை. (வேல்) காண வமிறழலும். (நேமி) விட்டாலும் § "இன்னா ரென்றறியேன்" என்னப்பண்ணும். (எரி) நெருப்பைத்தூவும். (கார்) காண ஜீவிப்பிக்கும். (மேனியொன்று) ஒன்று சரீரம்; மற்றையவன் சரீரியென்று தன்னடையிலே வருமிறே. அந்தர்யாமி ப்ராஹ்மணத்தை நினைக்கிறார்.

(அரன்) தன்னையொழிய ஒன்றை அழியாதே நிற்கில் ஈஶ்வரத்வ மில்லை. (நாரணன்) தன்னை ஒழிந்தவற்றில் ஒன்றழியில் ஈஶ்வரத்வ மில்லை. (ஆன்) அநீஶ்வரத்வ ஸூசகம்; (புள்) ஈஶ்வரத்வ ஸூசகம். (நூல்) சொன்னவனுக்கு ஆப்தியில்லையாகில் அப்ரமாணம். (மறை) ஆப்தவாக்யமான ப்ரமாணம். (அழிப்பு அளிப்பு) இவற்றை ஸூசிப்பிக்கிறது அரன் நாரணன்; வாசகஶப்தத்துக்கு வசநக்ரியை

† நான்முகன் (7). ‡ திருமாலை (10). § பெரிய திரு. (11-1-9).

போலே. (வேல்) கலக்கவரிலும் பயமாம். (நேமி) பிரிந்தாலும், " இன்னாரென்றறியேன் " என்னப்பண்ணும். (உருவம் எரி மேனி ஒன்று; கார் மேனியொன்று) இங்ஙனம்சேர்ந்திருக்க வேண்டாவோ? க்ஷேபம். அறிவுடையார்க்குச் சொல்லவேணுமோ சேர. 5.

---

அரு:— ஐந்தாம் பாட்டு. மானவி—மஹாநவமியிற் பண்ணும் அலங்காரம். அது உடனே அழியுமென்றபடி. வர்தி—வாஹநம். உரை—உத்கர்ஷத்தைச் சொல்லுகிறது.

வேறொரு சப்தத்தாலே சொல்லாமல், " அழிப்பு-அளிப்பு " என்று இத்தையிட்டுச் சொல்லுவானென்? என்ன, அருளிச்செய்கிறார் (அழிக்கையென்றலித்யாதி). அவன் க்ருத்யந்தானும், இவனே அந்தராத்மாவாயிருக்கச் செய்கையாலே, அதுவும் இவனிட்ட வழக்கென்கைக்காக இந்த சப்தத்தாலே சொல்லுகிறதென்று பாவம். திழிவாழியே ஆயுதமென்கைக்கு ஸம்வாதமாக ஒரைதிஹ்யம் அருளிச்செய்கிறார் (நிலாத்துக்குறிபகவனித்யாதி).

மேல் யோஜனைக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநமில்லாமை இத்யாதி). ஆறல் பீறல்—சாடு. ஆறல் சோறும், பீறல் புடைவையும் என்றர்த்தம். நையசல் என்று த்வநி.

உரை—ஆகமம். ' நூல் ' என்று ஸாமாந்யமாய், உரையாகிற நூலென்னுதல்; மறையாகிற நூலென்னுதல். விட்டாலும்—கொல் என்று மேலே விட்டாலும். அப்போது போக்யமாயிருக்குமென்றபடி.

அழிப்பு என்கிற வாச்யத்தை இவற்றுக்கு வாசகமான, " அரன்—நாரணன் " என்கிற சப்தம் காட்டும்படியென்? என்ன, அருளிச்செய்கிறார் (வாசகசப்தத்துக்கித்யாதி). இந்த வாக்யம் தெரியாது. ருத்ரனை விட்டு ஈச்வரனைப் பற்றுகைக்கு இம்மட்டுப் போருமோ? அவன் ஸ்வரூபஸ்வபாவங்களெல்லாம் சொல்ல வேண்டாவோ? என்ன, அருளிச்செய்கிறார் (அறிவுடையார்க்கித்யாதி). 5.

---

6. ஒன்று மறந்தறியே னோதநீர்வண்ணனைநான்
இன்று மறப்பனோ வேழைகாள்—அன்று
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை.

பதவுரை:— அன்று—அப்பொழுது, கரு அரங்கத்துள் கிடந்து—கர்ப்பஸ்தானத்தினுள் கிடந்து, திரு அரங்கம் மேயான்—ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருப்பவனான எம்பெருமானுடைய, திசை—ஸ்வபாவங்களையெல்லாம், கண்டேன்—பார்த்தேன், கை தொழுதேன்—அஞ்சலி செய்தேன், ஒன்றும்—(அவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளில்) சிறிதும், மறந்தறியேன்—மறந்தறியமாட்டேன்; ஏழைகாள்—பகவத் விஷயமாகிற செல்வத்தை இழந்தவர்களே! நான்—அடியேன், இன்று—(அவனாலே அருளப்பட்ட ஞானத்தையுடையனாயிருக்கும்) இப்போது, மறப்பனோ—எப்படி மறப்பேன்?

அவ:— ஆரும்பாட்டு. அவனை சரீரதயா சேஷமென்றீராகில் நீரும் சேஷபூதரன்றோ? நீர் உபதேசிக்கிறபடி எங்ஙனே? என்னில்; எனக்கு அவன் ப்ரஸாதம் அடியாகையாலே விஸ்ம்ருதி சங்கையில்லை என்கிறார்.

வ்யா:— (ஒன்றுமறந்தறியேன்—அன்று கருவரங்கத்துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்) கர்ப்பவாசம் பண்ணி நிற்கச் செய்தே, "ஐயோ! நோவுபட்டாயாகாதே" என்று அவன் கடாக்ஷிக்க, அவனைக் கண்டேன். தம்முடைய விலக்காமையைக் கொண்டு ஸாக்ஷாத்கரித்ததாகச் சொல்லுகிறார். (திருவரங்கமேயான் திசை ஒன்றும் மறந்தறியேன்) பெரியபெருமாளிடையாட்டத்தில் அவனுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளில் ஒன்றும் மறந்தறியேன். (ஓதநீர்வண்ணனை நான் இன்று மறப்பனோ) ஶ்ரமஹரமான வடிவையுடைய பெரியபெருமாளை இன்று மறப்பனோ? இதுதான் தேஹயாத்ரையாய் பரப்ரதிபாதந யோக்யமான காலத்திலே மறப்பனோ? (ஏழைகாள்!) இவ் விஷயத்தில் புதியதுண்டறியாதவர்களே! என்கிறார். திசை என்றது—அவனிடையாட்டத்திலே என்றபடி. அத்திக்கிலே என்றும் சொல்லக்கடவதிறே.

(ஒன்றித்யாதி) கண்டவளவிலே ஒன்றும் மறந்தறியேன். உம்முடைய ஸௌஜந்யமோ? என்னில், அன்று; (ஓதநீர் வண்ணனை) மறக்க வொண்ணாத அழகு. (ஏழைகாள்!) மறக்க வொண்ணாத விஷயத்தை விட்டு நினைக்க வொண்ணாத விஷயத்தைப்பற்றி நிற்கிற

வர்களே! (அன்று) * "அறியாக்காலத்துள்ளே" (18) "जायमानं हि" (ஜாயமாநம் ஹி). (கருவித்யாதி) மறக்கைக்கு ஹேதுவுள்ளவிடத்திலே மறந்திலேன்; நினைக்கைக்கு ஹேதுவுள்ளவிடத்திலே இன்று மறப்பனோ? (திருவரங்கமேயான்) இடையாட்டம் பரதசையிலேயோ? எல்லைநிலத்திலே.

அன்று கருவரங்கத்துட்கிடந்து, திருவரங்கமேயான் திசை, கைதொழுதேன் கண்டேன்; ஒன்றும் மறந்தறியேன்; ஓதநீர் வண்ணனை, நான் இன்று மறப்பனோ ஏழைகாள்! என்றந்வயம். 6.

---

அரு:— ஆறும்பாட்டு. கர்ப்பாவஸ்தையிலே காணக்கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் (தம்முடையவித்யாதி). ஜாயமாநம் ஹி— ஜாயமானகாலத்திலே. 6.

---

7. திசையும் திசையுறு தெய்வமும் தெய்வத்
திசையும் கருமங்க ளெல்லாம்— அசைவில்சீர்க்
கண்ணன் நெடுமால், கடல்கடைந்த காரோத
வண்ணன் படைத்த மயக்கு.

பதவுரை:— திசையும்—திக்குகளுடன் கூடிய உலகங்களும், திசை உறு தெய்வமும்—அந்த திக்குகளிலிருக்கும் தேவதைகளும், தெய்வத்து இசையும் கருமங்கள்—அந்தந்த தேவதைகளுக்குத் தகுந்த (ஸ்ருஷ்டி முதலிய) காரியங்களும், எல்லாம்—ஆகிய இவையெல்லாம், அசைவு இல் சீர்—அழிவற்ற கல்யாண குணங்களையுடைய, கண்ணன்—க்ருஷ்ணனாய் அவதரித்தவனும், நெடு மால்—(அடியவர்களிடம்) அளவற்ற அன்பையுடையவனும், கடல் கடைந்த—(தேவர்கள் அபேக்ஷித்ததே ஹேதுவாக உடம்பு நோவக்) கடல் கடைந்தவனும், கார் ஓத வண்ணன்—மேகம் போன்றதும், கடல் போன்றதுமான திருநிறத்தையுடையவனுமான எம்பெருமான், படைத்த—உண்டாக்கின, மயக்கு—அறிவை மயக்கும் பதார்த்தங்கள்.

அவ:— ஏழாம் பாட்டு. "அல்லாத தேவதைகள் சரீரதயா சேஷபூதர்; நிர்வாஹ்யர்; அவனே சேஷி; நிர்வாஹகனென்று சொல்லும்படி எங்ஙனே, அவர்களும் ஓரோதேசங்களுக்கு ஈஶ்வராய் அவர்களுக்குப் ப்ரதானமான செயல்களுமுண்டாய்ச் செல்லா

---

* திருவாய். (2-3-3).

நிற்க? " என்ன; அதுக்கும் அடி அவனே; அது அவன் ஸ்வாதந்த்ர்யத்துக்கு வர்த்தகமென்கிறார்.

வ்யா:— (திசையும்) திக்கோடே கூடின பூமியும். (திசையுறு தெய்வமும்) அத்திக்கிலே வ்யாப்தரான தேவர்களும். (தெய்வத்து இசையும் கருமங்களெல்லாம்) அவ்வவ தேவதைகளுக்குப் பொருந்தின கர்மங்களெல்லாம். த்ரிபுரதஹநாதி. (அசைவில் சீர்) அல்லாதாருடைய சீருக்கு அசைவுண்டு போலே காணும். (கண்ணன்) தன்னை இதர ஸஜாதீயனுக்குவது தன்னுடைய இச்சையாலே. (நெடுமால்) (10) "यतो वाचो निवर्तन्ते" (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்று ஓதப்படும் பெரியவன். (கடல் கடைந்த) பெரியவன் என்றிராதே அரியன செய்து நோக்குமவன். (காரோதவண்ணன்) நோக்காதே அழிக்கிலும் விடவொண்ணாத வடிவு. (படைத்த மயக்கு) பலசக்தியையும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியையும் கொடுத்துவைத்தால் தன்வழி வாராதவர்களை அறிவு கெடுக்கும்படி. அல்லாதாரறியாவிடுவான். (19) "दैवी ह्येषा गुणमयी" (தைவீ ஹ்யேஷா குணமயீ).

(தெய்வத்திசையும்) ஸ்ருஷ்ட்யாதி கர்மங்கள். (அசைவில் சீர்) நித்யமான கல்யாணகுணம். (கண்ணன் நெடுமால்) ஆஶ்ரிதரை விடாத பெரும்பித்தன். (கடல்கடைந்த) அபேக்ஷிப்பாரே வேண்டுவது. (காரோதவண்ணன்) குணஹீநனானாலும் விடவொண்ணாது. 7.

---

அரு:— ஏழாம் பாட்டு. இப்படிப்பட்டவர்களுக்கும் அவனே காரணமென்கையாலே அவன் ஸ்வாதந்த்ர்யத்தை வர்த்திப்பிக்கிறது— அவன் பெருமையை காட்டுகிறதென்றபடி.

சேதநருக்கு பலசக்தியையும் போக்த்ருத்வ சக்தியையும், தன் நிமித்தமான உபாயத்தை அநுஷ்டிக்கைக்கு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்தியையும் கொடுத்திருக்கச் செய்தேயும், தன்னை ஆஶ்ரயியாதே இருக்குமவர்கள் இதர தேவதைகளைப் பற்றிக் கெட்டுப்போகைக்காக அந்த தேவதைகளைப் படைத்தமாயை. (அறியாவிடுவான்) ஒருத்தரும் அறியாதபடி பண்ணிவைத்த மாயை. அன்றியே, தேவர்களுக்கு பலப்ரதசக்தியையும், அத்தை லபிக்கைக்கு சேதனருக்கு ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியையும் கொடுத்துவைத்தால், அவர்களை விட்டுத் தன்வழியே வாராதவர்களை, அவர்களைப்பற்றி அறிவு கெடும்படி தேவதைகளை

ஸ்ருஷ்டித்தமாயை. இத்தை ஒருத்தரும் அறியாதபடி பண்ணினு னென்றபடியாகவுமாம். 7.

---

8. மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்
தியங்கு மெறிகதிரோன் றன்னை—முயங்கமருள்
தேராழி யால்மறைத்த தேன்நீ, திருமாலே
போராழிக் கையால் பொரு து.

பதவுரை:— திருமாலே—ஸ்ரீநிவாஸனே ! நீ—(ஸத்யஸங்கல்பனை) நீ, முயங்கு அமருள்—(ஸைந்யம்) நிறைந்த பாரதயுத்தகளத்தில், போர் ஆழி கையால்—யுத்தம் செய்ய ஸாதனமான சக்கரத்தையுடைய கையால், பொருது—(பீஷ்மருடன்) யுத்தம் செய்து, மயங்க—(ஆநுகூலர்களும், ப்ரதிகூலர்களும்) மோஹிக்கும்படியாக, வலம்புரி—ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, வாய் வைத்து—திருப்பவளத்தில் வைத்து ஊதி, வானத்து இயங்கும்—ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிற, எறி கதிரோன் தன்னை—கிரணங்களை வெளிவிடும் ஸூர்யனை, தேராழியால்—சக்கரத்தால், மறைத்தது—தோற்றுமல் செய்தது, என்—எதுக்காக ?

அவ:— எட்டாம் பாட்டு. இம்மயக்குப்போதுவோ ? என்னில், ஆஶ்ரிதரைத் தன்னை அழியமாறியும் நோக்குமென்கிருர்.

வ்யா:— (மயங்கவித்யாதி) அர்ஜுநன் நிமித்தமாக நிறுத்தி யுத்தம்பண்ணப்புக்கால், இவன் க்ரமத்தாலே தொடுத்துவிட்ட அம்புக்கு எதிரிகள் போகாதவளவில், தன் திருவாயிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வைக்குமித்தனை; அதுக்கு ஒருத்தராலும் இருப்பக்கப் போகாது; அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற எல்லாரும் மயங்கு மித்தனை. உகவையாலே மயங்குவாரும் பயத்தாலே மயங்கு வாரும். (20) "देवानां ववृधे तेजः प्रसादश्चैव योगिनां" (தேவாநாம் வவ்ருதே தேஜ:ப்ரஸாதஶ்சைவ யோகிநாம்) என்கிறபடியே ; (21) "स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत्" (ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்). (22) "अद्यैव नष्टं कुरूणां बलमिति धार्तराष्ट्रा मेनिरे; तद्विजयाकाङ्क्षिणे सञ्जयोऽकथयत्—ईदृशी भवदीयानां विजयस्थितिरिति" (அத்யைவ நஷ்டம் குரூணாம் பலமிதி தார்த்தராஷ்ட்ரா மேநிரே; தத்விஜயாகாங்க்ஷிணே ஸஞ்ஜயோऽகதயத், ஈத்ருஶீ பவதீயாநாம் விஜயஸ்திதிரிதி). (வானத்து) மறைக்கவொண்ணாத

நிலத்திலே. (இயங்கும்) ஒரு க்ஷணம் ஓரிடத்தில் நில்லாதவனே. (எறி கதிரோன் தன்னை) குறித்துப்பார்க்கப் போகாதபடி கிரணங்களை விடாநின்றுள்ளவனே. (முயங்கித்யாதி) (23) "सत्यसङ्कल्पः" (ஸத்ய ஸங்கல்ப:) என்கிற ஶ்ருதிக்குச் சேருமோ? (24) "न मे मोघं वचो भवेत्" (ந மே மோகம் வசோ பவேத்) என்றருளிச்செய்த வார்த்தைக்குச் சேருமோ? ஈஶ்வரத்வத்துக்குச் சேருமோ? (திருமாலே!) ஸத்ய ஸங்கல்பத்தை அழிக்குமவனைச் சொல்லுகிறது. (போராழியித்யாதி) ஆயுதமெடுக்கவொண்ணாதென்று சொன்ன பீஷ்மாதிகள் முன்னே ஆயுதத்தை எடுத்துப் பொருது.

(மயங்க) எல்லார்க்கும் ஆஶ்ரிதவிஷயத்தில் அவர்கள் ஸங்கல்பித்தபடியே நடத்தும் பக்ஷபாதி. (மயங்க) "ஆயுதமெடேன்" என்று வைத்து அர்ஜுநன் அம்பாலே தனித்தனியே கொல்லப்பற்றாமே ஒருகாலே முழுக்காயாக அவிய. (வானத்து) தூரத்தே நிற்கிறவனே. (இயங்கும்) ஸஞ்சரிக்கிறவனே. (முயங்கமருள்) தனியிடத்திலல்ல; எல்லாரும் காண, எத்திறம் அறிந்தேன். (திருமால்) நாட்டார் பரிமாற்றமல்ல; அவை அந்தஃபுரத்தில் பரிமாற்றம். போரிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தாலே கொன்றான்; ஆதித்யனை மறைத்தான், ஸ்ரீபீஷ்மரைத் தொடர்ந்தான். (முயங்கமருள்) நெருங்கின யுத்தம். (தேராழி) ரதாங்கம்; திருவாழி. 8.

---

அரு:— எட்டாம் பாட்டு. ஆயுதமெடேனென்ற நீ ஆயுதமெடுத்தது ஸத்யஸங்கல்பத்துக்குச் சேருமோ? ஸாதாரணமான ஈஶ்வரத்வத்துக்குப் பொய் சொல்லி அழிக்கை சேருமோ?

"மயங்கவலம் புரி வாய்வைத்து—முயங்கமருள்—வானத்தியங்குமெறிகதிரோன் றன்னை—தேராழியால் மறைத்து நீ—ஆழிக்கையால் பொருதது—திருமாலே—என்தான்" என்றந்வயமாக்கி அருளிச்செய்கிறார் (போரிலேயித்யாதி). 8.

---

9\. பொருகோட்டோ ரேனமாய்ப் புக்கிடந்தாய்க்கு அன்றுன்
ஒருகோட்டின் மேல்கிடந்த தன்றே—விரிதோட்ட
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண்துளங்க
மாவடிவின் நீயளந்த மண்.

பதவுரை:— விரி தோட்ட சே அடியை—மலர்ந்த இதழ்களை யுடைய தாமரையைப் போன்ற சிவந்த திருவடியை, நீட்டி—வளரச் செய்து, திசை நடுங்க—எத்திசையிலுள்ளவர்களும் நடுங்கும்படியும், விண் துளங்க—மேலுலகத்திலுள்ளோரும் பயப்படும்படியாகும், மா வடிவின்—(திரிவிக்ரமனான) பெரிய வடிவுடன், நீ அளந்த—நீ அளந்துகொண்ட, மண்—பூமியானது, பொரு கோட்டு—போர் செய்யும் தந்தங்களையுடைய, ஓர் ஏனமாய்—ஒப்பற்ற வராஹமாய், புக்கு இடந்தாய்க்கு—(பிரளய ஜலத்தில்) முழுகி எடுத்த உனக்கு, அன்று—அக்காலத்தில், உன்—உன்னுடைய, ஒரு கோட்டின் மேல்—ஒரு தந்தத்தின் நுனியில், கிடந்ததன்றே—அடங்கிக் கிடந்ததல்லவா?

அவ:— ஒன்பதாம் பாட்டு. ஆஸ்ரிதரையொழியவும் ஜகத்துக்கு ஸத்தாநாசம் வரில் பரிஹரிக்குமென்கிறார்.

வ்யா:— (பொருகோட்டோரேனமாய்) பொராநின்ற கோட்டை யுடைத்தான ஏனமாய். அத்விதீயமான ஏனமாய். ஜாதிச் செருக்காலே பூமியையுழுதுகொடு திரியாநிற்கும். (புக்கித்யாதி) ப்ரளயங்கொண்டு, உழுகைக்கு பூமியில்லாதவன்று தன் திரு வயிற்றிலேவைத்து நோக்கும். இத்தால் சொல்லிற்றாயிற்று:— உதாரனாயிருப்பானொருவன் நாலுபேருக்குச் சோறிட நினைத்தால் நாற்பதுபேருக்கு இட்டு மிகுப்படி சோறுண்டாக்குமாப்போலே, ரக்ஷ்யத்தினளவன்றிறே ரக்ஷகன் பாரிப்பு. (விரிதோட்டசேவடியை நீட்டி) விரியாநின்ற தோடுகளை உடைத்தான தாமரைபோலே இருந்துள்ள சேவடியை நீட்டி. "விரிதோட்ட" என்று, ஸம்புத்தி யாகவுமாம். திருமேனியிலே ஒளி விரியும் தோட்டை உடையவனே! (திசைநடுங்க) திக்குகளெல்லாம் நடுங்க. (விண்துளங்க) விண்ணி லுள்ள தேவஜாதியெல்லாம் நடுங்கும்படியாக (மாவடிவின் நீயளந்த மண்) பெரியவடிவைக்கொண்டு நீ அளந்த மண். ஆஸ்ரிதர் கார்யம் பெரியவடிவைக்கொண்டு புக்குச்செய்யிலும் செய்யும்; சிறிய வடிவைக்கொண்டு பெரியனாய்ச்செய்யிலும் செய்யும்.

(பொரு) ஆபந்நராய் விலக்காதார்க்கும், தன்னைக்கொண்டு கார்யங்கொள்ளுவார்க்கும் செய்யும்படி. (விரிதோட்ட) விரிகிற தோட்டை உடையவைபோலே இருந்துள்ள. (விண்துளங்க) அபிமாநி

களான தேவர்கள் நடுங்க. பெரிய வடிவாலே அளந்த மண் ‡ திருவெயிற்றுக்கு ஒரு நீலரத்நம் போலேயிருப்பதே! என்ன ஆஶ்சர்யம்! 9.

அரு:— ஒன்பதாம் பாட்டு. தோடு-இதழ். பாட்டுக்கெல்லாம் பலிதம் அருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதரித்யாதி).

"நீ அளந்த மண், அன்று, ஒரு கோட்டின்மேல் கிடந்ததன்றே" என்று அந்வயமாக்கி அருளிச்செய்கிறார் (திருவெயிற்றிலே இத்யாதி). 9.

10. மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும்
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர்—எண்ணில்
அலகளவு கண்டசீ ராழியாய்க்கு அன்றிவ்
வுலகளவு முண்டோவுன் வாய்.

பதவுரை:— மண்ணும்—பூமியும், மலையும்—பர்வதங்களும், மறி கடலும்—அலையெறியும் ஸமுத்ரங்களும், மாருதமும்—காற்றும், விண்ணும்—ஆகாசமும் ஆகிய இவற்றையெல்லாம், விழுங்கியது—அமுது செய்தது, மெய் என்பர்—உண்மையென்று (ரிஷிகள்) சொல்லுவர்; எண்ணில்—(இதை) ஆராய்ந்தால், அலகு அளவுகண்ட சீர் ஆழியாய்க்கு—எண்ணிக்கைகளை எல்லை கண்ட (எண்ணிறந்த) கல்யாணகுணங்களையும், திருச்சக்கரத்தையும் உடைய உனக்கு, அன்று—அப்போது, உன் வாய்—உன்னுடைய திருவாய், இவ்வுலகளவும் உண்டோ?—இவ்வுலகளவு பரப்பையுடையதாய் இருந்ததோ?

அவ:— பத்தாம் பாட்டு. (மண்ணுமித்யாதி) சேராதன செய்தும் ஆஶ்ரிதரை நோக்குமவன் என்கிறார்.

வ்யா:— (மண்ணுமித்யாதி) ஆதாரமான மண்ணும், அதற்கு உறுதியான மலையும், வேலியான கடலும், தாரகமான காற்றும், அவகாசப்ரதானம் பண்ணும் ஆகாசமும். (விழுங்கியது மெய்யென்பர்) ஐந்த்ரஜாலிகர் செயல்போலே பொய்யன்று இது; ஆப்தரான ஆழ்வார்கள் மெய்யென்பர்கள். (எண்ணில்) ஆராயில். (அலகளவு கண்ட சீராழியாய்க்கு) எண்ணிறந்த குணங்களையும் திருவாழியையு

‡ எயிறு—தந்தம்.

முடையனுன உனக்கு. அலகாவது—பரிச்சேதகமிறே. அத்தை அளவுகண்டசீர்—அபரிச்சேத்யமான அல்கைப் பரிச்சிந்நமாக்கின சீர். (இவ்வுலகளவுமுண்டோ உன்வாய்) இந்த ரக்ஷணத்தில் த்வரைதான் சிறியவடிவிலே பெரிய ஜகத்தை வைத்தான்.

(மண்ணுமித்யாதி) சேராச்சேர்த்தியானவை அடைய மெய்யென்பர். இந்த்ரஜாலமென்னப்பெற்றதே ? ருஷிகள் கூப்பிடா நிற்பர்கள். (எண்ணிலலகளவுகண்ட) எண்ணை அளவுபடுத்தும் குணங்கள். (25) "गुणानामाकरः" (குணாநாமாகர:). (26) "बहवो नृप कल्याणगुणाः" (பஹவோ ந்ருப கல்யாணகுணா:). (ஆழியாய்க்கு) குணங்களும் அப்படியே சீரிய கை. (உலகளவுமுண்டோ) ரக்ஷகத்வப் பாரிப்புக்கு அடைவில்லாமை. 10.

அரு:— பத்தாம் பாட்டு. (அலகளவு) அலகை அளவுகண்ட பரிச்சேதகம். 'கலாகாஷ்டாதிரூபமான வஸ்த்ராதிகளை எண்ணிப் பரிச்சேதிக்கை.' "கோடி, சங்கம், மஹாசங்கம், பத்மம்" என்றாற் போலே, காலத்துக்கு அவதி அற்றிருக்கையாலே (அபரிச்சேதகமான அலகு) என்கிறது.

பஞ்சபூதங்கள் பரஸ்பரம் பிந்நமாயிருக்கையாலே (சேராச் சேர்த்தி) என்கிறது. (எண்ணிலலகளவு) எண்ணு நிற்கிற அலகை. குணங்களும் அப்படியே. திருவாழி இருக்கையாலே கையும் (சீரிய கை) என்றபடி. (அடைவில்லாமை) சிறியவாயிலே பெரிய உலகை வைக்கை. 10.

11. வாயவனை யல்லது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லது தாந்தொழா—பேய்முலைநஞ்
சூணாக வுண்டா னுருவோடு பேரல்லால்
காணாகண் கேளா செவி.

பதவுரை:— வாய்—(என்னுடைய) வாயானது, அவனை அல்லது—எம்பெருமானைத் தவிர, வாழ்த்தாது—(மற்றொன்றை) வாழ்த்தாது; கை தாம்—கைகளோவெனில், உலகம் தாயவனை அல்லது—உலகங்களையெல்லாம் தாவியளந்துகொண்ட திரிவிக்ரமனைத் தவிர, தொழா—(வேறொருவனைத்) தொழமாட்டா; பேய் முலை நஞ்சு—பேயான பூதனையின் முலையிலிருக்கும் விஷத்தை, ஊணாக உண்டான்—

(தாரகமான) உணவாக நினைத்து அமுது செய்த பெருமானுடைய, உருவோடு பேரல்லால்—திருவுருவத்தையும், திருநாமத்தையுமல்லது (வேறெதையும்), கண் காணு, செவி கேளா—கண்கள் பார்க்கமாட்டா; காதுகள் கேட்கமாட்டா.

அவ:— பதினோராம் பாட்டு. (வாய்) இவனுடைய ரக்ஷகத்வத்தில் த்வரையைக்கண்டு தம்முடைய இந்த்ரியங்கள் வ்யாகுலமானபடி சொல்லுகிறது.

வ்யா:— (வாயித்யாதி) நீ அளவிதாம்படி அமையும் காண் என்றாலும் கேளாது. (கையித்யாதி) திருவுலகளந்தருளினவனுடைய நீர்மையைக் கண்டால் நான் வேண்டாவென்னிலும் தொழுதல்லது நில்லாது. (பேயித்யாதி) பேய் நஞ்சாகக் கொடுத்தால், இவன் தாரகமாக உண்டான். அவள் தன் நெஞ்சில் தண்மையாலே முடிந்தாளத்தனை. (உருவித்யாதி) அவனுருவல்லது கண்கள் காணு; அவன் பேரல்லது செவிகள் கேளா. ஆஸ்ரிதவிஷயத்திலும் ஸாமாந்யவிஷயத்திலும் இருக்குமிருப்பிலே ஸர்வேந்த்ரியங்களும் அபஹ்ருதமானபடி.

(வாயித்யாதி) தான் புறம்பே வாழ்த்தப் பார்க்கிலும் தாம் செய்யா. (உலகம் தாயவனை) தொழாதார் தலையிலும் இருந்து தொழுவித்துக்கொள்ளும் திருவடிகளை உடையவனை அல்லது. (தாம் தொழா) அவனும் ஏறவாங்கிலும் நானும் ஏறவாங்கிலும். (ஊணுக வித்யாதி) கொடாவிடில் பிழையேனென்று கொடுக்க, உண்ணுவிடில் பிழையேனென்று உண்டான். அநந்யார்ஹமாயிற்று. ஹ்ருஷீகேசனன்றே. 11.

---

அரு:— பதினோராம் பாட்டு. நீ அளவிதாம்படி—உன் ப்ரேமமிருந்தபடி போருமென்றபடி. பேய்ச்சியை முடித்துத் தன்னைக் கொடுக்கையாலே (ஆஸ்ரித விஷயம்). உலகமளக்கை (ஸாமாந்ய விஷயம்). ஏறவாங்கிலும்—அவன் வேண்டாவென்று ஏறவாங்கிலும், நான் தான் தொழவேண்டாவென்று ஏறவாங்கிலும், அவனை ஒழிய வேறொன்றையும் தொழாதென்றபடி. இத்தால் இந்த்ரியங்களெல்லாம் அநந்யார்ஹமாயிற்று என்றபடி.

(செவியித்யாதி) ஸ்ரோத்ராதி ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும். (செந்தீயித்யாதி) இத்தால்—பஞ்சபூதாத்மகமான சரீரத்தைச்

சொல்லுகிறது. இந்த்ரியங்களும் சரீரமும் ஹேயதயா அநுஸந்தேயம். (அவியாத ஞானமும்) கீழில் அவற்றைப்பற்றி விடாத ஜ்ஞானமும். அவியாத ஞானம். அந்தர்க்ருஹீதமான ஆத்ம ஜ்ஞானம். அன்றியே, தைலதாராவதவிச்சின்ன ஸ்ம்ருதிஸந்தானரூப ஜ்ஞானமென்றுமாம். 11.

---

12. சேவிவாய்கண் மூக்குடலேன் றைம்புலனும் சேந்தீ
புவிகால்நீர் விண்பூத மைந்தும்—அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமு மேன்பரே
ஏனமாய் நின்றூர்க் கியல்வு.

பதவுரை:— சேவி வாய் கண் மூக்கு உடல் என்று ஐம்புலனும்— காது, வாய், கண், மூக்கு, த்வக் என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும், சேந்தீ புவி கால் நீர் விண் பூதம் ஐந்தும்—அக்னி, பூமி, காற்று, ஜலம், ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களாலான தேஹமும், அவியாத ஞானமும்—நாசமற்றதான பக்திரூபமான ஞானமும், வேள்வியும்—(இந்த பக்திக்கு ஸாதனமான) அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்களும், நல்லறமும்—(பக்திக்கு வ்ருத்தியைச் செய்யும்) விவேகம், விமோகம் முதலான ஆத்மகுணங்களும், ஏனமாய் நின்றூர்க்கு—(அபேக்ஷையை எதிர்பாராமல் தானே ரக்ஷித்தருளிய) வராஹமூர்த்தியான எம்பெருமானை அடைவதற்கு, இயல்பு என்பரே—ஸாதனம் என்று சொல்லுகிறார்களே! (என்ன அறிவுகேடு!)

அவ:— பன்னிரண்டாம் பாட்டு. (சேவி) தம்முடைய அநுபவமான பக்தியைச் சொல்லுகிறதென்னவுமாம்; பக்தியை விதிக்கிறதென்னவுமாம்.

வ்யா:— (வேள்வியும்) பக்தி விவ்ருத்யர்த்தமாகவும் பாபக்ஷயத்துக்காகவும் அநுஷ்டிக்கிற கர்மங்கள். (27) "अग्निहोत्रादि तु तत्कार्यायैव तद्दर्शनात्" (அக்நிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்ஶநாத்), (28) "आ प्रयाणात् तत्रापि हि दृष्टं" (ஆ ப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்) என்றும், (29) "यज्ञेन दानेन तपसाऽनाशकेन ब्राह्मणा विविदिषन्ति" (யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி) என்றும் சொல்லுகிறபடியே. (நல்லறம்) விவேகாதிகள்; (என்பரே ஏனமாய் நின்றூர்க்கியல்வு) ஏனமாய் நின்றூரைப் பெறுகைக்குப் பண்ணும் ப்ரவ்ருத்தி இவை என்பர். ஆபத்தே அடையாளமாகத்

தானே ரக்ஷிக்குமென்கையாலே, அவன் உபாயமாகத் தம்முடைய அநுபவமான பக்தியைச் சொல்லுகிறதென்றுமாம்.

அவ:— (செவி) கீழ் ப்ராப்யசிக்ஷை பண்ணினர்; இனி ப்ராபகம் சொல்லுகிறார்.

வ்யா:— (செவியித்யாதி) ஸர்வேந்த்ரியங்களுக்கும் உபலக்ஷணம். (செந்தீயித்யாதி) ஆக இருபத்துநாலுக்கும் உபலக்ஷணம். (அவியாத வித்யாதி) கர்மயோகாந்தர்க்கதமான ஜ்ஞாநம். ப்ரக்ருதி ஹேயதயா ஜ்ஞேயை; ஆத்மா உபாதேயதயா ஜ்ஞேயன்; ஈஶ்வரன் உபாதேயதமனைக்கொண்டு ஜ்ஞேயன். (13) "**சஞ்சலம் ஹி**" (சஞ்சலம் ஷி). (வேள்வி) கர்மயோகம். (நல்லறம்) ஆந்ருசம்ஸ்யாதி தர்மங்கள். (என்பர்) வேதசாஸ்த்ரங்களிலே ப்ரஸித்தி. (ஏனமாய் நின்றார்) தளர்ந்தபோது எடுக்குமவன். "என்பரே!" என்று க்ஷேபமான போது, ப்ரவ்ருத்திகொண்டு புகுவதைக் கைவாங்கினவன்று எடுக்கவிருக்க. "* ஞானப்பிரானையல்லாலில்லை". "அறிவானும்" என்றாற்போலே. (இயல்வு) உபாயம். 12.

---

அரு:— பன்னிரண்டாம் பாட்டு. "அவியாத ஞானமும்" என்கையாலே பக்திக்கு ஜ்ஞாபகம். இது ஸாத்யபக்தியாதல்; ஸாதந பக்தியாதல். (பற்றிவிடாத) த்யாஜ்யம் என்கிற நிலையை விச்சேதமின்றிக்கே பற்றியிருக்கிற ஜ்ஞாநம். உபாஸகனுக்கு அநுஷ்டிக்க வேணுமென்னுமதுக்கு ஸூத்ரமும், விஷயவாக்யமும் அருளிச்செய்கிறார் (அக்நிஹோத்ராதி இத்யாதி).

கீழ் கீழிற்பாட்டில் "அவியாதஞாநம்" என்கைக்கு, இப்படிப்பட்ட ஜ்ஞாநம் பிறக்கை அருமையோ? என்ன, அருளிச்செய்கிறார் (சஞ்சலம்ஹி) என்று. இயல்வு—ஏனமாய் நின்றார்க்கு. இவற்றை உபாயமென்பரே! என்று க்ஷேபம். 12.

---

13. இயல்வாக வீன்துழாயா னடிக்கே செல்ல
முயல்வா ரியலமரர் முன்னம்—இயல்வாக
நீதியா லோதி நியமங்களால் பரவ
ஆதியாய் நின்றா ரவர்.

---

* திருவிருத்தம் (99).

பதவுரை:— முன்னம்—அநாதிகாலமாக, இயல் அமரர்—யோக்யதையை உடையவரான நித்யஸூரிகள், ஈன் துழாயான் அடிக்கே செல்ல—அழகிய திருத்துழாய் அணிந்துள்ள புருஷோத்தமனுடைய திருவடிகளிலே அணுகுவதற்கு, இயல்வாக—தகுதியாக, முயல்வார்— முயற்சி செய்வார்கள்; இயல்வாக—(மற்றவர்களுக்கும்) தகுந்தபடி, நீதியால் ஓதி—முறைப்படி திருநாமங்களைச் சொல்லி, நியமங்களால் பரவ—சாஸ்த்ரநியமங்களாலே புகழும்படியாக, அவர்—அந்த எம்பெருமான், ஆதி ஆய் நின்றார்—அநாதிகாலமாயிருக்கும் ஸித்தோபாயமாயிருந்தார்.

அவ:— பதிமூன்றாம் பாட்டு. (இயல்வாக) "வாயவனையல்லது வாழ்த்தாது" என்னும்படியாயிருந்தது உம்மது; அல்லாதார்க்கு அவனை ஆஶ்ரயிக்கும்போது அவதாநம் வேணும்; எங்ஙனே கூடும்படி? என்னில்; ப்ரக்ருத்யா ஆஶ்ரயித்திருப்பார்கள் நித்யஸூரிகள்; அல்லாதாரும் ஆஶ்ரயிக்கும்படி தானே ப்ரதமபாவியாம் என்கிறார்.

---

வ்யா:— (இயல்வாக) ஸத்ருஶமாக. (ஈன்றுழாயானடிக்கே செல்ல) ஆக, முதலியாகத் தோள்மாலை இட்டிருக்கிற அதுக்குப் போரும்படியாக. (முயல்வாரியலமரர் முன்னம்) இயற்றியை உடையரான நித்ய ஸூரிகள் முன்னே மஹாயத்நம் பண்ணுவர்கள். விஷயப்ரவணராய் அவனை அறியாதவர்களும், (இயல்வாக) ஸத்ருசமாக. (நீதியாலோதி) முறையாலே திருநாமங்களைச் சொல்லி. (நியமங்களால் பரவ) பரவும்படிக்கீடாக. ஶாஸ்திரங்களில் சொல்லுகிற நியமங்களாலே பரவசராய்ப் பரவும் படிக்கீடாக. (அவர் ஆதியாய் நின்றார்) அவர் தாமே ப்ரதமஸுக்ருதமானார்.

அவ:— உபகரணங்களையும் கொடுத்து, ருசியையும் ஜநிப்பித்து உபாயமுமாய், தானே பலப்ரதாநம் பண்ணுமென்கிறார்.

வ்யா:—(இயலமரர்) இயற்றியையுடைய அமரர். (முன்னம்) முந்துற முன்னம். (இயல்வாக) இதுவே யாத்ரையாக. (ஈன்றுழாயன்) பரிபூர்ணன். (அடிக்கேசெல்ல) திருவடிகளுக்கே சேர. (முயல்வார்) யத்நம் பண்ணுவார். (இயல்வாக) ஸ்த்ருஶமாக.

(நீதியாலோதி) ஶாஸ்த்ரோக்தமானபடியே. (நியயங்கள்) ஶ்ரவணாதிகள். (பரவ) ஆஶ்ரயித்து. (ஆதியாய் நின்றார்) அவர்களுக்கு உபேயத்துக்கு அடியானாற்போலே வேண்டினவிடத்துக்கு இவர்களுக்கு உபாயத்துக்கு அடியாய் நின்றால் ஆஶ்ரயிக்கவொண்ணாதோ? அவனே இதுக்கும் வேண்டின பின்பு அவனையே பற்ற அமையாதோ? என்றுமாம். 13.

---

அரு:— பதிமூன்றாம் பாட்டு. உமக்கு அவதாரம் வேண்டாதபடி இந்த்ரியங்கள் தானே பற்றிற்று, அல்லாதார்க்கு அவதாரம் கூடும் படி என்? என்று ஶங்காபிப்ராயம். ப்ரதமபாவி-ப்ரதமஸுஹ்ருத்து.

ஆக-ஸத்ருஶமாக என்ற இத்தால் என்று பலிதம். இத்தை அருளிச்செய்கிறார் (முதலியாகத் தோள்மாலையித்யாதி). (அடிக்கே செல்ல) திருவடிக்கு, சேர என்றது-தகுதியாக. திருமேனிக்குப் பாங்கான அடிமைகளைப்பண்ணி என்றபடி. அப்போது, ஸத்ருஶமாக என்றது-தங்கள் ஸ்வரூபத்துக்கு ஸத்ருஶமாக. "நீதியாலோதி" என்கையாலே-ஓதுகிற ஸம்ஸாரி அத்யாஹார்யம்.

மேல் யோஜனைக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (உபகரணங்களையுமித்யாதி). அவர்களுக்கு-நித்யஸூரிகளுக்கு. "நீதியாலோதி" என்கிற உபாஸநத்துக்கு அவனைக்கொண்டு ஸாதிக்க வேண்டினால் அத்தைவிட்டு அவன் தன்னையே பற்ற அமையாதோ? என்கிறார் (அவனே இதுக்குமித்யாதி). 13.

---

14. அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி
இவரிவ ரெம்பெருமா னென்று—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல்.

---

பதவுரை:— அவரவர்—ரஜோகுணத்தையும், தமோகுணத்தையுமுடைய சிலர், தாம் தாம் அறிந்தவாறு ஏத்தி—தங்களுடைய குணங்களுக்குத்தகுந்தபடி தாங்கள் அறிந்தவிதமாகப் புகழ்ந்து, இவர் இவர் எம்பெருமான் என்று—'இவர்கள் எமக்கு ஸ்வாமிகள்' என்று (சில தெய்வங்களைக் குறித்துச்) சொல்லிக்கொண்டு, சுவர் மிசை சார்த்தியும்—சுவரின் மேல் எழுதியும், வைத்தும்—(விக்ரஹமாக) ப்ரதிஷ்டை செய்தும், தொழுவர்—வணங்குவார்கள்; (ஆனால்),

உலகு அளந்த—(தொழுமவர்களுடைய தலையிலும், தொழப்படுமவர்கள் தலையிலும் திருவடியை வைத்து) உலகத்தையெல்லாம் அளந்து கொண்ட, மூர்த்தி உருவே—திரிவிக்கிரம மூர்த்தியின் திருவடிவே, முதல்—ப்ரதானமானது.

அவ:— பதினாலாம் பாட்டு:— ப்ரக்ருத்யா ஆஸ்ரயிக்குமவர்களையும் சொல்லி, ஆஸ்ரயிப்பித்துக் கொள்ளுமவனையும் சொல்லிற்று; இது ஒன்றும் பெருதாரைச் சொல்லுகிறது.

வ்யா:— (அவரவர்) ரஜ:ப்ரசுரரும், தம:ப்ரசுரரும். (தாந்தாமறிந்தவாறேத்தி) குணாநுகுணமாக வெளிச்செறிந்தபடி ஏத்தி. (இவரிவரெம்பெருமானென்று) ரஜஸ்தமஸ்ஸுக்கு விஷயமானாரை என்னுடைய ஸ்வாமியென்று. (சுவரித்யாதி) ஸர்வேஸ்வரன் பக்கல் * "எவ்வண்ணம் சிந்தித்திமையாதிருப்பர்" என்கிற செயலில் பித்தியிலே எழுதியும் வைத்தும் தொழுவர்.

(உலகித்யாதி) இவர்களுடையவும் ஆஸ்ரயணீயங்களுடையவும் தலையிலே அடியை வைத்தவனே ப்ரதாநம். (மூர்த்தியுருவே முதல்) ஸர்வேஸ்வரனுடைய திருமேனியே ப்ரதாநம்.

அவ:— அவனை வேண்டாதார் படுகிறபாடு பாரீர்! (அவரவர்) பிந்நருசிகள். (தாந்தாமறிந்தவாறு) ஶாஸ்த்ரத்தின் பின் செல்லார். (இவரிவர்) ஸகரபுத்ரர்கள், கண்டாரை, "என் குதிரை பிடித்தாய்" என்று பிடிக்குமாப்போலே தோற்றினாரை. (உலகளந்த) ஸமாஸ்ரயிப்பார் தலையிலும் ஸமாஸ்ரயணீயர் தலையிலும் ஒக்கத்துகைத்த ஸர்வேஸ்வரன் (உருவே முதல்) வடிவே முதல். 14.

---

அரு:— பதிநாலாம் பாட்டு. செயலில்—அநுகூலர் செய்கிற ந்யாயத்திலே, தாங்களும் ருச்யநுகுணமான பிம்பங்களைப் பண்ணித் தொழுவர்கள் என்றபடி.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (அவனை வேண்டாதாரித்யாதி). 14.

---

* முதல் திருவ- 44.

15. முதலாவார் மூவரே, அம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்—முதலாய
நல்லா னருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லா ரருளும் பழுது.

பதவுரை:— மூவரே—பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் இம்மூவரே, முதலாவார்—முக்கியமானவர்கள்; அம்மூவருள்ளும்—அந்த மும்மூர்த்திகளுக்குள்ளும், மூரி நீர் வண்ணன்—பரந்த கடல் போன்ற நிறத்தையும், ஸ்வபாவத்தையுமுடையவனான எம்பெருமானே, முதலாவான்—காரணபூதனாவான்; முதலாய—ஸர்வகாரணனும், நல்லான்—உபகாரகனுமான அவனுடைய, அருள் அல்லால்—அருளைத் தவிர, நாம நீர் வையகத்து—ப்ரஸித்தமான கடல் சூழ்ந்த மண்ணுலகில், பல்லார்—மற்ற பலருடைய, அருளும்—கிருபையும், பழுது—வீணானது.

அவ:— பதினைந்தாம் பாட்டு. (முதலாவார்) அவ்வோ தேவதைகளும் ஆஶ்ரயணீயராய்ச் செல்லா நிற்கச்செய்தே அவர்கள் அப்ரதாநர், இவன் ப்ரதாநனென்று சொல்லுகிறது உம்முடைய பக்ஷத்தாலேயிறே என்ன; அர்த்த தத்வமிருந்தபடியைப் பார்க்கலாகாதோ என்கிறார்.

வ்யா:—(முதலாவார் மூவரே) இருந்ததே குடியாக ஆஶ்ரயணீயரன்றிறே, மூவரிறே ப்ரதாநர். (அம்மூவரித்யாதி) ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கு ஜீவவ்யவதாநத்தாலே அந்தர்யாமியாயும் தன் பக்கலிலே ஸ்வேநரூபேண நின்றும் காரணமாவான். (மூரிநீர் வண்ணன்) பொன்னுருவும் தீயுருவுமானவர்களன்று; பரப்பை உடைத்தான கடல்வண்ணன். (முதலாய) காரணமான. (நல்லானருளல்லால்) அறவனானவன் அருளல்லால். (நாமமித்யாதி) அவனுடைய அருளொழிய அல்லாதார் எல்லாருடைய அருளும் பழுது. அதிகாரிகளாகையாலே அவர்களை முற்படச்சொன்னவித்தனை; பழுதாமிடத்தில் அவர்களோடு அல்லாதாரோடு வாசியில்லை. அவனுக்கு வசராய்க்கொண்டு பலம் தரிலோ? என்னில், இரண்டும் வ்யர்த்தம்.

(முதலாய நல்லான்) பெற்ற தாயாகையாலே பரிவன். (30) "धर्मज्ञश्शरणागतवत्सलः" (தர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல:). முலைப்

பாலிருக்க விஷபானம் பண்ணுவரோ? (நாமப்) நாமமாத்ரனான பல்லாரென்னுதல்; ப்ரஸித்தமான நீர் வையகமென்னுதல். (பல்லார்) கீழ்ச்சொன்ன ப்ரஹ்ம ருத்ராதிகள் அகப்பட. தனித்தனியும், திரளவும். (பழுது) வ்யர்த்தம். 15.

அரு:— பதினைந்தாம் பாட்டு. (வசராய்) சரீரபூதராய். இரண்டும் கேவல ஸ்வதந்த்ரராயும், அந்தர்யாமியாகையாலே சரீரவத் பரதந்த்ரராயும் இரண்டும் என்றபடி. 15.

16. பழுதே பலபகலும் போயினவென்று, அஞ்சி
அழுதே னரவணைமேற் கண்டு—தொழுதேன்
கடலோதம் காலலைப்பக் கண்வளரும், செங்கண்
அடலோத வண்ண ரடி.

பதவுரை:— கடல் ஓதம்—திருப்பாற்கடலில் அலைகளானவை, கால் அலைப்ப—(தன்) திருவடிகளிலே அடிக்க, கண்வளரும்—(அதனாலே) துயிலுமவனாய், செம் கண்—சிவந்த திருக்கண்களை உடையவனாய், அடல் ஓத வண்ணர்—நெருங்கிய அலைகள் போன்ற நிறத்தையுடையவனான எம்பெருமானுடைய, அடி—திருவடிகளை, அரவு அணைமேல் கண்டு—திருவநந்தாழ்வானாகிய படுக்கையின் மேல் கண்டு, தொழுதேன்—(இன்று) வணங்கினேன்; பல பகலும்—(முன் சென்ற) அநாதிகாலமும், பழுதே போயின என்று—வீணாகக் கழிந்தன என்று, அஞ்சி அழுதேன்—பயந்து அழுதேன்.

அவ:— பதினாறும் பாட்டு. (பழுதே) நல்லானருள் பெற்ற எனக்குச் சோகமுண்டாயிற்று என்கிறார்.

வ்யா:— (பழுதே பலபகலும் போயினவென்றஞ்சியழுதேன்) போனகாலம் அநாதி; வருங்காலம் அநந்தம்; இத்தோடொத்த காலமிறே போயிற்று என்று அழுதேன். இழவுக்கு அழுதாராகில் அச்சமாவதென்? வருமத்தைக்குறித்தன்றோ அஞ்சிற்று என்னில்; அதிகாரி நாசமில் போனகாலம்போலே ஆகிறதோ வருகிற காலமும் என்கிறார். (31) "यश्च रामं न पश्येत्तु यं च रामो न पश्यति। निन्दितस्स वसेल्लोके स्वात्माप्येनं विगर्हते॥" (யஶ்ச ராமம் ந பஶ்யேத்து யம் ச ராமோ ந பஶ்யதி। நிந்திதஸ்ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே॥)

என்று சொல்லுகிறது பெருமாளுடைய * ஒருநாளை இழவுக்கிறே. (கடலோதம் காலலைப்ப) திருவடிகளை, கடலோதமானது துடைகுத்து மாப்போலே அலைப்ப. (கண்வளருமித்யாதி) (அரவணை மேல்கண்டு தொழுதேன்) தகட்டிலழுத்தின மாணிக்கம்போலே.

அவ:— பண்டு உபாயாந்தரங்களிலும் தேவதாந்தரங்களிலும் ப்ரவணனாயிழந்தேன் என்று சொல்லுகிறார்.

வ்யா:— (பழுதே) பழுதும் பழுதல்லாததும் கூடப்பெற்றேனே. (பலபகல்) இழந்த அநாதிகாலம் பலவாய் அதுக்கு அநந்தரம் அநந்தகாலமானபடி. (போயின) போன நீர்களைக் கோலவோ. வரும் காலமும் பழைய காலமும் ஒன்று; பழைய நானே இன்னம் அப்படியாகில் செய்வதென்? என்கிறார். (32) "காலேஷ்வபி ச" (காலேஷ்வபி ச). (அரவணைமேல்கண்டு) பர்யங்கவித்யையிற்படியே பூர்ணமாகக்கண்டேன். (கண்டுதொழுதேன்) கண்டால் செய்யும் தொழில். (காலலைப்ப) சிறு திவலை துடைகுத்த. (செங்கண்) வாத்ஸல்யம் தோற்றுகை. (அடலோதம்) நெருங்கின ஓதம். 16.

---

அரு:— பதினாறும் பாட்டு. இழந்த நாளைக்கு து:கப்பட்ட பேருண்டோ? என்ன, அருளிச்செய்கிறார் (யஸ்சராமம் இத்யாதி).

மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (பண்டித்யாதி). கீழ்ப்பாட்டின் தாத்பர்யத்தை உட்கொண்டு (உபாயாந்தரம் தேவதாந்தரம்) என்கிறது. அஞ்சுகைக்கு ஹேதுவேது? என்ன, அருளிச்செய்கிறார் (வருங்காலமித்யாதி). காலத்தையும் தன்னையும் பார்த்தால் பயம் அநுவர்த்திக்கும் என்கிறார் (காலேஷ்வபி ச) என்று. 16.

---

17. அடியும் படி கடப்பத்தோள் திசைமேற் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர்—வடியுகிரா
லீர்ந்தான் இரணியனதாகம், இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான் உலகளந்நான்று.

பதவுரை:— வடி உகிரால்—கூர்மையான நகத்தால், இரணியனது ஆகம்—இரணியனுடைய மார்பை, ஈர்ந்தான்—பிளந்தவனாய், இரு சிறை புள்—பெரிய இறகுகளையுடைய பக்ஷியாகிய கருடனை,

---

* ஒருநாளை இழவு—ஒருநாள் ஸேவை இழக்கை.

ஊர்ந்தான்—நடத்துபவனான எம்பெருமான், உலகளந்த நான்று—திருவுலகளந்தருளின போது, அடியும்—திருவடியும், படி கடப்ப—பூமியை அளந்துகொள்ள, தோள்—திருத்தோள்கள், திசை மேல் செல்ல—தோள் திக்குகளுக்கு மேலே செல்ல, முடியும்—கிரீடமும், விசும்பு—ஆகாசத்தை, அளந்தது—வியாபித்தது, என்பர்—என்று சொல்லுவார்கள்.

அவ:— பதினேழாம் பாட்டு. ஸம்ஸாரத்தில் நினைத்தபடியெல்லாம் அநுபவிக்கப்போமோ? பரமபதத்திலே போனாலன்றோ அநுபவிக்கலாவது என்ன; இங்கே வெள்ளமிட்டவன்றுதான் பெற்றேனே! என்கிறார்.

வ்யா:— (அடியும் படி கடப்ப) * "கோலமாமென் சென்னிக்கு" என்னும் திருவடிகளைக்கொண்டு காடுமேடையும் அளப்ப. (தோள் திசைமேல் செல்ல) திருத்தோள்கள் திக்குகளிலே செல்ல. (முடியுமித்யாதி) திருவபிஷேகமும் அண்டபித்தியளவும் நிமிர்ந்தது. (வடியித்யாதி) கூரிய உகிராலே ஹிரண்யனுடைய மார்வைப் பிளந்தான். (இரும் சிறையித்யாதி) பெரியதிருவடி முதுகிலிருக்கப் பொருத ம்ருதுவான திருவடிகளைக்கொண்டு உலகளந்த அன்று. அடியும் படிகடப்பத் தோள் திசைமேற்செல்ல முடியும் விசும்பளந்தது என்கிறார். நான் கேட்டார் வாய் கேட்டுப்போமத்தனை என்கிறார்.

அவ:— பழுதென்? என்னில், இன்று கதை கேட்கவிருந்தேன் என்பாரிறே.

வ்யா:— (அடியும் படி கடப்ப) சென்று காணவேண்டும் திருவடிகள் தானே வந்து பூமியை அகப்படுத்திக்கொண்டது. தோள் திக்குகளை எல்லை கண்டது. முடியும் அபரிச்சேத்யமான ஆகாசத்தை அளவுபடுத்திற்று. நின்றார் நின்றபடியே வெற்றிகொள்ளுமாப்போலே. (வடியித்யாதி) ஓரிடத்திலே விரோதி நிரஸநம் பண்ணி ஓரிடத்திலே சென்று முகம் காட்டுமளவன்றிறே ஜகத்துக்கெல்லால் ஏககாலத்திலே உதவினவிது. 17.

---

அரு — பதினேழாம் பாட்டு. "என்பரே" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (நான்கேட்டார் வாயித்யாதி).

---

* திருவாய் (4-3-6).

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறுர் (பழுதென் ? என்னில் இத்யாதி). என்பாரிறே—என்கிறுரிறே. இருஞ்சிறைப்புள்ளூருகை-கஜேந்த்ராழ்வானுக்கு. 17.

---

18. நான்ற முலைத்தலை நஞ்சுண்டு, உறி வெண்ணெய்
தோன்ற வுண்டான் வென்றி சூழ் களிற்றை—யூன்றிப்
பொருதுடைவு கண்டானும் புள்ளின் வாய் கீண்டானும்
மருதிடைபோய் மண்ணளந்தமால்.

பதவுரை:— நான்ற முலை தலை—தொங்குகிற ஸ்தனத்திலிருக்கிற, நஞ்சு உண்டு—விஷத்தை அருந்தி, உறி—உறியில் வைத்த, வெண்ணெய்—வெண்ணெயை, தோன்ற உண்டான்—(திருடி) எல்லாரும் அறியும்படியாக அமுதசெய்தவனும், வென்றி சூழ் களிற்றை—வெற்றியையும் சூழ்ச்சியையுமுடைய யானையாகிற குவலயாபீடத்தை, ஊன்றி பொருது—தரித்து நின்று சண்டை செய்து, உடைவு கண்டானும்—அழித்தவனும், புள்ளின் வாய்—கொக்காய் வந்த பகாஸுரனுடைய வாயை, கீண்டானும்—கிழித்தவனும், மருது இடை போய்—இரட்டை மருதமரங்களின் நடுவே தவழ்ந்துபோய், மண்ணளந்த—உலகங்களை அளந்துகொண்ட, மால்—ஸர்வாதிகனை எம்பெருமானேயாவான்.

அவ:— பதினெட்டாம் பாட்டு. திருவுலகளந்ததிலேயோ இழந்தது, அத்தோடொக்க வரையாதே தீண்டிப் பரியாறின கிருஷ்ணவதாரத்திலும் இழந்திலேனே ? என்கிறுர்.

வ்யா:— (நான்றவித்யாதி) இவன் தன்னுடைய வாயை முலையிலே வைக்க ஸ்வரூபாபத்தியைப் பெற்றுள் அவள். ஆரேனுமாக இவனை ஸ்பர்சித்தார்க்கு ஸ்வரூபாபத்தி தப்பாது; எல்லாருக்கும் வந்தேறிபோம். (33) "स्वेन रूपेणाऽभिनिष्पद्यते" (ஸ்வேந ரூபேணுऽபி-நிஷ்பத்யதே) என்கிறபடியே. (உறிவெண்ணெய் தோன்றவுண்டான்) உறியிலே * சேமித்து வைத்த வெண்ணெயைக்கண்டு எட்டி உண்டு. களவு தோற்றும்படி உண்டான். (வென்றி சூழ்களிற்றை) வென்றி மிக்ககளிற்றை. வெற்றியை உடைத்தாய் இவனைச்சூழ்க்க நினைத்த களிற்றை என்றுமாம். (ஊன்றி) "ஆனைப்பூசல்" என்றிராதே கிட்டி.

---

* சேமித்துவைத்த—அடக்கிவைத்த.

† "மருப்பொசித்தபாகன்" என்னும்படியே. (பொருதிடைவு கண்டானும்) ‡ பசலைக்கலம்போலே உடையும்படி கண்டவன். "இடைவுகண்டான்" என்றுமாம். (புள்ளினித்யாதி) "மண்ணளந்த மால்" என்று. திருவுலகளந்தருளின நீர்மை பின்னாட்டுகிறது. க்ருஷ்ணவதாரத்துக்கும் திருவுலகளந்தருளினவிடத்துக்கும் அழகும் மௌக்த்யமும் ஆஸ்ரிதபக்ஷபாதமுமுள்ளிட்டவை இரண்டிடத்துக்கும் ஒத்திருக்கும்.

(நான்றவித்யாதி) தன் க்ருத்ரிமமான பால் போனவாறே அந்த முலை பையானபடி. (தோன்றவுண்டான்) சிசுபாலாதிகளும் ஏசும்படி. (வென்றியித்யாதி) வெற்றியையும் சூழ்ச்சியையும் உடைய. (ஊன்றி) தரித்து நின்று. (உடைவு) கருவிப்பைபோலே ஆக்கினபடி. (மண்ணளந்தமால்) பின் ஆட்டினபடி. 18.

அரு:— பதினெட்டாம் பாட்டு. ஸ்வரூபாபத்தி-சாடு; தாய் வடிவு போய் பேய் வடிவானாள்-அர்த்தம்; மோக்ஷம் பெற்றாள் என்ற, த்வநி. இவளுக்கு மோக்ஷம் கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் (ஆரேனுமாகவித்யாதி). உறிவெண்ணெய் தோன்ற-கண்ணுக்குத் தோன்ற என்னுதல்; களவு தோன்ற என்னுதல். இடைவு-இடைந்து போம்படி. கருவிப்பை-ஆயுதமிருக்கிற உறை. ஆயுதம் வாங்கினால் பை சுருங்குமாப்போலே கொம்பைப் பிடுங்கவே ஆனை சுருங்கினபடி. 18.

19. மாலும் கருங்கடலே என்னோற்றாய் வையகமுண்
டாலினிலைத் துயின்ற வாழியான்—கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள் என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று.

பதவுரை:— வையகம் உண்டு—உலகத்தை உண்டு, ஆலினிலை—ஆலமரத்தின் இலையில், துயின்ற—கண்வளர்ந்தருளியவனும், ஆழியான்—ஸமுத்ரசாயியாயிருப்பவனும், கோல கரு மேனி—அழகிய கறுத்த மேனியையும், செங்கண்—சிவந்த திருக்கண்களையுமுடையவனும், மால்—(அடியார்களிடம்) அன்புடையவனுமான எம்பெருமான், கண்படையுள்—பள்ளிகொள்ளும்போது, என்றும்—எக்காலத்திலும்,

† திருச்சந்த. (5ப்). ‡ பசலைக்கலப்—பச்சைமட்கலம்.

திருமேனி—(அவனுடைய) திவ்யமங்களவிக்ரஹத்தை, தீண்டப் பெற்று—ஸ்பர்சிக்கப்பெற்று, மாலும்—(அந்த ஆனந்தத்தாலே) மயங்குகிற, கருங்கடலே—கறுத்த ஸமுத்ரமே! நீ என் நோற்றாய்—நீ என்ன நோன்பை அநுஷ்டித்தாய்?

அவ:— பத்தொன்பதாம் பாட்டு. (மாலும்) அவதாரமொழியப் பெற்றாரும் உண்டுகிடீர்! என்கிறார்.

வ்யா:— (மாலும்) மதுபாநமத்தரைப்போலே பிச்சேறாநின்ற. (கருங்கடலே) பெற்றபேறு உன்னுடம்பே கோட்சொல்லுகிறதில்லையோ? இல்லையாகில் உடம்பு வெளுத்திராதோ? (என் நோற்றாய்) ஆசையை விட்டு நானும் நோற்கும்படி சொல்லாய். (வையகமித்யாதி) சிறு வயிற்றிலே பூமி எல்லாவற்றையும் அடக்கிப் பவனான ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய திருமேனியைத் தீண்டப்பெற்று.

அவ:— (மாலுங்கருங்கடலே) நான் தீண்டப்பெறாதே மயங்கா நின்றேன்; நீ தீண்டப்பெற்றுப் பரவசமாகா நின்றாய். பூமியைப்போலே ஒருகாலன்றியே நித்யஸம்ஶ்லேஷம் பெறுவதே கடல்! என்று கொண்டாடுகிறார்.

வ்யா:— (மாலும்) மதுபாநமத்தரைப்போலே பிச்சேறுகிற கடலே. (கருங்கடலே) உடம்பு வெளுக்கவேண்டாவே. (ஆழியான்) ஏகார்ணவத்திலும், திருப்பாற்கடலிலும் துயின்றதாதல். * ஆசிலே கையை வைத்து ப்ரளயத்தை இருதுண்டமாக விடுவேன் என்றிருக்கும் என்றுமாம். பிராட்டிமாரோடு † ஊடினபோதும் உனக்குப் பிரிவில்லை. கடலும் எம்பெருமானும், ஸ்ரீபராதாழ்வானும் பெருமாளும்போலே நிறம். ப்ரஹ்மப்ராப்தி பலமாய், கைங்கர்யம் ஆநுஷங்கிகம் ஆனாற் போலே, திருமேனி தீண்டுகை ப்ராப்யம்; கைங்கர்யம், அவகாதத்தில் ஸ்வேதம்போலே; உபாயத்திலும் ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் வ்யவஸாயம் ஆநுஷங்கிகம். 19.

---

அரு:— பத்தொன்பதாம் பாட்டு. அவதரித்தவிடத்திலே யசோதாதிகள் மடியிலே வைத்து ஸ்பர்சிக்கப்பெற்றார்கள். ஆசரியாதே இருக்க க்ஷீராப்தி மடியிலே வைத்து ஸ்பர்சிக்கப்பெற்றது என்றபடி.

---

* ஆசிலே—ஆயுதத்தின் பிடியிலே. † ஊடினபோது—பிரிந்தபோது.

கீழிற்பாட்டிலே, " மண்ணளந்த " என்றத்தைப்பற்ற மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (பூமியைப்போலே இத்யாதி). " என்றும்—நீ தீண்டப்பெற்று " என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (பிராட்டிமாரோடித்யாதி). " கருங்கடல், கோலக்கருமேனி " என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (கடலும் எம்பெருமானும் இத்யாதி). " தீண்டப்பெற்று " என்கைக்கு, தீண்டுகை பலமோ? கைங்கர்யமன்றோ பலம் என்ன, அருளிச்செய்கிறார் (ப்ரஹ்ம ப்ராப்தீத்யாதி). ப்ரஸங்காத் அருளிச்செய்கிறார் (உபாயத்திலு மித்யாதி). ஜ்ஞாநம்—ப்ரதாநம். கண்படையுள்—கண்வளர்ந்தருளுகிற அவஸ்தையிலே. 19.

---

20. பெற்றார் தளை கழலப் பேர்ந்தோர் குறளுருவாய்ச்
செற்றார் படிகடந்த செங்கண்மால்—நற்று
மரைமலர்ச் சேவடியை வானவர்கைகூப்பி
நிரைமலர்கொண் டேத்துவரால் நின்று.

பதவுரை:— பெற்றார்—தாய் தந்தையர்களாகிய தேவகி வஸுதேவர்களுடைய, தளை கழல—கால் விலங்கு கழலும்படியாக, பேர்ந்து—(திருப்பாற்கடலினின்றும்) கிளம்பி, ஓர்—ஒப்பற்ற, குறள் உருவாய்—வாமனவேஷத்தையுடையவனாய், செற்றார் படி—ஆச்ரிதனான இந்திரனுக்கு விரோதியான மஹாபலி தன்னுடையதாக அபிமானித்திருந்த உலகத்தை, கடந்த—அளந்தவனும், செம் கண் மால்—சிவந்த கண்களையுடையவனும், ஆச்ரிதபக்ஷபாதியுமான எம்பெருமானுடைய, நல்தாமரை மலர் சே அடியை—அழகிய கமலம் போலிருக்கிற சிவந்த திருவடியை, வானவர்—தேவர்கள், கை கூப்பி நின்று—அஞ்ஜலி செய்துகொண்டு நின்றவர்களாய், நிரை மலர் கொண்டு—தொடுத்த மலர்களைக்கொண்டு, ஏத்துவர்—புகழுவார்கள்; ஆல்—ஐயோ! (எனக்கு அப்படிப்பட்ட பேறு கிட்டவில்லையே! என்றபடி).

அவ:— இருபதாம் பாட்டு. " பெற்றார் தளைகழல " என்கிறவித்தால் க்ருஷ்ணாவதாரம் சொல்லவுமாம்; வாமநாவதாரந்தன்னையே சொல்லுகிறதாகவுமாம்.

வ்யா:— (பெற்றார் தளைகழலப்பேர்ந்து) பிறந்து என்றுமாம். ஆரேனுமாக ஸ்பர்சிக்கப் பெற்றார்க்குத் தளைகழல. (பேர்ந்தோர்

குறளுருவாய்ச் செற்றூர்படிகடந்த). இந்த்ரனுக்கு அன்றூகாத ஶத்ரு தனக்காகாதே. (34) "द्विषदन्नं न भोक्तव्यं" (த்விஷதந்நம் ந போக்-தவ்யம்), (35) "यस्त्वां द्वेष्टि स मां द्वेष्टि" (யஸ்த்வாங் த்வேஷ்டி ஸ மாம் த்வேஷ்டி). (செற்றூரித்யாதி) மஹாபலி, "என்னது" என்று அபிமாநித்த பூமியை அளந்த ஸர்வேஶ்வரன். (நல்தாமரைமலர் சேவடியை) செவ்வி மாறூதே இருந்துள்ள திருவடிகளை. (வானவர் கைகூப்பி நின்று நிரைமலர்கொண்டேத்துவர் ஆல்) திரள நின்று பூவைக்கொண்டேத்துவர் என்னவுமாம்; தொடுத்தமாலே கொண்டேத்துவர் என்னவுமாம்.

அவ:— படுக்கையாய்க்கிடந்த கடலுக்குத் தன்னைக் கொடுக்கச் சொல்லவேணுமோ தேவதாந்தரங்களுக்குத் தன்னைக் கொடாநிற்க என்கிறூர்.

வ்யா:— (பெற்றூர்) நிதி எடுக்கப்பெற்றூர் என்னுமாப்போலே. "என் பிள்ளை" என்று அபிமாநித்தால் தளை கழலாநின்றூல், "அடியோம்" என்றூர் தளை கழலச்சொல்லவேணுமோ! (பேர்ந்து) ஸ்ரீவைகுண்டத்தினின்றும் என்னவுமாம். திருப்பாற்கடல் நின்றும் வந்தானுகவுமாம். (ஓர் குறள்) நாட்டில் வாமநர்கள் இவன் வளர்ந் தருளின இடத்தோடொக்கும். (செற்றூர்) தன்னைச் செற்றூர். (34) "मम प्राणा हि" (மம ப்ராணு ஹி). (படிகடந்த) இக்காடு மோடையும் அளந்த. பிறரது பெற்றூப்போலே இருப்பதே! (செங்கண்) அபேக்ஷிதம் முடிக்கப்பெறுகை. (மால்) செய்தது போராது என்று இருக்கை. (நல்தாமரை) செவ்விக்கும், அழகுக்கும், குளிர்த்திக்கும் ஸத்ருஶமான தாமரை தேடுகிறூர். (வானவர்) எட்டாதபடி பரணிட்டுக்கொண்டிருக்கிற. (கைகூப்பி) (36) "अवशाः प्रदिपेदिरे" (அவஶா: ப்ரதிபேதிரே). (நிரைமலர்) ஏற்கவே * தொடையொத்ததுளபம் கொண்டிருந்தார்களோ. (ஏத்துவரால்) இப்படி பிறந்தார் பெறுதொழிவதே! (நின்று) † கிண்ணகத்து எதிர்த்து நின்று. 20.

---

அரு:— இருபதாம் பாட்டு. க்ருஷ்ணபக்ஷத்திலே (பிறந்தென்றுமாம்) என்கிறது. வாமநபக்ஷத்தை அருளிச்செய்கிறூர் (ஆரேனுமாக

---

* திருப்பள்ளி (10). † கிண்ணகத்து—ப்ரவாஹத்தில்.

வித்யாதி). (ஸ்பர்சிக்கப்பெற்றார் தளைகழல) ஸம்ஸார ஸம்பந்தம் கழல என்றபடி. (நிரைமலர்) நிரை, வானவருக்காதல், மலருக்காதல் விசேஷணம். ஆல்—அசை.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (படுக்கையாயித்யாதி). "வானவர்" என்கையாலே, தேவதாந்தரம். (இப்படி) சாடு. இப்படி—இப்படி இவர்களைப்போலே இந்த பூமியிலே பிறந்தார் அவனை ஏத்தப்பெறுதொழிவதே! என்று விஷாதப். ஆல்—விஷாத ஸூசகம். 20.

---

21. நின்று நில மங்கை நீரேற்று மூவடியால்
சென்று திசை யளந்த செங்கண்மாற்கு—என்றும்
படை யாழி புள்ளூர்தி பாம்பணையான் பாதம்
அடையாழி நெஞ்சே யறி.

பதவுரை:— நின்று—(மாவலியினருகில்) நின்று, நிலம்—பூமியை, அம் கை—அழகிய கையினால், நீர் ஏற்று—தானம் வாங்கி, மூ அடியால்—மூன்று அடிகளாலே, சென்று திசை அளந்த—நடந்தபடி சென்று திக்குகளையெல்லாம் அளந்துகொண்ட, செம் கண் மாற்கு—சிவந்த கண்களையுடைய ஸர்வாதிகனுக்கு, என்றும்—எக்காலத்திலும், படை—ஆயுதம், ஆழி—சக்கரம்; புள்—கருடாழ்வான், ஊர்தி—வாஹனம்; ஆழி நெஞ்சே—கம்பீரமான மனமே! அறி—(இதைக்) கேட்பாயாக:—, பாம்பு அணையான்—திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய எம்பிரானுடைய, பாதம்—திருவடிகளை, அடை—அடைந்திடுவாயாக.

வ்யா:— இருபத்தோராம் பாட்டு. (நின்று) ஸர்வேஶ்வரனானவன், அர்த்தித்வம் தோற்றும்படிக் கிடாகநின்று. (நிலம் அங்கை நீரேற்று) கொடுத்து வளர்ந்த அழகிய கையிலே பூமியை நீரேற்று. (மூவடியித்யாதி) திக்குகள்தோறும் சென்றளந்து, அத்தாலே அலப்யலாபம் பெற்றானாயிருக்கிறவனுக்கு. (என்றுமித்யாதி) எல்லாவற்றையும் உடையவன் கிடீர் இரந்தான். கையிலே திருவாழியைப் பேராதே பிடிக்கவல்லவனும், திருவடி முதுகிலே ‡ நற்றரிக்க இருக்க வல்லவனும்; திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே

‡ நற்றரிக்க—(நல்+தரிக்க) நன்றாய் தங்கும்படி.

சாயவல்லவனும் ஸர்வேஸ்வரனுகிறுன். (பாதமடையாழி நெஞ்சே யறி) மஹாபலியைப்போலே ஆகாதே, அவன் திருவடிகளை அடை. (ஆழிநெஞ்சேயறி) அளவுடைய நெஞ்சே அறி. § ஓலக்கவார்த்தை என்றிராதே இத்தை புத்திபண்ணி இரு.

அவ:—இரண்டு பாட்டாலும் ஸர்வேஸ்வரன் கிடீர் ஆஸ்ரிதார்த்தமாக இப்படி எளியனுனன் என்று சொல்லிற்றுய் ஈடுபடுகிறுர்.

வ்யா:—(நின்றித்யாதி) பிராட்டியை ஸ்ரீஜநகராஜன் நீர்வார்க்கப் பெற்ருற்போலே சென்று நின்று என்னுதல். (சென்று) நடந்தபடி சென்று அளந்ததென்னுதல். (செங்கண்மால்) தந்தாமது பெற்ருலும் இனியராக வேணுமோ? (என்றுப்) பரிபூர்ணன் கிடீர். (பாதம் அடையாழி நெஞ்சே) என்னை ஓதுவிக்கவல்ல நீ, என் செல்லாமை அறி. அல்லாத வார்த்தை போலல்ல; இத்தை புத்தி பண்ணு. * [சீரால் பிறந்து] அன்று அறுபதினுயிரம் ஸம்வத்ஸரம் தபஸ்ஸு பண்ணினவன் வயிற்றிலே, (37) "पितरं रोचयामास" (பிதரம் ரோசயாமாஸ) என்று, ஆசைப்பட வந்து பிறக்கை. * [சிறப்பால் வளராது] வெண்ணெயையும் பெண்களையும் களவுகண்டு மூலையடியே வளருகை. * [பேர்வாமனுகாக்கால்] நாராயணனுலாகாதோ? * [பேராளா] ஐஸ்வர்யத்திலே இளைப்பாறவேணுமோ? * [மார்வித்யாதி] பருத்திபட்ட பன்னிரண்டும் பட்டபூமி. 21.

---

அரு:— இருபத்தோராம் பாட்டு. மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறுர் (இரண்டு பாட்டாலுமித்யாதி). இங்கு "நிலமங்கை" என்று பூமிப்பிராட்டியாக்கி அருளிச்செய்கிறுர் (பிராட்டியையித்யாதி). யஜ்ஞவாடத்தளவும் சென்று நின்று என்னுதல்; நின்றவிடத்திலே நின்று திசை எங்கும் சென்று அளந்தென்னுதல். தமக்கு உபதேசிக்கிற நெஞ்சுக்குச் சொல்லுவானென்? என்ன, அருளிச்செய்கிறுர் (என் செல்லாமை என்று). இப்படி வாமநனிடத்திலே ஈடுபட்ட பேருண்டோ? என்ன, அருளிச்செய்கிறுர் (சீரால் பிறந்தித்யாதி). (இளைப்பாறவேணும்) நீர்மையில் இளைப்பாறப் போகாமையாலே மேன்மையிலே இளைப்பாறவேணும் என்றபடி.

---

§ ஓலக்கவார்த்தை—ஸபையில் டம்பமாகச் சொல்லும் வார்த்தை.
* பெரிய திருவ. (16).

உன் கையிலே பன்னிரண்டும் பட்ட பூமி, இப்படி வாமநனுகாத போது எத்த அருமையோ என்றபடி. 21.

22. அறியு முலகெல்லாம் யானேயு மல்லேன்
பொறி கொள் சிறை யுவண மூர்ந்தாய்—வெறிகமழும்
காம்பேய் மென் தோளி கடைவெண்ணெ யுண்டாயைத்
தாம்பே கொண்டார்த்த தழும்பு.

பதவுரை:— பொறி கொள் சிறை—பல வர்ணங்களையுடைய சிறகுகளைக் கொண்ட உவணம்—கருடாழ்வானை, ஊர்ந்தாய்—ஏறி நடத்துமவனுய், வெறி கமழும்—மணம் வீசப்பெற்றவளும், காம்பு ஏய் மென் தோளி—மூங்கிலை ஒத்த மெல்லிய தோளை உடையவளுமான யசோதைப் பிராட்டியினுல், கடை வெண்ணெய்—கடையப்பட்ட வெண்ணெயை, உண்டாயை—அமுது செய்தவனுன உன்னை, தாம்பே கொண்டு—ஒரு சிறு கயிற்றையே கொண்டு, ஆர்த்த—கட்டினதாலுண்டான, தழும்பு—தழும்பை, யானேயும் அல்லேன்—நான் ஒருவனே அறிபவனல்லேன்; உலகெல்லாம் அறியும்—உலகத்திலுள்ளவர்களெல்லாரும் அறிவார்கள்.

வ்யா:— இருபத்திரண்டாம் பாட்டு. (அறியும்) ஆஶ்ரிதர்த்தமாக எளியனுனன் என்னும்படி நீர் அறிந்தபடி எங்ஙனே? என்னில்; (உலகெல்லாம் அறியும் யானேயுமல்லேன்) சிசுபாலன் கூட அறியானே! (பொறியித்யாதி) பொறிகொண்டிருந்துள்ள சிறகையுடைத்தான திருவடியை ஊர்ந்த உன்னை. (வெறி கமழும்) பிள்ளைமுகம் வாடவொண்ணுதென்று எப்போதும் ஒப்பித்தபடியே இருக்கையாலே பரிமளம் கமழாநின்ற. (காம்பு ஏய் மென்தோளி) மூங்கிலோடொத்த ம்ருதுவான தோளை உடையவள். (கடை வெண்ணெயுண்டாயை) அவள், மார்த்தவம் பாராதே கடைந்த வெண்ணெயுண்டாயை. (தாப்பித்யாதி) கைக்கெட்டிற்றொரு தாம்பாலே கட்டின தழுப்பு. (அறியுமுலகெல்லாம்) கயிற்றை நீட்டவொண்ணுதி; உரலைச் சிறுக்கவொண்ணுது; இவனுடம்பிலே இடங் காணுமித்தனையிறே.

அவ:— ஆஶ்ரித பக்ஷபாதம் போலே ஆஶ்ரிதபவ்யதையும்.

வ்யா:— (உலகெல்லாம்) சிசுபாலனை இட்டுச் சொல்ல வேணுமோ? (யானேயித்யாதி) அநுக்ரஹமுடைய நானே அல்லேன்.

(பொறியித்யாதி) நிரபேக்ஷனைப் அர்த்திக்கப் பிறந்த நீ. (வெறி) ஸ்வாபாவிகமென்னுதல்; பிள்ளை * முசியாமைக்கென்னுதல். (காப்பு) பசுமையும், திரட்சியும், செவ்வையும். (மென்தோளிகடை வெண்ணெ யித்யாதி) இருவர்க்கு தாரகப்; அபலை கட்டிலே கட்டுண்பதே. (தாம்பே கொண்டு) குறுங்கயிற்றைக்கொண்டு. 22.

---

அ:— இருபத்திரண்டாம் பாட்டு. ஆர்த்த—ஆர்க்கப்பட்ட என்று அர்த்தமாக்கி அருளிச்செய்கிறார் (கயிற்றை நீட்டவித்யாதி).

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார். (ஆஶ்ரிதபக்ஷபாத மித்யாதி) இட்டு—அவன் மாத்ரமல்ல என்றபடி. இருவர்க்கும்—தாய்க்கும் மகனுக்கும். அவளுக்கு ஜீவநஹேது, இவனுக்கு ஆஶ்ரித ஸ்பர்சமென்றபடி. 22.

---

23. தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவா மங்கை
தழும்பிருந்த தாள்சகடம் சாடி—தழும்பிருந்த
பூங்கோதை யாள்வெருவப் பொன்பெயரோன் மார்பிடந்த
வீங்கோத வண்ணர் விரல்.

பதவுரை:— அம் கை—அழகிய கைகளில், சார்ங்க நாண்—சார்ங்கவில்லின் நாணி, தோய்ந்த—படிந்ததினாலேற்பட்ட, தழும்பு—தழும்பானது, இருந்த ஆம்—இருக்கின்றனவாம்; தாள்—திருவடிகளில், சகடம் சாடி—சகடாஸுரனை உதைத்ததினாலுண்டான, தழும்பு இருந்த—அடையாளம் இருக்கின்றது; பூம் கோதையாள்—அழகிய மயிர்முடியையுடைய பிராட்டி, வெருவ—(உலகுக்கு என் வருமோ என்று) அஞ்சும்படியாக, பொன் பெயரோன்—ஹிரண்யன் என்ற பெயரையுடைய அஸுரனுடைய, மார்பு இடந்த—மார்பைப் பிளந்த, வீங்கு ஓத வண்ணர்—பெருகும் அலைகளையுடைய கடலைப் போன்ற திருநிறத்தையுடைய எம்பெருமானுடைய, விரல்—திருவிரல்களிலே, தழும்பு இருந்த—தழும்பு இருக்கின்றன.

அவ:— இருபத்திமூன்றும் பாட்டு. ஒரு செயலைக் கொண்டு சொல்லும்படி என் என்னில்; ஒரு செயலிலேயோ ஒரு அவதாரத்திலேயோ தழும்பு சுமந்தது ! என்கிறார்.

---

* முசியாமைக்கு—இளையாமைக்கு.

வ்யா:— (தழும்பிருந்தவித்யாதி) பிராட்டியும் கூடக் கூசி ஸ்பர்சிக்க வேண்டும் அழகிய கை, சார்ங்கநாண் தோய்ந்த தழும்பிருந்தவாம். ஜ்யாகிணத்தாலே கர்க்கசமாயிருக்கும். (தாள் சகடம் சாடித்தழும்பிருந்த பூங்கோதையாள் வெருவப்பொன் பெயரோன் மார்விடந்த) ‡ "அடலரியாய்ப்பெருகினனே" என்கிற படியே. (விரல் தழும்பிருந்த) கால் தழும்பு, கை தழும்பு, அவாந்தராவயவமான விரல் தழும்பு; ஒன்றேயோ தழும்பாயிற்று என்கிறார்.

(பூங்கோதையாள் வெருவ) "ஆஶ்ரிதருடைய கார்யம்" என்றால் உகக்கும் அவளும் பயப்படும்படி உடம்படையத்தழும்பு. (சாடி) அவன் * மூரிநிமிர்ந்தான். இவர்க்குக் குவாலாயிருக்கிறபடி. (பூங்கோதையாள் வெருவ) பொறுதென்றிருக்குமவள். வீரவாசி அறியுமவள். ருஷிவேஷத்தோடே திரியவேணுமென்னுமவள். (வீங்கோதவண்ணர் விரல்) வளர்த்தியும் குளிர்த்தியும். † [மஹாவிஷ்ணும்] விக்ரஹ வ்யாப்தியாயிற்று. 23.

அரு:— இருபத்துமூன்றாம் பாட்டு. மேலுக்குத்தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பூங்கோதையாளித்யாதி). பூங்கோதையாளை ராமாவதாரத்தோடே சேர்த்து அருளிச்செய்கிறார் (பொறுதென்றித்யாதி). பொறுது என்று-ஆஶ்ரிதரக்ஷணம் போராது என்ன வேணும் என்றிருக்குமவள் என்றபடி. இப்படிப்பட்டவளும் வெருவும்படி சார்ங்கநாண் தோய்ந்த என்று இங்கும் கூட்டி யோஜிப்பது. 23.

24. விரலோடு வாய் தோய்ந்த வெண்ணெய்கண்டு ஆய்ச்சி
உரலோ டுறப்பிணிந்த நான்று—குரலோவா
தேங்கி நினைந்தயலார் காண விருந்திலையே
ஓங்கோத வண்ணா வுரை.

பதவுரை:— விரலோடு வாய் தோய்ந்த—உன்னுடைய விரல்களிலும் வாயிலும் படிந்திருந்த, வெண்ணெய்—வெண்ணெயை, ஆய்ச்சி—யசோதைப்பிராட்டி, கண்டு—பார்த்து, உரலோடு—உரலுடன், உற பிணித்த நான்று—நன்றாகக் கட்டிவைத்தபோது, குரல் ஓவாது—அழுகுரல் நீங்காமல், ஏங்கி—ஏங்கிக்கொண்டு, நினைந்து—

‡ பெரிய திரு. (2-5-8). * திருப்பாவை (23) மூரிநிமிர்ந்தான்—திமிர் போம்படி நிமிர்ந்தான். † ந்ருஸிம்ஹமந்த்ரம்.

(அப்போதும்) வெண்ணெய் திருடுவதை நினைத்துக்கொண்டு, அயலார்—மற்றவர்களெல்லாரும், காண—வேடிக்கை பார்க்கும்படி, இருந்திலேயே—இருக்கவில்லையா? ஓங்கு ஓத வண்ணா—கிளர்ந்தெழுந்த அலைகளையுடைய கடல்போன்ற திருமேனியை உடையவனே!, உரை—நீயே உண்மையைச் சொல்.

வ்யா:— இருபத்திநாலாம் பாட்டு. (விரலித்யாதி) விரல் வாயிலே தோய்ந்தவளவிலே. † "வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு" என்றும் சொல்லாநின்றது; "விரலோடு வாய்தோய்ந்த" என்றும் சொல்லாநின்றது; இவை எங்ஙனே சேரும்படி? என்று பிள்ளை திருநறையூரரையர் பட்டரைக் கேட்க; "இவனுக்கு என்றும் திருப்பணி இதுவன்றோ? ஒருநாள் அங்ஙனுமாகிறது, ஒருநாள் இங்ஙனுமாகிறது." என்றருளிச்செய்தார். ‡ "வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்" என்கிறபடியே. (உரலித்யாதி) உரலென்றும் அவனென்றும் பிரித்துக்காணப் போகாதபடி கட்டின அன்று. (குரலோவாதேங்கி) அழப்புக்க த்வநி மாறாதே; ஏங்கின ஏக்கம் கீழ் விழாதே. (நினைந்து) இப்படி அழாநிற்கச் செய்தேயும் பெரிய திருப்பணிகளாயிற்று நினைப்பது. வெண்ணெய் களவு காணும்படி நினைந்து. (அயலார்காண இருந்திலேயே) ஐந்துலக்ஷங்குடியில் பெண்களில் காணாதாருண்டோ? இவனாலே நெஞ்சு புண்பட்டாரெல்லாம் இவன் பட்டபாடு காண வருவர்களிறே. (38) "अत्युत्कटैः पुण्यपापैरिहैव फलमश्नुते" (அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமச்நுதே) இறே. (ஓங்கோதவண்ணா உரை) இவனைக்கட்டிவைத்தது ஒரு கடலைத் தேக்கிவைத்தாற்போலே காணும். (உரை) இவ்வடிவு காணவேணும்; இவ்வடிவோடே கூட வார்த்தையும் கேட்கவேணும்; பொய்யாகில் உரலோடேகூட இழுத்துக்கொண்டு புறப்படுவனோ?

(விரலித்யாதி) வயிறுவளர்த்து அகப்படப்பெற்றோமோ? * மிடற்றுக்குக் கீழிழியப்பெற்றோமோ? (உரலோடு) உரலோடு தன்னோடு வாசி இல்லாமை. (குரலோவாது) அழப்புக்கவாறே,

---

† பெரியாழ். திரு. (2-9-1). ‡ திருவாய். (1-8-5). * மிடற்றுக்கு—கழுத்துக்கு.

"இக்கோலுண்டு பார்" என்ன; ஏங்கிநின்றான். (நினைந்து) வெண்ணெயை நினைந்திருக்கை. (அயலார்காண) பஞ்சலக்ஷம்குடியில் பெண்களடைய; அவர்களை பந்தித்துத் தான் அகப்படாதிருக்கும்; அவர்கள் இவன் அகப்படவல்லனே என்றிருப்பர்கள். (இருந்திலையே) ராமசரத்தை ராவணன் மறக்கில் மறக்கலாம். (ஓங்கோதவண்ணு) நெருக்குண்கையாலே வந்த பூர்த்தி. (உரை) (24) "न मे मोघ" (ந மே மோகம்) என்னும் நீ சொல்லிக்காண். அவாப்த ஸமஸ்தகாமன் குறையாய் அழுவதே! ஸர்வசக்தி மிடுக்கின்றி ஒழிவதே! ஸர்வஜ்ஞன் புரையறுவதே! 24.

---

அரு:— இருபத்துநாலாம் பாட்டு. "இவை மௌக்த்ய வைதக்த்யங்கள் சேருப்படி" என்று அரையர். விரலாலே தொட்டு வாய் தோய்ந்தானோ? என்ன அருளிச்செய்கிறார் (வைகலுமித்யாதி). அவ்விடத்துக்கு இதுவுமொரு அர்த்தம். காணாதே துःக்கப்பட்டவர்கள் காணக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (அத்யுத்கடை: இத்யாதி). புண்யபலம், நாளாகை. "உரை" என்றத்தால் பலித்ததை அருளிச்செய்கிறார். (பொய்யாகிலித்யாதி) பொய்யென்றாயாகில். கையும் களவுமாகக் கட்டுண்டத்தை அவன் நினைத்திருக்குமோ? என்ன, அருளிச்செய்கிறார் (ராமசரத்தை இத்யாதி). ஆஶ்ரித விஷயத்தில் உகந்து கட்டுண்கையாலே மறவாமல் நினைத்திருக்கும் என்றபடி. புரையறுகை—அவிழ்க்கைக்கு உபாயம் அறியாதிருக்கை. 24.

---

25. உரைமேற் கொண்டென்னுள்ள மோவாது எப்போதும்
வரைமேல் மரதகமே போல—திரைமேல்
கிடந்தானைக் கீண்டானைக் கேழலாய்ப் பூமி
யிடந்தானை யேத்தி யெழும்,

பதவுரை:— வரை மேல்—மலையின் மேலே, மரதகமே போல—மரதகமணி பதிந்திருப்பது போல, திரை மேல்—பாற்கடலின் மேலே, கிடந்தானை—பள்ளிகொண்டவனை, கேழலாய்—வராஹரூபியாய், பூமி—உலகத்தை, கீண்டானை—(அண்டபித்தியில் நின்றும்) ஒட்டு விடுவித்து, இடந்தானை—எடுத்தவனான எம்பிரானை, என் உள்ளம்—என் மனமானது, ஓவாது—இடைவிடாமல், எப்போதும்—

எல்லாக் காலத்திலும், உரை மேற்கோண்டு—உரைப்பதில் ஈடுபட்டு, ஏத்தி—(அவனுடைய கல்யாணகுணங்களைப்) புகழ்ந்து, எழும்—உய்ந்துபோகும்.

அவ:— இருபத்தைந்தாம் பாட்டு. இவனுடைய இந்நீர்மை அநுபவித்தால் வேறொன்றால் போதுபோக்கவொண்ணாது என்கிறார்.

வ்யா:— (உரைமேல்கொண்டு) மேலான உரையைக்கொண்டு. அதாவது— வாக்குக்கு விஷயமானத்தைக் கொண்டு. அன்றிக்கே, உரைக்கையிலே மேற்கொண்டு. அதாகிறது—சொல்லிச் செல்லுகையிலே கிளர்ந்து. (என்னுள்ளமோவாதெப்போதும்) என்னுடைய ஹ்ருதயமானது உச்சிவீடு விடக்கடவதன்றிக்கே. ஸ்வரூபம் ஒருகாலாக அழியுமோ? ஒருமலையிலே ஒருமரதக கிரியானது பரப்புமாறப் படிந்தாற்போலேயாயிற்று திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின போது இருக்கும்படி. ஸர்வேஶ்வரனாய் ஸர்வசக்தியானவனுடைய ஸௌலப்ய சரிதங்களைச் சொல்லுகைக்கு.

(என்னுள்ளமித்யாதி) தாஸவ்ருத்திகனான என்னுடைய மநஸ்ஸானது இடைவிடாது. (எப்போதுமித்யாதி) ஒரு பர்வத சிகரத்திலே இந்த்ரநீலமணி இருந்தாற்போலே விளங்குகிற ஸமுத்ரசாயியானவனை. (கிடந்தானைக்கீண்டானை) ஆர்த்தரைக் கண்டால் படுக்கை அடிகொதிக்கும்படி. (ஏத்தி எழும்) ஸ்துதித்து உஜ்ஜீவிக்கும்.

அவ:— (உரைமேல்கொண்டு) இவனுக்கு நினைவும் பேச்சும் வெண்ணெயிலே ஆனாற்போலே, ஆழ்வார்க்கு நினைவும் பேச்சும் இவன் பக்கலிலே ஆனபடி சொல்லுகிறது.

வ்யா:— (உரைமேல்கொண்டு) வாக்குக்கு விஷயமாகக்கொண்டு. வாக்வ்ருத்தியை மேற்கொண்டு என்னவுமாம். (என்னுள்ளமித்யாதி) ஒருமலைமேலே மரதகம் கிடந்தாற்போலே திரைமேலே கண்வளர்ந்தருளுகிறவனை. (கீண்டானையித்யாதி) வராஹரூபியாய்ப்புக்கு அண்டபித்தியில் நின்றும் ஒட்டுவிடுவித்து பூமியை இடந்தவனை. (ஏத்தியெழும்) ஏத்தி உஜ்ஜீவியாநின்றது. 25.

---

அரு:— இருபத்தைந்தாம் பாட்டு. (உரைமேல்) மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (இவனுக்கித்யாதி). கேழலாய்க்

கீண்டு இடந்தானை என்றபடி. சேதந ஸமாதியாலே உள்ளம் ஏத்தி எழும் என்று க்ரியை. வாக் வ்ருத்தியை மேற்கொள்ளுகை வாக்வ்ருத்தியை உடைத்தாகை என்றபடி. 25.

26. எழுவார் விடைகோள்வா ரீன்றுழா யானை
வழுவா வகை நினைந்து வைகல்—தொழுவார்
வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்
மனச் சுடரைத் தூண்டும் மலை.

பரவுரை:— எழுவார்—(செல்வத்தைப் பெற்று) அகலுமவர்களான ஐச்வர்யார்த்திகளும், விடை கோள்வார்—(எம்பெருமானை விட்டு நித்யமாகப்) பிரிந்துபோகும் கைவல்யார்த்திகளும், ஈன் துழாயானை—இனிய துழாய் மாலையையுடைய எம்பெருமானை, வழுவா வகை நினைந்து—பிரியாமலிருக்க வேண்டுமென நினைத்து, வைகல்—தினந்தோறும், தொழுவார்—வணங்குமவர்களான பகவத்ப்ராப்தி காமர்களுமாகிய இம்மூவருடைய, வினைச் சுடரை—(அவரவர்களுடைய ப்ராப்யத்துக்கு விரோதியான) பாபத்தீயை, நந்துவிக்கும்—அவிக்கும், வேங்கடமே—திருவேங்கடமலையே, வானோர்—நித்யஸூரிகளுடைய, மனச் சுடரை—திருவுள்ளமாகிற விளக்கை, தூண்டும் மலை—தூண்டுகின்ற மலையாகும்.

அவ:— இருபத்தாறும்பாட்டு. (எழுவார்) எல்லார்க்கும் நினைவும் செயலும் ஒக்கப்பரிமாறலாவது பரமபதத்திலேயன்றோ? என்னில்; நித்யஸூரிகளுங்கூட அவனுடைய ஸௌலப்யம் காண வருகிறது திருமலையிலேயன்றோ என்கிறார்.

வ்யா:— (எழுவார்) ஐஶ்வர்யம் வேணுமென்று மேலேமேலே ப்ரார்த்திக்குமவர்கள். (விடைகொள்வார்) ஆத்மப்ராப்தியே அமையும்; நீ வேண்டாவென்று இவன் பக்கலில் நின்றும் அகலுமவர்கள். (ஈன்றுழாயானையித்யாதி) இவனை நாங்கள் பிரியாதொழிய வேணும் என்று நினைத்து, காலமெல்லாம் தொழுவார்கள். (வினையித்யாதி) பகவத்ப்ராப்தி விரோதி, ஆத்மப்ராப்தி விரோதி, ஐஶ்வர்ய ப்ராப்தி விரோதி ஆன பாபங்களை, எரிகிற நெருப்பை அவித்தாற்போலே நசிப்பிக்கும் வேங்கடமே. (வானோரித்யாதி) நித்யஸூரிகளுடைய கிளர்ந்த மனஸ்ஸை அவனுடைய ஸௌலப்யம் காணப்போமீகோள் என்று கிளர்த்தாநிற்கும் திருமலை. காலாந்தரமன்று; ஸந்நிஹிதம்.

(எழுவார்) ப்ரயோஜநம் கைபுகுந்தவாறே போவார் ஐஸ்வர்யார்த்திகள். (விடை கொள்வார்) பலம் நித்யமாகையாலே மீட்சி இல்லை கேவலர்க்கு. (வினையித்யாதி) இம் மூவர்க்கும் உத்தேஸ்ய விரோதிகளைப் போக்கும். நந்துவிக்கை–அவிக்கை. (வானேரித்யாதி) இங்குள்ளார் * ஒழிவில் காலமெல்லாம், அங்குள்ளார் † அகலகில்லேன் என்னச் சொல்லும். 26.

---

அரு:— இருபத்தாறாம் பாட்டு. (எழுவார்) "மலை" என்கையாலே ஸங்நிஹிதம். இது ப்ரத்யக்ஷமன்றோ என்றபடி.

மீட்சி இல்லாமையாலே இவனை விட்டு விடைகொண்டகன்று போகிறதே அவர்களுக்கு ஸ்வபாவம் என்றபடி. 26.

---

27. மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து
சிலையால் மராமரமேழ் செற்று—கோலையானைப்
போர்க்கோ டொசித்தனவும் பூங்குருந்தம் சாய்த்தனவும்
கார்க்கோடு பற்றியான் கை.

பதவுரை:— மலையால்—கோவர்த்தனகிரியைக் கொண்டு, குடை கவித்து—குடையாகக் கவித்தும், மா வாய் பிளந்து—குதிரையாய் வந்த கேசி என்னும் அஸுரனின் வாயைப் பிளந்தும், சிலையால்—வில்லாலே, மராமரம் ஏழ் செற்று—ஏழு மராமரங்களையும் துளைத்தும், கோலை யானை—கொல்லுவதற்காக நிறுத்தின யானையின், போர் கோடு ஒசித்தனவும்—சண்டை செய்யும் தந்தங்களை ஒடித்தவையும், பூங் குருந்தம் சாய்த்தனவும்—பூத்த குருந்தமரத்தைத் தள்ளினவையும், கார் கோடு—மேகம் போல் முழங்கும் சங்கத்தை, பற்றியான்—பிடித்தவனுடைய, கை—திருக்கைகளேயாகும்.

அவ:— இருபத்தேழாம் பாட்டு. (மலையித்யாதி) திருவேங்கடமுடையானுடைய திருக்கையைப் பார்த்தார்போலே.

வ்யா:— (மலையால் குடைகவித்து) வர்ஷத்துக்குக் குடை அபேக்ஷிதமிறே. இந்த்ரன் ஆஸுரப்ரக்ருதி அல்லாமையாலே பசிக்ராஹத்தாலே செய்தானாகில், மலையை எடுத்து நம்மை நோக்கிக் கொள்வோமென்று மலையைக் குடையாகக்கவித்து. (மாவாய் பிளந்து) பண்ணின ப்ராதிகூல்யத்தின் கனத்தாலே கேசியைக் கொன்று.

---

* திருவாய். (3-3-1). † திருவாய். (6-10-10).

(சிலையித்யாதி) அவதாரத்துக்கடுத்த ஆயுதத்தாலே மராமரமேழையும் செற்று. (கொலையித்யாதி) கொல்லக்கடவதாக நிறுத்தின குவலயா பீடத்தினுடைய பொராநின்றகோட்டை அநாயாஸேந முறித்தனவும். (பூங்குருந்தம் சாய்த்தனவும்) பூப்பறித்தனவும். (கார்க்கோடித்யாதி) ஶ்ரமஹரமாய் முழுக்கத்தை உடைத்தாயிருக்கும் என்கை. அன்றிக்கே, திருக்கையிலே ஸ்ரீபாஞ்சஜந்யம் இருந்தபோது மேகத்தைப்பற்றி இருந்த சங்குபோலே இருந்ததென்கை. இடையர் செய்வதெல்லாம் முன்கை உரத்தாலே, க்ஷத்ரியர் என்றும் வில்லாலே என்னுமிடம் தோற்றுகிறது. ஸ்ரீபாஞ்சஜந்யம் பிடிக்கவும் பொறாத ம்ருதுவான கையைக்கொண்டு கிடீர் இதெல்லாம் செய்தது.

அவ:— சேஷ்டிதங்களிலே உருகுகிறார். ஸௌகுமாரமான கையைக் கொண்டே இப்பெரிய செயல்களைச் செய்வதே! செய்யா நின்றால் அநாயாஸேந செய்வதே!

வ்யா:— (மலையித்யாதி) மலையாக விநியோகங் கொண்டானோ? (மாவாய் பிளந்து) நாரதாதிகள் கூப்பிடும்படி வந்த கேசியை நெட்டிக்கோரை கீண்டாற்போலே கீண்டு. (சிலையித்யாதி) எய்ய வொண்ணாதபடி திரளநின்ற மராமரங்களை. (கொலையித்யாதி) கொலையிலே உற்ற ஆனை. (பூங்குருந்தம்) தழைத்துப் பூத்து நின்ற. (கார்க்கோடு) குளிர்ந்து ஶ்ரமஹரமாய்ப் பெருத்து முழங்குகை. ஸ்ரீபாஞ்சஜந்யம் தொடப்பொறாத கை கிடீர்! 27.

---

அரு:— (மலையால்) கோடு—சங்கம். மேகஸ்வபாவத்தையுடைய சங்கென்னுதல்; மேகத்தோடே கூடின சங்கென்னுதல். க்ருஷ்ணன் கையாலே செய்கையும், பெருமாள் வில்லாலே செய்கையும் பற்ற தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (இடையரித்யாதி). "பற்றி" என்று ப்ரயாஸம் தோற்றுகையாலே பொறாத ம்ருதுவான கை என்கிறது.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (சேஷ்டிதங்களிலித்யாதி) நெட்டி—வாடின. 27.

---

28. கைய வலம்புரியும் நேமியும் கார்வண்ணத்
ஐய மலர்மகள்நின் னாகத்தாள்—செய்ய
மறையான் நின்னுந்தியான் மாமதிள் மூன்றெய்த
இறையான் நின்னாகத் திறை.

பதவுரை:— கார்—மேகம் போன்ற, வண்ணத்து—திருநிறத்தையும் ஸ்வபாவத்தையுமுடைய, ஐய—எம்பிரானே! வலம்புரியும்—ஸ்ரீபாஞ்சஜந்யமும், நேமியும்—திருவாழியாழ்வானும், கைய—கையிலிருக்கின்றன; மலர் மகள்—பூவில் அவதரித்த பெரிய பிராட்டியார், நின்—உன்னுடைய, ஆகத்தாள்—திருமார்பில் இருக்கிறாள்; செய்ய மறையான்—உன்னைக் காட்டுகையாகிற செம்மையையுடைய வேதத்தை ஓதும் நான்முகன், நின்—உன்னுடைய, உந்தியான்—திருநாபியிலே பிறந்தவன்; மா மதிள்—பெரிய மதிள்களை உடைய, மூன்று—முப்புரங்களையும், எய்த—அம்பெய்து அழித்தவனும், இறையான்—தன்னை ஈச்வரனாக அபிமானித்திருக்கும் ருத்ரன், நின் ஆகத்து—உன்னுடைய திருமேனியில், இறை—ஒரு மூலையைப் பற்றிக் கிடக்கிறவன்.

அவ:— இருபத்தெட்டாம் பாட்டு. (கையித்யாதி) ஐஶ்வர்யம் சொல்லுகிறதென்னவுமாம். நீர்மை சொல்லுகிறதென்னவுமாம்.

வ்யா:— (கையவலம்புரியும் நேமியும்) கைப-கையிலேயுள்ள. (கார்வண்ணத்தைய) ஶ்ரமஹரமான வடிவையுடைய ஸ்வாமியானவனே! (மலர்மகள் நின்னாகத்தாள்) * கோலமலர்ப்பாவை நின் திருமார்விலாள். (செய்யவித்யாதி) நேரே உன்னைக் காட்டவற்றான வேதத்தையுடைய ப்ரஹ்மா உன் திருநாபீகமலத்திலானன். (மாமதிளித்யாதி) த்ரிபுரதஹநம் பண்ணி ஈஶ்வராபிமாநியாயிருக்கிற ருத்ரன் உன் திருமேனியைப்பற்றி இறையாயிற்று. அன்றியே, (நின்னாகத்திறை) என்று திருமேனியில் ஏகதேசத்திலே என்னவுமாம்.

(கையித்யாதி) ஐஶ்வர்யமாதல்; அழகாதல். (கார்வண்ணம்) வேறே வேணுமோ? வடிவே அமையாதோ? (ஐய) என்னது என்னலாயிருக்கை. (மலர்மகள் நின்னாகத்தாள்) † அலர்மேல் மங்கையுறைமார்வன். (மாமதிளித்யாதி) ஊரைச்சுட்டுப் பேரைப்படைத்தான்; கோட்சொல்லி ப்ரவஸித்தராமாப்போலே. ஆகத்தில் ஏகதேசத்தைப் பற்றினனென்னுதல். ஆகத்தைப்பற்றி இறையானனென்னுதல். 28.

---

அரு:— இருபத்தெட்டாம் பாட்டு. (கையவலம்புரி) திவ்யாயுதங்கள் அழகுக்கும் உடல். 28.

---

* திருவாய். (10-10-6). † திருவாய். (6-10-10).

29. இறையும் நிலனு மிருவிசும்பும் காற்றும்
அறைபுனலும் செந்தீயு மாவான்—பிறைமருப்பில்
பைங்கண்மால் யானை படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய் தெளி.

பதவுரை:— இறையும்—பரமபதநாதனுகவும், நிலனும்—பூமியும், இரு விசும்பும்—பரந்த ஆகாசமும், காற்றும்—வாயுவும், அறை புனலும்—சப்தியாநிற்கும் ஜலமும், செந்தீயும்—சிவந்த அக்னியு மாகவும், ஆவான்—ஆகின்றவன், பிறை மருப்பில்—இளஞ்சந்திரன் போன்ற தந்தத்தையும், பைம் கண்—அழகிய கண்களையுமுடையதான, மால் யானை—பெருத்த யானையுடைய, படு துயரம்—பெரும் துயரத்தை, காத்து—போக்கி, அளித்த—ரக்ஷித்த, செம் கண்மால் கண்டாய்—செந்தாமரைக்கண்ணனுன பரமபுருஷன்கிடாய்; தெளி—(மனமே!) இதை நன்றாக அறி.

அவ:— இருபத்தொன்பதாம் பாட்டு. (இறையும்) ஐஶ்வர்யம் கண்டு அஞ்சவேண்டா; ஆஶ்ரிதபாரதந்த்யமே அவனுக்கு ஸ்வரூபம் என்கிறார்.

வ்யா:— (இறையும்) பரமபதத்திலிருப்பைச் சொல்லுகிறது. (நிலனுமித்யாதி) ஜகதாகாரனுய் லீலாவிபூதியுக்தனுனபடி சொல்லுகிறது. (பிறைமருப்பிலித்யாதி) பிறைபோலும் கொம்பை யுடைத்தாய், ஜாத்யுசிதமான கண்ணையுடைத்தாய், பெருத்த ஆனையினுடைய. (படுதுயரம் காத்தளித்த) ஆனைக்குப் போருப்படியான துயரைப் போக்கி ரக்ஷித்த. (செங்கண்மால்கண்டாய் தெளி) வாத்ஸல்யாம்ருதத்தை வர்ஷியாநின்ற கண்ணையுடையனுன ஸர்வேஶ்வரன். (தெளி) இவனுக்கு ஆஶ்ரிதபாரதந்த்ர்யமே ஸ்வரூபம் என்னுமிடத்தை புத்தி பண்ணு.

அவ:— ஐஶ்வர்யம் கண்டு * வெருவாதே சீலத்தை அநுஸந்தி என்கிறார்.

வ்யா:— (இறையும்) நியாமகனுய்க்கொண்டு பரமபத்திலிருக்கும். (நிலனுமித்யாதி) இந்த விபூதியை உடையனுயிருக்கிற இருப்பு. (மால் யானை) உடம்பில் பெருமை † பாடாற்ற ஒண்ணுமை. (அளித்த) புண்பட்டத்தை ஸ்பர்சித்தருளினபடி. (செங்கண்) வாத்ஸல்யம்.

* வெருவாதே—பயப்படாதே. † பாடாற்ற—ஸஹிக்க.

(மால்) அரைகுலையத் தலைகுலைய வந்து தோற்றினபடி. அவன், தம்மை (39) "मा शुचः" (மா ஶுச:) என்ன, திருவுள்ளத்தை தாம் (39) "मा शुचः" (மா ஶுச:) என்கிறார். வாசலைத்திறந்து வைப்பாரைப்போலே பெறுகைக்கு அங்கும் போகவேண்டா; இசைவே வேண்டுவது; ஆர்த்தியே வேண்டுவது. அவனே வாரா விடில் ஸமாப்யதிக தரித்ரனே அவன்? மற்று அவனைப்பெற உபாய முண்டோ? வாஸனையாலே "அம்மே" என்பாரைப்போலே அழைத்ததித்தனை. 29.

---

அரு:— இருபத்தொன்பதாம் பாட்டு. (இறையும்) மேலுக் கவதாரிகை அருளிச்செய்கிறார் (ஐஶ்வர்யம் கண்டித்யாதி). தெளிவு போருமோ? என்ன, அருளிச்செய்கிறார் (வாசலைத்திறந்தித்யாதி). இசைவு மாத்ரத்திலே வரக்கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் (அவனே வாராவிடிலித்யாதி). ஸமாப்யதிக தரித்ரனாகப் பெறான் என்றபடி. ஸ்ரீகஜேந்த்ராழ்வான் அழைத்தானே? என்ன, அருளிச் செய்கிறார் (வாஸனையாலேயித்யாதி). 29.

---

30. தெளிதாக வுள்ளத்தைச் செந்நிறீஇ ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய் நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே
போய் நாடிக் கொள்ளும் புரிந்து.

பதவுரை:— தெளிதாக—கலக்கம் நீங்கும்படியாக, உள்ளத்தை—மனஸ்ஸை, செம் நிறீ இ—நன்கு நிறுத்தி, ஞானத்து—ஞானத்தாலே, எளிதாக—ஸுலபமாக, நன்கு உணர்வார்—நன்றாக அறிபவர்களுடைய, சிந்தை—மநஸ்ஸானது, எளிதாக—ஸுலபமாக, தாய் நாடு—(பசுக்கூட்டத்தின் இடையே உள்ள தன்) தாயை அடைகிற, கன்றே போல்—கன்றுக்குட்டியைப்போல், தண் துழாயான் அடிக்கே—குளிர்ந்த திருத்துழாய் மாலையையுடைய ஸர்வேச்வரனுடைய திருவடிகளையே, புரிந்து—விரும்பி, போய்—அடைந்து, நாடிக் கொள்ளும்—சேர்ந்துகொள்ளும்.

அவ:— முப்பதாம் பாட்டு. (தெளிதாக) ஸம்ஸாரத்திலே ஸமாஶ்ரயணீயர் பலர் உண்டென்று ப்ரமிக்கவேண்டா; ஸம்பந்த ஜ்ஞாநமுண்டாகவே நெஞ்சு தானே அவனை ஆராய்ந்து பற்றும்.

வ்யா:— (உள்ளத்தை-தெளிதாக) விஷயப்ராவண்யத்தாலே கலுஷமான ஹ்ருதயத்தினுடைய காலுஷ்யம் போக. (செந்நிறீஇ) செவ்விதாக நிறுத்தி. (ஞானத்தித்யாதி) ஞானத்தாலே எளிதாம்படி. "அவன் ஸ்வாமி நாம் சேஷபூதர்" என்று அவனை உணர்வாருடைய சிந்தை, அநேகம் பசுக்கள் நின்றால் தாயைத் தேடும் கன்றுபோலே தண்டுழாயானடியே புரிந்துபோய் நாடிக்கொள்ளும். (செந்நிறீஇ) இந்த்ரியங்களைத் தான் வெல்லப்பாராதே எம்பெருமான் பக்கலிலே மூட்டி விஷயங்களை ஜயிக்கப்பார்க்கை.

(தெளிதாக) ஜ்ஞாநத்தாலே விஶதமான பக்தியாலே. (எளிதாக) விஷயங்களில் பழக்கம்போலே தானே *மூளும்படியாயிருக்கை. தாயாரிருக்கிறபடி. (அடியே) அல்லாத ஸ்தலங்களைக்கடந்து. (புரிந்து) விரும்பி. 30.

அரு:— முப்பதாம் பாட்டு. (தெளிதாக) புரிந்து—பின்னை ஒன்றையும் பாராமல் திரும்பி. "தண்டுழாயான்" என்றத்தைப் பற்ற (தாயாரென்கிறது). 30.

31. புரியொருகை பற்றியோர் பொன்னாழி யேந்தி
அரியுருவு மாளுருவு மாகி—எரியுருவ
வண்ணத்தான் மார்பிடந்த மாலடியை யல்லால் மற்
றெண்ணத்தா னாமோ விமை.

பதவுரை:— புரி—வலம்புரிச் சங்கத்தை, ஒரு கை பற்றி—ஒரு கையாலே பிடித்து, ஓர் போன் ஆழி ஏந்தி—(மற்றொரு திருக்கையிலே) ஒப்பற்றதும், அழகியதுமான சக்கரத்தைத் தாங்கி, அரி உருவும் ஆள் உருவும் ஆகி—ஸிம்மத்தின் உருவத்தையும், மனித உருவையும் கொண்ட நரஸிம்ஹரூபியாகி, எரி உருவ வண்ணத்தான்—நெருப்பின் உருவம் போன்ற உருவையுடைய இரணியனுடைய, மார்பு இடந்த—மார்பைக் கிழித்த, மால்—ஆச்ரிதபக்ஷபாதியுடைய, அடியை அல்லால்—திருவடிகளைத் தவிர, மற்று—வேறொரு பொருளை, இமை—கணப்பொழுதேனும், எண்ணத் தான் ஆமோ—நினைக்கத்தான் முடியுமோ?

* மூளும்படி—கூடும்படி.

அவ:— முப்பத்தோராம் பாட்டு. (புரியித்யாதி) அவனுடைய ஆஶ்ரித பாரதந்த்ர்யத்தை அநுஸந்தித்தால் வேறே ஒன்றை ஒரு சற்றுப்போது அநுஸந்திக்கலாமோ? என்கிறார்.

வ்யா:— (புரியித்யாதி) வலப்புரியில், "வலம்" என்கிற இடத்தைக் குறைந்துக்கிடக்கிறது. (அரியித்யாதி) ஆயுதங்களை யொழியவும் இரண்டு வடிவாலும் சாகேனென்று வேண்டிக்கொண்டபடியாலே நரத்வஸிம்ஹத்வங்களை ஒரு வடிவாகக்கொண்டான். (எரியித்யாதி) அநபிபவநீயனான ஹிரண்யனுடைய மார்வைப்பிளந்த. (மாலித்யாதி) இமைகொட்டி விழிக்கும்போது வேறொன்றை எண்ணல் ஆமோ? அன்றிக்கே, நெஞ்சை அநாதரித்து வேறொன்றை எண்ணப்போமோ? இமை-பார் என்றுமாம்.

அவ:— இவ்விஷயத்தை ஒருக்ஷணகாலம் விட்டிருக்கை ஸாஹஸிகம் என்கிறார்.

வ்யா:— (புரியித்யாதி) ஹிரண்யன்மேலே விழுகிறவனை விலக்கினாற்போலே. (பொன்னாழியேந்தி) ஹிரண்யன் திருவுகிருக்கு இரையாய்ப்போனான். திருவாழி அழகுக்குப் பிடித்தவித்தனை. (அரியித்யாதி) விசாரியாநிற்கப் பற்றாமே இரண்டு வடிவையும் கொண்டு தோற்றினபடி. (எரியுருவவண்ணத்தான்) அணுக வொண்ணாதபடி அநபிபவநீயனாயிருந்தபடி. (மால்) கார்யப்பாட்டாலன்றியே பிள்ளை பக்கல் வ்யாமோஹத்தால் கீண்டான். இமை-பாரென்னவுமாம். 31.

---

அரு:— முப்பத்தோராம் பாட்டு. (புரி) இரண்டு வடிவாலும், கேவலஸிம்ஹத்தாலும் கேவலமநுஷ்யனாலும். இமை-இமைகொட்டுதல்; பார்த்தல்.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (இவ்விஷயத்தை யித்யாதி). (பற்றி) ஹிரண்யன்மேலே போகிற சங்கை; பற்றி-வாங்கி என்கிறபடி. 31.

---

32. இமையாத கண்ணா லிருளகல நோக்கி
அமையாப் பொறிபுலன்க ளைந்தும்—நமையாமல்
ஆகத் தணைப்பா ரணைவரே ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்.

RSITY EXTENSION

பதவுரை:— இமையாத கண்ணால்—ஞானஸங்கோசமற்ற உட்கண்ணாகிய நெஞ்சால், இருள் அகல—(அறியாமையாகிற) இருட்டு நீங்கும்படியாக, நோக்கி—(ஸ்வஸ்வரூபபரஸ்வரூபங்களைக்) கண்டு, அமையா—அடக்கவொண்ணாத, பொறி புலன்கள் ஐந்தும்—(கண் முதலிய) ஐந்து இந்திரியங்களையும், (சப்தம் முதலிய) ஐந்து விஷயங்களையும், நமையாமல்—அடக்காமலிருந்தாலும், ஆகத்து அணைப்பார்—(அவன் நிர்ஹேதுகக்ருபையாலே மேல்விழும்போது) அவனை நெஞ்சிலே நினைப்பவர்கள், ஆயிர வாய் நாகத்து அணையான்—ஆயிரம் வாய் படைத்த ஆதிசேஷனைப் படுக்கையாகக்கொண்ட எம்பெருமானுடைய, நகர்—நகரமாகிய ஸ்ரீவைகுண்டத்தை, அணைவரே—அடைவார்கள்.

அவ:— முப்பத்திரண்டாம் பாட்டு. (இமையாதவித்யாதி) அவன் மேல்விழ விலக்காதார்க்கு இந்த்ரியஜயம் பண்ண ஶக்தரன்றாகிலும் கிட்டலாம் என்கிறார்.

வ்யா:— (இமையாதகண்ணால்) "கண்" என்றும், "உட்கண்" என்றும் சொல்லக்கடவது. அதில் உட்கண்ணாலே. (40) "मनसा तु विशुद्धेन" (மநஸா து விஶுத்தேந) என்னும்படி. (இருளகல நோக்கி) அஜ்ஞாநாந்தகாரம் போம்படியாக நோக்கி. (அமையாவித்யாதி) அமைக்கப்போகாத இந்த்ரியங்கள் ஐந்தும். (நமையாமல்) ஜயியாதிருக்கச்செய்தே. (ஆகத்தணைப்பார்) அவன்மேல்விழ விலக்காதவர்கள் அணைவரும். (அணைவரே ஆயிரவாய் நாகத்தணையான் நகர்) என்கிற இத்தால், ஒருவனே எல்லா அடிமைகளும் செய்யவேணுமென்னுமிடமும் ஒரு தேசவிசேஷமுண்டென்னுமிடமும், அத்தேசமே ப்ராப்யமென்னுமிடமும் சொல்லுகிறது.

அவ:— ஸர்வேஶ்வரனுடைய பரமபதம் ஆஶ்ரயியாதார்க்குக் கிடைக்குமோ? ஆஶ்ரயித்தார் பேரவிரகுண்டோ? ருசிமாத்ரமுடையார் அவனாலே பெறுமித்தனை என்றும், அவனல்லது இல்லை என்றும்.

வ்யா:—(இமையாத கண்) * நெஞ்சென்னுமுட்கண். திருவாசலை நீக்கி அவனையும் தன்னையும் உள்ளபடி அறிகை. (அமையா) திரிய விடுவிக்கவொண்ணாத பொறியைந்தும் புலனைந்தும். (நமையாமல்)

---

பெரிய திருவ. (28).

நியமியாமல். (ஆகத்தணைப்பார்) * மூலையடி என்னுதல்; அவன் மேல்விழாநின்றால் † இருயாமலென்னுதல். (நாகத்தணை) பர்யங்க வித்யை. 32.

அநு:— முப்பத்திரண்டாம் பாட்டு. (இமையாத) "தெளிதாக" என்கிற பாட்டிலே "செந்நிறீஇ" என்று இந்த்ரியஜயத்தைச் சொன்னார். இப்பாட்டில் அது இல்லாவிட்டாலும் என்கிறார் (அவன்மேல்விழவித்யாதி). ஆகம்—மநஸ்ஸு.

அர்த்தஶிக்ஷா பூர்வகமாக மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனுடையவித்யாதி). ஆஶ்ரயியாதார்—ஸம்ஸாரிகள். ஆஶ்ரயித்தார்—உபாஸகர். ருசியுடையார்—ப்ரபந்நர். "அணைவரே" என்றது பிரிநிலையாய், அணையார் என்றாய், (ஆகத்தை) ஸ்த்ரீகள் தேஹத்தை அணைத்து மூலையடியே திரியும் ஸம்ஸாரிகள் பரம பதத்தைக் கிட்டார் என்னுதல். அன்றியே, "அணைவரே" என்றது தேற்றமாய், இந்த்ரியஜயம் பண்ணவிட்டாலும் அவனை ஹ்ருதயத் திலே வைக்குமவர்கள் பரமபதத்தைக் கிட்டுவர் என்னுதல். 32.

33. நகர மருள்புரிந்து நான்முகற்குப் பூமேல்
பகர மறைப்பயந்த பண்பன்—பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதியுரு வெண்ணும்
அந்தியாலாம் பயனங் கேன்.

பதவுரை:— பூ மேல்—உந்தித் தாமரையின் மேல், நான்முகற்கு—பிரமனுக்கு, நகரம் அருள் புரிந்து—வாஸஸ்தானத்தைக் கொடுத்தருளி, பகர—(பிறர்க்கு) ஓதுவிக்கும்படி, மறை பயந்த—வேதத்தை உபதேசித்த, பண்பன்—நீர்மையையுடைய எம்பிரானின், பெயரினையே—திருநாமங்களையே, புந்தியால் சிந்தியாது—மனத்தால் எண்ணாமல், ஓதி உரு எண்ணும் அந்தியால்—ஜபித்துக்கணக்கெண்ணும் ஸந்த்யாவந்தனத்தால், அங்கு ஆம் பயன் என்—உண்டாகப்போகிற ப்ரயோஜனம் என்ன.

அவ:— முப்பத்துமூன்றாம் பாட்டு. (நகரம்) ஸர்வேஶ்வரனை நெஞ்சாலே ஆதரியாதே பண்ணுகிற கர்த்தவ்ய தந்த்ரத்தால் என்ன ப்ரயோஜநமுண்டு? என்கிறார்.

* மூலையடி—இஷ்டப்படி திரிகை. † இருயாமல்—பின்வாங்காமல்.

வ்யா:— (நான்முகற்குப் பூமேல் நகரமருள்புரிந்து) (பகர வித்யாதி) பிறர்க்கு ஓதுவிக்கும்படி ப்ரஹ்மாவை ஓதுவித்த நீர்மையை உடையவனுடைய. செல்வப்பிள்ளையைத் தேவைக்கு ஓதுவிக்குமாப்போலே. (பெயரினையே புந்தியால் சிந்தியாது) அவனுடைய திருநாமங்களையே நெஞ்சால் நினையாது. (ஓதியித்யாதி) அல்லாதவற்றை ஓதிச்சென்று அவ்வுருவை எண்ணும் ஸந்த்யாவந்தநாதிகளால் என்ன ப்ரயோஜநமுண்டு? எம்பெருமானுக்கு உடலல்லாத கேவலஸந்த்யை வ்யர்த்தம்.

(நகரமித்யாதி) திருநாபீகமலத்தைக் * கலவிருக்கையாக ப்ரஸாதித்தான்; ப்ரஹ்மாவுக்கு ஜந்மதேசத்தையே கொடுத்தான், அந்தரங்கர்க்குக் கிட்ட மாளிகை சமைக்குமாப்போலே. (பகாவித்யாதி) அந்த வேண்டப்பாட்டுக்கு மேலே நாட்டாரை ஓதுவிக்கைக்கு வேதத்தைக் கொடுத்தான். (பண்பன்) அந்நீர்மை மறக்கவொண்ணுமை. (பெயரித்யாதி) ஸ்வாபாவிக ஸம்பந்தத்தை அநுஸந்தித்து அவனை உகப்பியாதே. (ஆம் பயனங்கென்?) எம்பெருமானை அகலுகையே பலித்துவிடுவது.

(பெயரினையே) அவன் குணங்களுக்கு வாசகமான திருநாமம். (ஓதியித்யாதி) அஹ்ருதயமாகப் பண்ணும் ஆயாஸரூபமான கர்மத்தைப் பற்றுவதே! 33.

---

அரு:— முப்பத்துமூன்றும் பாட்டு. (நகர்) வேண்டப்பாடு-மேன்மையாய், அத்தாலே கிட்டவைக்கும்படியான அதிசயம். 33.

---

34. என்னொருவர் மெய்யென்பரேழுலகுண்டு ஆலிலையில்
முன்னொருவ னாய முகில்வண்ணா!—நின்னுருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால் பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்த வாறு.

பதவுரை:— ஏழுலகு உண்டு—ஏழு உலகங்களையும் திருவயிற்றிலே வைத்து, ஆல் இலையில்—ஒரு ஆலந்தளிரிலே, முன்—முன்னொரு காலத்தில், ஒருவனாய—துணையற்றவனாய்த் தூங்கிய, முகில் வண்ணா—மேகவண்ணா!, முலை தந்தாள்—முலை கொடுத்த, பேய் தாய்—தாயாய் வந்த பேயாகிய பூதனை, பேர்ந்திலளால்—அசைய

---

* கலவிருக்கை—ஸபாஸ்தாநம்.

முடியாமல் இறந்து கிடந்தாள்; பேர் அமர் கண்—ஒன்றோடொன்று யுத்தம் செய்வன போன்றிருக்கும் பெரிய கண்களையுடைய, ஆய்த்தாய்—இடைத்தாயாகிய யசோதை, முலை தந்த ஆறு—முலை கொடுத்த விதத்தை, ஒருவர்—ஒப்பற்ற ஞானிகளாள ரிஷிகள், மெய் என்பர்—உண்மை என்று உரைப்பர்; என்—(இது) எங்ஙனே கூடும்?

அவ:— முப்பத்துநாலாம் பாட்டு. (என்றொருவர்) ப்ரளயத்தில் லோகத்தை எல்லாம் தன் திருவயிற்றிலே வைத்து ஒரு * பவனுன ஆலிலையிலே தனியே கண்வளரா நின்ற ஈஶ்வரனுக்கு அஞ்சுகிற யசோதைப் பிராட்டியுடைய ஸ்நேஹம் ஒரு ஸ்நேஹமே! என்கிறார்.

வ்யா:— (என்றொருவர் மெய்யென்பர்) இத்தை ஒருவர் மெய் யென்னுப்படி எங்ஙனே? என்னவுமாம். "என்?" என்று, † "எத்திறம்?" என்னும்படியே சொல்லவுமாம். (ஒருவர் மெய்யென்பர்) அறிந்த ருஷிகளிலே சிலர் "அர்த்தவாதசங்கை இல்லை, இது மெய்" என்பர். (ஏழுலகித்யாதி) ஏழுலகத்தையும் திருவயிற்றிலே வைத்து ஆலிலையிலே. (முன்) முன்பு தனியேயாய் ஶ்ரமஹரமான வடிவை உடையவனே. (பேயித்யாதி) பேயான தாய் முலையைத்தந்து திருமேனியினின்றும் பேராதே கிடக்கச்செய்தே. (நின்னுருகி பேரமர்க்கண் ஆய்த்தாய் முலைதந்தவாறு) உனக்கு நல்லவளாய், யசோதைப்பிராட்டி, விஷத்துக்கு அம்ருதமாக முலை தந்தவாறு; இதென்ன ஆஶ்சர்யம்!

அவ:— ஸோபாதிகமாகவன்றியே ஸ்வபாவத ஏவ ஸ்நேஹிக்கு மவளை நினைக்கிறார்.

(என்) எத்திறம்? (ஒருவர் மெய்யென்பர்) விலக்ஷணர் மெய் யென்பர். இத்தை ஒருவர் மெய்யென்பதே! "என்?" என்றபோது ஜகத்தில் நடையாடுவதொரு ஸ்நேஹமாகிலன்றோ மெய்யென்ன லாவது? (எழித்யாதி) நீ செய்யும் செயலுக்கு அடைவுண்டாகிலிறே உன்னை ஆஶ்ரயித்தார் செயலுக்கு அடைவுண்டாவது. (ஒருவனுய) பரிஹரிக்கத் தாயும் தமப்பனும் ஒருவருமில்லை. (முகில்வண்ணு!) பரிவர் வேண்டியிருக்கிறபடி. (நின்னுருகி) உன் குணங்களுக்கு உருகி. (பேர்ந்திலளால்) அப்பிணம் கிடக்கச்செய்தே. அப்பேயின் கையில்

* பவனுன—அப்போதுண்டான. † திருவாய். (1-3-1).

அகப்பட்டது அடையப் படுத்திக் கால்நடை தந்து, நஞ்சுக்குப் பரிஹாரமாக அம்ருதமான முலையைக் கொடுத்தபடி. 34.

அரு:— முப்பத்துநாலாம் பாட்டு. (என்றொருவர்) "ஏழுலகுண்டாலிலையில் முன்றொருவனாய முகில்வண்ணா!, பேய்த்தாய் முலை தந்தாள் பேர்ந்திலளால், நின்னுருகி, பேரமர்க்கண் ஆய்த்தாய் முலை தந்தவாறு, என்றொருவர் மெய்யென்பர்." இத்தை ஒருவர் மெய்யென்னும்படி என்? -எங்ஙனே என்று க்ஷேபமாதல், ஒருவர் மெய்யென்பர், என்! இதென்ன நீர்மை தான் என்று ஈடுபாடாதல். (பேரமர்க்கண்) பெரிதாயிருக்கிற யுத்தஸ்தலத்திலே. (பேய்ச்சியுண்டு) அவள் பிணமாய்க் கிடக்கிற அவஸ்தையிலே என்னுதல். பெரிய அமர்போலே ஒன்றுக்கொன்று பொராநிற்கிற கண். அந்த அவஸ்தையைக் கண்டு து:க்கத்தாலே பார்த்த கண்ணையுடைய யசோதை என்னுதல்.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (ஸோபாதிகேத்யாதி).

க்ஷேபபரம். இத்தை அருளிச்செய்கிறார் (ஒருவரித்யாதி). மெய்யென்னப்போகாமைக்கு ஹேது அருளிச்செய்கிறார் (என்னென்றபோதித்யாதி) ஜகத்திலே பிணத்திலே இருக்கச்செய்தே கண்டால் பயப்படுகையொழிய எடுத்து முலை கொடுக்கப்போமோ? ஆகையாலே இது பொய் என்றபடி. (அடையப்படுத்தி) அவள் * உறுக்கி உண்ணச் சொன்னாற்போலே இவளும் விஷத்துக்கு மாற்றாகையாலே * உறுக்கி உண்ணச்சொல்லி. 34.

35. ஆறிய வன்பி லடியார்த மார்வத்தால்
கூறிய குற்றமாக் கொள்ளல்நீ—தேறி
நெடியோய்! அடியடைதற் கன்றே ஈரைந்து
முடியான் படைத்த முரண்.

பதவுரை:—ஆறிய அன்பு இல்—பொங்கித் தணிந்த பக்தி இல்லாத, அடியார்—அடியவர்கள், தம் ஆர்வத்தால்—தங்களுடைய ஸ்நேஹத்தால், கூறிய—சொன்ன சொற்களை, நீ குற்றமாக்கொள்ளல்—நீ தவறாகக் கொள்ளலாகாது; ஈர் ஐந்து முடியான்—பத்துத் தலைகளை உடையவனான ராவணன், படைத்த—செய்த, முரண்—வைரம்,

* உறுக்கி—அதட்டி.

தேறி—(க்ரமமாக) தெளிந்து, நெடியோய் அடி—நெடுமாலான உன்னுடைய திருவடிகளை, அடைதற்கு அன்றே—அடைவதற்குக் காரணமாயிற்றல்லவோ?

அவ:— முப்பத்தைந்தாம் பாட்டு. யசோதைப்பிராட்டியோபாதி ஸ்நேஹமின்றிக்கே, அவளுடைய ஸ்நேஹத்தையுடைத்தாக பாவிக்கிறவர்களுடைய குற்றத்தைப் பொறுத்தருளவேணும் என்கிறார்.

வ்யா:— (ஆறியவன்பிலடியார்) † ஏறிமறிந்த பக்தி இல்லாதவர்கள். (தம் ஆர்வத்தால் கூறிய) தங்களுடைய ஸ்நேஹத்தாலே சொன்னவற்றை. (குற்றமாக்கொள்ளல்) நீ குற்றமாகக் கொண்டருளாதொழியவேணும். நீர் குற்றத்தைச் செய்துவைத்து, "குற்றமாகக் கொள்ளாதொழியவேணும்" என்னப்போமோ என்னில்; (ஈரைந்து முடியான் படைத்த முரண்-தேறி நெடியோய் அடியடைதற்கன்றே) ராவணன் பண்ணின ப்ராதிகூல்யம் க்ரமத்திலே சிசுபாலனுக்கு உன்னை அடைகைக்கு உடலாயிற்றில்லையோ? ப்ராதிகூல்யம் ஆநுகூல்யமாய்ப் பலித்தால், ஆநுகூல்யாபாஸம் ஆநுகூல்யமாகத் தட்டுண்டோ? "தேறி" என்றது, செய்த குற்றத்தைக் குற்றமாகக் கொள்ளாதொழியவேணும் என்னவுமாய். அன்றிக்கே, "தேறி" என்றது, சிசுபாலன் 'கையும் திருவாழியுமாயிருந்தபடி என்?' என்று நினைத்துக்கிடக்க, அது அந்திமஸ்ம்ருதியானாற்போலேயாகவுமாம்.

(ஆறியவன்பு) ஏறிமறிந்து தன்னைப்பெறுதே அந்தலைக்குப் பரிகை. யசோதைப்பிராட்டி பரிவு தம்முடைய ப்ராதிகூல்யத்தோடு ஒக்குமென்கை. அவனுடைய ப்ராதிகூல்யம் தேறி அடைகைக்கு உடலாயிற்றில்லையோ? ‡ "செய்த குற்றம் நற்றமாகவே கொள்". பொறுக்கவே அடைய நன்றாம் என்றிருக்கிறார். (நெடியோய்) ஆநுகூல்ய லேசமுடையார் திறத்து நீ இருக்கும் இருப்பு எல்லை காணப்போமோ?

---

அரு:— முப்பத்தைந்தாம் பாட்டு. (தேற) கலங்கினது தேறுமாப்போலே க்ரமத்திலே என்றபடி. ராவணனுடைய இரண்டாம் ஜந்மமான சிசுபாலனுக்கும்.

---

† ஏறிமறிந்த—சாந்தமான. ‡ திருச்சந்த. (111).

(அன்பில்) இல்—இல்லாமையாய், தனக்குப் பரிவரில்லையோ? என்ன, அருளிச்செய்கிறுர் (யசோதைப்பிராட்டியித்யாதி). இத்தனை ப்ராதிகூல்யமுடைய உமக்குக் கிட்டப்போமோ? என்ன, அருளிச் செய்கிறுர் (அவனுடையவித்யாதி). 35.

---

36. முரணை வலிதொலைதற் காமென்றே முன்னம்
தரணி தனதாகத் தானே—இரணியனைப்
புண்ணிரந்த வள்ளுகிராற் பொன்னாழிக் கையால் நீ
மண்ணிரந்து கொண்ட வகை.

பதவுரை:— முன்னம்—முன்னமேயே, தரணி தனது ஆக தானே—பூமியைத் தன்னுடையதாகவே அபிமானித்திருந்த, இரணியனை—ஹிரண்யகசிபுவை, புண் நிரந்த—புண்படுப்படி பிளந்த, வள் உகிரால்—கூர்மையான நகங்களால், பொன்—அழகியதாக விளங்குவதும், ஆழி கையால்—சக்கரத்தை உடையதுமான திருக் கையால், நீ—நீ, மண் இரந்து கொண்ட வகை—பூமியை யாசித்துப் பெற்ற வகையானது, முரணை வலி தொலைதற்கு ஆம் என்றே—(எங்களைப்போன்ற ஸம்ஸாரிகளின்) அஹங்கார மமகாரங்களைப் போக்கடிப்பதற்காகவேயல்லவா?

அவ:— முப்பத்தாறும் பாட்டு. (முரணை) யசோதைப்பிராட்டி ஸ்நேஹமின்றியிலே இருக்கச்செய்தே அவளுடைய ஸ்நேஹம் உண்டாக பாவித்துச் சொன்னவற்றைக் குற்றமாகக் கொள்ளாதொழிய வேணுமென்று நீர் இரக்கவேணுமோ தன்னுடைமையை வேருருத் தனதாக்கிவந்து இரக்குமவனுக்கு?

வ்யா:— (முன்னமித்யாதி) முன்பே பூமியடையத் தன்னதாக அபிமானித்திருந்த ஹிரண்யனைப் புண்படுத்திப் பிளந்த உகிரை உடைத்தாயிருந்துள்ள பொன்னாழிக்கையால். (நீயித்யாதி) ப்ரகாரம். (முரணை வலி தொலைதற்காமென்றே) ஸர்வேச்வரனுயிருந்துள்ள நம்முடைய அர்த்தித்வம் தோற்ற நின்ற ஸௌலப்யத்தைக்காண நாட்டாருடைய அஹங்கார மமகாரத்தாலே பிறந்த திண்மை நெகிழு மென்றே நீ இப்படிச் செய்தது. (முன்னம் தரணி தனதாகத்தானே) முன்னே பூமி அடங்கலும் தன்னதாக அபிமானித்த மஹாபலி பக்கலிலே என்னவுமாம்.

(முரணையித்யாதி) யசோதைப்பிராட்டியைப்போலே எங்களை உருக்கலாமென்றே. (முன்னமித்யாதி) தன்னதாக உகக்குமாகில், நாம் இன்று பெற்றோமாக அமையாதோ? என்று இரந்துகொண்ட வகை. 36.

---

அரு:— முப்பத்தாறும் பாட்டு. "மண்ணிரந்து கொண்டவகை முரணை வலி தொலைத்தற்காமென்றே" என்று அந்வயம். ப்ராதிகூல்யத்தினுடைய மிடுக்கைப்போக்குகைக்காக என்றபடி.

இத்தை அவதாரிகையிலே அருளிச்செய்கிறார் (யசோதைப் பிராட்டியித்யாதி). எங்களை உருக்கலாமென்றது கீழ்ப்பாட்டிலே—அவனுடைய சேஷ்டிதத்தைக் கண்டவளாகையாலே எங்களையும் உருக்கலாமென்று நீ மண்ணிரந்துகொண்டது, நாங்கள் வன்னெஞ்சராகையாலே உருகமாட்டோமென்றபடி. இரக்கவேண்டுவானென்? என்ன, அருளிச்செய்கிறார் (தன்னதாகவுகக்குமாகிலித்யாதி). 36.

---

37. வகையறு நுண்கேள்வி வாய்வார்கள் நாளும்
புகைவிளக்கும் பூம்புனலு மேந்தி—திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே வெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்த வூர்.

பதவுரை:— வகை அறு—மற்ற தெய்வங்களும், மற்ற பலன்களுமாகிற வகைகளை அறுக்கும்படியான, நுண் கேள்வி வாய்வார்கள்—ஸூக்ஷ்மமான கேள்வி ஞானத்தை உடையவர்களான, வேதியர்கள்—விப்ரர்கள், நாளும்—தினந்தோறும், புகை விளக்கும்—தூபதீபங்களையும், பூம் புனலும்—பூவுடன் கூடிய ஜலத்தையும், ஏந்தி—தரித்துக் கொண்டு, திசை திசையும்—எல்லா திக்குகளிலிருந்தும், சென்று—(திருமலைக்குச்) சென்று, இறைஞ்சும்—தொழும்படியான, வேங்கடமே—திருவேங்கடமலையே, வெண் சங்கம் ஊதிய வாய்—வெளுத்த சங்கத்தை ஊதிய திருப்பவளத்தையுடைய, மால்—எம்பிரான், உகந்த—விரும்பி எழுந்தருளியிருக்கும், ஊர்—தேசமாகும்.

அவ:— முப்பத்தேழாம் பாட்டு. (வகையித்யாதி) நாம் அந்த அவதாரத்துக்குப் பிற்பட்டோமிறே; அது தீர்த்தம் ப்ரஸாதித்துப்

போயிற்றிறே என்ன; அவன் தான் ஸம்ஸாரத்திலே திருமலையை உகந்து வந்து நிற்கவும் அதுக்கு வெறுக்கவேணுமோ? என்கிறது.

வ்யா:— (வகையறும்) (41) "बहुशाखा ह्यनन्ताश्च" (பஹுமாகா ஹ்யநந்தாம்ச) என்னும்படி ப்ரயோஜநாந்தரபரமான தேவதாந்தர ஸ்பர்ஶியான வகையறுகை. (நுண் கேள்விவாய்வார்கள்) ஸ்தூலமாக வன்றிக்கே ஶ்ரவணவேளையிலே ஸூக்ஷ்மமான கேள்வி வாய்த்தவர்களான. (வேதியர்கள்) வேததாத்பர்யம் கைப்பட்டவர்கள். (புகையித்யாதி) புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு. (திசையித்யாதி) ஸர்வதோதிக்கமாக வந்து தொழப்படும் திருமலை. (வெண்சங்கமித்யாதி) பாரதஸமரத்திலே அர்ஜுநன் தொடுத்துவிட்ட அம்புகளுக்கு எதிரிகள் எட்டும் அளவன்றியே ஒழிந்தால் ஒருவராலும் * இருய்க்கப் போகாதபடி நின்ற நிலையிலே † முழுக்காயாக அவியும்படிக்கீடாக ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வாயிலே வைத்து ஊதின க்ருஷ்ணன் உகந்த ஊர்.

(வகையறும்) முழுகுவாரைக் கண்டவாறே முழுகி, ஜபிப்பாரைக் கண்டவாறே ஜபியா. (நுண்கேள்வி) ஸூக்ஷ்மார்த்தம் கேட்டுக் கைபுகுந்தார். (13) "चञ्चलं हि मनः कृष्ण" (சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண). (திசைதிசையில்) ஸர்வதோதிக்கமாக. (வேதியர்கள்) வேததாத்பர்யம் கைப்பட்டார். (வெண்சங்கம்) ஆஶ்ரிதபக்ஷபாதி வர்த்திக்கிற ஊர். 37.

---

அரு:— முப்பத்தேழாம் பாட்டு. அதுக்கு-பெறப்பட்டதுக்கு. வகையறுகை-ப்ரயோஜநாந்தர தேவதாந்தரங்களைப் ப்ரதிபாதிக்கிற ஶாகைகளையும் தத்பரமான புத்திகளையும் அறுகை. இவ்விடத்துக்கு வகையறுகை-ஸாதநாந்தரங்களை அறுகை. ஸூக்ஷ்மார்த்தம் கைபுகுருகை அருமையோ? என்ன, அருளிச்செய்கிறார் (சஞ்சலம் ஹி மந: என்று). 37.

---

38. ஊரும் வரியரவ மோண்சுறவர் மால்யானை
பேர வெறிந்த பெருமணியை—காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்
எம்மேன்னு மால திடம்.

---

* இருய்க்கப்போகாதபடி—ப்ரதிக்ரியை பண்ணிப்போகாதபடி.
† முழுக்காயாக அவியும்படி—உருதெரியாமல் அழியும்படி.

பதவுரை:— ஊரும்—ஊர்ந்து செல்கின்றதும், வரி அரவம்—(உடம்பில்) கோடுகளை உடையதுமான பாம்பானது, ஒண் குறவர்—மேலான குறவர்கள், மால் யானை பேர—(பட்டி மேய்கிற) பெரிய யானைகள் (புனத்தை விட்டு) வெளிச்செல்லும்படியாக, எறிந்த—(அந்த யானைகளின்மீது) வீசி எறிந்த, பெரு மணியை—பெரிய மாணிக்கத்தை, கார் உடைய மின் என்று—மேகத்தில் இருக்கும் மின்னல் என்று நினைத்து, புற்று அடையும் வேங்கடம்—(இடிக்கு பயந்து) புற்றினுள் நுழையுமிடமான திருவேங்கடமலையே, மேல சுரர்—மேலான தேவர்களான நித்யஸூரிகள், எம் என்னும்—எங்களுடையது என்று அபிமானிக்கும், மாலது இடம்—எம்பெருமானுடைய திவ்யதேசமாகும்.

அவ:— முப்பத்தெட்டாம் பாட்டு. (ஊரும்) பரமபதத்திலுள்ளாரடைய உத்தேஶ்யரானவோபாதி திருமலையில் வர்த்திக்கும் ஸர்ப்பம், குறவர், பட்டிதின்னும் ஆனையடைய இவர்க்கு உத்தேஶ்யமாயிருக்கிறபடி. ‡ "எம்பெருமான் பொன்மலைமேலேதேனுமாவனே."

வ்யா:— (ஊரும்) ஒரு கார்யப்பாடறத் திருமலையிலே ஊர்ந்து திரிகையே உத்தேஶ்யமாயிருக்கிறபடி. (வரியரவம்) பாம்பினுடைய உடம்பில் வரி திருவேங்கடமுடையானுடைய திருமேனியில் ஓர் அவயவத்தோபாதி உத்தேஶ்யமாயிருக்கிறபடி. (ஒண்குறவர்) திருவேடுவர்க்கு ஒண்மையாவது- "இவர்கள் பாட்டன் பாட்டனிலே ஒருத்தன் பூமியிலே இறங்கினன்" என்னும் பழியின்றிக்கே இருக்கை. (மால்யானையித்யாதி) மலைபோலே இருந்துள்ள ஆனை, தன்னை, ஒரு மலை சலித்தாற்போலே இருக்கப்போப்படிக்கீடாக. (எறிந்த பெருமணியை) மஹார்க்கமான மணியை. ஆனை மேகம்போலே இருக்கையாலும், அதிலே பட்ட மணி மின்போலே இருக்கையாலும், பாம்பானது, இடிக்கு அஞ்சுகையாலே மின்னினவநந்தரம் இடி உண்டாமென்றுகொண்டு அதுக்கு முன்னே புற்றடையா நிற்கும் திருமலை. (மேல சுரர் எம்மென்னு மாலதிடம்) ஆக்கரான தேவர்களன்றியே, மேலான சுரர்-நித்யஸூரிகள், எம்மென்னுமாலதிடம்- * அஹமஹமிகயா விரும்புமிடம்.

---

‡பெருமாள் திரு. (4-10). * அஹமஹமிகயா—நான் முன்னால் நான் முன்னால் என்று.

அவ:— அங்கே புக்காலோவென்னில் உள்ளுப்புகவொட்டா நின்றதோ?

வ்யா:— (ஊரும்) (42) “प्रातरि गच्छति” (ப்ராதரி கச்சதி) போலே. (வரி) அதுவும் ஸ்ப்ருஹணீயம். (மால்யானை) மலைநடந்தாற் போலே. (பேர) ஆமிஷார்த்தமாக வந்து மலைபேர்ந்தாற்போலே பேர. (பெருமணியை) மலைபோல இருக்கை. (ஊரும் வரியரவம்) இவை ஸ்வைரஸஞ்சாரத்தாலே ஸௌபாக்யம் கொண்டாடப் புறப்பட்டு. (புற்றடையும்) இடிக்கு முன்னுன பின்னுகையாலே. 38.

---

அரு:— முப்பத்தெட்டாம் பாட்டு. † என்னென்ற—என்னதென்ற. மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறுர் (அங்கே புக்காலித்யாதி). (உள்ளுப் போகவொட்டாது) ஊரில் போக்யதை என்றபடி. 38.

---

39. இடந்தது பூமி யெடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச—கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது.

பதவுரை:— பேர் ஓதம் வண்ணர்—பெரிய கடல் போன்ற திரு நிறத்தை உடைய எம்பெருமான், மூன்—முற்காலங்களில், இடந்தது—(வராஹரூபியாகக்) குத்தியெடுத்தது, பூமி—உலகமாகும்; எடுத்தது—குடையாக எடுத்தது, குன்றம்—கோவர்த்தனமலையாகும்; அஞ்ச கடந்தது—பயந்து அழிந்து போகும்படி செய்தது, கஞ்சனை—கம்ஸனையாகும்; கிடந்ததுவும்—திருக்கண்வளர்ந்தருளினதும், நீர் ஓதம் மா கடல்—நீர் நிரம்பியதும், அலையெறிவதுமான பெருங் கடலிலே; பெரிது நின்றதுவும்—எப்போதும் நின்றதுவும், வேங்கடமே—திருமலையிலேயாகும்.

அவ:— முப்பத்தொன்பதாம் பாட்டு. (இடந்தது) ஆபத்திலே பூமியை ரக்ஷிப்பது; அவதாரங்கள் ஸாது பரித்ராணார்த்தம் துஷ்க்ருத் விநாஶார்த்தமாவது; எப்போதும் உகந்து திருமலையிலே நிற்பது என்கிறுர்.

வ்யா:— (இடந்தபூமி) ப்ரளயாபத்திலே பூமியை எடுத்த அழகு காணலாவது. (எடுத்தது குன்றம்) கோவர்த்தநோத்

---

† ‘என்னென்ற’ என்ற பாடத்தைக்கொண்டு இந்த அரும்பதம்.

தரணத்திலே அவ்வழகு காணலாவது. (கடந்ததித்பாதி) கம்ஸன் அஞ்சும்படி அவனை அழித்த அன்று வெற்றி அழகு காணலாவது. (கிடந்ததுவும் நீரோதமாகடலே) கண்வளர்ந்த அழகு காணலாவது ஆழ்ந்த கடலிலே சாய்ந்தபோது. (பேரோத வண்ணர் பெரிது- நின்றதுவும் வேங்கடமே) கடல்போலே ஸ்ரமஹரமான வடிவை உடையவன், எப்போதும் உகந்து நிற்பது திருமலையிலே.

(இடந்தது) ப்ரளயத்தாலே வந்த நலிவுதீர. (எடுத்தது) இந்த்ரனால் வந்த நலிவுதீர. (கடந்தது) கம்ஸனால் வந்த நலிவுதீர. (கிடந்ததுவும்) அவதாரத்துக்கு ஏகாந்தமாம். நாம் பெருமாளை உகந்தோமென்று சோற்றை உகப்புதோம்; சோற்றை உகந்தோமென்று நாலும் பத்தும் பட்டினி விடுவுதோம்; ஸ்த்ரீகளை உகந்தோமென்று சதுரங்கம் பொருதல், உறங்குதல் செய்வுதோம்; ஒன்றிலும் ஸ்நேஹமில்லை. 39.

---

அரு:— முப்பத்தொன்பதாம் பாட்டு. ஆழ்வார்கள், ஈஶ்வரனுடைய குணசேஷ்டிதங்களை வாய்புலத்துகையாலே இந்நிலை அஸ்மதாதிகளுக்கு இல்லையென்னுமிழவாலே அருளிச்செய்கிறார் (நாம் பெருமாளை இத்யாதி). 39.

---

40. பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த வேழம்—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று.

பதவுரை:— பெரு வில்—பெரிய வில்லையும், பகழி—அம்புகளையும் உடைய, குறவர்—வேடர்களுடைய, கை—கையிலே பிடித்த, செம் தீ—சிவந்த நெருப்புக்கு, வெருவி—அஞ்சி, புனம் துறந்த—வயலை விட்டு நீங்கின, வேழம்—யானை, இரு விசும்பில்—பரந்த ஆகாயத்திலிருந்து, மீன் வீழ—நக்ஷத்திரம் விழ, கண்டு—அதைப் பார்த்து, அஞ்சும்—(குறவர்கள் வீசி எறிந்த கொள்ளிக்கட்டையென்று) பயப்படுமிடமான, வேங்கடமே—திருமலையே, மேல்—முற்காலத்தில், அசுரர் கோன் வீழ—அரக்கர்களுக்கு அரசனான ஹிரண்யன் முடிந்து விழ, கண்டு—(அதைப்) பார்த்து, உகந்தான்—மகிழ்ந்தவனுடைய, குன்று—திருமலையாகும்.

வ்யா:— நாற்பதாம் பாட்டு. (பெருவில்) திருமலையை உகக்கிறார். (43) "अवष्टभ्य महद्धनुः" (அவஷ்டப்ய மஹத்தநு:) என்கிறபடியே, சக்ரவர்த்தித்திருமகன் கையும் வில்லும்போலே பெரியவில்லையும் தெரிந்த பகழியையும் உடையரான திருவேடுவர். (குறவரித்யாதி) * சூளிலே கொளுத்திக் கையிலே கொடுபோகிற நெருப்பொளியிலே வில்லின் பெருமையையும் கண்டு நெருப்புதனக்கு ஆனை அஞ்சும்படியாகவும், பட்டிமேய்ந்த ஆனை இப்புனம் கொய்தாலும் இங்கு வாரேனென்று ஸங்கலித்துப்போனது. (இருவிசும்பித்யாதி) வெளியையும் பரப்பையுமுடைத்தான ஆகாசத்தினின்றும் மீன்விழக் கண்டு இனி ஓரிடத்திலும் போக்கில்லையென்று நின்றநிலையிலே நின்று அஞ்சுகிற திருவேங்கடம். மேல்-பண்டு. (அசுரரித்யாதி) "சிறுக்கனுடைய விரோதி போயிற்று" என்று உகந்து இன்னமும் ஆஶ்ரிதவிரோதி ஏதேனும் வரிலும் பரிஹரிக்கவேணும் என்றவன் பற்றிநிற்கும் திருமலை.

(பெருவிலித்யாதி) இதில் உத்தரார்த்தப்: மீன்வீழக் கண்டஞ்சும் நிலத்திலே நெருப்பை விழவிட்டார்களென்று குறவர் எறிந்த கொள்ளிக்கு வெருவினதாகையாலே. (வேங்கடம்) நிர்ப்பயமான தேசம்; அஸ்த்தாநே பயஶங்கை பண்ணுமித்தனை. 40.

---

அரு:— நாற்பதாம் பாட்டு. நக்ஷத்ரம் விழுந்தால் பயப்பட வேண்டுவானென்? என்ன, அருளிச்செய்கிறார் (நிலத்திலே நெருப்பை இத்யாதி). குறவர் பரண்களிலேயிருந்து கொள்ளியை எறியுமது கண்டிருக்குமதாகையாலே மீன் விழுகிறத்தையும் அவர்கள் எறிந்தார்களாக நினைத்து பயப்பட்டதென்றபடி. 40.

---

41. குன்றனைய குற்றஞ் செய்யினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக வென்னெஞ்சே—என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு.

பதவுரை:— என்—என்னுடைய, நெஞ்சே—மனமே! இன்று முதலாக—இப்பொழுது தொடங்கி, என்றும்—எப்பொழுதும், புறன் உரையே ஆயினும்—வெளிக்குச் சொல்லும்வார்த்தையாயிருந்தாலும்,

---

* சூளிலே—பந்தத்திலே.

பொன் ஆழி கையான் திறன் உரையே—அழகிய சக்கரத்தைக் கையிலே கொண்ட எம்பெருமான் விஷயமான பேச்சையே, சிந்தித்து இரு—நினைத்திருப்பாயாக; (அப்படியிருந்தால்) குன்று அனைய—மலையைப் போல் பெருத்த, குற்றம் செய்யினும்—பாபங்கள் செய்தாலும், குணம் கொள்ளும்—(அவைகளைக் காணாமல் எப்பெருமான்) குணங்களையே திருவுள்ளம் பற்றுவான்.

வ்யா:— நாற்பத்தோராம் பாட்டு. (குன்றனைய) அவன் குற்றம் பொறுக்கைக்காகத் திருமலையிலே வந்து நின்றான். ஆபிமுக்யத்தைப் பண்ணினாலும் தோஷாம்ஶத்தைப் பாராதே குணாம்ஶத்தைக் கொள்ளும். அவன் உள்ளவன்றே இவ்வாத்மா உண்டு என்கிறார். இத்தனை நாளும் இத்தைச் செய்யாதொழிவானென்? என்னில்; (இன்றுமுதலாக) இவனுக்கே ஸ்வபாவமென்று அறிந்த இன்று தொடக்கமாக. (என்னெஞ்சே) எனக்கு ஹிதம் பார்க்கும் நெஞ்சே. ஸஹ்ருதயமாக அவன் குணங்களைப் பேசப்போமா? என்னில்; (புறனுரையேயாயினும்) அஹ்ருதயமான பேச்சேயாகிலும். ப்ரயோஜநமின்றிக்கே அநர்த்தமாயிற்றாகிலும்என்றபடி. (பொன்னாழியித்யாதி) ஸர்வேஶ்வரன் திறத்தில் ஶப்தங்களையே அறிந்து. (சிந்தித்திரு) க்ருதார்த்தமாய் இரு.

அவனோடே ஸம்பந்தமுண்டாகிலும் முன்பு அங்ஙன் செய்தருளாவிடுவானென்? என்னில்; "குற்றப்-குணம்" என்று நினையாமை. (பொன்னாழி) தானே ஸஹ்ருதயமாக்கும். 41.

அரு:— நாற்பத்தோராம் பாட்டு. குற்றம் பொறுக்கை ஸ்வபாவம் என்று அறிந்த இன்று என்றபடி. 41.

42. திருமகளும் மண்மகளு மாய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவா றென்கொல்—திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநா கணைக்கிடந்த
மாலோத வண்ணர் மனம்.

பதவுரை:— பால் ஓதம் சிந்த—பாற்கடலில் சிறு துளிகள் சிதறி விழும்படியாக, படம் நாகணை கிடந்த—படத்துடன் கூடிய திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே பள்ளிகொண்ட, மால் ஓதம் வண்ணர்—பெரிய கடல் போன்ற திருமேனியையுடைய எம்பெருமானுடைய,

திரு மகள் மேல் மனம்—பெரியபிராட்டியார் மேல் (அன்பு பூண்ட) திருவுள்ளம், திருமகளும் மண் மகளும் ஆய் மகளும் சேர்ந்தால்—ஸ்ரீதேவியும், பூதேவியும், நீளாதேவியும் (எம்பெருமானோடு) கலந்து பரிமாறும்போது, திருமகட்கே தீர்ந்த ஆறு என்கொல்—பெரிய பிராட்டியாரிடத்திலேயே அற்றுத் தீர்ந்திருப்பது எப்படி?

அவ:— (திருமகளும்) பாராதே பொறுக்கைக்கடி பிராட்டிமார் அருகே இருக்கை என்கிறார்.

வ்யா:— (திருமகளித்யாதி) அரங்காழ்வான், "திருமகட்கே தீர்ந்தவாறென்கொல், மண்மகட்கே தீர்ந்தவாறென்கொல், ஆய் மகட்கே தீர்ந்தவாறென்கொல்" என்று பணிக்கும். (பாலோதம் சிந்த) "திருப்பாற்கடலின் குறுந்திவலை திருமுகத்திலே படும்படிக்கீடாகத் திருவநந்தாழ்வான் மேலே கிடந்த மாலோதவண்ணருடைய திருமகள் மேல் வைத்த திருவுள்ளம், திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறென்கொல்?" என்று அருளிச் செய்வர் பட்டர். பிராட்டியோடு கலந்தபோது, (44) "पुष्पाङ्गरागैस्समं" (புஷ்பாங்கராகைஸ்ஸமம்) என்கிறபடியே அல்லாத பிராட்டிமார் உபகரண கோடியிலே நிற்பர்கள்; அல்லாத பிராட்டிமாரோடு பரிமாறும்போது, இவள் தன் இடையிலும் முலையிலும், கலந்தாற் போலே இருக்கும். போகந்தான் உன்மஸ்த்தகமானால் வ்ருத்த கீர்த்த நாதிகளுக்குக் கூட்டாய் நிற்பர்கள். இத்தால் சொல்லிற்றாயிற்று:— இதர விஷயங்கள் இருவர்க்கும் போராமையாலே "சீறு-பாறு" என்கைக்கு உடலாம்; இங்கு போக்யதாதிஶயத்தாலே கிண்ணகத்தில் இழிவாரைப்போலே திரண்டு அவகாஹிக்கவேணும் என்றதாயிற்று.

42.

---

43. மனமாசு தீரு மருவினையுஞ் சாரா
தனமாய தானே கைகூடும்—புனமேய
பூந்துழா யானடிக்கே போதோடு நீரேந்தி
தாந்தொழா நிற்பார் தமர்.

பதவுரை:— புனம் மேய பூம் துழாயான்—தன் நிலத்திலிருப்பது போலவே பூத்து விளங்கும் திருத்துழாயை அணிந்திருக்கும் எம்பெருமானுடைய, அடிக்கே—திருவடிகளுக்கே, போதோடு நீர்

ஏந்தி—புஷ்பத்துடன் தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு, தமர்—அடியார்கள், தாம்—தாங்களாகவே, தொழாநிற்பர்—தொழுவார்கள்; (தொழுதவுடன்) மனம் மாசு தீரும்—மனத்திலுள்ள அஜ்ஞானம் முதலிய அழுக்குகள் விலகும்; அரு வினைகள் சாரா—தீராத பாபங்களும் கிட்டமாட்டா; தனமாய—செல்வமாகிய பக்தியும், தானே கைகூடும்—தானாகவே வந்து சேரும்.

அவ:— நாற்பத்துமூன்றாம் பாட்டு. (மனமித்யாதி) பிராட்டிமாரடியாக அவனைப் பற்றினார்க்கு போகத்தில் ப்ரதிபந்தகங்கள் போகவேணுமென்றும் பக்த்யாதிகள் உண்டாகவேணுமென்றும் இவர்களுக்குக் கரையவேண்டா என்கிறது.

வ்யா:— (மனமாசுதீரும்) மனஸ்ஸுக்கு மாசாகிறது-ருசிவாஸனைகள். (அருவினையும் சாரா) அவித்யாதி கர்மங்கள் அணையா. (தனமித்யாதி) இப்படியான அதிகாரிக்கு தனமான கைங்கர்யபூர்வபாவியான பக்த்யாதிகள் தானே உண்டாம். (புனமித்யாதி) தமரானவர்கள் ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளிலே தாங்களே தொழாநிற்பர்கள். இவர்களுக்கு அவனுடைய திருவடிகளிலே புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு தொழுவது அவனை அநுபவிக்கையிலே அந்வயம்.

* திறனுரையே சிந்தித்திருக்கவொட்டுமோ இவனுடைய அவித்யாதிகள்? என்னில்; (தனமாய) அவித்யாதிகள் போனார்க்கு வரும் தநம். (45) **“ अन्तरिक्षगतः श्रीमान् ”** (அந்தரிக்ஷகத: ஶ்ரீமாந்) (பூந்துழாயானடிக்கே) குடிக்கிற வேப்பங்குடிநீர். (தாமித்யாதி) இவன் வகுத்தது செய்ய அவன் வகுத்தது செய்யாதொழியுமோ? 43.

---

அரு:— நாற்பத்துமூன்றாம் பாட்டு. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (திறனுரையேயித்யாதி). அவன் வகுத்தது செய்கை—அநிஷ்டத்தைப்போக்கி இஷ்டத்தைக் கொடுக்கை. 43.

---

44. தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியா னும்.

---

* முதல் திருவ. (41).

பதவுரை:— ஆழியான்—சக்ரபாணியான எம்பெருமான், தமர்—பக்தர்கள், உகந்தது எவ்வுருவம்—எந்த உருவத்தை விரும்புகிறார்களோ, அவ்வுருவம் தானே ஆம்—அந்த உருவத்தை தானே அடைவன்; மற்று—மேலும், தமர் உகந்தது எப்பேர்—அடியார்கள் விரும்பியது எந்தப் பெயரோ, அப் பேர் ஆம்—அப்பெயரை அடைவான்; தமர்—அடியவர்கள், உகந்து—விரும்பி, எவ்வண்ணம் சிந்தித்து—எவ்விதமாக நினைத்து, இமையாது இருப்பரே—இடைவிடாமல் தியானம் செய்து கொண்டிருப்பரோ, அவ்வண்ணம் ஆம்—அவ்விதமாகவே ஆவன்.

அவ:— நாற்பத்துநாலாம் பாட்டு. (தமரித்யாதி) "தமர்" என்று சிலவரும் அவர்களுக்கு ப்ரதிபந்தகம் போக்கவேண்டா, போகத்திலே அந்வயம் சொல்லுகிறபடி எங்ஙனே? என்னில்; அவனுடைய ஸ்வரூபம் ஆஶ்ரிதபரதந்த்ரமாகையாலே சொல்லுகிறது.

வ்யா:— (தமருகந்ததித்யாதி) (46) "**ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम्।**" (யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்). நமக்கு நல்லவர்கள் இன்னாரென்றுமில்லை, இன்னபடி பஜிப்பாரென்றுமில்லை; அவர்கள் நின்றநிலையிலே அவர்கள் பஜித்த படியே அவர்களைப் பற்றுவேன் என்கிறது. தமரானவர்கள் ப்ராக்ருத த்ரவ்யங்களிலே ஒன்றை "உனக்குத் திருமேனியாகக் கொள்ள வேணும்" என்றால் அத்தைத் திருமேனியாகக் கொள்ளும். (47) "**सुवर्णरजतादिभिः**" (ஸுவர்ணரஜதாதிபி:). எம்பெருமானார் † மாதுகரத்துக்கு எழுந்தருளாநிற்க, சில பிள்ளைகள் காலாலே கீறி, "உம்முடைய எம்பெருமான் திருமேனி" என்று காட்ட, பாத்ரத்தை வைத்து தண்டனிட்டருளினார். இவ்வர்த்தத்திலே, "கோயிலிலே சில பிள்ளைகள் விளையாடுகிறவர்கள் திருவீதியிலேயிருந்து பெருமாளும் நாய்ச்சிமாரும் பெரியதிருமண்டபமும் கற்பித்துப் பெரும் திருப்பாவாடையும் அமுதுசெய்வித்து, 'எம்பெருமானார்! ப்ரஸாதப்படும்' என்று மணலைக் கையாலே முகந்தெடுக்க, தத்காலத்திலே மாதுகரத்துக்கு எழுந்தருளுகிற உடையவர், அவ்விடத்திலே அது கேட்டருளி தண்டனிட்டு அவர்களெடுத்த ப்ரஸாதத்தைப் பாத்ரத்திலே ஏற்றார்" என்று ஜீயர் அருளிச்

† மாதுகரம்—உஞ்சவ்ருத்தி.

செய்தார். (தமருகந்ததெப்பேர் மற்றப்பேர்) நல்லவர், "சதங்கை யழகியார்" என்று திருநாமம் சாத்தினாராகில், நாராயணாதி நாமங்களைக் காட்டிலும் அத்தை விரும்பும். (தமரித்யாதி) நல்லவர் உகந்து, (46) "ये यथा" (யே யதா) என்னும்படி யாதொரு ப்ரகாரத்திலே உகந்து ஸாவதாநராயிருப்பர்கள்; அந்தப்ரகாரத்தாலே அத்தை உடையனும். (ஆழியான்) அப்ராக்ருதமாயிருந்துள்ள ஸகல பரிகரத்துக்கும் உபலக்ஷணம். அவை எல்லாம் கிடக்க இவர்கள் நினைத்தபடியாகத் தன்னை அமைத்துக்கொடுக்கும்.

(தமரித்யாதி) இவன் கண்டு தொழவேண்டாவோ? எங்கே காண்பது? என்னில்; (அவ்வுருவந்தானே) (48) "आत्मानं मानुषं मन्ये" (ஆத்மாநம் மாநுஷம் மந்யே). (46) "ये यथा" (யே யதா). (எப்பேர் மற்றப்பேர்) எங்களாழ்வார்பாடே ஆயர்தேவு சென்று நாவற்பழம் வேண்ட, "நீயார்" என்று அவர் கேட்க, "ஜீயர் மகனான ஆயர்தேவு" என்ன, ஜீயரைக்கண்டு "உம்முடைய பிள்ளை எங்களைக் குடியிருக்க வொட்டுகிறிலன்" என்றார். (ஆழியானும்) ஸ்ரஷ்டாவாய் நியாமகனா யிருக்கிறவன் ஸ்ருஜ்யனுமாய் நியாம்யனுமாம். 44.

---

அவ:— நாற்பத்துநாலாம் பாட்டு. அதிகாரி நியமம் த்ரவ்ய நியமமின்றிக்கே ஒழிந்தாலும், எம்பெருமான் ஸாந்நித்யம் பண்ணும் என்னுமதுக்கு ஸம்வாதமாக ஓர் ஐதிஹ்யம் அருளிச்செய்கிறார் (எம்பெருமானாரித்யாதி). எவ்வண்ணம்—எந்தப்ரகாரம் ஸ்திதி கமந ஶயநாதிகள் என்றபடி.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (இவன்கண்டித்யாதி). ஆஶ்ரிதனிட்ட பேரை உகப்பன் என்னுமதுக்கு ஸம்வாதமாக ஓர் ஐதிஹ்யம் அருளிச்செய்கிறார் (எங்களாழ்வாரித்யாதி). ஆயர்தேவு—நஞ்ஜீயர் திருவாராதநம். அவர் ஸ்வப்நத்திலே பழம் முதலானவற்றைக் கேட்க, ரஸோக்தியாக எங்களாழ்வார் அருளிச்செய்தாரென்றபடி. 44.

---

45. ஆமே யமரர்க் கறிய வதுநிற்க
நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே—பூமேய
மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியை
பாதமத்தா லெண்ணினான் பண்பு.

பதவுரை:— நல் நெஞ்சே—நல்ல மனமே!, பூ மேய மாதவத் தோன்—திரு நாபீ கமலத்தில் வஸிக்கும் பெருந்தவத்தோனாகிய பிரமனுடைய, தாள் பணிந்த—பாதத்திலே வந்து வணங்கின, வாள் அரக்கன்—தீய ராக்ஷஸனான இராவணனுடைய, நீள் முடியை— நீண்ட (பத்து) தலைகளையும், பாதம் அத்தால் எண்ணினான்—அந்தத் திருவடிகளால் எண்ணிக் காட்டிய பெருமானுடைய, பண்பு—குணங்கள், அமரர்க்கு அறிய ஆமே—தேவர்களுக்கு அறியத் தக்கவையோ? அது நிற்க—அது கிடக்கட்டும்; நாமே அறிகிற்போம்—(அவனுடைய நிர்ஹேதுககிருபைக்கு இலக்காகிய) நாமே அறிவோம்.

அவ:— நாற்பத்தைந்தாம் பாட்டு. (ஆமே) இது அவன் காட்டக் கண்டவருக்கொழிய அல்லாதார்க்கு அறியப்போகாது என்கிறார்.

வ்யா:— (அமேயமரர்க்கறிய) எத்தனையேனும் அதிஶயித ஜ்ஞாநரான தேவர்களுக்கும் அறியப்போகாது என்கிறது. (அது நிற்க நாமே அறிகிற்போம்) அவ்விடையாட்டம் நிற்க நமக்கு அறியத் தட்டென்? (நன்னெஞ்சே) அவன் காட்டக்கண்ட நெஞ்சே. (பூமேய வித்யாதி) ப்ரஹ்மாவின் மடியிலே ஒரு சிறுபிள்ளையாய்க் கண் வளருவாரைப்போலே கிடந்து "இவனுக்கு வரம் கொடுக்கவேண்டா, இது அநர்த்தமாம்" என்று ராவணன் தலையைத் தன் திருவடிகளாலே எண்ணினவனுடைய நீர்மையை "அமரர்க்கு அறியவாமே" என்கிறது; இத்தால் ப்ரஹ்மாவினுடைய அறிவு கேடு சொல்லுகிறது.

(ஆமே) அபிமாநிகளான ப்ரஹ்மாதிகளுக்கும் எளியனும். (தாள் பணிந்த வாளரக்கன்) புதுத்தண்டன் கண்டு * இறுமாந்து விளைவது அறியாதே வரம் கொடுத்தபடி. 45.

---

அரு:— நாற்பத்தைந்தாம் பாட்டு. இது ஆஶ்ரிதபாரதந்த்ர்யம். ராவணன் பத்துத்தலையும் மறைத்து வர அத்தைச் சிறுபிள்ளைகள் காலை ஆட்டுமாப்போலே எண்ணிக் காட்டினான்.

(ப்ரஹ்மாதிகளுக்கும் எளியனும்) அவர்களுக்கும் எளியனுமவன் நமக்கு எளியனாகச் சொல்லவேணுமோ? என்று இரண்டாம் தாத்பர்யம். 45.

---

* இறுமாந்து—மிகவும் கர்வமடைந்து.

46. பண்புரிந்த நான்மறையோன் சென்னிப் பலியேற்ற
வெண்புரிநூல் மார்பன் வினைதீர—புண்புரிந்த
வாகத்தான் தாள்பணிவார் கண்டீர் அமரர்தம்
போகத்தால் பூமியாள் வார்.

பதவுரை:— பண் புரிந்த நான்மறையோன்—ஸ்வரங்களோடு கூடிய நாலு வேதங்களையும் ஓதுவிக்கப்பட்டவனான பிரமனுடைய, சென்னி—தலையில், பலி ஏற்ற—பிச்சையை வாங்கினவனும், வெண் புரி நூல் மார்பன்—வெளுத்த யஜ்ஞோபவீதத்தை மார்பிலே தரித்த வனுமான ருத்ரனுடைய, வினை தீர—ப்ரஹ்மஹத்திபாபம் அகலும் படியாக, புண் புரிந்த ஆகத்தான்—திருவுள்ளத்தைப் புண்படுத்திக் கொண்ட எம்பெருமானுடைய, தாள்—திருவடிகளை, பணிவார் கண்டீர்—வணங்குமவர்கள் கிடீர், அமரர் தம் போகத்தால்—நித்ய ஸூரிகளுடைய போகத்தோடு கூட, பூமி ஆள்வார்—இவ்வுலகத்தையும் ஆட்சி செய்வார்கள்.

அவ:— நாற்பத்தாறும் பாட்டு. (பண்ணித்யாதி) ருத்ரனுடைய லஜ்ஜைகேடு சொல்லுகிறது.

வ்யா:— (பண்புரிந்த நான்மறையோன்) ஸ்வரயுக்தமாக ஸர்வேஶ்வரனாலே ஓதுவிக்கப்பட்ட ப்ரஹ்மாவின். (சென்னிப் பலியேற்ற) (49) "वामाङ्गुष्ठनखाग्रेण छिन्नं तस्य शिरो मया" (வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய ஶிரோ மயா) என்கிறபடியே ப்ரஹ்மாவின் தலையை அறுக்க, அவன், "கபாலி ஆவாய்" என்று சபிக்க, அவனுடைய தலையோட்டிலே பிக்ஷையேற்ற. (வெண்புரி நூல் மார்பன் வினைதீர) விநீதவேஷனாய் ப்ராயஶ்சித்தியானபடி. இவனோடு ஸம்பந்தித்தார்க்கெல்லாம் அதுவே பிறே பணி. அகமுடையவளும் தகப்பனைக் கொன்றாள்; இவளை ஆஶ்ரயித்தவனும் தகப்பனைக் கொன்றான். "வினைதீர" என்கிற வித்தால் இவனுடைய கர்மவஶ்யத்வமும், தான் பண்ணின கர்மம் தன்னால் பரிஹரிக்கப் போகாமையும் சொல்லுகிறது. இத்தால் ஈஶ்வரத்வ ஶங்கை இல்லை என்றபடி. (புண்புரிந்தவித்யாதி) ஈஶ்வராபிமாநியாய் ஒருத்தனைத் திரிந்தவன் வாசல்தோறும் இடறித்திரிவதே! என்று திருவுள்ளத்திலே புண்பட்ட ஸர்வேஶ்வரனுடைய தாள் பணிவார் கிடீர். (அமரரித்யாதி) பூமியும் ஆண்டு

பரமபதத்தில் போகமும் அநுபவிப்பார்கள். அன்றியே, போகபூமியிலே இருக்கச்செய்தே பரமபதத்தில் போகமெல்லாம் அநுபவிப்பார்கள் என்றுமாம்.

அவ:— ப்ரஹ்மாவாலே ஒரு ருத்ரன் அலைந்து கொடுகிடக்க அது தீர்த்தாரார்?

வ்யா:— (பண்ணித்யாதி) ஒத்துச்சொல்லா நிற்கத் தலையறுத்தபடி. மூலையடியே திரிந்தார் பாதகியானவாறே முழுகித் திரியும்படி. * "விண்ணுளாரிலும் சீரியர்" என்றுமாம். 46.

---

அரு:— நாற்பத்தாறும் பாட்டு. (பலி—**பலி**) பிக்ஷையென்றபடி. அகமுடையவள்–பார்வதி. தகப்பனைக்கொன்றது–தக்ஷப்ரஜாபதி பகவத்பரனுகையாலே யாகத்திலே பெண்ணுன பார்வதியை அழையாதிருக்க, அவள் ருத்ரனைக் கூட்டிக்கொண்டுபோக, அவன் ருத்ரனை உதாவிக்கையாலே, ருத்ரன், ஜடையிலே வீரமுஷ்டிகளை உண்டாக்கிக் கொல்லுகையாலே "அவள் கொன்ருள்" என்கிறது. இவளை ஆஶ்ரயித்தவன்–ருத்ரன். அவன் ப்ரஹ்மாவைத் தலையை அறுத்தான்.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிருர் (ப்ரஹ்மாவாலே இத்யாதி). ருத்ரனுக்கு ஒத்துச்சொல்லாநிற்க. வெள்ளைப் பூணூலும், என்கையாலே முழுகினமை தோற்றுகிறது. பூமியிலே இருக்க அமரர் போகம் கூடுமோ? என்ன, அருளிச்செய்கிருர் (விண்ணுளாரிலு மித்யாதி). 46.

---

47. வாரிசுருக்கி மதக்களி றைந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ—கூரிய
மெய்ஞ்ஞானத் தாலுணர்வார் காண்பரே மேலொருநாள்
கைந்நாகங் காத்தான் கழல்.

பதவுரை:— மதம் களிறு ஐந்தினையும்—மதம் பிடித்த யானைகள் போன்ற ஐந்து இந்திரியங்களையும், வாரி சுருக்கி—போகமாகிற மதஜலத்தைக் குறைத்து, சேரி திரியாமல் செம் நிறீஇ—சப்தம் முதலிய விஷயங்களாகிற தெருக்களில் அலையாமல் நன்ருக நிறுத்தி, கூரிய—ஸூக்ஷ்மமான, மெய் ஞானத்தால்—உண்மையான பக்திரூபமான

---

* திருவிருத்தம் (79).

அறிவால், உணர்வார்—(அவனை) அறியவல்லவர்கள், மேல் ஒரு நாள்—முன்னொரு காலத்தில், கை நாகம் காத்தான்—தும்பிக்கை யுடன் கூடிய யானையாகிய கஜேந்த்ராழ்வானை ரக்ஷித்தவனுடைய, கழல்—திருவடிகளை, காண்பர்—கண்டு அநுபவிப்பார்கள்.

அவ:— நாற்பத்தேழாம் பாட்டு. (வாரிசுருக்கியித்யாதி) இந்த்ரியங்களுடைய போகத்தைச் * செறுத்து, விஷயத்தினுடைய ஸந்நிதியில் நில்லாமல் பரிஹரித்து, மெய்யான பக்தியை உடையவர் கள் அவனைக் காண்பர் என்கிறார். (15) "विषया विनिवर्तन्ते निराहारस्य देहिनः। रसवर्जं रसोप्यस्य परं दृष्ट्वा निवर्तते॥" (விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந: । ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே).

வ்யா:— (வாரிசுருக்கி) மதித்த ஆனைகளைத் தண்ணீரிலே செறுக்குமாப்போலே இந்த்ரியங்களினுடைய போகத்தைக் குறுக்கி. (சேரி திரியாமல்) தெருவே திரியில் கொல்லுமிறே ஆனை. அப்படி விஷயத்தினுடைய ஸந்நிதியில் திரியாமல். (செந்நிற்று) செவ்விதாக நிறுத்தி. பதார்த்தங்களில் போகாமல் ப்ரத்யக்வஸ்து விஷயமாக்கி. (கூரியவித்யாதி) விஹித கர்மங்களைப் பலாபிஸந்திரஹிதமாக அநுஷ்டித்து க்ஷீணபாபராய் ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநமுண்டாய் ஈஶ்வரபாரதந்த்ர்யம் என்னுமிடப்; (50) "उपासनं ध्रुवा स्मृतिः दर्शनसमानाकारता प्रत्यक्षताऽऽपत्तिः" (உபாஸநம் த்ருவா ஸ்ம்ருதி: தர்ஶநஸமாநாகாரதா ப்ரத்யக்ஷதாபத்தி:) (51) "विशते तदनन्तरम्" (விஶதே ததநந்தரம்) என்று சொல்லுகிற பக்தியாலே காண்பர்கள். (மேலித்யாதி) பண்டொருநாள் ஸ்ரீகஜேந்த்ரமோக்ஷம் பண்ணினவ னுடைய திருவடிகளை. இத்தால் விரோதியான முதலையைப் போக்கித் தன்னைக் காட்டிக்கொடுத்தாற்போலே இவர்களுடைய ப்ரதிபந்தகங் களைப் போக்கித் தன்னைக் காட்டிக்கொடுக்குமென்கிறது.

(சேரிதிரியாமல்) ஆள் நடையாடாதவிடத்தே கொண்டுபோய். (கூரியவித்யாதி) ஶுபாஶ்ரயமாகவும், நாதனாகவும், உபாயமாகவும், உபேயமாகவும், அநுஸந்திக்கை. (கைந்நாகம்) (52) "परमापदमापन्नः" (பரமாபதமாபந்ந:).



* செறுத்து—ஒடுக்கி.

அரு:— நாற்பத்தேழாம் பாட்டு. ஆனைக்கு மதஹேதுவான ஜலத்தைச் செறுக்கவே மதம் போமாப்போலே, முமுக்ஷுவுக்கும் ஆஹாராதிகளைச் செறுக்கவே வீர்யம் போமென்னுமதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (விஷயா விநிவர்த்தந்தே இத்யாதி). தண்ணீரிலே செறுக்கை—தண்ணீர் காட்டாதிருக்கை. 47.

48. கழலொன் றெடுத்தொருகை சுற்றியோர் கைமேல்
சுழலும் சுராசுரர்க ளஞ்ச—அழலும்
செருவாழி யேந்தினான் சேவடிக்கே செல்ல
மருவாழி நெஞ்சே மகிழ்ந்து.

பதவுரை:— ஆழி நெஞ்சே!—கடல் போன்று ஆழ்ந்த மனமே! கழல் ஒன்று—(நமுசியினுடைய) ஒரு காலை, எடுத்து—பிடித்து, ஒரு கை—ஒரு திருக்கையாலே, சுற்றி—சுழற்றி, சுழலும்—(என்ன தீங்கு நேரிடுமோ என்று) கலங்குகிற, சுராசுரர்கள்—தேவர்களும் அசுரர்களும், அஞ்ச—பயப்படும்படியாக, அழலும்—எரிகிறதும், செரு ஆழி ஏந்தினான்—சண்டை செய்வதுமான திருச்சக்கரத்தை ஏந்துகின்ற பெருமானுடைய, சே அடிக்கே செல்ல—சிவந்த திருவடிகளை அடையும்படி, மகிழ்ந்து மருவு—உகந்து அநுபவிப்பாயாக.

அவ:— நாற்பத்தெட்டாம் பாட்டு. (கழல்) 'இப்படி இந்த்ரிய ஜயம் பண்ணி நாம் பெறுகையாவதென்?' என்று தம்முடைய திருவுள்ளம் பயப்பட, 'எளிதாகப்பற்றலாம் நீ பயப்படவேண்டா' என்கிறார்.

வ்யா:— (கழலித்யாதி) நமுசியுடைய ஒரு காலை எடுத்துக் கையாலே சுற்றி என்னவுமாம். அன்றியே, பூமியளக்கவென்று தன்னுடைய ஒருதிருவடிமலரை எடுத்த அவஸரத்திலே நமுசியை ஒரு கையாலே சுற்றி என்னவுமாம். (ஓர்கைமேலித்யாதி) ஒரு திருக்கை மலரிலே அநுகூலப்ரதிகூலரோடு வாசியற அழலா நின்ற * செருவுடைத்தான திருவாழியை ஏந்தினவனுடைய. (சேவடிக்கே செல்ல, ஆழிநெஞ்சே மகிழ்ந்து மருவு) உகந்துகந்து அநுபவி.

(கழலித்யாதி) அளந்தபடி. (ஆழிநெஞ்சே) உனக்கு உபதேசிக்க வேண்டாவிறே; சேவடிதானே இருந்த இடத்தே வந்தால், இறாயாமையே வேண்டுவது. 48.

* செரு—சண்டை.

அரு:— நாற்பத்தெட்டாம் பாட்டு. ஆழிநெஞ்சு—அன்புடைய நெஞ்சு. "மருவு" என்றதைப்பற்ற அருளிச்செய்கிறார் (சேவடி தானேயித்யாதி). 48.

49. மகிழலகு ஒன்றேபோல் மாறும் பல்யாக்கை
நெகிழ முயல்கிற்பார்க் கல்லால்—முகிழ்விரிந்த
சோதிபோல் தோன்றும் சுடர்போன் நெடுமுடி எம்
ஆதிகாண் பார்க்கு மரிது.

பதவுரை:— மகிழ் அலகு ஒன்றே போல்—மகிழ மரத்தின் விதை ஒன்றே காணி ஸ்தானத்திலும், கோடி ஸ்தானத்திலும் வைக்கப் படுவது போல், மாறும் பல் யாக்கை—மாறி மாறி வருகிற பல சரீரங்களை, நெகிழ—நீங்கிப்போகும்படியாக, முயல்கிற்பார்க்கல்லால்—முயற்சி செய்கின்றவர்களுக்குத் தவிர, காண்பார்க்கும்—காணவேணு மென்னும் விருப்பத்தையுடைய மற்றவர்களுக்கு, முகிழ் விரிந்த சோதி போல் தோன்றும்—மலர்ந்த தேஜஸ்ஸைப்போல் காணப்படுவதும், சுடர் போன் நெடு முடி—ஒளிவிடுவதும், அழகியதும், பெரிதுமான கிரீடத்தையுடையவனும், எம் ஆதி—எனக்குக் காரணபூதனாயிருக்கிற வனுமான ஸர்வேச்வரன், அரிது—கிடைத்தற்கரியவன்.

அவ:— நாற்பத்தொன்பதாம் பாட்டு. (மகிழலகித்யாதி) இப்படி இராதார்க்கு அவனைக் கிடையாதென்று பின்னையும் அதினுடைய அருமை சொல்லுகிறது.

வ்யா:— (மகிழலகித்யாதி) அலகானது கோடிஸ்த்தாநத்திலும் நின்று காணிஸ்த்தாநத்திலும் நிற்குமாப்போலே, இவ்வாத்மாவானது தேவசரீரத்திலே புகுவது திர்யக் சரீரத்திலே புகுவதாய் மாறிமாறி வருகிற பலயாக்கையை நெகிழ்ந்து போம்படியாகப் பண்ணுவார்க் கல்லால். (முகிழித்யாதி) விகஸிதமாயிருந்த தேஜஸ்ஸைப்போலே தோன்றுமதாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தையுடையனாய் எனக்குக் காரணமாயிருக்கிறவனைக் காணுமவர்களுக்கு அரிது.

அவ:— ப்ராக்ருதி ப்ராக்ருதங்களில் அருசியும் எம்பெருமானைக் காண்கையில் ருசியுமுடையார்க்கு எளிதாகக் காணலாமென்கிறது. *"பொய்ந்நின்ற" இத்யாதி.

* திருவிருத்தம் (1).

வ்யா:— (மகிழித்யாதி) கர்மாநுகுணமாக சரீரங்கள்தோறும் நுழைகை. † "யாதானுமோராக்கை". (முகிழ்விரிந்தசோதி) ‡ "செவ்விப்படிக்கோலம்". (எம்மாதி) ப்ராபகனே. (காண்பார்க்கும்) கேட்பார்க்குமரிது. இப்படி ஆஶ்ரயிப்பார்க்கல்லது ப்ரக்ருதியை உகப்பார்க்கு முகம்கொடுக்கும் இதரபுருஷனல்லன். 49.

---

அரு:— நாற்பத்தொன்பதாம் பாட்டு. "முயல்கிற்பார்க்கல்லால்" என்றத்தைப்பற்ற அவதாரிகை அருளிச்செய்கிறார் (இப்படி இராதார்க்கித்யாதி). பண்ணுவார்க்கு-கர்மாத்யுபாயங்களைப் பண்ணுவார்க்கு.

மேலுக்கு ப்ரதிபத்திபரமாக அவதாரிகை அருளிச்செய்கிறார் (ப்ரக்ருதி ப்ராக்ருதங்களித்யாதி). சகாரத்தாலே கேட்பார்க்கும் என்கிறது. மகிழலகு-மகிழம்விரை. 49.

---

50. அரியபுலனைந்தடக்கி யாய்மலர்கொண்டு ஆர்வம்
புரிய பரிசினால் புல்கில்—பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த மாவலிபால் வண்கைநீர்
ஏற்றானைக் காண்ப தெளிது.

பதவுரை:— அரிய—அடக்க முடியாததான, புலன் ஐந்து—ஐந்து இந்திரியங்களையும், அடக்கி—வசப்படுத்தி, ஆய் மலர் கொண்டு—ஆராய்ந்து எடுத்த புஷ்பங்களைக் கையில் கொண்டு, ஆர்வம் புரிய பரிசினால்—அன்பு மிக்க வழியாலே, புல்கில்—தொழுதால், பெரியனாய்—(செல்வத்திலும், கொடையிலும்) பெருத்தவனாய், மாற்றாது வீற்றிருந்த—(கொடுப்பதில்) மாறுபடாமலிருந்த, மாவலி பால்—மஹாபலியிடம், வண்கை—உதாரமான திருக்கையிலே, நீர் ஏற்றானை—தானஜலத்தை வாங்கின எம்பிரானை, காண்பது—ஸேவிப்பது, எளிது—ஸுலபமாயிருக்கும்.

அவ:— ஐம்பதாம் பாட்டு. இந்த்ரியங்களை விஷயங்களில் போகாமல் காத்து அவன் பக்கலிலே ஸ்நேஹிக்கில் காண எளிது என்கிறார்.

வ்யா:— (அரியவித்யாதி) ஒரு § செய்யிலே பாயும் நீர் இரண்டு செய்யிலே பாய்ந்தால் இரண்டு செய்க்கும் போராதொழியுமிறே.

---

† திருவிருத்தம (95). ‡ இர. திருவ. (82). § செய்யிலே—வயலிலே.

ஸர்வேஶ்வரனை இச்சிக்கக் கடவவான இந்த்ரியங்களை விஷயங்களிற் போகாதபடி அடக்கி. "அரிய" என்றது,— (13) "तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम्" (தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்); ப்ரதிகூலமான வாயுவை நியமிக்க அரிதானாற்போலே மநஸ்ஸை நியமிக்க அரிது என்று அர்ஜுநன் சொன்னபடியே இருக்கை. (ஆய்மலர்கொண்டு) செவ்விப்பூக்களைக்கொண்டு. (ஆர்வம் புரிய பரிசினால்) ஸ்நேஹம் மிக்க ப்ரகாரத்தாலே. (புல்கில்) அணையில். (பெரியனாயித்யாதி) உதாரமான கையைக்கொண்டு நீரேற்றவனைக் காண்கை எளிது.

(புல்கில்) புல்கப்பெறில். (பெரியனாய்) ஐஸ்வர்யமும் ஔதார்யமும். (வண்கை) கொடுத்து வளர்ந்த கை. (நீரேற்றானைக் காண்பதெளிது) அப்ரதிஷேதமுடையார்க்கு அர்த்தியாய் வரும் என்றவாறு. 50.

---

அரு:— ஐம்பதாம் பாட்டு. "அடக்கி" என்று விஷயங்களை விட்டே பற்றவேணுமோ? அவற்றையும் கூட விரும்பினாலாகாதோ? என்ன, அருளிச்செய்கிறார் (ஒரு செய்யித்யாதி). மாற்றாதே வீற்றிருந்த—ஔதார்யம் மாறாதே வீற்றிருந்த.

"ஏற்றானை" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (அப்ரதிஷேதமித்யாதி). 50.

---

51. எளிதி லிரண்டடியுங் காண்பதற்கு என்னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே—களியில்
பொருந்தா தவனைப் பொரலுற்று அரியா
யிருந்தான் திருநாம மெண்.

பதவுரை:— என் உள்ளம்—என்னுடைய நெஞ்சமே! எளிதில்—ஸுலபமாக, இரண்டு அடியும்—இரண்டு திருவடிகளையும், காண்பதற்கு—ஸேவிப்பதற்குத் தகுந்தபடி, தெளிய—(நீ) தெளிவு பெற்றால், செவ்வே தெளிந்தொழியும்—(அவனும்) நன்றாக உகந்து விடுவான்; களியில்—கர்வத்தினால், பொருந்தாதவனை—தன்னைச் சேராதவனுடன், பொரல் உற்று—போர் செய்கைக்கு ஒருப்பட்டு, அரியாய்—நரஸிம்ஹமாய், இருந்தான்—அவதரித்தவனுடைய, திரு நாமம்—அழகிய பெயர்களை, எண்—எண்ணுவாயாக.

அவ:— ஐம்பத்தோராம் பாட்டு. (எளிதில்) தம்முடைய திருவுள்ளத்தை ஸம்போதித்து, நீ விஷயகாலுஷ்யத்தைத் தவிர்; அவன் ப்ரஸந்நனும் என்கிறார்.

வ்யா:— (எளிதிலித்யாதி) எளிதின்றிக்கே இருந்துள்ள இரண்டு திருவடிகளும் காண்பதற்கு. எளிதாக என்னவுமாம். (என்னுள்ளப்) என் நெஞ்சே! என்றபடி. (தெளிய) விஷயகாலுஷ்யத்தைத் தவிர. (செவ்வேதெளிந்தொழியும்) அவன் நேரே ப்ரஸந்நனும். (களியித்யாதி) செருக்காலே பொருந்தேன் என்றிருந்த ஹிரண்யனை. (பொரலுற்று அரியாயிருந்தான் திருநாமமெண்) சிறுபிள்ளைக்காக * உதவி ஹிரண்யனை முடித்தவனுடைய திருநாமத்தை எண்ணு.

(என்னுள்ளப்) உள்ளமே! நீ தெளியில் அவன் செவ்வே நம் திறத்துத் தெளிந்தொழியும். ப்ரமாணமென்? ப்ரஹ்லாதன் தெளிய அவன் விஷயத்துத் தெளிந்து நின்று கார்யம் பார்த்தபடி கண்டிலையோ? (பொரலுற்ற) பொருது. (இருந்தான்) சீற்றத்துக்கு இறை போராமல் சோம்பியிருந்தான். (திருநாமம்) வாக்காலே. (எண்) எண்ணவொட்டாதவன் பட்டபாடு அறிவுதியிறே. 51.

அரு:— ஐம்பத்தோராம் பாட்டு. என்னுள்ளம்—அண்மைவிளி. பொரலுற்று—பொருகையிலேயுற்று. காணத்தகும் திருநாமம் என்று அந்வயம். 51.

52. எண்மர் பதினொருவ ரீரறுவ ரோரிருவர்
வண்ண மலரேந்தி வைகலும்—நண்ணி
ஒருமாலை யால்பரவி யோவாது எப்போதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று.

பதவுரை:— எண்மர்—அஷ்டவஸுக்களும், பதினொருவர்—ஏகாதசருத்ரர்களும், ஈரறுவர்—த்வாதசாதித்யர்களும், ஓர் இருவர்—இரட்டையரான அச்விநீதேவர்களும், வண்ணம் மலர் ஏந்தி— பல நிறங்களையுடைய பூக்களை ஏந்திக்கொண்டு, வைகலும் நண்ணி—தினந்தோறும் அணுகி, ஒரு மாலையால்—ஒப்பற்ற புருஷஸூக்தமாகிற சொல் மாலையாலே, ஓவாது எப்போதும்—இடைவெளியின்றி

* பாடாந்தரம்—உதவிப்பொருத.

யிலே எல்லாக்காலமும், பரவி—துதித்து, திருமாலை—லக்ஷ்மீநாதனை, சென்று கைதொழுவர்—அணுகி வணங்குவார்கள்.

அவ:— ஐம்பத்திரண்டாம் பாட்டு. (எண்மரித்யாதி) கீழ் தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு உதவினவனுடைய திருநாமத்தை எண்ணு; அவன் ப்ரஸந்நனும் என்றது. மற்றும் தர்மாதிகளான தேவாதிகளும் அவனை ஆஶ்ரயிக்கத் தக்க கரணங்களும் அதிகாரம் பெற்றது என்கிறார்.

வ்யா:—(எண்மரித்யாதி) அஷ்டவஸுக்கள், ஏகாதஶருத்ரர்கள், த்வாதஶாதித்யர்கள், அஶ்விநிகள். (வண்ணமலரேந்தி) நாநா வர்ணமான புஷ்பங்களைக்கொண்டு. (வைகலும் நண்ணி ஒரு மாலையால்) புருஷஸூக்தத்தாலே. (ஓவாதெப்போதும்) விச்சேதமின்றிக்கே. (திருமாலித்யாதி) ஶ்ரிய:பதியைச்சென்று ஆஶ்ரயிப்பர்கள். (52)

"तदुपर्यपि बादरायणस्संभवात्" (ததுபர்யபி பாதராயணஸ்ஸம்பவாத்). தேவர்களுக்கும் பவிஷ்யத்தில் பெறவிருந்துள்ள அதிகாரார்த்தமாக ஆதித்யாந்தர்யாமியாயிருந்துள்ள பரமாத்மோபாஸநம் விதியாநின்றதே.

(எப்போதும்) வ்யாபாரயோக்யரான ப்ரயோஜநாந்தரபரர் ஒரு மாலையால் பரவி ஓவுகையன்றிக்கே, எல்லாக்காலமும்; எப்போதும் என்றுமாம். (திருமால்) வேண்டுவதெல்லாம் பெறுகைக்கடி. 52.

---

அரு:— ஐம்பத்திரண்டாம் பாட்டு. வகுத்த விஷயமாகையாலே, அதிகாரம் பெற்றது. தேவர்களும் பெற்றார்கள்; கரணங்களும் பெற்றன என்றபடி.

தேவர்களுக்கு ஆஶ்ரயணமுண்டோ? என்ன, அருளிச்செய்கிறார் (ததுபர்யபி இத்யாதி).

எண்மர்-வ்யாபார யோக்யரான திக்பாலர்கள். எப்போதும் எல்லாக்காலமாதல், எல்லாப் புஷ்பமாதல். 52.

---

53\. சென்றால் குடையா மிருந்தால்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாம் திருமாற் கரவு.

பதவுரை:— திரு மாற்கு—பிராட்டியுடன் கூடியிருக்கும் எம்பெருமானுக்கு, அரவு—திருவநந்தாழ்வான், சென்றால் குடை ஆம்—(எம்பெருமான்) உலாவப்புக்கால் குடையாயிருப்பன்; இருந்தால் சிங்காசனமாம்—எழுந்தருளியிருந்தால் ஸிம்ஹாஸனமாயிருப்பன்; நின்றால்—நின்றுகொண்டிருந்தால், மரவடியாம்—திருப்பாதுகையாயிருப்பன்; நீள் கடலுள்—பரந்த கடலிலே, என்றும்—கண்வளர்ந்தருளும் போதெல்லாம், புணையாம்—தெப்பமாயிருப்பன்; மணி விளக்காம்—மங்களதீபமாயிருப்பன்; பூம் பட்டாம்—அழகிய திருப்பரியட்டமாயிருப்பன்; புல்கும் அணையாம்—தழுவிக்கொள்ளும் தலையணையாயிருப்பன்.

அவ:— ஐம்பத்துமூன்றாம் பாட்டு. (சென்றால்) கீழே எல்லா நேர்த்தியும் நேர்ந்து தங்களுக்குறப்பாக ஆஶ்ரயிக்குமவர்களைச் சொல்லிற்று; இதில் தங்களை எல்லாமழிய அங்குத்தைக்குறப்பாமவர்களைச் சொல்லுகிறது.

வ்யா:— (சென்றால் குடையாம்) கைங்கர்யம் ஸ்வபுத்யதீநமன்று என்கிறது. "நான் குடையாய் நின்றேன்; நீ இங்கே வா" என்கையன்றிக்கே, அவன் உலாவப்புக்கால் குடை அபேக்ஷிதமானபோது குடையாகை. (இருந்தால் சிங்காசனமாம்) இருக்கை திருவுள்ளமானபோது திவ்யஸிம்ஹாஸநமாம். நிற்கை திருவுள்ளமானபோது மரவடியாம். கண் வளர அபேக்ஷிதமானபோது கடலிலே எல்லாக் காலத்திலும் படுக்கையாம். (மணி விளக்காம்) ஒரு விளக்காலே ஒரு பதார்த்தத்தைக் காணவேணும் என்றபோது மங்களதீபமாயிருக்கும். (பூம்பட்டாம்) திருப்பரியட்டம் அபேக்ஷிதமானபோது அழகிய பட்டாம். (புல்குமணையாம்) தழுவணை அபேக்ஷிதமானபோது தழுவணையாம். (திருமாற்கு) ஸ்ரீப:பதிக்கு. (அரவு) சட்டிப்பொன் போலே எல்லா வடிவையும் ஆக்கிக்கொள்ளலாம்படி இருக்கிறபடி.

(சென்றால்) "குடையானேன்; செல்" என்று சேஷியை நியமியாதே. (இருந்தால்) அபேக்ஷை உள்ளபோது. (நின்றால்) நின்ற பின்பு. (புணை) தெப்பம். (மணிவிளக்கு) மங்களதீபம். (பூம்பட்டு) பும்ஸ்த்வாவஹமான பரியட்டம். (புல்கும் அணை) பிராட்டிமார் ஊடினால் வ்யஸநம் மறப்பிக்கவற்றாகை. ஊடலுக்கு ஹேதுவாகவுமாம்.

(திருமாற்கு) இளையபெருமாளுக்கு அந்தரங்கஸேவை. (அரவு) தான் ஒரு சேதநனென்று கூசவேண்டாதபடி தன்னை அமைத்தபடி. ராஜ நிவேசநங்களில் கூனர் குறளரைப்போலே. 53.

---

அரு:— ஐம்பத்துமூன்றாம் பாட்டு. திருவனந்தாழ்வானைச் சொன்னது உபலக்ஷணமாய், தங்களையெல்லாமென்று, நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. க்ஷீராப்தியிலே அழுந்தாமைக்குத் தெப்பமாய் வ்யஸநம் மறப்பிக்கை—தன்னுடைய ஸ்பர்சத்தாலே அவர்களைப் பிரிந்த வ்யஸநம் தோற்றாதபடி பண்ணுகை. தன்னுடைய ஸ்பர்சம் போக்யமாம்படி உடம்பு கொடுக்கையாலே பிராட்டிமார் ஊடுகைக்கும் ஹேதுவென்றபடி.

"திருமாற்கரவு" என்ற சேர்த்தி எப்படி இருக்கிறது என்ன; (54) **"रममाणा वने त्रयः"** (ரமமாணா வநே த்ரய:) என்று ரமித்த இளையபெருமாளைப்போலே என்கிறார் (இளையபெருமாளுக்கித்யாதி).
53.

---

54. அரவ மடல்வேழ மான்குருந்தம் புள்வாய்
குரவை குடமுலைமற் குன்றம்—கரவின்றி
விட்டிறுத்து மேய்த்தோசித்துக் கீண்டு கோத்தாடி உண்
டட்டெடுத்த செங்க ணவன்.

பதவுரை:— சேம் கண் அவன்—செந்தாமரைக்கண்ணனாகிய எம்பெருமான், கரவு இன்றி—மறைவில்லாமல், அரவம் விட்டு—காளியநாகத்தை விரட்டிவிட்டும், அடல் வேழம் இறுத்து—சண்டை செய்ய வந்த குவலயபீடமென்ற யானை கொம்பை முறித்தும், ஆன் மேய்த்து—பசுக்களை மேய்த்தும், குருந்தம் ஒசித்து—(அஸுராவேசமுடைய) குருந்த மரத்தை ஒடித்தும், புள் வாய் கீண்டு—கொக்குருவங்கொண்டு வந்த அஸுரனுடைய வாயைக் கிழித்தும், குரவை கோத்து—(ஆய்ச்சிகளுடன்) ராஸக்ரீடை செய்தும், குடம் ஆடி—குடக்கூத்து ஆடியும், முலை உண்டு—(பூதனையின்) முலைப்பாலை (உயிருடன்) உறிஞ்சியும், மல் அட்டு—(சாணூரமுஷ்டிகர்களென்னும்) மல்லர்களைக் கொன்றும், குன்றம் எடுத்த—கோவர்த்தனகிரியை எடுத்தும் (செய்த செயல்களிருந்தபடியென்!).

அவ:— ஐம்பத்துநாலாம் பாட்டு. (அரவம்) ஆஶ்ரிதர்க்குச் சில விரோதம் வந்து போக்கவேண்டில் படுக்கையும் பொருந்தாமல் வந்து நிற்குமென்கிறது. இப்பாட்டு நிரனிறை.

வ்யா:— (அரவமித்யாதி) காளியனைவிட்டு, குவலயாபீடத்தின் கொம்பை முறித்து, ஆனைமேய்த்து, குருந்தமொசித்து, புள்வாய் கீண்டு, பகாஸுரனைக் கொன்று, குறவை கோத்து, குடமாடி, பேய்முலை உண்டு, மல்லரை அட்டு, குன்றமெடுத்த ஸர்வேஶ்வரன். எடுத்த இச்செயல்கள் எம்பெருமான் ஶேஷவிஷயத்தில் குறைந்து பரிமாறும்படி அவன் ஸ்வரூபம்.

"செங்கணவன்—விட்டிறுத்து மேய்த்தொசித்துக் கீண்டு கோத்தாடி உண்டு அட்டு எடுத்தவை—அரவமித்யாதி." 54.

---

அநு:— ஐம்பத்துநாலாம் பாட்டு. எடுத்த—இப்பாட்டிலெடுத்த இந்த வ்யாபாரங்கள், தாழ்ந்து பரிமாறின சேஷியுடைய ஸ்வரூபம் சொல்லுகிறது.

அந்வயம் காட்டுகிறார் (செங்கணவனித்யாதி). 54.

---

55. அவன்தம ரெவ்வினைய ராகிலும் எங்கோ
னவன்தமரே யென்றொழிவ தல்லால்—நமன்தமரா
லாராயப் பட்டறியார் கண்டீர் அரவணைமேல்
பேராயர்க் காட்பட்டார் பேர்.

பதவுரை:— அவன் தமர்—அந்தப் பரமபுருஷனுடைய பக்தர்கள், எவ்வினையர் ஆகிலும்—எப்படிப்பட்ட கர்மத்தை உடையராயிருந்த போதினும், 'எம் கோன் அவன் தமரே' என்று—'எமக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய பக்தர்களல்லவா' என்று புகழ்ந்து, ஒழிவதல்லால்—நீங்கிப்போவதைத் தவிர, அரவணை மேல் பேர் ஆயர்க்கு ஆட்பட்டார் பேர்—திருவநந்தாழ்வானாகிய படுக்கையின்மேல் இருந்து (அடியவர்களை அளிப்பதற்காக) ஆயனாய் வந்து அவதரித்த எம்பெருமானுக்கு அடிமைசெய்பவர்களுடைய பெயரை தரித்தவர்களும், நமன் தமரால்—யமனுடைய தூதரால், ஆராயப்பட்டு அறியார் கண்டீர்—தேடப்பட்டறியார்கள் கிடீர்.

அவ:— ஐம்பத்தைந்தாம் பாட்டு. (அவன் தமர்) இப்படி அவன் ஆஸ்ரிதவிரோதி நிரஸன ஸ்வரூபனான பின்பு அவனுடைய தமரை யமபடன் ஆராய்வது எங்ஙனே? என்கிறார்.

வ்யா:— (அவனித்யாதி) அவனுக்கு அநுகூலமானவர்கள் எத்தொழிலாராகிலென்? விஹிதத்தைச் செய்யிலென்? நிஷித்தத்தைச் செய்யிலென்? (எங்கோனித்யாதி) (55) "**प्रभवति संयमने ममापि विष्णुः**" (ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு:) என்னும்படியே. (நமன்தமரித்யாதி) நமன் தமரால் ஆராயப்படாதொழிகிறார்; (அரவணைமேல் பேராயர்க்காட்பட்டார் பேர்) இவர்கள் தாங்களோ என்னில்; அன்று; ஒரு பாகவதனுடைய பேரை ஒரு அபாகவதன் தரித்தால் அவனுடைய பேரும் யமஸதஸ்ஸிலே வாசிக்கப்பெறாது என்கிறது. பேர் ஆராயில், குவலயாபீடம் தொடக்கமானவை பட்டது படுமத்தனை. (56) "**मधुसूदनप्रपन्नान्**" (மதுஸூதநப்ரபந்நாந்).

(எங்கோனவன்தமரே) என் நாயகனானவன் அடியார். (எவ்வினையராகிலென் என்றொழிவதல்லால்) அவர் புண்யம் பண்ணிலென்? பாபம் பண்ணிலென்? அத்துறை நாம் ஆராயும் துறை அல்லவென்று கைவிடுமதொழிய. (57) "**त्यज भट दूरतरेण तानपापान्**" (த்யஜ பட தூரதரேண தாநபாபாந்). (அரவணைமேல் பேராயர்க்காட்பட்டார்) படுக்கை பாராட்டிலிறே ஆராய்வது. * "நன்று செய்தாரென்பர் போலும்" என்று பிராட்டிக்கும் அகப்பட நிலமல்லாதவிடத்தே யமனோ ஆராயப்புகுகிறான்? அவனுடைய ஒருபேரான ஸம்ஸாரி பேரும் தீட்டி வாட்டான். 55.

---

அரு:— ஐம்பத்தைந்தாம் பாட்டு. ஆட்பட்டார் பேர்–ஆட்பட்டாருடைய மநுஷ்யரென்றாய், "பேர்" என்கிற ஸமாதியாலே திருநாமமும் ஆராயப்படாது என்றபடி.

படுக்கைபாராட்டில்–ஸமுத்ரம் பார்த்து கேவலம் நித்ரை பண்ணினாலன்றோ யமன் ஆராய; இது அப்படியன்றியே, அவன் ஏறிட்டுக்கொண்ட பின்பு இவனால் ஆராயப்போகாது என்றபடி. பாகவதனுடைய பேரன்றியே அவனுடைய திருநாமம் சுமந்த

---

* பெரியாழ்-திரு. (4-9-2).

ஸம்ஸாரி பேரையும் எழுத்தாணியைத் தீட்டி ஓலையிலே வாட்ட எழுதமாட்டான் என்றபடி. 55.

---

56. பேரே வரப்பிதற்ற லல்லாலெம் பேம்மானை
ஆரே யறிவா ரதுநிற்க—நேரே
கடிக்கமலத் துள்ளிருந்தும் காண்கிலான் கண்ண
னடிக்கமலந் தன்னை யயன்.

பதவுரை:— பேரே—(எம்பெருமானுடைய) திருநாமத்தாலே, வர—அவன் வரும்படியாக, பிதற்றல் அல்லால்—முறையில்லாமல் சொல்லுவதைத் தவிர, எம் பேம்மானை—எம்பெருமானை, ஆரே அறிவார்—யார்தான் அறியமுடியும்? அது நிற்க—அது கிடக்கட்டும்; கடி கமலத்து உள்—வாஸனை மிகுந்த உந்தித்தாமரையினுள், நேரே இருந்தும்—(எம்பெருமானுக்கு) ஸமீபத்திலேயே இருந்தும், அயன்—அகாரவாச்யனான ஸர்வேச்வரனிடமிருந்து பிறந்த பிரமன், கண்ணன்—அப்பிரானுடைய, அடி கமலம் தன்னை—திருவடித் தாமரைகளை, காண்கிலான்—அறியமாட்டான்.

அவ:— ஐம்பத்தாறாம் பாட்டு. (பேரே) பேராயர்க்கு ஆட்படுகை யாவது,— அவன் விஷயீகரிக்கப்புக்கால் தன் செல்லாமை தோற்ற நிற்கையல்லது இவன் அவனைப் பரிச்சேதித்து அறிகையாவதென்? என்கிறது.

வ்யா:— (பேரித்யாதி) பேராலே அவன் வரும்படி. (பிதற்ற லல்லால்) திருநாமத்தைச் சொல்லலாமென்னுமாம். அன்றிக்கே, ஏதேனும் சொல்லப்புக்காலும் திருநாமம் வாயிலே வரும்படி பிதற்றலல்லால். இதுக்கீடாகச் சொல்லுகை என்றுமாம். (எம்பெம்மானித்யாதி) என்னுடைய ஸ்வாமியை ஆரே அறிவார். அவ்விடையாட்டம் நிற்க; (நேரித்யாதி) அறிவார் கிடக்கிடீர், அறியாதாரைக் கேட்கலாகாதோ? ஸர்வேஶ்வரனுடைய பரிமளத்தை யுடைத்தான திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறந்து அவன் தன்னாலே ஓதுவிக்கப்பட்டு அங்கே இருக்கிற ப்ரஹ்மா, ஸர்வேஶ்வரனைக் காண்கிறிலன். அறிகிறிலன்.

நம்மால் அறியவொண்ணுமோ? என்னில்; (பேரேவரப்பிதற்றல்) கன்றுநின்றவிடத்தே தாய் வருமாப்போலே வாஸிதமாக என்றுமாம்.

(எம்பெம்மானை) நமக்கு நேரே காட்டினபடி. (உள்ளிருந்தும் காண்கிலான்) கடற்கரையிலே குடில் கட்டிக்கொண்டிருக்குங்காட்டில் கடலைப் பரிச்சேதிக்க வொண்ணுமோ? அபரிச்சேத்யமென்று அறியில் அறியலாம். பெரியகிழாயார் (58) "ब्रह्मविदां वरः" (ப்ரஹ்மவிதாம் வர:) 56.

---

அரு:— ஐம்பத்தாறும் பாட்டு. மேலுக்கவதாரிகை (நம்மாவித்யாதி). திருநாமம் வாயிலே வாஸிதமாக. பெரியகிழாயார்— பெரியவன். ப்ரஹ்மா பெரியவனே? என்ன அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மவிதாம்வர:) என்று. 56.

---

57. அயனின்ற வல்வினையை யஞ்சினே னஞ்சி
உயநின் திருவடியே சேர்வான்—நயநின்ற
நன்மாலை கொண்டு நமோநாரண வென்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது.

பதவுரை:— அயல் நின்ற—அருகில் நின்ற, வல் வினையை—மிகுந்த வலிமையுள்ள பாபங்களைக் கண்டு, அஞ்சினேன்—பயந்தேன்; அஞ்சி—(இம்மாதிரி) பயந்து, உய—(பாபங்கள் நீங்கப்பெற்று) உய்ந்துபோவதற்காக, நின்—உன்னுடைய, திருவடியே சேர்வான்—திருவடிகளை அடையும்பொருட்டு, நயம் நின்ற—சாஸ்திரரூபமாய் இருக்கிற, நல் மாலை கொண்டு—அழகியதான மாலையைக்கொண்டு, தொழுது—வணங்கி, நமோ நாரண என்னும்—அஷ்டாக்ஷரமந்திரமாகிய, சொல் மாலை—சொல்லாலான மாலையை, கற்றேன்—அப்யஸித்தேன்.

அவ:— ஐம்பத்தேழாம் பாட்டு. (அயல் நின்ற) நீர் பகவத் விஷயத்தில் செய்வதென்? என்னில்; ஸம்ஸாரம் பயஸ்தாநமென்னுமிடமும் உஜ்ஜீவிப்பார் அவனைப்பற்றியென்னுமிடமும் அறிந்தேன் என்கிறார்.

வ்யா:— (அயலித்யாதி) நானிட்டவடியிலேயிட்டு வாராநின்ற மஹாபாபங்களை அஞ்சினேன். (அஞ்சிஉய) அவற்றை அஞ்சி உஜ்ஜீவிக்கைக்காக. (நின் திருவடியே சேர்வான் நயம் நின்ற நன்மாலை கொண்டு) நிர்வசநரூபமாக நின்ற நல்லமாலை கொண்டு. (நமோநாரண

வென்னும் சொன்மாலை கற்றேன்) சொல்தொடை கற்றேன். (தொழுது) வணங்கி, சொன்மாலை கற்றேன். ஆற்றாமையாலே நாளுகைக்குப் பேசினேன்.

(அயல்நின்ற) விஶ்லேஷத்தாலே வரும் வ்யஸநத்துக்கு அஞ்சி, திருநாமம் சொல்லுந்தனையும் கடக்க, சாபலத்தாலே நின்ற. 57.

---

அரு:— ஐம்பத்தேழாம் பாட்டு. அயல்நின்ற—அண்டையிலே என்றபடி. நயம்நின்ற—ஶாஸ்த்ரரூபமாய் நின்ற. அதாவது: திருமந்த்ரார்த்தத்தை நிர்வஹிக்கிற தமிழ்த்தொடை என்றபடி. "கற்றேன்" என்று வருத்தம் தோற்றுகையாலே ஆற்றாமை சொல்லுவிக்கச் சொன்னேன் என்றபடி. நாளுகைக்கு—ஸத்தை பெறுகைக்கு.

வல்வினையானது தூரப்போகாமல் கிட்ட நிற்பானென்? என்ன அருளிச்செய்கிறார் (விஶ்லேஷத்தாலேயித்யாதி). இத்தனை நாளும் கூடி இருந்து நாம் இவனைப் பிரிந்து போகிறோம் என்றஞ்சி துக்கப்பட்டு, சாபலத்தாலே நின்றதென்றபடி. 57.

---

58. தொழுது மலர்கொண்டு தூபம் கையேந்தி
எழுது மெழுவாழி நெஞ்சே—பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரமொன் றில்லை யடை.

பதவுரை:— நெஞ்சே—மனமே,! வாழி—(உனக்கு) நன்மையுண்டாகட்டும்; மலர் கொண்டு—பூவைக் கையில் கொண்டு, தூபம் கை ஏந்தி—புகையைக் கையிலே தரித்துக்கொண்டு, தொழுது—வணங்கி, எழுதும்—உய்ந்துபோவோம்; எழு—எழுந்திருப்பாயாக; பழுதின்றி—இடைவெளியின்றி, மந்திரங்கள்—பகவானைப் பற்றிய மந்த்ரங்களைக், கற்பனவும்—கற்றுக்கொள்வதும், மால் அடியே கை தொழுவான்—எம்பிரானுடைய திருவடிகளைக் கையாலே வணங்குவதற்காகவே; (ஆகையால்) அந்தரம் ஒன்று இல்லை—காலதாமதம் செய்ய ஹேது எதுவும் இல்லை; அடை—(அவனை) அணுகு.

வ்யா:— ஐம்பத்தெட்டாம் பாட்டு. (தொழுது) கையாலே தொழுது. புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு தொழுது. (எழுதும்) எழுவோம்; போவோம். (எழு) போகு. (வாழிநெஞ்சே) நெஞ்சே! உனக்கு நன்மை உண்டாக. (பழுதின்றித்யாதி) விச்சேதமின்றிக்கே

எல்லாத் திருமந்த்ரங்கள் கற்கிறதும் கைதொழுகை. ஆனபின்பு, (அந்தரமொன்றில்லை யடை) ஒருக்ஷணமாத்ரம் போகாதே அவன் திருவடிகளிலே அடை.

(எழுதும்) உஜ்ஜீவிப்போம். (எழு) ஒருப்படு. (வாழி) ஒருப்பட்டபடிக்கு மங்களாசாஸநம். இது உனக்கு நித்யமாய் உண்டாக. (பழுதின்றி) குருகுலவாசம் பண்ணிப் பழுத்து விழக்காண்கை. முதலிலே சொல் என்னில் உத்பத்திதோஷமாமிறே. (கற்பனவும்) கிடந்தானை கண்டேறுமதே சந்தை இட்டுக் கற்கை. 58.

---

அரு:— ஐம்பத்தெட்டாம் பாட்டு. கைதொழுகை—தொழுகைக்காக என்று தமுல். அந்தரமொன்றில்லை—ரந்த்ரமின்றிக்கே சீக்ரமாக வென்றபடி. மந்த்ரத்துக்குப் பழுதில்லாமை ஏது? என்ன, அருளிச் செய்கிறார் (குருகுலவாஸமித்யாதி) பழுத்துவிழுகை—அடியிலே இருக்க மடியிலே விழுகை. அநுவர்த்தந பூர்வபாகக் கேளாவிட்டால் விரோதமேது? என்ன அருளிச்செய்கிறார் (முதலிலேயித்யாதி). ஆசார்ய ப்ரதிபத்தி பண்ணுமல் சொல் என்று கேட்கில் என்றபடி. உத்பத்திதோஷம்—மந்த்ரத்துக்கு வீர்யமின்றிக்கே ஒழிகை. 58.

---

59\. அடைந்த வருவினையோ டல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள்
தன்விலங்கை வைத்தான் சரண்.

பதவுரை:— அடைந்த—வந்தேறியான, அரு வினையோடு—கொடுமையான அஜ்ஞானம் முதலியவைகளோடு, அல்லல்—மநோவியாதி, நோய்—சரீர வியாதி, பாவம்—துஷ்கர்மாநுஷ்டானம், மிடைந்தவை—(சரீரத்திற்கு ஹேதுவான) நெருங்கிய பாபங்கள் ஆகிய இவைகளை, மீண்டு ஒழியவேண்டில்—திருப்பிப் போகும்படி செய்ய வேண்டுமானால், நுடங்கு இடையை—துவளாநின்ற இடையையுடைய ஸீதாபிராட்டியை, முன்—முன்னொரு காலத்தில், இலங்கை வைத்தான்—இலங்கையிலே இருத்திய ராவணனுடைய, முரண் அழிய—பலம் நசிக்கும்படியாக, முன் ஒரு நாள்—முன்பு ராமனாக அவதரித்திருந்த காலத்தில், தன் வில் அம் கை வைத்தான்—தன்னுடைய தனுஸ்ஸை அழகிய கையிலே தரித்தவனே, சரண்—உபாயம்.

அவ:— ஐம்பத்தொன்பதாம் பாட்டு. (அடைந்த) காலக்ஷேபம் பண்ணும்படி சொல்லுகிறது.

வ்யா:— (அடைந்தவருவினை) ஆத்மஸ்வரூபத்திலன்றியே அசித்ப்ரத்யாஸத்தியாலே வந்தேறியான அஜ்ஞாநாதிகள். (அல்லல்) மாநஸவ்யாதி. (நோய்) சரீரவ்யாதி. ஆதிவ்யாதிகள் என்றபடி. (பாவம்) பரிக்ரஹித்த சரீரத்தாலே பண்ணின நிஷித்தாநுஷ்டாநம். (மிடைந்தவை) சரீராரம்பகஹேதுவான பாபங்களுமாக நெருங்கினவை. (மீண்டொழியவேண்டில்) (39) "**अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि**" (அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்னும்படி ஒரு ராஜகுலஸப்பந்தத்தாலே மீளாதபடி போக வேண்டில். (நுடங்கிடையை) பிரியத்தகாதவளை. (முன்னித்யாதி) பண்டு லங்கையிலே வைத்தவனுடைய மிடுக்கொழிய. (தன் விலங்கை வைத்தான்) தன்னுடைய திருவில்லை அழகிய திருக்கையிலே வைத்தவன் உபாயம். இத்தால், ஸர்வேஶ்வரனுக்கு போக்யமாயிருந்துள்ள ஆத்மாவை "என்னது" என்றிருக்குமவன் பிராட்டியைப் பிரித்த ராவணனோடு ஒக்குமென்னுமிடமும், "இவ்வாத்மா அவனுடையது" என்று அநுகூலித்தவனுக்குப் பிராட்டியிருந்த மார்விலே அம்பேற்றிப் பரிஹரித்தாற் போலே பரிஹரிக்குமென்னுமிடமும், அவளோடு கூடினவன் உபாயமென்கையாலே, பற்றுவார்கள் அவள் முன்னாகப்பற்றவேணுமென்னுமிடமும் சொல்லுகிறது.

திருவுள்ளம் இந்த்ரிய ஜயம் பண்ணென்றது, தொழு என்றது, திருநாமம் சொல்லென்றது, நினையென்றது, பல்படிகள் சொன்ன இவற்றுக்குத் தாத்பர்யமென்? என்னில்; இதுக்குக் கீழெல்லாம் ஷட்கத்ரயத்திற் சொன்ன வார்த்தைபோலே ஸ்வரூபம் விஶதமாகைக்குச் சொன்ன நிலை; இது சரமஶ்லோகத்தில் நிலைபோலே. உணர்ந்தவன்று அவனல்லதில்லை.

(அடைந்தவருவினை) அவித்யாதிகள். ஆத்மா ஹேயஸம்ஸர்க்கத்துக்கு அநர்ஹனாகையாலே "அடைந்த" என்றது. பரமாத்மாவுக்கும் ப்ரவேஶம் ஒக்குமிறே. (59) "**अनश्नन्**" (அநஶ்நந்). (அல்லல் நோய்) ஆதிவ்யாதி. (பாவம்) சரீரத்துடன் பண்ணும் பாவம். (மிடைந்தவை)

ஸமிதையிடா மாணிபோலே; பரணிக்கூடு வரிந்தாற்போலே. (மீண்டொழியவேண்டில்) தொடருகிற பாப்பைத் திரிய விடுத்தாற்போலே. (59) "सर्वपापेभ्यो मोक्षयिष्यामि" (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) இறே. ஸர்வசக்தியைக் கொண்டு கார்யங்கொள்ள வேண்டாவோ? (நடங்கிடையை) ஏகத்ரவ்யத்தை பிந்நமாக்கின. (இலங்கை வைத்தான்) தாயையும் தமப்பனையும் பிரித்த பையல் மிடுக்கழிய. பிராட்டி அம்பெய்யுமன்று * இவனால் போக்கலாவது. (60) "तत्तस्य सदृशं भवेत्" (நத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்). கூர்மையை விஶ்வஸித்திருக்குமத்தனை; அவனுக்குப் பரியுமாப்போலே பரியும் அவதாரஸௌலப்யம். பிறந்து முன்னே உன்னைப்பெறுகைக்கு யத்நம் பண்ணுநின்றான்; இனி ப்ரதிபத்தியே உள்ளது. 59.

---

அரு:— ஐம்பத்தொன்பதாம் பாட்டு. இதில் உபாயஸ்வீகாரம் சொல்லுகிறதென்று கண்டுகொள்வது. மீண்டொழிய—மீளுகை யொழிய. போனது திரியவும் இவனிடத்திலே மீளாதபடி.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (திருவுள்ளமித்யாதி). திருவுள்ளமானது "எழுதும் எழு" என்று இங்கே சொன்னீர்; இப்படி பல்படியாகச் சொல்லுகிறதுக்குக் கருத்தென்? என்று ஆழ்வாரைக் கேட்கவென்று ஶங்காபிப்ராயம். ஸ்வரூபம் விஶதமானால் அவனே உபாயமாக வேணுமோ? என்ன அருளிச்செய்கிறார் (உணர்ந்தவன்றித்யாதி).

வந்தேறியானது பரமாத்மாவுக்கும் ஒவ்வாதோவென்று ஶங்கை. "இறை" என்று ஶங்காஸூசகம். அதுக்கு உத்தரம் (அநஶ்நந்) என்று. ஸமிதையிடாமாணி—சுப்பிலேமேலே சூழ்த்துக்கொள்ளுகிற பூச்சி. பற்றுகைக்கு ஸௌலப்யமென்? என்ன; அருளிச்செய்கிறார் (அவதாரஸௌலப்யமென்று). அது இப்போதில்லையே என்ன அருளிச்செய்கிறார் (பிறந்துமுன்னேயித்யாதி). 59.

---

60. சரணா மறைபயந்த தாமரை யானோடு
மரணாய மன்னுயிர்கட் கெல்லாம்—அரணாய
பேராழி கொண்டபிரா னன்றி மற்றறியாது
ஓராழி சூழ்ந்த வுலகு.

---

* இவனால்—சேதனனால்.

பதவுரை:— சரண்—(நாலு வகை புருஷார்த்தங்களுக்கும்) உபாயமாக, மறை—வேதத்தை, பயந்த—உபதேசிக்கப்பெற்ற, தாமரையானோடு—உந்தித்தாமரையில் பிறந்த பிரமனுடன் கூட, மரணாய—மரணத்தை இயற்கையாகக்கொண்ட, மண் உயிர்கட்கு எல்லாம்—நித்யமான ஜீவர்களுக்கெல்லாம், அரண் ஆய—ரக்ஷகமாயிருப்பவைகளை, பேராழி கொண்ட பிரான் அன்றி—பெரிய சக்கரத்தைக் கையில் கொண்ட எம்பிரானைத் தவிர, மற்று—(அவனைக் காட்டிலும்) வேறாயிருப்பதும், ஓர் ஆழிசூழ்ந்த—ஒப்பற்ற கடலினால் சூழப்பட்டிருப்பதுமான, உலகு—உலகிலுள்ளோர், அறியாது—அறியமாட்டார்கள்.

அவ:— அறுபதாம் பாட்டு. (சரணித்யாதி) கீழ் அவனையே உபாயமென்றது; பேறு இவர்களதேயானபின்பு இவ்வாத்மாக்கள் உபாயமானாலாகாதோ? என்னில்; கீழ் போக்கறியான்; இப்போது தாங்கள் படுகிறது இன்னதாலே என்றறியார்கள்; வரக்கடவது அறியார்கள். ஈஶ்வரன் இவை எல்லாம் அறிந்து பரிஹரிக்கவல்ல ஜ்ஞாந ஶக்த்யாதிகளை உடையவன். * "பழகியான் தாளே" என்னுமாப்போலே. ஆகையாலே அவனே உபாயமாமித்தனை; இத்தை லோகம் அறியாது என்கிறது.

வ்யா:— (சரணாவித்யாதி) எல்லார்க்கும் ஹிதத்தைச் சொல்லக் கடவதான வேதத்தை ஓதுவிக்கப்பட்ட ப்ரஹ்மாவோடு. "சரணா மறைபயந்த" என்றத்தை, "அரணாய" என்றத்தோடே கூட்டி ஈஶ்வரனுக்கு விஶேஷணமாக்கவுமாம். (மரணாய மண்ணுயிர்கட்கெல்லாம்) கல்பாதியிலேயுண்டாய் கல்பாந்தத்திலில்லையாகிற ப்ரஹ்மாவோடே கூட (61) "न जायते म्रियते वा" (ந ஜாயதே ம்ரியதே வா) (62) "जायस्व म्रियस्व" (ஜாயஸ்வ ம்ரியஸ்வ) என்று ஜநநமரண தர்மாக்களான உயிர்களுக்கெல்லாம். (அரணாய) ரக்ஷகமான. (பேராழியித்யாதி) கீழ் பெருமாள் ப்ரஸ்துதராகையாலே கடலை வெதுப்பித் தமக்கு வசமாக்கிக்கொண்ட சக்கரவர்த்தித் திருமகனென்னவுமாம். கையிலே திருவாழியையுடையனாய் உபகாரகனான ஸர்வேஶ்வரனுடைய உபாயபாவத்தை அறிவர். (மற்றறியாதோராழிசூழ்ந்த

* நான்முகன் திருவ-22.

உலகு) மற்றுயிருந்துள்ள கடல்சூழ்ந்த லோகமானது உபாயமாக அறியாது.

(சரணுமறைபயந்த) அபிமதஸித்திகளுக்கடைத்த உபாயபேதங்களையுடைய வேதங்களை ஜகத்துக்கு ஓதுவிக்கும் ப்ரஹ்மவிதாம்வரனை ப்ரஹ்மா மந்த்ரக்ருத் என்பது. (மரணய) சாவது பிறப்பதாகிற சரீரதர்மம். (மன்னுயிர்) ஆத்மதர்மம்; மரணதர்மங்களுடைய அஜனைய், அஶக்தனய். அரணனவை—இவற்றை விநாசகன் அறியுமத்தனை. (63) "**मूढोयं नाभिजानाति**" (மூடோயம் நாபிஜாநாதி), (64) "**वेदाहं**" (வேதாஹம்). ஆப்பான், ஜீயர்க்கு, "ஜீயரே! இவ்வுலகு எம்பெருமானையல்லாது இருந்ததோ?" என்ன; "அதுக்குப் பொருளென்?" என்ன; "உயர்ந்தோர் எம்பெருமானையல்லதறியார்" என்ன; இத்தை பட்டரைக்கேட்க, "அதுக்கொரு குற்றமுண்டு, 'ஓராழி சூழ்ந்த' என்று விஶேஷிக்கவொண்ணுது" என்ன; இதுக்குப் பொருளோ? என்ன; "ஜீயரே நான் சொல்லும் பொருளென்?" என்ன; "உலகறியாது" என்ன; "அதுவே பொருள்" என்றார். இத்தைப் பிள்ளையும் ஜீயருக்கு உரைக்கத் திருக்கலிகன்றிதாஸர் மறந்ததை உணர்த்தினர் என்றருளிச்செய்தார். 60.

---

அரு:— அறுபதாம் பாட்டு: உபாயமானல்—உபாயயத்நம் பண்ணினல். அறிவான்—தன்னுடைய உபாயபாவத்தைத் தானேயொழிய வேறொருவரும் அறிவாரில்லை என்றபடி. ஈஶ்வரனை உபாயமாக அறியாது.

நித்யமான வேதத்தை உண்டாக்குகையாவதென்? என்ன, அருளிச்செய்கிறார் (மந்த்ரக்ருத்தித்யாதி). மந்த்ரத்ரஷ்டாவை "மந்த்ரக்ருத்" என்னக்கடவது. இவற்றை—அரணன உபாயத்தை. விநாஶகன்—ஜந்மாதிகளைப் போக்குகிற ஈஶ்வரன். லோகம் அறியாது, ஈஶ்வரன் அறியுமென்னுமதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (மூடோயம் இத்யாதி). "பிரானன்றி மற்றறியாது—உலகு" என்று உலகானது ஈஶ்வரனையொழிய வேறொரு உபாயத்தை அறியாது என்னும் சப்தம் தோற்றுநிற்க, சப்தத்தை நெருக்கி உபாயம் ஈஶ்வரன் அறியுமொழிய உலகறியாதென்னுமதுக்கு ஸம்வாதமாக அருளிச்

செய்கிறார் (ஆப்பானித்யாதி). பொருளென்-பொருளேது, "பொருளென்" என்று வெறுத்தாற்போலே சொல்ல, "ஆனாலும் கேட்ட உமக்குச் சொல்லவேணுமே; உபாயம் ஈஶ்வரன் அறியுமத்தனை; உலகறியாது" என்று பட்டர் ஜீயர்க்கு அருளிச்செய்தாரென்றபடி. 60.

---

61. உலகு முலகிறந்த வூழியும் ஒண்கேழ்
விலகு கருங்கடலும வெற்பும்—உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும் திருமால்தன்
புந்தியி லாய புணர்ப்பு.

பதவுரை:— உலகும்—எல்லா லோகங்களும், உலகிறந்த ஊழியும்—உலகம் அழிந்தபோதும் இருக்கும் காலமும், ஒண் கேழ் விலகு கரும் கடலும்—அழகிய நிறத்தையுடையதாய், அலையெறியா நிற்பதாய், கறுத்திருப்பதான கடலும், வெற்பும்—(உலகிற்கு ஆதாரமான) மலைகளும், உலகினில்—லோகத்தில் காணப்படுகிற, செம் தீயும்—சிவந்த அக்நியும், மாருதமும்—காற்றும், வானும்—ஆகாசமும், திரு மால் தன்—பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுடைய, புந்தியில் ஆய—ஸங்கல்பத்தினால் உண்டாகிய, புணர்ப்பு—ஸ்ருஷ்டி.

அவ:— அறுபத்தோராம் பாட்டு. (உலகு) ஹிதத்திலே அறியாததுக்கு தந்தாமுடைய உத்பத்தியிலே வைத்து அறிவுணர்த்துகிறார்.

வ்யா:— (உலகும்) லோகமடங்கத்தானே சேஷித்தகாலமும். (ஒண்கேழ்) அழகிய நிறத்தையுடையதாய் அலையெறியாநின்ற கடலும், லோகத்துக்காதாரமான மலையும். (செந்தீயித்யாதி) இவ்வோக்கமான கடலிலே லோகம் அலைந்து நோவுபடப்புக்கவாறே, ஐயோ! நோவுபடாநின்றதே! என்று அதுக்கு துக்கித்த பிராட்டிக்கு ப்ரியமாகத் தன் ஸங்கல்ப ஜ்ஞானத்தாலே ஸ்ருஷ்டித்து.

(ஒண்ணித்யாதி) தெளிந்து அழகியதாய்ச் சலிக்கின்ற கடலும். (வெற்பும்) பூமிக்கு ஆணியடித்தாற்போலே இருக்கும். (திருமாலித்யாதி) தாய்க்கு ப்ரியமாக ப்ரஜைகளை நோக்குமித்தனையிறே. இத்தலை அறிந்தோ ஸ்ருஷ்டித்தது; விலக்காமையே உள்ளது. 61.

---

அரு:— அறுபத்தோராம் பாட்டு. புந்தி-புத்தியாய், அத்தால் ஸங்கல்பஜ்ஞானமென்கிறது. புணர்ப்பு-ஸ்ருஷ்டி. இவை அறியாத

காலத்திலும் அவனே ஸ்ருஷ்டிக்கையாலே இப்போது உபாயம் அறிவானும் அவன் என்றபடி. 61.

---

62. புணர்மருதி னூடுபோய்ப் பூங்குருந்தம் சாய்த்து
மணமருவ மால்விடையேழ் செற்று—கணம்வெருவ
ஏழுலகந் தாயனவு மெண்டிசையும் போயினவும்
சூழரவப் பொங்கணையான் தோள்.

பதவுரை:— புணர் மருதின்—(ஒன்றோடொன்று) இடைவெளியின்றிச் சேர்ந்திருக்கிற இரு மருதமரங்களின், ஊடு போய்—நடுவே தவழ்ந்து சென்றும், பூம் குருந்தம் சாய்த்து—அழகிய குருந்த மரத்தைத் தள்ளியும், மணம் மருவ—(நப்பின்னைப் பிராட்டியை) மணம் புரிவதற்காக, மால் விடை ஏழ் செற்று—பெரிய எருதுகள் ஏழையும் கொன்றும், கணம் வெருவ—தேவாஸுரர்களெல்லாம் 'என்வருகிறதோ' என்று அஞ்சும்படியாக, ஏழு உலகம் தாயனவும்—ஏழு லோகங்களையும் கடந்தவையும், எண் திசையும் போயினவும்—எட்டு திக்குகளிலும் வியாபித்தவையும், சூழ் அரவ—பரந்த திருவநந்தாழ்வானாகிற, பொங்கு அணையான்—கிளர்ந்த படுக்கையையுடையவனுடைய, தோள்—திருத்தோள்களாகும்.

அவ:— அறுபத்திரண்டாம் பாட்டு. (புணர்) உத்பந்நமானபின் இவரதோ தம் கார்யத்துக்குக் கடவராயிருக்கிறது என்கிறது.

---

வ்யா:— (புணரித்யாதி) ஒன்றென்னலாம்படி நிர்விவரமாயிருந்த மருதினிடை போய். (பூங்குருந்தம் சாய்த்து) தர்ஶநீயமான குருந்தத்தைச் சாய்த்தும். (மணமித்யாதி) நப்பின்னைப்பிராட்டியுடைய பாணிக்ரஹண மங்களமானது தலைக்கட்டுப்படிக்கீடாகப் பெரிய எருதுகள் ஏழையும் செற்று. (கணமித்யாதி) (65)"**सङ्घैस्सुराणां**" (ஸங்கைஸ்ஸுராணாம்) என்கிறபடியே அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற "இது என்னாகப்புகுகிறதோ!" என்று வெருவும்படிக்கீடாக ஏழு உலகையும் அநாயாஸேந கடந்தனவும், எட்டு திக்குக்களிலும் போய் வ்யாபித்தனவும். (சூழித்யாதி) பரந்து, மென்மை, குளிர்த்தி, நாற்றங்களையுடைத்தாயிருந்துள்ள திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவன்.

அவ:— களைபிடுங்கும்படி.

வ்யா:— (பூங்குருந்தம்) பூவைக்காட்டி அந்யபரதை பண்ணி வஞ்சிக்கப்பார்க்கை. (மணமித்யாதி) தனக்கு வந்த கர்மத்தைத் தீர்த்தபடி. (ஏழுலகித்யாதி) பிராட்டிக்குச்செய்யும் செயலை இந்த்ரனுக்குச் செய்கை. (எண்டிசையும் போயினவும்) திக்குகளை வெளியடைக்கை. (சூழாவித்யாதி) இப்படிப் படுக்கையில் கண்வளரப் பெறுதே அலமந்து திரிவதே! (66) "**पाण्डरस्यातपत्रस्य छायायां जरितं मया**" (பண்டரஸ்யாதபத்ரஸ்ய சாயாயாம் ஜரிதம் மயா) ஸிம்ஹாஸநத்திலிருக்க அவஸரம் பெற்றிலன்; இக்காலத்திலேயிறே நிழலிலே முத்துக்குடையிடுவது. 62.

---

அரு:— அறுபத்திரண்டாம் பாட்டு. இவரதோ-இவருடைய பத்நமோ. பொங்கணை-கிளர்ந்த அணை.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (களை பிடுங்கும்படி யென்று). தோளே இவையெல்லாம் செய்ததென்றபடி. படுக்கை விட்டு ரக்ஷணார்த்தமாகத் திரிந்தவிடம் உண்டோ? என்ன, அருளிச் செய்கிறார் (பாண்டரஸ்யாதபத்ரஸ்ய இத்யாதி). இக்காலத்திலே—வ்ருத்தனான இக்காலத்திலே. ராஜசிஹ்நார்த்தமாக ஸிம்ஹாஸநத்திலே இருக்கிறபோது நிழலிலே குடையிடுவது. இதுக்கு முன்பெல்லாம் ரக்ஷணார்த்தமாக வெய்யிலிலே குடையிட்டுத் திரிந்தேன் என்றபடி. 62.

---

63. தோளவனை யல்லால் தொழா என்செவி யிரண்டும்
கேளவன தின்மொழியே கேட்டிருக்கும்—நாநாளும்
கோணா கணையான் குரைகழலே கூறுவதே
நாணாமை நள்ளேன் நயம்.

பதவுரை:— தோள்—(என்னுடைய) கைகள், அவனையல்லால் தொழா—அப்பெருமானைத் தவிர வேறொருவரையும் தொழமாட்டா; என் செவி இரண்டும்—என்னுடைய இரண்டு காதுகளும், கேள் அவனது—(எனக்கு எல்லாவிதமான) உறவுமாயிருக்கும் அவனுடைய, இன் மொழியே—இனிய சொற்களையே, கேட்டு இருக்கும்—கேட்டு உயிர் தரித்திருக்கும்; நா—என்னுடைய நாக்கு, நாளும்—தினந்தோறும், கோள் நாகணையான்—ஒளிமிக்க ஆதிசேஷனைப் படுக்கையாக உடையவனுடைய, குரை கழலே—(ஆபரணவொலி

யினால்) சப்தியாநிற்கும் திருவடிகளையே, கூறுவதே—சொல்லுவதாயிருக்கும்; நயம்—(ஸம்ஸாரிகள்) விரும்புமவையான விஷயங்களை, நாணமை நள்ளேன்—(நான்) வெட்கமில்லாமல் அணுகமாட்டேன்.

அவ:— அறுபத்துமூன்றாம் பாட்டு. (தோள்) இப்படி அவன் ஸுலபனென்று அநுஸந்தித்த பின்பு என்னுடைய இந்த்ரியங்கள் அவனையல்லது அறிகிறதில்லை.

வ்யா:—(தோளித்யாதி) நான் வேறேயொன்றைத் தொழச் சொன்னாலும் என் தோளானது அவனை அல்லது தொழுகிறதில்லை. (என்செவியித்யாதி) என் செவிகள், உறவானவனுடைய இனிய மொழியைக் கேட்டிராநின்றது. (நாநாளும்) என்னுடைய நாக்கானது எப்போதும். (கோள் நாகணையித்யாதி) "கோள்" என்று ஒளிக்கும், மிடுக்குக்கும் பேர். (67) "प्रकृष्टविज्ञानबलैकधामनि" (ப்ரக்ருஷ்ட-விஜ்ஞாநபலைகதாமநி) என்னும்படியே, அநந்தஸாயியான ஸர்வேச்வரனையே கூறுமத்தனை. (நயப்நாணமைநள்ளேன்) ஆசைப்படப் படுவதான ஶப்தாதிகளை லஜ்ஜியாதே கிட்டேன்; ஹாஸ்யமான விஷயமென்றுமாம். அவன் ரக்ஷகனாகவுமாம், தவிரவுமாம்.

(தோளவனை) அவன் தான் தனக்குப் பகையென்னலாம்படி இருந்தாலும் என் செவிதானும் கேட்பது. ஆசைப்படும் விஷயங்கள். (நாணமை நள்ளேன்) ஆண்பிள்ளைச் சொற்றூழ்வியை ஆசைப் பட்டவனைப்போலே உணர்ந்தவனுக்கு லஜ்ஜிக்கவேணும். (கோள்) பிராட்டிக்கும் தனக்கும் கிடக்கைக்குண்டாகை. 63.

---

அரு:— அறுபத்துமூன்றாம் பாட்டு. கேள்-உறவு. ஶப்தாதிகள் ஆசைக்கும் ஹாஸ்யத்துக்கும் விஷயம். நயப்-விரும்புகை.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (அவன்றானித்யாதி). "நயம்" என்றத்தை அருளிச்செய்கிறார் (ஆசைப்படுமித்யாதி). விஷயங்களைக் கண்டால் நாண வேண்டுவானென்? என்ன, அருளிச் செய்கிறார் (ஆண்பிள்ளையித்யாதி). ஆண்பிள்ளைச்சொற்றூழ்வி-பெண்வடிவு கொண்ட புருஷன். கோள்-மிடுக்கும், பரப்பும். கிடக்கைக்குண்டாகை-இருவரும் கிடக்கைக்கு இடம் போருகை. 63.

64. நயவேன் பிறர்பொருளை நள்ளேன்கீழாரோடு
உயவே னுயர்ந்தவரோ டல்லால்—வியவேன்
திருமாலையல்லது தெய்வமென் றேத்தேன்
வருமாறென் னென்மேல் வினை,

பதவுரை:— பிறர் பொருளை—விலக்ஷணனான எம்பெருமானுடைய உடைமையான ஆத்மவஸ்துவை, நயவேன்—(எனக்கென்று) ஆசைப்படமாட்டேன்; கீழாரோடு—(ஆத்மாவைத் தம்முடையதாக நினைத்திருக்கும்) ஸம்ஸாரிகளோடு, நள்ளேன்—நெருங்க மாட்டேன்; உயர்ந்தவரோடல்லால் உயவேன்—(எம்பிரானுக்கு அடிமைப்பட்டிருக்கையாலே) உயர்ந்திருப்பவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களைத் தவிர வேறு மனிதரிடம் பேசமாட்டேன்; திருமாலை அல்லது—லக்ஷ்மீநாதனைத் தவிர வேறு சிலரை, தெய்வம் என்று ஏத்தேன்—தேவதை என்று துதிக்கமாட்டேன்; வியவேன்—(அவர்களைக் கண்டு) வியக்கவும் மாட்டேன்; என் மேல்—(இப்படிப்பட்ட) என் மேல், வினை வரும் ஆறு என்—பாபம் வரும் வழி எப்படி?

அவ:— அறுபத்துநாலாம் பாட்டு. (நயவேன்) ப்ராப்தத்தைச் செய்து அப்ராப்தத்தைச் செய்யேனென்றிருக்கிற என்பக்கல் பாபத்துக்கு வரப்போமோ என்கிறார்.

வ்யா:— (நயவேன் பிறர்பொருளை) பிறர்பொருளை ஆசைப்படேன். த்ரவ்யத்துக்கு உத்கர்ஷமாவது:— த்ரவ்யம் தன்னுடைய நன்மையாலும் உடையவனுடைய நன்மையாலும். த்ரவ்யம் பரிணாமியான அசித்தன்றிக்கே ஆத்மத்ரவ்யமாயிருந்தது. (68) "**यस्यात्मा शरीरं**" (யஸ்யாத்மா ஶரீரம்), (8) "**पतिं विश्वस्य**" (பதிம் விஶ்வஸ்ய) என்று ஓதப்படுகிறவன் உடையவன். உத்க்ருஷ்டமான ஆத்மாவை "என்னது" என்றிரேன். (நள்ளேன் கீழாரோடு) ஆத்மாவை "என்னது" என்றிருக்குமவர்களாயிற்று கீழாராகிறார்; அவர்களோடே கிட்டேன், தங்கள்படியாக்கிக்கொள்வரென்று. (உயவேனுயர்ந்தவரோடல்லால்) உத்தமரென்னுமவர்களோடல்லது உசாவேன். (வியவேன் திருமாலையல்லது) ஸ்ரிய:பதியைக் கண்டல்லது விஸ்மயப்படேன். (தெய்வமென்றேத்தேன்) அவனையல்லது வேறு சிலரை தெய்வமென்று ஸ்துதியேன். (வியவேன் திருமாலை) ஸ்ரிய:பதியினுடைய ஐஸ்வர்யத்தை அர்த்தவாதமென்றிரேன்.

(வருமாறென் என்மேல்வினை) (69) "अवश्यमनुभोक्तव्यं" (அவஶ்யமநு-போக்தவ்யம்) என்கிற வசநத்தைக்கொண்டு என்பக்கலிலே வரப்போமோ பாபத்துக்கு? என்கிறார்.

(நயவேன்) வாக்யார்த்தம்:— க்ருதக்ருத்யனென்கிறார். எம்பெருமான் விரும்பும் ஆத்மாவை அபஹரியேன். ராவணன் செயலைச்செய்யேன். கீழார்—அவனுக்குக் கூட்டுப்படும் மாரீச ப்ரப்ருதிகள். உயர்ந்தவர்—விஶ்வாமித்ராதிகள். (70) "महात्मानस्तु" (மஹாத்மாநஸ்து) பெரியோர். (வியவேன்) (71) "तृणीकृतविरिञ्चादिनिरङ्कुशविभूतयः" (த்ருணீக்ருதவிரிஞ்சாதிநிரங்குஶவிபூதய) ப்ரஹ்மாதிகளைக் கண்டால் ஆடுப்படைக்கல்லாக நினைத்திருக்கு மத்தனை. (திருமாலையல்லது வியவேன்—தெய்வமென்றேத்தேன்—வருமாறென்னென்மேல் வினை) (69) "अवश्यमनुभोक्तव्यं" (அவஶ்யமநு-போக்தவ்யம்) என்கிறவை என்னை நலியவோ? 64.

---

அரு:— அறுபத்துநாலாம் பாட்டு. உயவுகை—உசாவுகை. "பொருள்" என்றது உதாரத்துக்கு உபலக்ஷணமாக்கி அருளிச் செய்கிறார் (ராவணனித்யாதி) உயர்ந்தவர்—மஹாத்மாக்களாய்ப் பெரியோராயிருக்கிற விஶ்வாமித்ராதிகள். 64.

---

65. வினையா லடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார்—நினைதற்
கரியானைச் சேயானை ஆயிரம்பேர் செங்கட்
கரியானைக் கைதொழுதக் கால்.

---

பதவுரை:— நினைதற்கு அரியானை—(தம் முயற்சியாலே) அறிய முடியாதவனும், சேயானை—வெகு தூரத்திலிருப்பவனும், ஆயிரம் பேர் செம் கண் கரியானை—ஆயிரம் திருநாமங்களையும், சிவந்த திருக்கண்களையும், கறுத்த திருமேனியையும் கொண்டவனுமான எம்பிரானை, கை தொழுதக்கால்—கையாலே வணங்கினால், வினையால் அடர்ப்படார்—கர்மங்களால் துன்புறுத்தப்படார்கள்; வெம் நரகில் சேரார்—கொடிய நரகத்தை அடையமாட்டார்கள்; தினையேனும்—சிறிதாவது, தீ கதிக்கண் செல்லார்—கெட்ட கதிகளுக்கும் போக மாட்டார்கள்.

வ்யா:— அறுபத்தைந்தாம் பாட்டு. (வினையித்யாதி) பாபத்தால் அடக்கப்படார். (வெந்நரகில் சேரார்) பாப பலமான நரகிலும் சேரார். (தினையித்யாதி) தர்மபுத்ரன் நரகதர்ஶநம் பண்ணினவோபாதியும் கூடாது இவர்களுக்கு. (நினைதற்கரியானை) ஸ்வயத்நத்தாலே அறியப்போகாதவனை. (சேயானை) அதுக்கடி தூரஸ்தனாகை. (ஆயிரமித்யாதி) தான் கொடுத்த அறிவை உடையவர்களுக்கு ஏத்துகைக்கு ஆயிரந்திருநாமத்தையும் கண்டு அநுபவிக்கைக்கு ஶ்ரமஹரமான வடிவையுமுடையவனை. (கைதொழுதக்கால்) அஞ்ஜலி பண்ணினால்.

(வினையாலடர்ப்படார்) என்னைப்போலே விதேயகரணமின்றியே பாவநமென்று ஆஶ்ரயித்தார்க்குப் பாபம் போம். (வினை) இங்கு அநுபவிக்கும் பாபபலம் அநுபவியார். (வெந்நரகு) போய் அநுபவிக்கும் பாபபலம். (தினை) அஸத்யாபாவத்தாலே. (நினைத்தற்கரியானை) ஸ்வயத்நத்தாலே நினைப்பார்க்கு அரியானை. (சேயானை) இவன் குற்றமன்று, வஸ்துஸ்வபாவம். (ஆயிரமித்யாதி) தானே காட்டுவார்க்கு இழிந்தவிடமெல்லாம் துறையாகை. (கைதொழுதக்கால்) பாலைக்குடிக்க நோய்போம். வகுத்தது செய்ய அபையும். 65.

---

அரு:— அறுபத்தைந்தாம் பாட்டு. மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (என்னைப்போலேயித்யாதி). விதேயகரணம்—"தோளவனையல்லால் தொழா" என்கிறபடியே ப்ராப்யமாகப் பற்றுகை. "செங்கட்கரியான்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (பாலைக்குடிக்கநோய்போமென்ற). "கைதொழுதக்கால்" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (வகுத்ததித்யாதி). 65.

---

66. காலை யெழுந்துலகம் கற்பனவும் கற்றுணர்ந்த
மேலைத் தலைமறையோர் வேட்பனவும்—வேலைக்கண்
ஓராழி யானடியே யோதுவது மோர்ப்பனவும்
பேராழி கொண்டான் பேயர்.

பதவுரை:— காலை எழுந்து—(ஸத்வகுணத்தை வளரச்செய்வதான) காலை வேளையில் கண் விழித்து எழுந்து, உலகம்—உயர்ந்தோரான முமுக்ஷுக்கள், கற்பனவும்—அப்யாஸம் செய்பவையும், கற்று உணர்ந்த மேலை தலை மறையோர்—படித்து அறிந்தவர்களான வைதிக

ச்ரேஷ்டர்கள், வேட்பனவும்—காண ஆசைப்படுபவையும், வேலைக் கண்—திருப்பாற்கடலினுள், ஓர் ஆழியான் அடியே—ஒப்பற்ற திருவாழியைக் கைக்கொண்டு கண்வளர்ந்தருளும் எம்பிரானது அடிகளே; ஓதுவதும்—(இப்பெரியோர்கள்) கேட்பவையும், ஓர்ப்பனவும்—நினைப்பவையும், பேர் ஆழி கோண்டான் பெயர்—பெரிய சக்கரத்தைக் கொண்டவனுடைய திருநாமங்களே.

வ்யா:— அறுபத்தாறும் பாட்டு. (காலையெழுந்து) ஸத்வோத்தரமான காலத்திலே எழுந்திருந்து. (உலகம்) மோக்ஷேச்சையுடையவர்கள் கற்பனவும். (கற்றுணர்ந்தவித்யாதி) அறிவு தலைக்கட்டினவர்கள் பாவநாப்ரகர்ஷத்தாலே ஸாக்ஷாத்கரிப்பனவும். (வேலையித்யாதி) இவற்றினுடைய ரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலிலேகையும் திருவாழியுமாய்க் கிடக்கிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளையே. (பேராழி கொண்டான் பெயரே ஓதுவதும் ஓர்ப்பனவும்) ஸர்வேஶ்வரனுடைய திருநாமங்களே இவர்களுடைய ஶ்ரவணத்துக்கும் ஆநந்தத்துக்கும் விஷயமாவது.

(காலை) ஸத்வோத்தரமான காலம். (வேலைக்கண் ஓராழியானடியே) கரையையுடைத்தாய் ஒப்பிலாத கடல். (பேராழி கொண்டான்) இவர்களை ரக்ஷிக்கைக்கு உருவின பத்திரமும் தானுமாயிருக்கை. * "கைகழலாநேமியான்" 66.

---

அரு:— அறுபத்தாறும் பாட்டு. மேலைத்தலைமறையோர்-உத்தர பாகத்தில் உபநிஷத் தாத்பர்யம் கைப்பட்ட ஜ்ஞாநாதிகர். (வேலைக் கண்) வேலை-ஸமுத்ரமாதல், கரையாதல். கண்-இடம். ஆழி-ஆயுதமாதல், ஸமுத்ரமாதல். (பேராழி) முந்தினது நிரூபகம்; இரண்டாவது ஆயுதம். பத்திரம்-ஆயுதம். 66.

---

67. பெயருங் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ
உயருங் கதிரவனே நோக்கும்—உயிரும்
தருமனையே நோக்குமொண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கு முணர்வு.

பதவுரை:— ஆறு—நதியானது, பெயரும் கரும் கடலே நோக்கும்—அலையெறிகின்ற கறுத்த கடலையே நோக்கிச் செல்லும்;

---

* பெரிய. திருவ (87).

ஒண் பூ—ஒளி பொருந்திய தாமரைப்பூ, உயரும் கதிரவனே நோக்கும்—மிக உயர்ந்த இடத்திலேயிருக்கும் ஸூர்யனைக் கண்டே மலரும்; உயிரும்—(அவைஷ்ணவர்களுடைய) ஆத்மாக்கள், தருமனையே நோக்கும்—(ஆயுள் முடிவில்) யமதர்மராஜனையே அடையும்; (அப்படியே), உணர்வு—ஞானமானது, ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே—ஒளி பொருந்திய தாமரையில் வஸிக்கும் லக்ஷ்மியின் நாதனாகிய நாராயணனை மட்டுமே, நோக்கும்—அறியும்.

அவ:— அறுபத்தேழாம் பாட்டு. (பெயரும்) மோக்ஷேச்சை யுடையவர்களுக்கும் அறிவு தலைநின்றவர்களுக்கும், அவனுடைய திருவடிகளை ஏத்துவது, அவனுடைய திருநாமங்களையே ஏத்துவது என்று சொல்லிற்று, ஜ்ஞானத்துக்கு அவனே விஷயமாகையாலே என்கிறது.

வ்யா:— (பெயருமித்யாதி) ஆறானது, பூர்ணமாய்ச் சலியாநின்ற கடலையே நோக்கா நின்றது. ஆறு கடலை நிறைக்கைக்கன்று புகுகிறது; புக்கல்லது தான் தரிக்கமாட்டாமை. தாமரைப்பூவானது, தூரஸ்தத னாகிலும் ஆதித்யனுக்கு அலருமத்தனை; அக்ந்யாதிகளுக்கு அலராது. (உயிரும் தருமனையே நோக்கும்) யமனைக் கிட்டியல்லது வேறோரிடத் தில் புகவொண்ணாது. (ஒண்தாமரையித்யாதி) ஜ்ஞானமாகில் ஸ்ரிய:பதியை அறியுமத்தனை; மற்றொன்றை அறியாது. (72) "तत् ज्ञानमज्ञानमतोऽन्यदुक्तं" (தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம்), (73) विद्याऽन्या शिल्पनैपुणं" (வித்யாऽந்யா ஶில்பநைபுணம்) என்னும்படியே.

67.

---

68. உணர்வாரா ருன்பெருமை யூழிதோ றூழி
உணர்வாரா ருன்னுருவந் தன்னை—உணர்வாரார்
விண்ணகத்தாய் மண்ணகத்தாய் வேங்கடத்தாய் நால்வேதப்
பண்ணகத்தாய் நீகிடந்த பால்.

பதவுரை:— விண் அகத்தாய்—ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளி யிருப்பவனே!, மண் அகத்தாய்—இவ்வுலகிலும் அவதரித்தவனே!, வேங்கடத்தாய்—திருவேங்கடமலையிலும் நிற்பவனே! பண்—ஸ்வரத்தை ப்ரதானமாக உடைய, நால் வேத அகத்தாய்—நாலு வேதங்களிலும் விளங்குபவனே!, உன் பெருமை—உன்னுடைய மேன்மையை, உணர்வார் ஆர்—அறியவல்லவர் யார்? ஊழி தோறு

ஊழி—கல்பங்கள் தோறும் (ஆராய்ந்தாலும்), உன் உருவம் தன்னை—உன்னுடைய ஸ்வரூபத்தையும் ரூபத்தையும், உணர்வார் ஆர்—யார் அறியமுடியும்? நீ கிடந்த பால்—நீ பள்ளி கொண்ட பாற்கடலை, உணர்வார் ஆர்—யார் (அளவிட்டு) அறியமுடியும்?

அவ:— அறுபத்தெட்டாம் பாட்டு. (உணர்வாரார்) கீழ் ஜ்ஞாநத்துக்கு விஷயம் அவன் என்றது; உணர அரிது என்கிறது இப்பாட்டில்.

வ்யா:— (உணர்வாராருன்பெருமை) (74) "**जुष्टं यदा पश्यत्यन्यमीशं**" (ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶம்) என்கிறபடியே, குணங்களோடே கூடியிருக்கிற உன்னை உணர்வாரார் என்கிறது. (ஊழியித்யாதி) காலத்தையெல்லாம் ஒருபோகியாக்கி உன்னுடைய ஸ்வரூபரூபகுணங்களை உணரப்புக்கால் உணரவரிது என்கிறது. (விண்ணகத்தாய் மண்ணகத்தாய்) ஸ்ரீவைகுண்டத்திலேயிருந்த நீ அவதாரரூபேண பூமியிலே வந்தவதரித்து அத்தாலே ஸௌலப்யத்தையுடையவனே! கடல் கிட்டிற்றென்ன பரிச்சேதிக்கப்போகாதிறே. (வேங்கடத்தாய்) ஸம்ஸாரிகளுடைய ஸகலதுரிதங்களும் போம்படி திருமலையிலே வந்து நிற்கிறவனே! (நால்வேதப்பண்ணகத்தாய்) ஸ்வரத்துக்குள்ளீடாய் நின்று ப்ரதிபாதிக்கிற வேதங்களுக்கு ப்ரவர்த்தகனானவனே! நீ கிடந்த பால் உணர்வாரார்.

(உணர்வாராரித்யாதி) உன்னாலும் அறியவொண்ணாது உன் ஐஶ்வர்யம். (ஊழிதோறாழியித்யாதி) காலமெல்லாம் கூடினாலும் ஸௌலப்யம் அறியவொண்ணாது. விண்ணகம்—அவதாரம் இவை என்கை. விண்ணகத்தானாய், பாற்கடலானாய், மண்ணகத்தானாய் வேங்கடத்தானாய் நின்றான். (நால்வேதப்பண்ணகம்) ஐஶ்வர்யம் ப்ரதிபாதிக்கிறது கண்ணுக்கு விஷயமிறே. மற்றையது இங்கு சொல்லிற்று அநுவாதம் காண்கையாலே. (75) "**तस्य योनिं**" (தஸ்ய யோநிம்) அவனுடைய பிறப்பு. * உயர்வற உயர்நலமுடையவன் பிறப்பிறே. (75) "**धीराः**" (தீரா:) "**धीमतां अग्रेसराः**" (தீமதாம் அக்ரேஸரா:) * மயர்வற மதிநலம் பெற்றார். (75) "**परिजानन्ति**" (பரிஜாநந்தி) க்ஷணந்தோறும் எத்திறமென்பர். 68.

---

* திருவாய் (1-1-1).

அரு:— அறுபத்தெட்டாம் பாட்டு. நீ கிடந்தபால்-பாலிலே நீ கிடந்தது. ஏவமாதியெல்லாம் உணர்வாராரென்றபடி.

"உரு" என்று கண்ணுக்கு விஷயமாய் ஸௌலப்யம். கீழ்ச் சொன்ன பரத்வ ஸௌலப்யங்களுக்கு எல்லையேதென்ன; அருளிச் செய்கிறார் (விண்ணகப்-அவதாரம் என்று). பரத்வ ஸௌலப்யங் களுக்கு ஜ்ஞாபகமேதென்ன, அருளிச்செய்கிறார் (மற்றையதிங் கித்யாதி). இவை எல்லார்க்குந் தோற்றவில்லையே என்ன, ஜ்ஞாநாதிகர்க்குத் தோற்றுமென்கிறார் (காண்கையாலென்று). அப்படிக்கண்டார்களோ என்ன; அருளிச்செய்கிறார் (தஸ்ய யோநிம் இத்யாதி). "தஸ்ய" என்று பரத்வம்; "யோநிம்" என்று ஸௌலப்யம். 68.

---

69. பாலன் றனதுருவா யேழுலகுண்டு ஆலிலையின்
மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு.

பதவுரை:— பாலன் தனது உருவாய்—சிறு குழந்தையின் ரூபத்தை உடையவனாய், ஏழுலகு உண்டு—ஸப்தலோகங்களையும் அமுதுசெய்து, ஆல் இலையின் மேல்—ஆலமரத்தின் தளிரின் மேல், அன்று—ப்ரளயகாலத்தில், நீ வளர்ந்த—நீ கண்வளர்ந்தருளினதை, மெய் என்பர்—உண்மை என்று (வைதிகர்கள்) சொல்லுவார்கள்; அன்று—அப்போது, ஆல்—அந்த ஆலந்தளிர், வேலை நீர்—(நீ கண்வளர்ந்த) ஸமுத்திரஜலத்திலே, உள்ளதோ—இருந்ததோ? விண்ணதோ—(ஆதாரமற்றதான) ஆகாசத்திலிருந்ததோ? மண்ணதோ—(கரைந்துபோன) பூமியிலிருந்ததோ? சோலை சூழ் குன்று எடுத்தாய்—தோட்டங்களால் சூழப்பட்ட கோவர்த்தனமலையை (குடையாக) எடுத்தவனே! சொல்லு—(நீதான்) சொல்லவேணும்.

அவ:— அறுபத்தொன்பதாம் பாட்டு. (பாலன்) எல்லாமொழிய ஒரோவொன்றை அறியப்போமோ என்கிறது.

வ்யா:— (பாலனித்யாதி) ரக்ஷகாபேக்ஷமான வடிவையுடையாய். (ஏழுலகுண்டு) ஸ்வவ்யதிரிக்த ஸகலபதார்த்தத்தையும் ரக்ஷித்து. (ஆலிலையின்மேல்) ஸர்வர்க்கும் ஆதாரமான ஸர்வரக்ஷகனுக்கு கண்வளரப்போகாத ஆலிலையின் மேலே. (அன்றித்யாதி) அன்று

வளர்ந்தத்தை ஆப்ததமரானவர்கள் மெய்யென்பர்கள். வேதமர்யாதை இல்லையாகில் சூன்யமாதல், உண்டாகில் ஸத்யமாதலேயுள்ளது. (சோலையித்யாதி) ஏழு வயஸ்ஸிலே மலையைக் கீழ்மேலாக எடுத்த நீ அவற்றைச் சொல்லவேணும். (அன்று) திக்கெல்லாம் அழிந்த அன்று. (வேலையித்யாதி) நீ கண் வளர்ந்த பாற்கடலுள்ளதோ? நிராலம்பநமான ஆகாசத்ததோ? கரைந்து போன பூமியிலதோ? சொல்லவேணும். பின்பு மலை எடுத்த ஆஸ்சர்யம் இதுக்கு ஸத்ருஶமோ? இத்தால் அவன் தன் படியை அவன்தானே சொல்லுகையும் அரிது என்றபடி.

(பாலன்றனதுருவாய்) பாலனுடைய ரூபத்தையுடையையாய். அப்ராக்ருதமாய் மஹத்தரமான திருமேனியைச் சிறுக்கி ஸஜாதீயமாக்குகை மெய்யென்பர் ருஷிகள். "எத்திறம்" என்ன, "பொய்" என்னவொண்ணாது. (மெய்) நீயே ஸர்வத்துக்கும் தாரகனானமையும் மெய். இருந்தபடியென்? (சோலையித்யாதி) ஏழு பிராயத்திலே பெரியமலையையெடுத்த ஆச்சரியமும் சொல்லவேணும். இது ஆழ்வார் வந்தால் கேட்கவிருந்தோமோவென்றானே எம்பெருமான். இது அத்யந்தம் விஸ்மயமென்கிறார். 69.

---

அரு:— அறுபத்தொன்பதாம் பாட்டு. இவர்கள் "மெய்" என்கிறது, என்கொண்டு? என்ன அருளிச்செய்கிறார் (வேதமர்யாதையித்யாதி). வளர்ந்த—கண்வளர்ந்ததை.

இவர் "சொல்" என்கைக்கு அவன்தான் இவர் வார்த்தை கேட்க ஆசைப்பட்டிருக்குமோ? என்ன அருளிச்செய்கிறார் (இது ஆழ்வாரித்யாதி). கேட்கவிருந்தான் போலே என்று வ்யாக்யாதா. 69.

---

70. சொல்லுந் தனையும் தொழுமின் விழுமுடம்பு
சேல்லுந் தனையும் திருமாலை—நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தா லேத்துதிரேல் நன்று.

பதவுரை:— திருமாலை—லக்ஷ்மீநாதனை, சொல்லுந்தனையும்—சொல்லுவதற்கு சக்தியுள்ளபோதெல்லாம் (சொல்லி), தொழுமின்—வணங்குங்கள்; விழும் உடம்பு—நசிப்பதை இயற்கையாகக்கொண்ட சரீரமானது, சேல்லுந்தனையும்—இருக்கும் வரையிலும், நல் இதழ்

தாமத்தால்—அழகிய பூவிதழ்களைக் கொண்ட மாலையாலாவது, வேள்வியால்—யாகத்தாலாவது, தந்திரத்தால்—(மந்திரமில்லாத) கிரியைகளாலாவது, மந்திரத்தால்—(கிரியையற்ற) மந்திரத்தினலாவது, நாமத்தால்—திருநாமஸங்கீர்த்தனத்தினாலாவது, ஏத்துதிரேல்—(ஆச்ரயித்துத்) துதிப்பீர்களாகில், நன்று—நன்மை தருவது.

அவ:— எழுபதாம் பாட்டு. இப்படி அபரிச்சின்ந ஸக்தியான பின்பு அவனை எல்லாரும் ஆஸ்ரயியுங்கோள் என்கிறார்.

வ்யா:— (சொல்லுமித்யாதி) நாக்குச் சொல்லப் பாங்கான போதெல்லாம் சொல்லி ஆஸ்ரயிங்கோள். (விழுமுடப்பு செல்லுந்தனையும்) உடப்பு பாங்கான போதெல்லாம் ஆஸ்ரயியுங்கோள். (திருமாலை) பாங்கான போது ஆஸ்ரயிக்க யாவதாத்மபாவி ஆஸ்ரயித்தானாகக் கொள்ளும் பித்தனைச் சொல்லுகிறது. (நல்லிதழ் தாமத்தால்) நல்ல செவ்விப்பூவையுடைய மாலையால் (வேள்வியால்) செவ்விமாலை கிடையாதாகில் கர்த்தவ்யமான கர்மத்தாலே; அது கிடையாதாகில் அதுக்கடியான தந்த்ரத்தாலே; அது அடையப் போகாதாகில் பந்த்ரத்தைக் கொண்டு செய்வது. க்ரியாரூபமான தந்த்ரம் அரிதாகில் வாக்வ்ருத்தியான மந்த்ரத்தாலே செய்வது. மந்த்ரத்துக்கு தேசகாலநியதியும் அதிகாரி நியதியும் வேணுமென்றிருந்திகோளாகில் நாமத்தாலே ஏத்துவது. தாய்பேர் சொல்லக் குளித்துவரவேண்டாவிறே. (திருமாலை) நியதியுண்டென்னில், "அம்மே" என்னுமோபாதி சொல்ல அமையும். 70.

---

அரு:— எழுபதாம் பாட்டு. விழுமுடப்பு-திருவடிகளிலே விழுந்து ஆஸ்ரயியுங்கோள். வேள்வி-ஸ்வயமேவ பண்ணுகை. மந்த்ரம்-ஸங்கையாய்ப் பண்ணுவிக்கை. க்ரியாரூபமாந மந்த்ரம்-வேத மந்த்ரம். வாக்வ்ருத்தியான மந்த்ரம்-பகவந்மந்த்ரம். நியதி-விஷய நியதி. மிதுனமென்றபடி. 70.

---

71\. நன்று பிணிமூப்புக் கையகற்றி நான்கூழி
நின்று நிலமுழுது மாண்டாலும்—என்றும்
விடலாழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய்
அடலாழி கொண்டான்மாட் டன்பு.

பதவுரை:— ஆழி நெஞ்சே—கடல் போன்று ஆழ்ந்த மனமே! பிணி மூப்பு நன்று கையசற்றி—நோயையும், பிணியையும் நன்ருகப் போக்கடித்து (கைவல்யத்தைப் பெற்று), நான்கு ஊழி நின்று—நாலு யுகங்களிலும் நிலையாயிருந்து, நிலம் முழுதும் ஆண்டாலும்— அண்டம் முழுவதையும் ஆண்டாலும், அடல் ஆழி கொண்டான் மாட்டு— சண்டை செய்யும் திருவாழியாழ்வானைக் கைக்கொண்டவனிடம், அன்பு—ஸ்நேஹத்தை, விடல்—விட்டு விடாதே; வேண்டினேன் கண்டாய்—யாசிக்கிறேன் கிடாய்.

அவ:— எழுபத்தோராம் பாட்டு. (நன்று) ஐஶ்வர்ய கைவல்யங்களில் புகாதே அவன் தன்னையே ஆசைப்படப்பார் என்கிருர்.

வ்யா:— (நன்றித்யாதி) இத்தால் கைவல்யத்தைச் சொல்லுகிறது. (நான் கூழியித்யாதி) ப்ரஹ்மாவினுடைய ஐஶ்வர்யத்தைப் பெற்ருலும். (ஆழிநெஞ்சமே) ஆளவுடைய நெஞ்சே! நீயே முற்பட்டிருக்கிற உன்னை இரக்கிறேனிறே. (அடலாழி கொண்டான் மாட்டன்பு-விடல்) விடாதே கொள். (வேண்டினேன் கண்டாய்) பால் குடிக்க இரக்கிறேனிறே. ஐஶ்வர்யம் நிலை நில்லாது; கைவல்யம் பகவத்கைங்கர்யத்தைப் பார்க்க அல்பமென்கை.

அன்றியே, இரண்டையும் சேர்த்துத் தரிலும், விடல்—இவை நன்ருனவன்றும் அவனல்லாமையையும், பற்றுகைக்கு அவனுக அமையும். (வேண்டினேன்) இவ்வர்த்தம். (அடலாழியித்யாதி) எனக்குக் கைக்கூலி தந்து பற்றும் விஷயம். 71.

---

அரு:— எழுபத்தோராம் பாட்டு. நன்ருக-ஸவாஸநமாக. பிணியையும் மூப்பையும் கையசற்றி-கைவிட்டு. நான்கூழி-நாலுயுக ஸஹிதமாயிருக்கிற காலம். "நின்று" என்கையாலே, ஐஶ்வர்ய ஸ்த்தைர்யத்தையும் "நன்று" என்று கைவல்ய வைலக்ஷண்யத்தையும் சொல்லி, இவற்றையென்றும் ஆண்டாலும் அவனிடத்தில் அன்பு விடல் என்கிருர் (ஐஶ்வர்யமித்யாதி). 71.

---

72. அன்பாழி யானை யணுகென்னும் நாவவன்றன்
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும்—முன்பூழி
காணுனைக் காணென்னும் கண்செவி கேளென்னும்
பூணுரம் பூண்டான் புகழ்.

பதவுரை:— அன்பு—அன்பு நிரம்பியதான மனப், 'ஆழியானை அணுகு' என்னும்—'சக்கரபாணியைக் கிட்டுவாயாக' என்று சொல்லும்; நா—நாக்கு, 'அவன் தன் பண்பு ஆழி தோள் பரவி ஏத்து' என்னும்—'அப்பெருமானுடைய அழகுக்கடலான திருத்தோள்களை முறை கெடத் துதிப்பாயாக' என்று சொல்லும்; 'முன்பு ஊழி காணானைக் காண்' என்னும் கண்—கண்ணானது '(நாம் அபராதம் பண்ணிப்போந்த) அநாதியான காலத்தைக் காணாதவனான எம்பிரானைக் காண்பாயாக' என்று கூறும்; செவி—காதோவெனில், 'பூண் ஆரம் பூண்டான் புகழ் கேள்' என்னும்—'ஆபரணமாயிருக்கும் முத்துமாலையைத் தரித்தவனுடைய கீர்த்தியைக் கேட்பாயாக' என்று கூறும்.

அவ:— எழுபத்திரண்டாம் பாட்டு. (அன்பு) ஶிஷ்யர்கள் ஆசார்யர்களானார்கள்.

வ்யா:— (அன்பு) என்று நெஞ்சைச் சொல்லிற்று. "அடலாழி கொண்டான் மாட்டன்பு—விடாதே" என்று திருவுள்ளத்தை இரக்க, அதுவும் நீர் ஆழியானை விடாதே கொள்ளும் என்கிறது. (நாவித்யாதி) நாவானது அவனுடைய ஸௌந்தர்ய ஸாகரமான தோள்களை அக்ரமமாக ஏத்து என்னாநின்றது; முடியும்படி யாதொன்று அறியாது காணும். (முன்பித்யாதி) ஸாபராதராயிருந்துள்ள நம்மாலவனைக் கிட்டப்போமோவென்னில்; ஓரடி வரநின்றால் குற்றமேயன்றியே குற்றம் கிடக்கும் நாளும் காணவரியான் என்கிறது. (முன்பூழிகாணானை) அவனைக் காணும் என்னாநின்றது கண். (செவியித்யாதி) குற்றம் பார்த்துப் போகிறானாகிலும் விடப்போகாத ஆபரண சோபையை உடையவனானவனுடைய புகழைக் கேளென்னாநின்றது செவி.

(ஆழியானை) ராஜபுத்ரர்கள் இடைச்சேரிக்கும் அகப்படுமாப் போலே. (பண்பு ஆழித்தோள்) ஸௌந்தர்ய ஸாகரமான. (பரவியேத்து) நீ ஏத்தும் க்ரமம் தப்பாமே. (முன்பித்யாதி) நாம் பண்ணி வைத்த பாபங்களை நினைத்துச் சீறிலோவெனில்; பாபமும் கீழ்க் கிடந்த காலமும் மறக்கும். கண் கண்டவாறே தெரியுமிறே சீறி நோக்கும் நோக்கும், வாத்ஸல்யத்தாலே நோக்கும் நோக்கும். (செவிகேளென்னும்) செவிக்கு விக்ருதி சொல்ல அவஸரமில்லை

(பூணாரம்) ஆபரணமான உடம்புக்கு ஆபரணம். (76) "**सर्वभूषण-भूषार्हाः**" (ஸர்வபூஷணபூஷார்ஹா:). மற்றைய ஆபரணங்களுக்கு ஆபரணமென்றும். (பூண்டான்) பூணவல்ல அழகு. (புகழ்) ப்ரஹ்ம பூஷணம். 72.

---

அரு:— எழுபத்திரண்டாம் பாட்டு. கரணங்கள் கரணிக்கு உபதேசிக்கையாலே (ஆசார்யர்களானார்கள்) என்கிறது.

காண்கைக்கு ப்ரயோஜநமேதென்ன அருளிச்செய்கிறார் (கண்கண்டவாறேயித்யாதி). கீழில் இந்த்ரியங்களைப்போலே அவனைச் சொல்லி, பின்னை இன்னபடி செய்யென்னாமல் கேவலம் "கேள் என்னும்" என்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (செவிக்கித்யாதி). விக்ருதிசொல்ல—தன்னுடைய பக்திக்கு விஷயஞ்சொல்ல அவஸரமில்லை என்றபடி. முன்பு அவஸரமில்லாமையாலே பின்பு "பூணாரம் பூண்டான்" என்று விஷயத்தைச் சொல்லிற்று என்றபடி. அன்றிக்கே, தன்னுடைய பக்தியாலே விஷயஞ்சொல்ல அவஸரமின்றியே, "கேள் என்னும்" என்னவுமாம். பூண்—திருமேனியாதல், மற்றைய ஆபரணமாதல். ஆரம்—விக்ரஹபூஷணம். புகழ்—ஸ்வரூப பூஷணமென்றபடி. ப்ரஹ்மம்—ஸ்வரூபம். 72.

---

73\. புகழ்வாய் பழிப்பாய்நீ பூந்துழா யானை
இகழ்வாய் கருதுவாய் என்நெஞ்சே—திகழ்நீர்க்
கடலு மலையு மிருவிசும்புங் காற்றும்
உடலு முயிரு மேற்றான்.

பதவுரை:— என் நெஞ்சே—என்னுடைய மனமே!, நீ—நீ, பூம் துழாயானை—அழகிய திருத்துழாய் மாலையாலே அலங்கரிக்கப்பட்டவனை, புகழ்வாய்—புகழ்ந்தாலும் புகழ்; பழிப்பாய்—பழித்தாலும் பழி; இகழ்வாய்—இகழ்ந்தாலும் இகழ்; கருதுவாய்—எண்ணினாலும் எண்ணு; (நீ எதைச் செய்தாலும் அவன்) திகழ் நீர் கடலும்—விளங்காநின்ற ஜலத்தையுடைய ஸமுத்திரத்தையும், மலையும்—மலை முதலிய கார்யவஸ்துக்களையும், இரு விசும்பும் காற்றும்—பரந்த ஆகாசம், வாயு முதலிய காரணப்பொருள்களையும், உடலும் உயிரும்—சரீரத்தையும் ஆத்மாவையும், ஏற்றான்—தரித்தவனாகவேயிருப்பான்.

அவ:— எழுபத்துமூன்றும் பாட்டு. (புகழ்வாய்) கீழ் தம்முடைய இந்த்ரியங்கள் ப்ரவணமானபடி சொல்லிற்று; அவ்விஷயந்தான் இனி அறிய ப்ராப்தமாயிருந்தது; நீ அத்தைப் பற்றிலும் பற்று, விடிலும் விடு என்கிறது.

வ்யா:— (புகழ்வாய் பழிப்பாய்) புகழிலும் புகழ்; பழிக்கிலும் பழி. (இகழ்வாய் கருதுவாய்) இகழிலும் இகழ்; கருதிலும் கருது. (பூந்துழாயானை) பழித்தல், இகழ்தல் செய்யப்போமோ? என்கிறது. (என்னெஞ்சே) நாட்டுக்குச் சொல்லுகிறேனே; உனக்கன்றோ. (திகழ்நீர்கடலும் மலையும்) இரண்டாலும்மாகக் கார்யத்தைச் சொல்லுகிறது. (இரு விசும்பும் காற்றும்) காரணபூதங்களுக்கும் உபலக்ஷணம். (உடலும் உயிரும்) காரணமான சிதசித்துக்களைச் சொல்லுகிறது. (உடலுமுயிருமேற்றேன்) இத்தால் இவையெல்லாம் அவனுக்குக் கார்யதயா ஶேஷம், அவன் ஶேஷி என்கிறது.

அவை மத்யஸ்த்தமென்னும்படி தம்முடைய ப்ராவண்யம். (புகழித்யாதி) வாசகத்துக்கு. (இகழ்வாய் கருதுவாய்) மநஸ்ஸு. (என்னெஞ்சே) புகழ்ந்து பழகின நெஞ்சே. பூந்துழாயானைப் புகழ்ந்தல்லது நிற்கவொட்டாது. (ஏற்றான்) ஆதாரத்தைப் பற்றிலும் பற்று, ஆதேயத்தைப் பற்றிலும் பற்று. இது இருந்தபடி. 73.

அரு:— எழுபத்துமூன்றும் பாட்டு. மேலுக்கவதாரிகை அருளிச் செய்கிறார் (அவையித்யாதி). மத்யஸ்த்தமென்கிறது—தம்முடைய கரணங்கள் இகழுகைக்கும் கருதுகைக்கும் பொதுவாயிருக்கும். தமக்குக் கருதுகை ப்ரயோஜநம். "ஏற்றான்" என்று ஶேஷித்வம் சொல்லுகையாலே ப்ராப்யம். ஏற்றான்—ஶரீரவத் தரித்தான். ஏற்றான்—ஆதாரபூதனென்றபடி. 73.

74. ஏற்றான் புள்ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு.

பதவுரை:— ஏற்றான்—(அப்ரஸித்தமான) எருதை வாஹனமாக உடையவனாய், எயில் எரித்தான்—(தன்னுடைய அடியார்களின்) முப்புரங்களையும் எரித்தவனாய், நீற்றான்—(பாபம் அகலுவதற்காக)

சாய்பலைப் பூசிக்கொண்டிருப்பவனாய், கூற்றொருபால் மங்கையான்—(சரீரத்தின்) ஒரு பாகத்தில் பத்னியாகிய பார்வதியை தரித்தவனாய், வார் சடையான்—தொங்கின சடையுடன் கூடிய ஸாதகனாய், கங்கையான்—(பாபம் நீங்குவதற்காக) கங்கையைத் தலையிலே ஏந்தினவனாயிருக்கும் சிவன், புள் ஊர்ந்தான்—வேதத்தை சரீரமாகக் கொண்ட கருடனை வாஹனமாகக்கொண்டவனாய், மார்பு இடந்தான்—(பக்தனாகிற ப்ரஹ்லாதனுக்காக) இரணியனின் மார்பைக் கிழித்தவனாய், நிழல் மணி வண்ணத்தான்—குளிர்ந்த நீலமணி போன்ற உருவையுடையவனாய், பூ மகளான்—(கமலாஸனியை திருமார்பிலே) உடையவனாய், நீள் முடியான்—(மேன்மையைக் காட்டும்) நீண்ட கிரீடத்தையுடையவனாய், நீள் கழலான்—(கங்கைக்குப் பிறப்பிடமான) நீண்ட திருவடியை உடையவனான விஷ்ணுவினுடைய, காப்பு—ரக்ஷையாயிருப்பன்.

அவ:— எழுபத்துநாலாம் பாட்டு. (ஏற்றான்) இது இவனுக்கு ஏற்றமாகச் சொல்லுவானென்; அல்லாத ருத்ரனும் இப்படி ஶேஷியாயன்றோ இருப்பது என்னில்; அவனுடைய ப்ரகாரங்களைப் பார்த்தால் ரக்ஷ்யமாய்த் தோற்றும்; இவனைப் பார்த்தால் ரக்ஷகனாயிருக்கும் என்கிறது.

வ்யா:— (ஏற்றான் புள்ளூர்ந்தான்) வேதாத்மாவான திருவடியைத் தனக்கு வாஹநமாகவுடையனாயிருக்குமாகில், அவன் அப்ரஸித்தமாயிருப்பதொரு எருத்தை வாஹநமாக உடையனாயிருக்கும். (எயிலெரித்தான்) ஆஶ்ரிதரை ஒரு வ்யாஜத்திலே அழிக்குமவன். (மார்விடந்தான்) ஆஶ்ரிதனுக்காகத் தன்னை அழியமாறும் இவன். (நீற்றான்) (77) "**भस्मच्छन्नः**" (பஸ்மச்சந்ந:) என்று ப்ராயஶ்சித்தம் பண்ணும் அவன். (நிழல்மணிவண்ணத்தான்) கண்டால் ஶ்ரமஹரமான வடிவு இவனது. (கூற்றொருபால் மங்கையான்) ஒரு ஸ்த்ரீயைத் தனக்கே வைத்துக்கொண்டிருக்கும் அவன். (பூமகளான்) (78) "**अस्येशाना जगतो विष्णु पत्नी**" (அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ) என்னுமவளைத் தனக்காக உடையவன் இவன். (வார்சடையான்) ஸாதகவேஷன் அவன். (நீண்முடியான்) ஆதிராஜ்யஸூசகமான திருமுடியை உடையவன் இவன். (கங்கையான்) பாவநார்த்தமாக கங்கையைத் தரித்துக்கொண்டிருக்கும்

அவன். (நீள்கழலான்) அந்தத் தீர்த்தபூதையான கங்கைக்கு உத்பாதகமான திருவடியை உடையவன் இவன். "எற்றான்—எயி லெரித்தான்—நீற்றான்—கூற்றொருபால் மங்கையான்—வார்சடையான்—கங்கையானான அவன், புள்ளூர்ந்தான்—மார்விடந்தான்—நிழல்மணி வண்ணத்தான்—பூமகளான்—நீண்முடியான்—நீள்சழலான் காப்பு." அவனுடைய ரக்ஷை இவன். "உடலுமுயிரும்" என்றத்தோடு இவனோடு வாசியில்லை அவனுக்கு சேஷமாமிடத்தில். 74.

---

அரு:— எழுபத்துநாலாம் பாட்டு. எயில்—மதிளாய், த்ரிபுரம். நீற்றான்—நீற்றையுடையவன். கூற்றொருபால்—லோகரக்ஷணார்த்தமாக வன்றியே தனக்கே கூறாகவென்றபடி. 74.

---

75. காப்புன்னை யுன்னக் கழியு மருவினைகள்
ஆப்புன்னை யுன்ன வவிழ்ந்தொழியும்—மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே நின்னடியை
வந்திப்பார் காண்பர் வழி.

பதவுரை:— உன்னை உன்ன—உன்னை நினைத்தால், காப்பு—(ஸம்ஸாரமாகிய) சிறை, கழியும்—நீங்கும்; அரு வினைகள்—கொடிய வினைகள், உன்னை உன்ன—உன்னை நினைத்தவுடன், ஆப்பு அவிழ்ந்து ஒழியும்—கட்டவிழ்ந்து நசிக்கும்; உன்னைச் சிந்திப்பார்க்கு—உன்னை தியானிப்பவர்களுக்கு, மூப்பு இல்லை—கிழத்தனம் முதலிய ஆறு விகாரங்களும் கிடையாது; திருமாலே—லக்ஷ்மீநாதனான எம்பிரானே! நின் அடியை—உன் திருவடிகளை, வந்திப்பார்—வணங்குமவர்கள், வழி காண்பர்—அர்ச்சிராதி மார்க்கத்தைக் காண்பார்கள்.

அவ:— எழுபத்தைந்தாம் பாட்டு. (காப்பு) சேஷியாயிருந்துள்ள உன்னையுணர ப்ரதிபந்தகமெல்லாம் போமென்கிறது.

வ்யா:— உன்னையுணரக் காப்புக்கழியும். "காப்பு" என்கிறது ஸர்வேச்வரனுக்குப் புரவர்போலே இவ்வாத்மாக்கள் செய்த கர்மங்களை ஆராயக்கடவரான சந்த்ராதித்யர்கள் தொடக்கமான பதினாலு பேருடைய சிறைகள். கர்மவச்யனாகையிறே இவர்கள் காக்கைக்கு அடி. (உன்னையுன்ன அருவினைகளாப்பு அவிழ்ந்தொழியும்) அக்காப்புக்கடியான அவித்யாதிகளாலுண்டான பந்தம் உன்னை நினைக்க நெகிழும். (மூப்பித்யாதி) காப்பும் அருவினைகளும் போன

அதிகாரிகளுக்கு, மூப்பாவது கைவல்யம். அன்றியே, ஷட்பாவ விகாரங்களுக்கும் உபலக்ஷணமாகவுமாம். (திருமாலே) ஈஶ்வரன் ஸ்வாதந்த்ர்யத்தாலே ஆராயப்புக்காலும் ப்ராயச்சித்தஸாத்யமல்லாத பாபம் நாம் பொறுக்குமத்தனையன்றோ என்று உணர்த்துவாளொருத்தி அருகே உண்டென்கிறது. (79) "दासीनां रावणस्याहं मर्षयामीह दुर्बला........राजसंश्रयवश्यानां कुर्वन्तीनां पराज्ञया॥" (தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்பலா........ராஜஸம்ஶ்ரயவஶ்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா ॥) என்னும்படியே. (நின்னடியை வந்திப்பார் காண்பர் வழி) உன் திருவடிகளிலே விழுவார்கள் நல்லவழி காண்பர். "வழி" என்று, அர்ச்சிராதியாகவுமாம். பரமபதம்போலே பரமபதத்துக்குப்போம் வழி; நரகம்போலே பொல்லாதாயிருக்கும் நரகத்துக்குப்போம் வழி.

(காப்பித்யாதி) (56) "प्रभुरहमन्यनृणां न वैष्णवानां" (ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்) (80) "देवर्षि" (தேவர்ஷி) இத்யாதி. (அருவினை) அவித்யாதிகளால் பிறக்கும் புண்யபாபங்கள். சரீரமான மூப்பு. (திருமாலே) (81) "युवा कुमारः" (யுவா குமார:) (82) 'युवतिश्च कुमारिणी" (யுவதிஶ்ச குமாரிணீ) என்கிற உங்களை ஆஶ்ரயித்தால் உங்களைப்போலே பரமம் ஸாம்யமுபைதியிறே; வந்தியாதார்க்கு முள்ளும் முடுக்குமான வழி. 75.

---

அரு:— எழுபத்தைந்தாம் பாட்டு. புரவர்—தலையாரிகள். ஈஶ்வரனுடைய பட்டணமான லோகத்தைக் காக்கிற சந்த்ராதித்யர்கள். வழி—ஸித்தோபாயமாதல். "காண்பர்" என்கைக்கு அதிசயமென்? என்ன, அருளிச்செய்கிறார் (பரமபதமித்யாதி). காப்பு இங்கு யமவஶ்யதையும் இதரஶேஷமுமாக்கி அருளிச்செய்கிறார் (ப்ரபுரஹம் இத்யாதி). 75.

---

76. வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா
மொழிநின்ற மூர்த்தியரே யாவர்—பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங் கடம்.

---

பதவுரை:— வழி நின்று—பக்திமார்க்கத்தில் நிலையாயிருந்தும், நின்னை—உன்னை, தொழுவார்—ஆச்ரயிப்பவர்கள், வழுவா மொழி

நின்ற—பொய்யா மொழியாகிய வேதத்தில் சொல்லப்பட்ட, மூர்த்தியரே ஆவர்—ஸ்வரூபத்தை உடையவர்களாக நிச்சயமாக ஆவர்கள்; மண் அளந்த சீரான்—(தன்னுடைய மேன்மை பாராதே) உலகையெல்லாம் அளந்தருளிய நீர்மையை உடையவனுடைய, திரு வேங்கடம்—திருவேங்கடமாமலையானது, பழுது ஒன்றும்—ஒருவிதமான குறையும், வாராத வண்ணமே—ஏற்படாதபடி, விண் கொடுக்கும்—பரமபதத்தைத் தருமன்றோ.

அவ:— எழுபத்தாறும் பாட்டு. (வழிநின்று) 'உன்னைத் தொழுவார் பிழைப்பரென்று சொல்லவேணுமோ, உன்னோடு ஸம்பந்தித்த தேசமே எல்லா நன்மையும் கொடுப்பதாகவிருக்க?' என்கிறது.

வ்யா:— (வழிநின்று நின்னைத் தொழுவார்) (83) "आत्मा वाऽरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः" (ஆத்மா வா அரே த்ரஷ்டவ்யஶ் ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:) (84) "विज्ञाय प्रज्ञां कुर्वीत" (விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத) (50) "उपासनं ध्रुवास्मृतिः दर्शनसमानाकारता प्रत्यक्षतापत्तिः" (உபாஸநம் த்ருவாஸ்ம்ருதி: தர்ஶநஸமாநாகாரதா ப்ரத்யக்ஷதாபத்தி:) (51) "विशते तदनन्तरम्" (விஶதே ததநந்தரம்) என்னுமளவும் சொல்லுகிறது. (வழுவாமொழி நின்ற மூர்த்தியரே யாவர்) யதாபூதவாதியான வேதத்திற்சொன்ன வடிவை உடையவராவர். (33) "परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते" (பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே) என்கிறபடியே. (பழுதித்யாதி) ப்ராப்ய ப்ராபகங்கள் ஒன்றும் குறையாதபடி பரமபதத்தைக் கொடுக்கும் திருவுலகளந்த நீர்மையை உடையவனுடைய திருமலை. "மண்ணளந்த சீரான்" என்று ஸம்புத்தியாகவுமாம்.

(வழுவாமொழி) ஒருவர்க்கொருவர் ஓதுவித்துப்போருகை. (மூர்த்தியரேயாவர்) அதுக்கீடான ஸ்வரூபத்தையுடையராவர். (மண்ணளந்த சீரான்) அந்த ஸ்வபாவமுண்டு திருமலைக்கு. எம்பார் விடிவோடே அநுஸந்திக்கும் பாட்டு. 76.

---

அரு:— எழுபத்தாறும் பாட்டு. வழிநின்று—உபாஸநமார்க்கத்திலே நின்று. அதுக்கீடான—வேதோச்சாரணத்துக்கீடான. "ஹா

வுஹா வுஹா வு, அஹமன்னமஹமன்னபஹமன்னத்ரும்." என்று உச்சரிக்கைக்கிடான என்றபடி. 76.

77. வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின் நீள்கோவல் பொன்னகரும்—நான்கிடத்தும்
நின்று னிருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றால் கெடுமா மிடர்.

பதவுரை:— வேங்கடமும்—திருமலையும், விண் நகரும்—ஸ்ரீவைகுண்டமும், வெஃகாவும்—திருவெஃகாவும், அஃகாத பூம் கிடங்கின்—மாறாத புஷ்பங்களுடன் கூடிய அகழிகளையுடையதாயும், நீள் கோவல் பொன் நகரும்—இனிதாயும், அழகியதாயுமிருக்கும் திருக்கோவலூரும், நான்கு இடத்தும்—(ஆகிய) நான்கு திவ்யதேசங் களிலும், நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே என்றால்—(எம்பிரான்) நிற்பதும், இருப்பதும், பள்ளிகொண்டிருப்பதும், நடப்பதுமாயிருக்கிறான் என்று சொன்னால், இடர்—(நிற்கும்போதும், இருக்கும்போதும், கிடக்கும்போதும், நடக்கும்போதும் நாம் செய்யும்) பாபபலங்கள், கெடுமாம்—நசித்துப்போய்விடும்.

அவ:— எழுபத்தேழாம் பாட்டு. (வேங்கடமுமித்யாதி) உகந்தருளின தேசங்கள் பூமியிலே உண்டாயிருக்க, ஸம்ஸார முண்டோ என்கிறது.

வ்யா:— (வேங்கடமுமித்யாதி) பூமாறாதே இருந்துள்ள அகழை யுடைத்தான திருக்கோவலூரும். "விண்ணகரும்" என்று பரமபதத் தைச் சொல்லுகிறது. (நான்கிடத்துமித்யாதி) நான்கு இடத்தும் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தபடியையும் சொல்ல, நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் செய்த பாபபலம் போமென்கிறது. (என்றால் கெடுமாமிடர்) தாய் பேர் சொல்ல க்லேஶம் போமாப்போலே.

அவ:— நம்முடைய இடரானவை திருமலையை ஆஶ்ரயிக்கப் போமோ? என்னில்; அநாதிகாலம் நம்மைப்பெறுகைக்கு அவன் படுகிறபாட்டை அநுஸந்தியாய்.

வ்யா:— (நடந்தானே) (வேங்கடமும் விண்ணகரும்) இவர்களுக் கெல்லாம் ஒரு போகியாயிருக்கிறபடி. (பொன்னகர்) தானே வந்து நோக்கினவிடம். 77.

அரு:— எழுபத்தேழாம் பாட்டு. மேலுக்கு அவதாரிகை அருளிச் செய்கிறார். (நம்முடையவித்யாதி). திருப்பதிகளைச் சொல்லுகிற இடத்திலே பரமபதத்தைச் சொல்லுவானென்? என்ன அருளிச் செய்கிறார் (பொன்னகர்தானேயித்யாதி). 77

---

78. இடரார் படுவா ரெழுநெஞ்சே வேழம்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த—படமுடைய
பைந்நாகப் பள்ளியான் பாதமே கைதொழுதும்
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு.

பதவுரை:— வேழம்—கஜேந்திராழ்வானை, தொடர்வான்—(விழுங்குவதற்காகத்) தொடர்ந்து வந்த, கொடு முதலை—கொடிய முதலையை, சூழ்ந்த—கொன்றவனும், படம் உடைய—படத்தை உடையவனாய், பை நாகம் பள்ளியான்—பரந்திருக்கும் திருவநந்தாழ்வானைத் திருப்படுக்கையாக உடையவனுமான எம்பிரானுடைய, பாதமே—திருவடிகளையே, நாகம் கோய் பூம் போது கொண்டு—புன்னைமரத்திலிருந்து கொய்யப்பட்ட அழகிய புஷ்பங்களைக்கொண்டு, கை தொழுதும்—வணங்குவோம்; நெஞ்சே—மனமே, எழு—(இப்படித் தொழுவதற்காக) எழுந்திருப்பாயாக; (இப்படித் தொழுதால்) ஆர் இடர் படுவார்—துன்பத்தை யார்தான் அநுபவிப்பார்கள்?

அவ:— எழுபத்தெட்டாம் பாட்டு. (இடரித்யாதி) நீ துக்கப் படுகைக்கு ப்ஸங்கையுண்டோவென்னில்; போராய்நெஞ்சே! இனி நம் பக்கல் இடர் வந்ததாகில் முதலைபட்டது படுமித்தனை.

வ்யா:— (வேழமித்யாதி) ஆனையைத் தொடருவதான கொடிய முதலையை முடித்த. "சூழ்ச்சி" என்று வஞ்சித்தலாய், முடித்து வென்றபடி. (படமித்யாதி) இத்தால் அநாஸ்ரிதர் வந்தாலும் ஆஸ்ரிதர் வந்தாலும் அவனிருக்கும்படி சொல்லுகிறது. (கொய்ந்நாகமித்யாதி) கொய்யப்பட்டுச் செவ்வியையுடைய நாகப்பூவைக்கொண்டு. "பைந்நாகப்பள்ளியான் பாதமே கைதொழுதும்—இடரார்படுவார்—எழுநெஞ்சே" என்று அந்வயம்.

(எழு) போது. "நாகப்பூ" என்கையாலே அப்ராக்ருதபுஷ்பம் தேடிப்போகவேண்டா, காட்டில் ஒரு பூ அமையும் என்கிறது. இவர்கள் என்றும் காட்டிலேயிறே பழகிற்று. 78.

அரு:—எழுபத்தெட்டாம் பாட்டு. ஆஸ்ரிதர்–திருவநந்தாழ்வான். அநாஸ்ரிதர்–முதலை. நாகப்பூ–புஷ்பவிசேஷம். காட்டிலே திரிகையாலே (காட்டுப்பூ) என்கிறார்கள். 78.

---

79. கோண்டானை யல்லால் கொடுத்தாரை யார்பழிப்பார்
மண்தா வெனவிரந்து மாவலியை—ஒண்டாரை
நீரங்கை தோய நிமிர்ந்திலையே நீள்விசும்பி
லாரங்கை தோய வடுத்து.

பதவுரை:— 'மண் தா' என—'(மூன்று அடி) மண்ணைக் கொடு' என்று, மாவலியை இரந்து—மஹாபலியிடம் யாசித்து, ஒண் தாரை நீர்—(அவனால் வார்க்கப்பட்ட) ஒளி பொருந்திய நீர்த் தாரை, அம் கை தோய—(உன்னுடைய) அழகிய திருக்கையிலே விழுந்தவுடன், நீள் விசும்பிலார்—பரந்த ஆகாசத்திலிருக்கும் தேவர்கள், அம் கை—(உன்னுடைய) அழகிய திருத்தோள்களிலே, தோய—அணையும்படியாக, அடுத்து நிமிர்ந்திலையே—விரைவாக வளரவில்லையா? கோண்டானை—(தன்னுடைமையைத்) தனக்காக்கிக்கொண்ட எம்பிரானை, (பழிப்பார்) அல்லால்—பழிக்கிறார்களே தவிர, கொடுத்தாரை—(தன்னுடைமையல்லாததைத் தன்னதாக அபிமானித்துக்) கொடுத்த மாவலியை, யார் பழிப்பார்—பழிப்பவர்கள் யார் உளர்?

வ்யா:— எழுபத்தொன்பதாம் பாட்டு. (கொண்டானை) குணமே குற்றமாம், குற்றம் குணமாங்கிடீர் ஸம்ஸாரம். ராவணனோபாதி வத்யனாயிருக்க ஔதார்யகுணம் இவன் பக்கலிலே கிடக்கையாலே தன்னதான பூமியை அவனுக்காக மேலெழுத்திட்டு அவன் கொடுத்தானாக இவன் கொண்டத்தை, தன் கையிலே நீர் வார்த்தவனைப் பாதாளத்திலே தள்ளினானென்று பழிசொல்லா நிற்பர்கள். தன்னதல்லாத பூமியைத் தன்னதென்று கொடுத்தவனையிறே நெல்வாலிலே வைத்துத் தெறிக்கவேண்டுவது. அவனைப் பழி சொல்லுவாரில்லை. (கொண்டானையித்யாதி) ஆரத்தை இரக்கிறானே இவன். (ஒண்டாரையித்யாதி) அலப்யலாபம் பெற்றாரைப்போலே; (85) "वर्षेण बीजं प्रतिसंजहर्ष" (வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ) என்னுமாப்போலே. அழகிய கையிலே நீர்விழுங்காட்டில் வளர்ந்திலையோ? (நீள்விசும்பித்யாதி) பரந்த விசும்பிலே ஆரமும் கையும்

அடுத்துத் தோயும்படிக்கீடாக. அன்றிக்கே, நீள்விசும்பிலார்—விசும்பிலுள்ளார் அழகிய தோளிலே அணையவென்றுமாம். நாம் ஆஶ்ரயிக்கவேணுமோ? தானே அர்த்தியாய்; நான் அர்த்தியோ? என்ன (நிமிர்ந்திலேயே).

(கொண்டானையல்லால்) தன்னதென்று கொடுக்கப்புகுமாகில் நமக்கு இதில் ப்ராப்தியில்லை என்று * இருந்தலாகாதோ என்று இருக்க, அது குணமாகை தவிர்ந்து நிற்கைக்கு உடலாவதே! பையலே நெல்லிலே வைத்துத் தெறிக்கவேணுமென்பாருண்டாயிற்றே? ஆறியப்பட்டான்? (மண்தாவென) தன்னதிலே ஏகதேசத்தை. (மாவலியை) அஸுரனைக்கிடீர்! (நீர்தோய நிமிர்ந்திலேயே) மறு மநஸ்ஸு படுமென்று அப்போதே. (நீள் விசும்பிலாரங்கை தோயவடுத்து) ஆஶ்ரயிக்க நிமிர்ந்திலேயே என்றுமாம். 79.

---

அரு:— எழுபத்தொன்பதாம் பாட்டு. நெல்வாலிலே—வாலான நெல்லின் நுனியிலே. பரமத்திலே சிறுகச்சிறுக வறுத்துத் தெறிக்க வேணுமென்றபடி. ஆர்பழிப்பார்—ஒருவரும் பழிக்கிறார்களில்லை. ஒண்தாரை—ஒள்ளியதாரை; தெளிந்த ஜலம். ஆரத்தையுடைய மார்வும் கையையுடைய தோளும் அடுத்துக்கூட்டி ஆகாசத்தைக் கிட்டும்படிக்கீடாக என்னுதல். அர்த்தியாயன்றே செய்தான் என்று தாத்பர்யம்.

வாமநன் கருத்தை அருளிச்செய்கிறார் (தன்னதென்றித்யாதி). இதில் ப்ராப்தியில்லை—பூமி என்னதென்று பலி சொல்லுமதில் விசாரிக்க ப்ராப்தியில்லை. ப்ரயோஜநமே போரும் என்று இருந்தான். அடுத்துத்தோய—கூட்டித்தோய; ஸ்பர்சிக்க. (65) "सङ्केस्सुराणं" (ஸங்கைஸ்ஸுராணும்) என்னும்படி எல்லாரும் ஆஶ்ரயிக்க நிமிர்ந்திலேயே என்று மூன்றாமர்த்தம். 79.

---

80\. அடுத்த கடும்பகைஞற் காற்றேனென் றோடி
படுத்த பெரும்பாழி சூழ்ந்த—விடத்தரவை
வல்லாளன் கைகோடுத்த மாமேனி மாயவனுக்கு
அல்லாது மாவரோ ஆள்.

---

(பா) * இரந்தாலாகாதோ என்று இரக்க அது நிந்திக்கைக்கு உடலாவதே.

பதவுரை:— அடுத்த கடும் பகைஞற்கு—இயற்கையாகவே கொடிய சத்துருவான கருடனுக்கு, ஆற்றேன் என்று—(நேர் நின்று) பிழைக்க வல்லேனல்லேன் என்று சொல்லி, ஓடி—விரைந்து சென்று, படுத்த பெரும் பாழி—(எம்பெருமான்) பள்ளிகொண்ட பெரிய திருப்பள்ளிக் கட்டிலை, சூழ்ந்த—சுற்றிக்கொண்ட, விடத்து அரவை—விஷமுடைய (ஸுமுகனென்னும்) பாம்பை, வல்லாளன்—வலிமையுடையவனான கருடனின், கை கொடுத்த—கையிலேயே (அடைக்கலமாகக்) கொடுத்தருளியவனும், மா மேனி மாயவனுக்கு அல்லாதும்—சிறந்த திருமேனியையுடையவனும், ஆச்சர்யபூதனுமான எம்பிரானைத் தவிர மற்றவர்களுக்கும், ஆள் ஆவரோ—அடிமையாவார்களோ ?

அவ:— எண்பதாம் பாட்டு. (அடுத்த) பரிஹாரமில்லாத ஆஶ்ரித விரோதம் பிறக்கிலும் அவர்களைப் பொறுப்பித்து, புருஷகாரமாக அவர்களைக் † கைக்கொண்டு ரக்ஷிக்குமென்கிறது. அபயமென்று புகுந்த ஸ்ரீ விபீஷணப்பெருமாளை "புகுரவொட்டோம்" என்றவரைப் பொறுப்பித்து, (86) "आनयैनं हरिश्रेष्ठ" (ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட) என்று அவரைக்கொண்டு அழைப்பித்தாற்போலே, பாதாளத்திலே ஸுமுகனென்றொரு ஸர்ப்பத்தைப் பெரியதிருவடி அமுதுசெய்ய நினைக்க, அத்தை அறிந்து ஸ்வர்க்கத்திலே உபேந்த்ர மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கிற இடத்திலே திருப்பள்ளிக்கட்டிலைக் கட்டிக்கொண்டு கிடக்க, திருவடி பாதாளத்திலே சென்று தேடிக் காணாமல் திருவடிகளிலே வந்து இவன் கிடக்கிறபடியைக் கண்டு § சிவிகையார் சொல்லும் வார்த்தையை விண்ணப்பம் செய்ய, திருவாழியை இவன் கையிலே கொடுத்து பலத்தை க்ஷயிப்பிக்க, பின்பு திருவடி ஸ்தோத்ரம் பண்ண, க்ருபைபண்ணித் திருவடி கையிலே அடைக்கலமாகக் காட்டிக்கொடுத்து ரக்ஷித்தான் என்கிற உபாக்யாநத்தை அநுஸந்தித்து அருளிச்செய்கிறார்.

வ்யா:—(அடுத்தவித்யாதி) அடுத்த—ஸஹஜஶத்ரு. (கடும்பகைஞன்) திருவடியோடு விரோதங்கொண்டால் பிழைக்கப்போகாது என்கை. (ஆற்றேனென்றோடி) "பாழி" என்று படுக்கைக்குப்பேர். (சூழ்ந்த) சுற்றின. (விடத்தரவை) ஶரண்யனுக்கு க்ருபாவிஷயமென்கிறது.

(பா) † கொண்டு. § சிவிகையார்—பல்லக்குத் தூக்குகிற ஓர் நீசஜாதி.

(வல்லாளன் கைகொடுத்த) ப்ரஸந்நனானபோது அவனைப் பொறுக்க மாட்டேனென்னாதே ரக்ஷிக்கவல்லனானவன் கையிலே காட்டிக் கொடுத்த. (மாமேனி) காட்டிக்கொடுத்த பின்பு வடிவிற்பிறந்த பௌஷ்கல்யம். (மாயவனுக்கித்யாதி) எல்லா அவஸ்த்தையிலும் விட்டுக் கொடாத ஆஶ்சர்யபூதனுக்கொழிய வேறொருவருக்காளாவரோ.

அவ:— (87) "न क्षमामि" (நக்ஷமாமி) என்னும் தப்புக்குப் போக்கடி காணவல்லன் என்கிறார்.

வ்யா:— (வல்லாளன்) நலிய நினைக்கில் அத்தை வெல்ல வல்லாருமில்லை; ரக்ஷிக்க நினைக்கில் அத்தைத் தடுக்கவல்லாருமில்லை. (அல்லாதுமாவரோ ஆள்) ஆஶ்ரிதவிரோதியென்று கைவிடவேண்டும் விஷயத்தையும் பொருத்திவிட வல்லவனையொழிய. கடித்த வாயாலே தீர்க்கை. (88) "वध्यतां" ‡ (வத்யதாம்) என்றவரையே, (89) "अस्माभिस्तुल्यो भवतु" (அஸ்மாபிஸ்துல்யோ பவது) என்னப் பண்ணுகை.

(அடுத்த) ஸஹஜஶத்ருவினுடைய ஸத்தையுண்டாகில் பகையாயே இருக்கும். (கடும்பகை) பேர் சொல்லமுடியும்படி கொடிதாகையும். (பெரும்பாழி) இந்த்ராநுஜன் படுக்கை. திருப்பாற்கடலாகவுமாம். 80.

---

அரு:— எண்பதாம் பாட்டு. விடத்தரவை—விஷத்தையுடைய தென்கையாலே க்ருபாவிஷயம் தோஷயுக்தமென்றபடி. வல்லாளன்—ஜ்ஞாநாதிக்யத்தால் வந்த மிடுக்கு.

மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (நக்ஷமாமி இத்யாதி). என்றவரையே—"வத்யதாம்" என்றவரையே. 80.

---

81. ஆளமர் வென்றி யடுகளத்து ளஞ்ஞான்று
வாளமர் வேண்டி வரைநட்டு—நீளரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே தொல்நரகைப்
பற்றிக் கடத்தும் படை.

பதவுரை:— ஆள் அமர் வென்றி அடுகளத்துள்—யுத்தம் செய்பவர்கள் நிறைந்ததும், வெற்றியை உடையதுமான யுத்த களத்திலே, அஞ்ஞான்று—(அஸுரர்கள் தேவர்களை ஹிம்ஸித்த) அக்காலத்தில்,

---

‡ 'வத்யதாம்' என்று அரும்பதத்துக்குப் பாடமில்லை.

வாள் அமர் வேண்டி—மதிப்பை உடைத்தான சண்டையை விருப்பி, வரை நட்டு—மந்தரகிரியை (மத்தாக) நாட்டி, நீள் அரவை சுற்றி—நீண்டதான (வாஸுகியென்னும்) பாம்பைக் கயிறாகச் சுற்றி, கடைந்தான்—(திருப்பாற்கடலைக்) கடைந்தவனுடைய, பெயர்—திரு நாமங்கள், பற்றி—(சேதனர்களை) அள்ளியெடுத்து, தொல் நரகை—பழமையாயிருக்கும் நரகங்களை, கடத்தும்—தாண்டுவிக்கும், படை—உபாயம்.

அவ:— எண்பத்தோராம் பாட்டு. (ஆளமர்) ப்ரயோஜநாந்தர பரர்க்குங்கூட உடப்பு நோவக் கடலைக்கடைந்து அம்ருதம் கொடுத்து அவர்களைச் சாவாமல் காத்தவனுடைய பேரன்றோ அநாதியான நரகத்தினின்றும் கைப்பிடித்தேறவிடும் பரிகரம் என்கிறார்.

வ்யா:— (ஆளமரித்யாதி) அமர்ந்து—நிறைந்து. ஆள் நிறைந்து வென்றியையுடைத்தாய் முடிப்பதான யுத்தஸ்தலத்திலே. (வாளமர் வேண்டி) மதிப்புடைத்தான பூசலை வேண்டி மந்தரத்தை நட்டு. (அஞ்ஞான்று) அஸுரர் தேவர்களை முறித்து வாயிலிட்டுச் செல்லுகிறவன்று. (வாளித்யாதி) தேவர்களுக்கு மதிப்பும் ஆயுஸ்ஸும் உண்டாகும்படி. (நீளரவை) சேதநத்தை. (பற்றிக்கடத்தும் படை) அள்ளியெடுத்துக் கொடுபோய் பரமபதத்திலே வைக்கும். (பற்றி) "அல்லேன்" என்றாலும் விடாது. 81.

---

அரு:— எண்பத்தோராம் பாட்டு. "வாள்" என்று ஒளியாய், அத்தால் மதிப்பையுடைத்தாகை. தேவர்களுக்கு வெற்றியையுடைய பூசலென்றபடி. அமர்-பூசலாதல், ஆயுஸ்ஸாதல். படை-ஸாதநம். 81.

---

82. படையாரும் வாள்கண்ணார் பாரசிநாள் பைம்பூம்
தொடையலோ டேந்திய தூபம்—இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே மேலொருநாள்
மான்மாய வெய்தான் வரை.

பதவுரை:— படை ஆரும்—வாள் போன்ற, வாள் கண்ணார்—ஒளி பொருந்திய கண்ணையுடைய பெண்கள், பாரசி நாள்—த்வாதசியன்று, பை—அழகிய, பூ தொடையலோடு—பூ மாலைகளோடு, ஏந்திய—தரித்த, தூபம்—புகையானது, இடையிடையில் மீன்—நடுவில் நடுவில் தோன்றும் நக்ஷத்திரங்கள், மாய—மறையும்படியாக,

மாசூணும்—அழுக்கடையும்படி செய்யும், வேங்கடமே—திருமலையே, மேல் ஒரு நாள்—முன்னொரு காலத்தில், மான்—மாய மானாகிய மாரீசன், மாய—இறக்கும்படியாக, எய்தான்—அம்பு விட்டவனுடைய, வரை—மலையாகும்.

வ்யா:— எண்பத்திரண்டாம் பாட்டு. (படையித்யாதி) வாள் போன்ற ஒளியையுடைத்தான கண்களையுடையரான ஸ்த்ரீகள். (பாரசி நாள்) த்வாதசி நாள். (பைம்பூமித்யாதி) அழகியதாகத் தொடுத்த மாலையோடே ஏந்தின தீபம். (இடையிடையிலித்யாதி) பூக்களோடே கூடின புகையானது, ஆகாசத்திலே கலக்கத்தோற்றின நக்ஷத்திரங்களை மாசூணப்பண்ணுகின்றது. (மேலொருநாளித்யாதி) பண்டொருநாள் ராக்ஷஸன் மாயாம்ருகமாய் வர, "இத்தைப் பிடித்துத் தரவேணும்" என்று பிராட்டி அருளிச்செய்தது மறுக்க மாட்டாமே அத்தை முடித்தவனுடைய மலை.

அவ:— இப்பாட்டாலே ஸர்வஸமாஶ்ரயணீயத்வமும் ஆஶ்ரித பாரதந்த்ர்யமும் சொல்லுகிறது.

வ்யா:— (வாள்கண்ணார்) தங்களைச் சிலர் ஆஶ்ரயிக்க இருக்குமவர்கள். (மீன்மாய) ஆகாசம் தோற்றாதபடி பூக்களும் புகையுமாகத் தோற்றுகை. (மானித்யாதி) பிராட்டிக்கு நியாம்யனானாற்போலே நியாம்யனுயப்புக்கு, தன் அநர்த்தமென்று மீளாது கார்யம் செய்யுமவன். 82.

---

அரு:— எண்பத்திரண்டாம் பாட்டு. பார்-பூமி. அசிநாள் என்கையாலே (த்வாதசிநாள்) என்கிறது. 82.

---

83. வரைகுடைதோள் காம்பாக ஆநிரைகாத்து ஆயர்
நிரைவிடையேழ் செற்றுவா றென்னே—உரவுடைய
நீராழி யுள்கிடந்து நேரா நிசாசரர்மேல்
பேராழி கொண்ட பிரான்.

பதவுரை:— உரவு உடைய—பலத்தையுடைய, நீர் ஆழியுள் கிடந்து—நீரைக் கொண்ட திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி, நேர் ஆம்—விரோதிகளாக வந்த, நிசாசரர் மேல்—(மது கைடபர் களாகிய) அஸுரர்கள் மேல், பேர் ஆழி கொண்ட—பெரிய சக்கரத்தை எடுத்துவிட்ட, பிரான்—உபகாரகனே! வரை குடை (ஆக)—

கோவர்த்தனகிரியைக் குடையாகவும், தோள் காம்பு ஆக—தன் திருத் தோள்களைக் குடைக் காம்பாகவும் (ஆக்கி), ஆ நிரை காத்து—பசுக் கூட்டங்களை ரக்ஷித்து, ஆயர்—இடையர்களுடையதான, நிரை விடை ஏழ்—ஏழு பருத்த எருதுகளையும், செற்ற ஆறு—அழித்த விதம், என்னே—எப்படி ?

வ்யா:— எண்பத்துமூன்றும் பாட்டு. (வரையித்யாதி) மலை குடையாகவும், தோள் காப்பாகவும், பசுக்களைகாக்க. (ஆயரித்யாதி) நப்பின்னைப்பிராட்டிக்கு ப்ரதிபந்தகமான ஏழு வ்ருஷபத்தையும் முடித்தபடி எங்ஙனே. (உரவுடையவித்யாதி) "உரவு" என்று மிடுக்குக்குப் பேர். ஸர்ப்பமென்றுமாம். திருப்பாற்கடலிலே கிடந்து. (நேராவித்யாதி) எதிரான மதுகைடபர் மேலே திருவாழியை வாங்கின உபகாரகன். இத்தால் ஆஶ்ரிதர்க்கு விரோதம் வந்தபோது தன் உடம்பு நோவக் கார்யம் செய்யுமென்றபடி.

அவ:— ஒரு செயலேயோ ?

வ்யா:— (வரையித்யாதி) வந்ததுக்குத் தக்கது கொண்டு கார்யம் செய்வதே! (உரவுடைய நீர்) * முதுநீர். (பேராழியித்யாதி) கையில் திருவாழியைக்கொண்டு இந்த்ரன் கோவாதபடி உன் தோள் நோவ ரக்ஷிப்பதே! 83.

---

அரு:— எண்பத்துமூன்றும் பாட்டு. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (ஒருசெயலேயோவென்று). 83.

---

84. பிரானுன் பெருமை பிறரா ரறிவார்
உரா யுலகளந்த நான்று—வராகத்
தெயிற்றளவு போதாவா றென்கொலோ எந்தை
அடிக்களவு போந்த படி.

பதவுரை:— பிரான்—எம்பெருமானே ! உராய்—ஆயாஸமில்லாமல், உலகு அளந்த நான்று—(நீ) திருவுலகளந்தருளியபோது, எந்தை—என் ஸ்வாமியான உன்னுடைய, அடிக்கு—திருவடிக்கு, அளவு போந்த—அளப்பதற்குச் சரியாயிருந்த, படி—பூமியானது, வராகத்து—வராஹரூபியான உன்னுடைய, எயிறு அளவு—தந்தத்தின் ஒரு பாகத்தளவும், போதா ஆறு—போதாமல் இருந்த விதம், என்

---

* முதுநீர்—வலிவையுடைய ஜலம்.

கோல்—எப்படி? உன் பெருமை—உன்னுடைய மேன்மையை, பிறர் ஆர் அறிவார்—(உன்னைத் தவிர) வேறு யாரால் அறியமுடியும்?

வ்யா:— எண்பத்துநாலாம் பாட்டு. (பிராணித்யாதி) உபகாரகனை உன்னுடைய பெருமையை வேறு சிலரால் அறியப் போமோ? (உராயித்யாதி) "உராய்" என்று, பட்டர் "அநாயாஸேந அளந்தவன்று" என்று அருளிச்செய்தார். உலாவி என்றுமாம். பூமியிலே பொருந்தவிட்டு என்னிலுமாம். (எந்தையடிக்களவு போந்தபடி வராகத்தெயிற்றளவு போதாவாறென்கொலோ) ஒரு நாள் திருவடிக்குள் அடங்கியது திருவெயிற்றுக்குப் போந்ததில்லை என்கிறது. ரக்ஷ்யத்தினளவன்று ரக்ஷகன் பாரிப்பு. நானொருவனுமே உன் குணங்களிலே குமிழ் நீருண்ணுநின்றேன். 84.

அரு:— எண்பத்துநாலாம் பாட்டு. உராய்—அநாயாஸமாதல்; உரோசியென்றாய், பூமியிலே பொருந்தவிட்டு என்னுதல். "என்கொலோ—பிறராரறிவார்" என்கையாலே (நானொருவனுமே என்கிறது. 84.

85. படிகண் டறிதியே பாம்பணையினான் புட்
கோடிகண் டறிதியே கூறாய்—வடிவில்
பொறியைந்து முள்ளடக்கிப் போதோடு நீரேந்தி
நெறிநின்ற நெஞ்சமே நீ.

பதவுரை:— வடிவில்—உருவற்றவையான, பொறி ஐந்தும்—பஞ்சேந்திரியங்களையும், உள் அடக்கி—சரீரத்தினுள் அடக்கி, போதோடு நீர் ஏந்தி—புஷ்பங்களுடன் தீர்த்தத்தையும் கொண்டு, நெறி நின்ற—(எம்பெருமானை அடைகையாகிற) நல்வழியிலே நிலையாய் நின்ற, நெஞ்சமே—மனமே! நீ—நீ, பாம்பு அணையான்—திருவனந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்ட பெருமானுடைய, படி—திருமேனியை, கண்டு அறிதியே—பார்த்து அநுபவித்திருக்கிறாயோ? புள் கோடி—(அவனுடைய) கருடத்வஜத்தைத்தான், கண்டு அறிதியே—ஸேவித்து அறிவாயோ? கூறாய்—(நீயே) சொல்லு.

அவ:— எண்பத்தைந்தாம் பாட்டு. "பிறராரறிவார்" † என்பாரைத் தம்முடைய திருவுள்ளம் 'நானறிந்திருக்கிறேன்'

† (பா) என்றவாறே.

என்ன; நீயும் இந்த்ரியஜயம் பண்ணி ஆஶ்ரயணத்திலே இழிந்தாயல்லது ஸாக்ஷாத்கரித்தாயோ? என்கிறார்.

வ்யா:— (படியித்யாதி) திருமேனி கண்டறிதியோ. (பாம்பணையித்யாதி). அவனுடைய படுக்கை கண்டறிதியோ. (கூறாய்) சொல்லாய். (வடிவிலித்யாதி) சரீரத்தில் இந்த்ரியங்கள் ஐந்தையும் அடக்கி. வடிவில்லாத இந்த்ரியங்களை அடக்கி என்றுமாம். * "கண்டவாதிரிந்த தொண்டனேன்" என்னுமாப்போலே என்னவுமாம். (போதொடித்யாதி) புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு ஆஶ்ரயணத்திலே இழிந்தாயித்தனையிறே நீ.

நாம் அறியாதிருக்கப்பெற்றபடியென்? என்ன; திருவுள்ளத்தைக் குறித்து, (வடிவில் பொறியைந்துமுள்ளடக்கி) வடிவிலே, உடம்பிலே அடக்கி. வடிவில்லாதபடி ஒருபடிப் பட்டிராது என்றுமாம். 85.

---

அரு:— எண்பத்தைந்தாம் பாட்டு. புட்கொடிகண்டறிதியே— கண்டாயோ? இல்லையே யென்றபடி. வடிவு—ஸ்வபாவமாய் அத்தால் ஒருபடிப்பட்டிராமை. இத்தை அருளிச்செய்கிறார் (கண்டவாதிரிந்தவித்யாதி).

மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (நாமறியாதிருக்கப் பெற்றபடி இத்யாதி). 85.

---

86. நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா—வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி யினி.

பதவுரை:— குன்று எடுத்து—கோவர்த்தனகிரியைக் (குடையாகத்) தூக்கி, பாயும் பனி மறைத்து—பொழிகின்ற மழையைத் தடுத்த, பண்பாளா—நீர்மையை உடையவனே! வாசல் கடை—திருவாசலுக்கு வெளிப்புறம், கழியா—போகாமலும், உள் புகா—உள்ளே நுழையாமலும், காமர் பூம் கோவல்—செயற்கையழகும், இயற்கையழகும் நிரம்பிய திருக்கோவலூரில், இடை கழியே—(வாசலுக்கும் உட்புறத்திற்கும் நடுவிலுள்ள ப்ரதேசமாகிற) இடைகழியையே, பற்றி—

* பெரிய திரு (1-6-3).

இடமாகக் கொண்டு, நீயும் திருமகளும்—நீயும் பெரியபிராட்டியுமாய், இனி—இப்போது, நின்றாயால்—நின்றருளினாயன்றோ.

அவ:— எண்பத்தாறாம் பாட்டு. (நீயும்) இவர் தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து, "ஸாக்ஷாத்கரித்திலையிறே" என்னத் தரியானிறே அவன்.

வ்யா:— (நீயுமித்யாதி) * "தாமரையாளாகிலும் சிதகுரைக்கு மேல் என்னடியாரது செய்யார்" என்ற நீயும், உன்னுடைய பரிகரம் நலியப்புக, (1) "न कश्चिन्नापराध्यति" (ந கஶ்சிந்நாபராத்யதி) என்ற அவளுமாய் நின்றாயால். (குன்றித்யாதி) உடம்பிலே விழப்புக்க மழையை மலையெடுத்துப் பரிஹரித்த நீர்மைபோலே இருந்தது இப்போது நெருக்கு. அபேக்ஷிதமாக நெருக்கினபடி. (வாசலித்யாதி) இடைகழிக்கு உள்ளும் புறம்பும் காட்டுத்தீபோலே இராநின்றது. காமுகரானவர்கள் உகந்த விஷயத்தினுடைய கண் வட்டம் விட்டுப் போகமாட்டாதாப்போலே. (இனி) இப்போது. இனி திருக்கோவலூரிலே நிற்கிறது கர்மபலாநுபவத்துக்கன்றிறே. ஸம்ஸாரிகளை நரகத்தில் புகாமல் காக்கவிறே.

(நீயுமித்யாதி) ஆஶ்ரிதரக்ஷணத்தில் முற்பாடனான நீயும் (90) "अग्रतस्ते गमिष्यामि" (அக்ரதஸ்தே கமிஷ்யாமி) என்று உனக்கு முற்படும் பிராட்டியும். (பண்பாளா) அன்று அங்ஙனே உதவினாய். (கடைகழியாவுள்புகா) அங்கு அவர்கள் ஆபத்து தீர்த்தான்; இங்கு தன் ஆபத்து தீர்த்தபடி. புறம்பு காட்டுத்தீயோடு ஒக்கும். 86.

அரு:— எண்பத்தாறாம் பாட்டு. இடை கழிக்குப் புறம்பு ஸம்ஸாரிகளும், உள்ளே உபாஸகனை ருஷியுமாகையாலே, அநந்ய ப்ரயோஜநரான ஆழ்வார்கள் பற்றியிருக்கிற இடைகழியைப் பற்றி நின்றானென்றபடி. "இனி" என்று மேலில் பாட்டைப்பற்ற அருளிச் செய்கிறார் (திருக்கோவலூரித்யாதி). இன்று இங்ஙனே உதவினாய். 86.

87. இனியார் புகுவா ரெழுநரக வாசல்
முனியாது மூரித்தாள் கோமின்—கனிசாயக்
கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு.

* பெரியாழ் திரு (4-9-2).

பதவுரை:—கனி—விளாம்பழவுருவுடனிருந்த அஸுரன், சாய—விழுந்து அழியும்படி, கன்று—கன்றின் உருவுடன் வந்த அஸுரனை, எறிந்த—வீசின, தோளான்—திருத்தோள்களை உடையவனான எம்பெருமானுடைய, கனை கழலே—ஆபரண ஒலியுடன் கூடிய திருவடிகளையே, காண்பதற்கு—கண்டுகொண்டிருப்பதற்கு (வழியை), அம் நாவல் சூழ் நாடு—அழகியதும் ஜம்பூத்வீபமென்று பெயர் பெற்றதுமான பரந்த நாட்டிலுள்ள பிராணிகள், நன்கு அறிந்த—நன்றாக அறிந்தன; இனி—இனிமேல், எழு நரக வாசல்—ஏழுவித மான நரகங்களின் வாயில்களிலும், யார் புகுவார்—நுழைவாரார்? (யம கிங்கரர்களே!) முனியாது—(என்னைக்) கோபிக்காமல், மூரி தாள் கோமின்—(நரகவாசல்களுக்கு) வலிமையுள்ள தாழ்பாளைப் போட்டு சாத்துங்கள்.

வ்யா:— எண்பத்தேழாம் பாட்டு. (இனியித்யாதி) "எழுநரக வாசல்" என்கிறது, கிளர்த்தியையுடைத்தான நரகமென்னவுமாம்; ஏழுவகை நரகமென்னவுமாம். (முனியாது) யமபடருடைய கோபத்துக்கு இனி பலமில்லையென்கிறது. (மூரித்தாள் கோமின்) இனிப் புகுவாரில்லை; மிடுக்குடைய தாளைக் கோவுங்கோள். (கனிசாய வித்யாதி) "கனைகழல்" என்றது, இலக்கைக் குறித்து நடக்கிற போது திருவடிகளின் ஆபரணத்வநியை. ஜம்பூத்வீபமானது நன்றாக அறிந்தது. நன்றாக அறிகை—ஸம்ஸாரத்தினின்றும் போகோம் என்றிருக்கை. உகந்தருளின தேசம் இங்கு உண்டாயிற்றே என்று அஸூயை பண்ணாதே பொறுத்திருக்கை.

(இனியித்யாதி) எங்கள் பதத்துக்கு அழிவு சொல்லுவதே என்று பொடியாதே. (கனைகழல்) ஆபரணவொலி. (நாவலம்) ஜம்பூத்வீபம். (91) "एकां धरणिमाश्रितौ" (ஏகாம் தரணிமாஶ்ரிதௌ) ஒரு படுக்கையிலே இருப்பார்க்கு பயமுண்டோ? 87.

---

அரு:— எண்பத்தேழாம் பாட்டு. கீழ் வாக்யத்தை விவரிக்கிறார் (உகந்தருளினதேசமித்யாதி). "அஸூயை" என்றது, பகவத் த்விட்டுக்களாகையாலே திவ்யதேசத்தை விட்டு தேஶாந்தரத்தே போதல்; அங்கொரு அதிஶயம் கண்டால் ப்ராணத்யாகம் பண்ணுதல். பொடியாதே-ஆழ்வாரைப் பொடியாதே. திவ்யதேசமுள்ள நாட்டி

விருப்பு மாத்ரம் போருமோவென்ன; அருளிச்செய்கிறார் (ஏகாம் தரணிம் இத்யாதி). 87

88. நாடிலும் நின்னடியே நாடுவன் நாடோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன்—சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகி லென்னே யெனக்கு.

பதவுரை:— நாடிலும்—(மனத்தாலே) நினைக்கும்போது, நின் அடியே—உன்னுடைய திருவடிகளையே, நாடுவன்—நினைப்பேன்; நாள் தோறும்—தினந்தோறும், பாடிலும்—(வாயாலே) பாடும்போதும், நின் புகழே பாடுவன்—உன்னுடைய கீர்த்தியையே பாடுவேன்; சூடிலும்—(எதையாவது) தலையில் அணிய நினைத்தாலும், பொன் ஆழி ஏந்தினான்—அழகிய சக்கரத்தாழ்வானை தரித்தவனான உன்னுடைய, பொன் அடியே—அழகிய திருப்பாதங்களையே, சூடுவேற்கு—(தலையில்) தரிப்பவனான, எனக்கு—எனக்கு, என் ஆகில் என்—(எவருக்கு) என்ன ஆனால்தான் என்ன?

வ்யா:— எண்பத்தெட்டாம் பாட்டு. (நாடிலுமித்யாதி) நினைக்கிலும் உன் திருவடியையே நினைப்பன். எப்போதும் பாடிலும் உன்னுடைய புகழையே பாடுவன். (சூடிலுமித்யாதி) ஒன்றைச் சூடிலும் திருவாழியேந்தின உன்னுடைய விலக்ஷணமான திருவடிகளைச் சூடாநின்ற எனக்கு பரமபதத்திலே போனாலும் வாங்மனஃகாயங்கள் அங்கே ப்ரவணமாகையாகச் செய்வது; அது இங்கே பெற்றேனாகில் எனக்கு இங்கே இருக்கை நல்லது என்கிறார். அவன்படிக்கு ஸம்ஸாரிகள்படியைப் பார்த்தால் யமனுக்கு அவகாசமுண்டாயிருந்தது. (30) "तेन मैत्री भवतु" (தேந மைத்ரீ பவது) என்றும், (86) "यदि वा" (யதி வா) என்றும் சொல்லத் தலை அறுப்புண்டிலனோ? (பொன்னடியே) இதுவே ப்ரயோஜநமாக வாக்காயங்களையொழிய நினைக்கிலும். (என்னாகிலென்னேயெனக்கு) நாட்டார் நகரம் புகிலென்? தவிரிலென்? * ஆர்தான் உழ? 88.

அரு:— எண்பத்தெட்டாம் பாட்டு. "சூடுவேற்கு" என்றது மாநஸமாகச் சூடுகையைச் சொல்லி, இப்படி மாநஸீகமாகச் சூடுவார்க்கு என்று பரகதமாக்குகிறார் (அவன்படிக்கித்யாதி). இப்படி

* "ஆரானுழ" என்று பழய ப்ரதிகளில் பாடம்.

நினைத்தமட்டில் அவனைப்பெறலாயிருக்க அதுவும் செய்யாமையாலே யமனுக்கு அவகாசமுண்டென்றபடி.

இப்படி ஆல்பாநுகூல்யத்திலே அவன் கார்யம் செய்யலாயிருக்க இழந்த பேருண்டோ என்ன அருளிச்செய்கிறார் (தேந மைத்ரீ இத்யாதி). சூடுகை—மாநஸப்பற்றாக்கி அருளிச்செய்கிறார் (வாக்காயங் களையித்யாதி). (எனக்கு—என்னாகிலென்) இப்படி அல்பாநுகூல்யத்திலே பெறலாயிருக்க இத்தை இழக்கிற ஸம்ஸாரிகள்படி எனக்கு ஏதானால் தாவிலே. அத்தை ஆராயக்கார்யமில்லை என்றபடி. ஆர்தான் அழ—இப்படி ஆர்தான் பிறருக்குத் துக்கப்படுவாறென்றபடி.
88.

---

89. எனக்காவா ராரொருவரே எம் பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால்—புனக்காயாம்
பூமேனி காணப் போதியவிழும் பூவைப்பூ
மாமேனி காட்டும் வரம்.

பதவுரை:— புனம்—தனக்கு ஏற்ற நிலத்திலிருக்கும், காயாம் பூ மேனி—காயாம்பூவின் நிறமும், காண—காணக் காண, போதி அவிழும்—மலராநிற்கும், பூவைப்பூ (மேனி)—பூவைப்பூவின் நிறமும், மா மேனி—(எம்பிரானுடைய) சிறந்த திருமேனியை, வரம் காட்டும்—நன்றாகக் காட்டும்; எனக்கு—(இப்படிப்பட்ட பாக்யசாலியான) எனக்கு, ஆர் ஒருவரே ஆவார்—ஒப்பாயிருப்பவர் ஒருவரானது உளரோ? எம்பெருமான்—ஸர்வேச்வரனும், தானே தனக்கு ஆவான் அல்லால்—தானே தனக்கு உபமானமாவானேயொழிய, மற்று—எனக்கு ஸமானமாவனோ?

வ்யா:— எண்பத்தொன்பதாம் பாட்டு. (எனக்கித்யாதி) என்னோடொப்பார் ஒருவருமில்லையிறே என்னவுமாம். எனக்காவார் எவர் என்னவுமாம். என்னோடொப்பார் ஒருவருமில்லை என்று நீர் சொல்லுவானென்? பரமசேதநனுண்டே என்னில்; (எம்பெருமானித்யாதி) என்னோடொத்தார் இல்லையென்றேனித்தனையல்லது, எம்பெருமானுடைய உயர்த்தி இல்லையென்றேனோ? நீர் என்னோடொப்பாரில்லையென்று சொல்லிற்று எத்தாலே என்னில்; அவனோடு ஸத்ருசமான பதார்த்தங்கள் வர்த்திக்கிற தேசத்திலே நின்றேன்

ஓரடியன்றோ குறைய நின்றது. அவன் என்று ஸாக்ஷாத்கரிக்கு மத்தனையன்றோ வேண்டுவது. (புனக்காயாம் பூமேனி) புனத்திலே நிற்கிற காயாம்பூமேனியை. (காணப்பொதிய விழும்பூவைப்பூ) காணக்காண அலராநின்ற பூவைப்பூ. இவை இரண்டும் அவனுடைய வரமான மாமேனியைக் காட்டா நின்றது. நாட்டார்க்கு நினைக்கையி லுள்ள வருத்தம் போரும் எனக்கு மறக்க. நானுமொருவனே! வரமாக—தன்னிலும் விஶதமாக என்றுமாம். 89.

---

அரு:— எண்பத்தொன்பதாம் பாட்டு. எனக்கு ஹிதபரர் எவர், ஈஶ்வரனையொழிய ஒருவருமில்லை என்று இரண்டாமர்த்தம். ஸத்ருஶபதார்த்தம்—காயாப்பூ முதலானவை. அவற்றைக்கண்டு தரிக்கலாயிருக்கையாலே என்னோடு ஒப்பாரில்லை என்றபடி. அவற்றைக் கண்டு தரிக்கப்போமோ, அவனைக் காண வேண்டாவோ என்ன, அருளிச்செய்கிறார் (ஓரடியன்றோவித்யாதி). குறை—ப்ரத்யக்ஷமாக அவனைக்காணுமை. ஆனால் வேணது உளதென்ன, அருளிச்செய்கிறார் (அவனென்றித்யாதி). ஸத்ருஶ பதார்த்தங்களை அவனுகக்கொண்டு ஸாக்ஷாத்கரிக்குமத்தனை என்றபடி. (பொதியவிழும்) கண்பொதிய—கண்காண என்றபடி. பூக்கள் காட்டுகையாலே மறக்க அருமை. 89.

---

90. வரத்தால் வலிநினைந்து மாதவ நின்பாதம்
சிரத்தால் வணங்கானு மென்றே—உரத்தினல்
ஈரரியாய் நேர்வலியோ னுய விரணியனை
ஓரரியாய் நீயிடந்த தூன்.

பதவுரை:— ஈர் அரி ஆய்—பிளக்கத்தக்கவனான சத்துருவாய், நேர் வலியோன் ஆய—எதிர் நின்று சண்டைசெய்யத்தக்க பலத்தை யுடையவனான, இரணியனை—ஹிரண்யகசிபுவினுடைய, ஊன்—சரீரத்தை, ஓர் அரி ஆய்—ஒப்பற்ற நரஸிம்ஹரூபியாகி, உரத்தினல்—(உன்னுடைய) பலத்தினால், நீ இடந்தது—நீ கிழித்தது, வரத்தால்—(பிரமன் முதலிய தேவர்களால் கொடுக்கப்பட்ட) வரங்களா லுண்டான, வலி நினைந்து—(தன்) பலத்தைப் பெரிதாக எண்ணி, சிரத்தால்—தன் தலையால், வணங்கானும் என்றே—(உன்னை) வணங்காமலிருந்தான் என்ற காரணத்தினலா? (அன்று; பாகவதனான ப்ரஹ்லாதன் பக்கல் அபசாரம் பொறுக்காமையினலேயே என்றபடி).

அவ:— தொண்ணூறும் பாட்டு. (வரத்தால்) நரஸிம்ஹரூபியான ஈஶ்வரனுடைய ஆஶ்ரித விரோதி நிரஸந ஶீலத்தையும் வாத்ஸல்யத்தையும் அநுஸந்திக்கிறார்.

வ்யா:— (வரத்தால்வலிநினைந்து) வரத்தாலே தனக்கு மிடுக்குண்டாக நினைத்தானல்லது வரங்கொடுத்தவர்கள் ஶக்தி பகவததீநமென்று அறிந்திலன். (மாதவ) வரங்கொடுத்தவர்களாலும் வணங்கப்படுமவன். (நின்பாதமித்யாதி) அவன் இழவுக்கு வெறுக்கிறார். (உரத்தினலீரரியாய்) மிடுக்காலே ஈரப்படும் அரியானவன்—ஶத்ருவானவன். பெரிய ஶத்ருவென்னுமாம். (நேர்வலியோன்) நேரே வலியனான ஹிரண்யனை. (ஓரரியாய்) நாட்டில் நடையாடும் ஸிம்ஹமன்று. தன்னுடைய இச்சையாலே பிறந்த ஸிம்ஹமென்றுமாம். ஓரப்படும் அரியாய்—எல்லாரும் த்யாநம் பண்ணும் ஸிம்ஹமென்னுமாம்.

(வரத்தால்) தேவர்கள் வரத்தை மிடுக்காக நினைத்தான். வணங்குவித்துக்கொள்ளும் விஷயம் இருக்கும்படி. (வணங்காத மென்றே) பிள்ளை பக்கல் பரிவு. 'தப்பச் செய்தோம்; என்னும்' என்னுமாம். உன் வஸ்து அழியாமைக்கென்றமாம். (ஈரரி) பெரிய ஶத்ரு. (ஓரரி) ஸிம்ஹங்களில் ஒப்பு பிடிக்கவொண்ணாது. 90.

---

அரு:— தொண்ணூறும் பாட்டு. "ஓர்" என்று விசாரமாய் (இச்சையாலேயென்றது). பரிவு தப்பச் செய்தோம்–பரிவு தப்பும்படி தண்டித்தோமே என்னும் அநுதாபமில்லாதவனென்னுதல்; வணங்காமையாலே தன் வஸ்துவான ஹிரண்யனுக்கு ஸ்வரூபநாஶம் வாராமைக்கென்னுதல். விரோதியான ஶரீரத்தைப் போக்கினானென்றபடி. 90.

---

91. ஊனக் குரம்பையி னுள்புக் கிருள்நீக்கி
ஞானச்சுடர் கொளீஇ நாடோறும்— ஏனத்
துருவா யுலகிடந்த வூழியான் பாதம்
மருவாதார்க் குண்டாமோ வான்.

பதவுரை:— ஊன குரம்பையின்—மாம்ஸத்தினலாகிய சரீரமாகிய குடிசையின், உள் புக்கு—உள்ளே நுழைந்து (ஆராய்ந்து), இருள்—(சரீரத்தை இனிதாக நினைக்கும்) அஜ்ஞானத்தை, நீக்கி—

போக்கடித்து, ஞானம் சுடர்—உண்மையறிவாகிற விளக்கை, கொளீஇ—ஏற்றி, ஏனத்து உரு ஆய—வராஹமூர்த்தியாக அவதரித்து, உலகு இடந்த—உலகத்தை (அண்டபித்தியினின்றும்) பிரித்தெடுத்த வனும், ஊழியான்—ப்ரளயகாலத்திலிருந்தவனுமான எம்பிரானுடைய, பாதம்—திருவடிகளை, நாள் தோறும்—தினந்தோறும், மருவாதார்க்கு—வணங்காதவர்களுக்கு, வான்—பரமபதம், உண்டாமோ—கிடைக்குமோ?

அவ:— தொண்ணூற்றேராம் பாட்டு. (ஊனக்குரம்பை) பரமபதம் ஸ்வயத்ந ஸாத்யமன்று என்றவோபாதி இச்சையும் வேண்டாவோ என்கிறது. ஹேயத்திலே ஹேயதாபுத்தியும், உபாதேயத்திலே உபாதேயதாபுத்தியும் வேண்டாவோ பேற்றுக்கு?

வ்யா:— (ஊனமித்யாதி) ஶரீரம் கண்டதெல்லாம் பொல்லாதா யிருக்கச்செய்தே ஆபாதப்ரதீதியில் நன்றுபோலே இருப்பதொன்றுண்டு; அந்த இருள் ஶரீரத்தை அவகாஹிக்கப்போம். (ஞானச்சுடர்கொளீஇ) ஜ்ஞாநமாகிற விளக்கை ப்ரகாசிப்பித்து. இதினுடைய ஹேயதையும் அந்யதா ஜ்ஞாநமும் யதார்த்த ஜ்ஞாநத்தாலே போம். ஆக, யதார்த்த ஜ்ஞாநபூர்வகமாக பரஜ்ஞாநம் வேணும். (நாடோறு மித்யாதி) நோவுபட்டபோது உதவினவனை இவை இல்லாதவன்று தானுண்டாய் ரக்ஷிக்குமவனுடைய திருவடிகளில் ருசியில்லாதார்க்கும் உண்டோ பரமபதம்? (நாடோறும்) அவன் ஆபிமுக்யம் பண்ணுகிறபடியை அநுஸந்திக்க வைமுக்ய ஶங்கையுண்டோ? ஜீயர் திருவடிகளை ஆஶ்ரயித்திருப்பானொரு வைஷ்ணவன் வர, "நீ பலநாள் வரத்தவிர்ந்தாயே" என்றருளிச்செய்ய, "நீர் ஒருகால் அருளிச்செய்தபடியை நினைத்திருக்க அமையாதோ?" என்ன, "நம்பிக்கை நிலையிலே வர்த்திக்கிறதும் மாண்டு, 'நாடோறுமேனத் துருவாயுலகிடந்த ஊழியான் பாதம் மருவாதார்க்குண்டாமோ வான்' என்கிற இப்பாட்டும் கெடுவாய் கேட்டறியாயோ?" என்றார். ருசியில்லாதார்க்கும் ஸ்ரீவைகுண்டம் கிடைக்குமோ?

அவ:— கீழிற்பாட்டு ருசியுடையவனுக்கு உதவினபடி.

வ்யா:— (ஊனக்குரம்பை) ஹேயமாய் அல்பமாய் அஸ்த்திரமாய் அநர்த்தமாய் அகவாய் தெரியாதபடி மேலே தோலை வைத்து

மினுக்கி, ஆபாதப்ரதீதியில் நன்றென்று தோற்றும்படி இத்தை உள்ளபடியே அநுஸந்தித்து அபுருஷார்த்தமென்றும், புருஷார்த்த விரோதியென்றும் பேசிற்று. * "பொய்ந்நின்ற" இத்யாதி. (ஞானச் சுடர்கொளீஇ) ப்ரகாரமான தன்னை அநுஸந்தித்து ப்ரகாரியான † தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கி. (ஏனமித்யாதி) இத்தலை நினையாதபோதும் நினைத்திருந்து நோக்குமவன். விரோதியான இவ்வாகாரத்தையன்றோ துடைத்தது. ‡ "ஏனத்துருவாயிடந்த—ஞானப்பிரான்." 91.

அரு:— தொண்ணூற்றொராம் பாட்டு. அவகாஹிக்கை—ஶரீர தோஷங்களை அறிகை. ஊழியான்—ஸம்ஹாரகாலத்திலும் தான் உளனாய் ரக்ஷிக்குமவன். நாடோறும் மருவவேணுமென்னுமதுக்கு ஸம்வாதமாக அருளிச்செய்கிறார் (ஜீயரித்யாதி). நாடோறும் மருவுகைக்குப் பண்ணின உபகாரமேது? என்ன, அருளிச்செய்கிறார் (இத்தலையித்யாதி). விரோதியைப்போக்கி உபதேசித்ததெங்கே? என்ன, அருளிச்செய்கிறார் (ஏனத்துருவாயித்யாதி). 91.

92. வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்
தேனாகிப் பாலாம் திருமாலே—ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.

பதவுரை — வான் ஆகி—ஆகாசரூபனாகவும், தீ ஆய்—அக்நி ரூபனாகவும், மறி கடலாய்—அலையெறிகிற ஸமுத்ரரூபனாகவும், மாருதம் ஆய்—வாயுரூபனாகவும், (ஆகி அண்டத்திற்கு நிர்வாஹகனாயிருப்பவனாகவும்), தேன் ஆகி—தேன் போலே இனியவனாகவும், பால் ஆம்—பால் போலே போக்யனாகவுமிருக்கும், திருமாலே—லக்ஷ்மீநாதனே! ஆன் ஆய்ச்சி—பசுக்களை வளர்க்கும் ஆய்க்குலத்தில் பிறந்த இடைச்சியினுடைய, வெண்ணெய் விழுங்க—வெண்ணெயை விழுங்கியபோது, முன் ஒரு நாள்—முன்பு ஒரு காலத்திலே, மண்ணை—உலகையெல்லாம், உமிழ்ந்த—வெளியிட்ட, வயிறு—திருவயிறு, நிறையுமே—நிறையுமா?

அவ:— தொண்ணூற்றிரண்டாம் பாட்டு. (வானாகி) அவ்வவ ஜாதிகளிலே அவதரித்து அதிலுள்ளாருடைய தாரகமே தனக்கு

* திருவிரு (1). † முதல் திருவ (67). ‡ திருவிரு (99).

தாரகமாயிருக்கிறபடி. ஸ்ரீவராஹமானனுகில் கோரைக்கிழங்கு தாரகமாம். இடையனுனனுகில் வெண்ணெய் தாரகமாயிருக்கிறபடி.

வ்யா:— (வானித்யாதி) பஞ்சபூதங்களாலே ஒரு அண்டமாய் அண்டாந்தர்வர்த்திகளான புருஷர்களுக்கு நிர்வாஹகனுய். (தேனித்யாதி) (92) "सर्वरसः" (ஸர்வரஸ:) என்கிறபடியே பிராட்டியோடே கூட பரமபதத்திலே இருக்கிறவனே! உபயவிபூதி யுக்தனுயிருக்கிற இருப்புக்குச் சேருமோ ஓரிடைச்சி வெண்ணெயை விழுங்குகை? (முன்னித்யாதி) "ப்ரளயங்கொள்ளாதபடி வயிற்றிலே வைத்து வெளிநாடு காணப் புறப்பே உமிழ்ந்து ரக்ஷித்த வயிறு, இத்தனை வெண்ணெயாலே நிறைக்க வேண்டியிருந்ததோ? பின்னை உன் வயிற்றை வண்ணானுக்கிடமாட்டாயோ?" என்கிருர். ருசியுடையாரோடு ஸம்பந்தமுள்ளதொன்றுலல்லது உபபவிபூதி யோகம் குறைபட்டிருக்குமவனுடைய ருசி சொல்லுகிறது. (ஆனய்ச்சி வெண்ணெய்) முடைநாறும் வெண்ணெய். (நிறையுமே) குறைக்கும் இட்டு அடைக்கவேணும். ஸம்ஸாரிகளுக்கு ப்ரளயம்போலே இவனுக்கு வெண்ணெய் பெருவிடில். 92.

---

அரு:— தொண்ணூற்றிரண்டாம் பாட்டு. வண்ணான் தாழியில் எப்போதும் கஞ்சி தோய்க்கிறதே ஸ்வபாவமாகையாலே, வயிற்றை வளர்க்கமாட்டாவிட்டால் வண்ணான் கையிலே கொடுத்தால் எப்போதும் கஞ்சி உண்டென்று லோகவார்த்தை. வயிறு தாழி ஸ்தாநம். "நிறையுமே" என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச் செய்கிருர் (ருசியுடையாரோடித்யாதி). 92.

---

93. வயிறழல வாளுருவி வந்தானை யஞ்ச
எயிறிலக வாய்மடுத்த தென்னீ—போறியுகிரால்
பூவடியை யீடழித்த போன்னாழிக் கையா நின்
சேவடிமே லீடழியச் செற்று.

பதவுரை:— பூ வடிவை—புஷ்பங்களின் அழகை, ஈடு அழித்த— மிகவும் கீழ்ப்படுத்தியதும், போன் ஆழி கையா—அழகிய திருச் சக்கரத்தை உடையதுமான கையை உடையவனே! வயிறு அழல— (அடியவர்கள்) வயிறெரியும்படியாக, வாள் உருவி வந்தானை—வாளை உருவிக்கொண்டு வந்தவனான இரணியாஸுரனை, அஞ்ச—(உன்னுரு வைக்கண்டு) பயப்படும்படி, நின் சேவடி மேல்—உன் சிவந்த திருவடி

களின் மேல் (கிடத்திக்கொண்டு), போறி உகிரால்—பல நிறங்களை யுடைய நகங்களாலே, ஈடு அழிய செற்று—கட்டுக்குலையும்படி அழித்த பின்பும், எயிறு இலக—தந்தங்கள் பிரகாசிக்குப்படியாக, நீ வாய் மடுத்தது என்—நீ வாயை மடித்துக்கொண்டிருந்தது எதற்காக?

அவ:-- தொண்ணூற்றுமூன்ரும் பாட்டு. (வயிறித்யாதி) கீழ்ப் பாட்டிலே ஆஶ்ரிதவாத்ஸல்யம் சொல்லிற்று; இதில் ஆஶ்ரித வாத்ஸல்யகார்யமான அவர்கள் விரோதிகள் பக்கலுண்டான சீற்றம் சொல்லுகிறது.

வ்யா:— (வயிரித்யாதி) வயிறழலுகிறது ஆர்க்கென்னில், ஆழ்வார்க்கு முன்பொருநாள் ஹிரண்யன் செய்ததாயிராதே தம்முடைய எதிரே வாளும் உருவிக்கொண்டு புறப்பட்டாற்போலே இருந்தபடி. † "என்றுமென்பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் அங்ஙனமாவர்களே" என்கிறபடியே. (வந்தானை) தம்முடைய மேலே வந்தாற்போலே இருக்கிறபடி. (பூவடியையீடழித்தபொன்னாழிக் கையா) ஸௌகுமார்யத்தாலும் அழகாலும் பூவைக் கீழ்ப்படுத்துவ தான கையிலே திருவாழியையுடையவனே. (பொறியுகிரால்) பார்த்த படியே இருக்கவேண்டியிருக்கிற உகிராலே. (நின்சேவடிமேலீடழியச் செற்று) என்றும் நாங்கள் ஆசைப்பட்டுப்போகிற திருவடிகளிலே அவனை ஏறிட்டு இனி முளையாதபடி முடித்து. (எயிறிலகவாய் மடுத்ததென்நீ) பிராட்டிமார்க்கும் ஸம்போகத்தில் திருமுத்து தோற்றுதபடி பண்ணும் ஸ்மிதம் வேண்டா, எயிறு தோற்றுப்படிக் கீடாகப்பண்ணின ஹாஸத்தைக்கண்டால் அதுவே அமையு மென்னும்படி இருக்கிற வாயை மடுத்தது என் நீ? உனக்கும் சீற்றத்துக்கும் விஷயமுண்டோ? முடிந்த பின்னும் சீற்றம் மாறு தொழிவதே! முடித்தால் சீற்றம் மாறுவது தன்னளவுக்கு; (93) "त्वयि किञ्चित्समापन्ने" (த்வயி கிஞ்சித் ஸமாபந்நே) என்னும் விஷயங் களிலன்று. (94) "अथ रामो महातेजाः" (அத ராமோ மஹாதேஜா:) * "கொடியவாய் விலங்கின்னுயிர்மலங்கக் கொண்டசீற்றம்" என்று ஶரணாகதர்க்குத் தஞ்சமான தனமாவது ஆஶ்ரிதார்த்தமாக ஹிரண்யனைப்பற்றப் பண்ணும் சீற்றம்.

---

† பெரியாழ் திரு (3-3-7). * பெரிய திரு (5-8-3).

அவ:— ‡ "எங்ஙனேயுய்வர் தானவர் நினைந்தால்" என்று நரஸிம்ஹத்தைக் கண்ட அஸுரராக்ஷஸஜாதியாகப் படும்பாட்டை அவனைக் கண்ட அநுகூலர் படும்படி.

வ்யா:— (வயிறழல) (95) "अस्मान् हन्तुं न संशयः—राक्षसो ऽप्येति" (அஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஶய:——ராக்ஷஸோऽப்யேதி) இத்யாதிவத். தனித்தனியே சொல்லில் ஒருவரல்லாலொருவர் பிழைக்கிலுமாம் என்று வேர்ப்பற்றிலே நலிய. (பொறியுகிரால்) போகத்துக்கு ஏகாந்தமான அழகையுடைய அறுகாழி என்னுதல்; திருவாழி பிடிக்கத்தகும் கை என்னுதல். (செற்றுவைத்து வாய் மடுத்ததென்னீ) ஸங்கல்பம் தவிர்ந்து திருவாழி தவிர்ந்து திருவுகிராலே பிளந்து பிணத்தின் முகத்திலே நா மடிக்கொள்வதே! 93.

---

அரு:— தொண்ணூற்றுமூன்றும் பாட்டு. இப்படி பீதராய் மங்களாஶாஸநம் பண்ணின பேருண்டோவென்ன அருளிச்செய்கிறார் (என்றுமென்பிள்ளைக்கித்யாதி). முடிந்த பின்னும் சீற்றம் மாறாமைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் (முடித்தாலித்யாதி). ஆஶ்ரிதவிரோதமாகக்கொண்ட சீற்றம் அதிகமென்னுமதுக்கு ப்ரமாணம் அருளிச்செய்கிறார் (அதராம இத்யாதி).

மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (எங்ஙனேயுய்வரித்யாதி). "அஸ்மாந் ஹந்தும்" என்ற பஹுவசநத்துக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (தனித்தனியேயித்யாதி). 93.

---

94. செற்றெழுந்து தீவிழித்துச் சென்றவிந்த வேழுலகும்
மற்றிவையா வென்று வாயங்காந்து—முற்றும்
மறையவற்குக் காட்டிய மாயவனை யல்லால்
இறையேனு மேத்தா தென்னா.

பதவுரை:—(1) செற்று எழுந்து—கோபித்து எழுந்து, தீ விழித்து—(துரியோதனன் முதலியவர்களை நோக்கி) நெருப்பெழும்படியாக விழித்துப் பார்த்து, 'சென்ற இந்த ஏழ் உலகும் மற்று இவை'—'செல்லாநின்றனவான இந்த ஏழு லோகங்களும் இவையே' (என்று சொல்லி), ஆவென்று வாய் அங்காந்து—ஆவென்று வாயைத் திறந்து,

---

‡ பெரிய திரு (5-7-5).

முற்றும்—எல்லாவுலகையும், மறையவர்க்கு—பீஷ்மர் துரோணர் முதலிய வைதிகர்களுக்கு, காட்டிய—(தன் வாயில்) காண்பித்தருளிய, மாயவனை அல்லால்—ஆஶ்சர்ய ஶக்தியுடன் கூடிய க்ருஷ்ணனைத் தவிர (மற்றொருவனை), என் நா—என்னுடைய நாக்கானது, இறையேனும்—சிறிதும், ஏத்தாது—புகழாது.

(2) எழுந்து—(உலகையெல்லாம் அழிப்பதற்காகக்) கிளர்ந்தெழுந்து, தீ விழித்து—நெருப்பெழும்படியாக விழித்துப்பார்த்து, செற்று—(எல்லாவுலகங்களையும்) அழித்து, 'சென்ற இந்த ஏழ் உலகும் மற்று இவை'—'(என் வயிற்றினுள்ளே) சென்ற இந்த ஏழு உலகங்களும் இவையே' (என்று சொல்லி), ஆவென்று வாய் அங்காந்து—ஆவென்று வாயைத்திறந்து, முற்றும்—எல்லாவுலகையும், மறையவற்கு—வைதிகனான மார்க்கண்டேய முனிவனுக்கு, காட்டிய—காண்பித்தருளிய, மாயவனை அல்லால்—அகடிதகடநாசக்தியுடன் கூடிய எம்பிரானைத் தவிர (வேறொருவனை), என் நா—என்னுடைய நாக்கு, இறையேனும்—சிறிதுபோதும், ஏத்தாது—துதிக்காது.

அவ:— தொண்ணூற்றுநாலாம் பாட்டு. (செற்றெழுந்து) இப்பாட்டு கீழ்ப்பாட்டில் வ்ருத்தாந்தமாகவுமாய்; இந்த வைஶ்வரூப்யம் துர்யோதநஸதஸ்ஸிலே காட்டினதாகவுமாய்; மார்க்கண்டேய பகவானுக்கு இதனைத் தன் வயிற்றிலே இருந்தபடியைக் காட்டிற்றாகவுமாய். (96) "तदपश्यमहं सर्वं तस्य कुक्षौ महात्मनः" (ததபஶ்யமஹம் ஸர்வம் தஸ்ய குக்ஷௌ மஹாத்மந:) என்கிறபடியே.

வ்யா:— (செற்றெழுந்து தீவிழித்து) என்றது, நீயொரு தூது வரவிடவேண்டா என்ற துர்யோதநாதிகளைச் சீறிப்பார்த்தபடியாகவுமாம். (சென்றவித்யாதி) நாகில் பாபகர்மம் போக்குகைக்கென்று ஸங்கல்பம் வேண்டா. (மறையவற்கு) ஸ்ரீமார்க்கண்டேய பகவானுக்காகவுமாய்; பீஷ்மத்ரோணாதிகளாதல். (97) "सामान्यलक्ष्याचयं" (ஸாமாந்யலக்ஷ்யாவயம்). (இறையேனும்) பரவ்யூஹாதிகளில் போகாது. 94.

---

அரு:— தொண்ணூற்றுநாலாம் பாட்டு. வேண்டாவென்று சொன்ன துர்யோதநாதிகள் வதம்; பீஷ்மாதிகள் கோபித்துப்பாராதே ஸாமாந்யமாக ஶாந்தமாகப் பார்க்கைக்கு விஷயமென்றார்கள். (வாய்

அங்காந்து) துர்யோதந பக்ஷத்தில் பொய்யாஸந வேளையிலே விஸ்வரூபத்தைக் காட்டினது. மறையவற்கும் வாயை ஆவென்று காட்டுகை. 94.

95. நாவாயிலுண்டே நமோ நாரணா வென்று
ஓவா துரைக்கு முரையுண்டே—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்.

பதவுரை:— நா—(எம்பிரானைத் துதிப்பதற்கு உபகரணமான) நாக்கு, வாயில் உண்டே—(தேடிப்போகவேண்டாதபடி) வாயிலேயே இருக்கிறதே; ஓவாது—(களைப்பில்லாமல்) பல தடவை, உரைக்கும்—சொல்லத்தக்க, நமோ நாரணா என்று உரை—திருமந்திரம், உண்டே—இருக்கிறதே; மூவாத—திருப்பி வருதலில்லாத, மா கதிக்கண்—பரம ப்ராப்யமான பரம பதத்தினுள், செல்லும் வகை உண்டே—செல்வதற்கு அர்ச்சிராதிமார்க்கம் (ஸித்தமாய்) இருக்கிறதே; (இப்படி யிருக்கவும்), தீ கதிக்கண்—நரக மார்க்கத்தில், ஒருவர்—ஒரு சிலர், செல்லும் திறம் என்—போகின்ற வழி எப்படி?

அவ:— தொண்ணூற்றைந்தாம் பாட்டு. (நாவாயில்) "இது விடப்போகாதாயிருந்தது; இது கிட்டப்போகாதாயிருந்தது; இதுக்கு எங்ஙனே * விலக்கடியுண்டானபடி? அபரிகரராயிருக்கில் செய்யலாவதில்லையிறே" என்னில், ஈஶ்வரன் ஒரு பரிகரம் தேடும்படி வைத்தானே என்கிறது.

வ்யா:— (நாவாயினுண்டே) (42) "सृष्टस्त्वं वनवासाय" (ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய) என்கிறபடியே நாக்காகில் அவனை ஏத்தக்கடவது. (நமோவித்யாதி) அந்நாக்கு கண்டவோபாதி திருமந்த்ரமும் இவனுக்கு இளைப்பாறிச் சொல்லவேண்டாதது உண்டே. ஒரு ஸஹஸ்ராக்ஷரீ மாலாமந்த்ரம்; இது சொல்லுமதில் நரகாநுபவம் அமையுமென்னுத் திருமந்த்ரமுண்டே. (மூவாதவித்யாதி) அபுநராவ்ருத்தி லக்ஷணமான ப்ராப்யத்துக்குச் செல்லும் அர்ச்சிராதி மார்க்கமுண்டே. (என்னொருவரித்யாதி) நரகத்துக்குப் போக வழி நேராகக் கண்டிலோம். இதுக்கு * விலக்கடி எங்ஙனே உண்டாயிற்று?

* விலக்கடி—வழி; ஸாதனம்.

ஸம்ஸாரி ஹிதம் காண்கிறிலோர், நாளோ செல்லாநின்றது. (என்றொருவரித்யாதி) வலிய விலக்கடி தேடவேணும். 95.

அரு:— தொண்ணூற்றைந்தாம் பாட்டு. திருநாமத்தினுடைய போக்யதையாலே விடப்போகாது; பாவநத்தாலே தீக்ஷதியால் கீழ்ப் போகாது. ஓவாதே-ஓயாதே; நடு இளைப்பாறாதே ஒரு மூச்சிலே சொல்லலாயிருக்கை. ஹிதம் காண்கிறிலோம்-ஹிதசிந்தை பண்ணக் காண்கிறிலோம். இவையெல்லாமிருக்க இத்தைவிட்டு வலியத்தேட வேணும் என்கிறபடி. 95.

96. திறம்பாதேன் னெஞ்சமே சேங்கண்மால் கண்டாய்
அறம்பாவ மென்றிரண்டு மாவான்—புறந்தானிம்
மண்தான் மறிகடல்தான் மாருதந்தான் வான்தானே
கண்டாய் கடைக்கட் பிடி.

பதவுரை:— என் நெஞ்சமே—என் மனமே! அறம் பாவம் என்று இரண்டும் ஆவான்—புண்யப், பாபம் என்னும் இரண்டு வகைக் கருமங்களுக்கும் நிர்வாஹகன், செம் கண் மால் கண்டாய்—செந்தாமரைக் கண்ணனை பெருமானே கிடாய்; இம் மண் தான்—இப்பூவுலகும், மறி கடல் தான்—அலையெறியும் கடலும், மாருதம் தான்—வாயுவும், வான்—ஆகாயமும், புறந்தான்—(இவற்றைக் காட்டிலும் வேறான) ஜீவனும், (மஹாந் அஹங்காரம் முதலியவை யும்), தானே கண்டாய்—அப்பெருமானே கிடாய்; (இவ்வர்த்தத்தை), திறம்பாது-தவறாமல், கடைக்கண் பிடி—கடைசி வரையில் அறிவாயாக.

அவ:— தொண்ணூற்றாறும் பாட்டு. (திறம்பாது) "விலக்கடி இல்லையென்று இருக்கலாயிருக்கிறதில்லை; இவ்வர்த்தத்தைக் கைவிடாதே கொள்" என்று தம்முடைய திருவுள்ளத்தைப் பார்த்து அருளிச்செய்கிறார்.

வ்யா:— (திறம்பாதென்னெஞ்சமே) நான் சொல்லிற்றத் தப்பாதுபோருகிற நெஞ்சே! 'அர்த்த தத்வ: கண்டாலல்லது கால் வாங்கேன்' என்றிருக்கிற நெஞ்சமே! (அறமித்யாதி) விஹிதத்தைச் செய்து நிஷித்தத்தைப் பரிஹரித்துப்போருகிற நம்மோடு விஹித நிஷித்தங்களோடு வாசியில்லை அவனைக்குறித்துப் பரதந்த்ரமா

மிடத்தில். (98) "एष एव साधु कर्म कारयति" (ஏஷ ஏவ ஸாது க்ர்ம காரயதி). தம்முடைய பக்கல் கர்த்ருத்வம் தவிர்த்தபின்பு ஒரு அசேதநக்ரியையைப் பற்றுவரன்றே. (செங்கண்மால் கண்டாய்) ஸர்வேஶ்வரன் கண்டாய். (99) "तस्य यथा कप्यासं पुण्डरीकमेवमक्षिणी" (தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ).

(இம்மண்ணித்யாதி) ப்ரதிபந்தகமான அசித்தோடே கூடின சேதநனும் அவனே. அநுக்தமான மஹதாதிகளைச் சொல்லுகிறது. அவனையொழிய ஸ்வதந்த்ரமாயிருப்பதொன்றுமில்லை. (கண்டாய் கடைகட்பிடி) இவ்வர்த்தத்தை திறப்பாது கடைகட்பிடி—கடை போகப்பிடி. இவ்வர்த்தத்தினுடைய கடைப்பிடி கண்டாயே என்றுமாம். (அறமித்யாதி) ஆபாதப்ரதீதியில் அவனையொழிய புண்ய பாபமென்று தோற்றுவது; நிலைநின்று பார்த்தால் அவனே கடவ னென்று தோற்றும். "திறப்பாது" என்று நெஞ்சோடே கூட்டவு மாம். "திறம்பாது—அறம்பாவமென்றிரண்டுமாவான்" என்னவு மாம். "திறப்பாதுகடைகட்பிடி" என்னவுமாம்.

நாட்டார்க்குப் பலவழி உண்டாகிலும் நம்முடைய வழியைப் பற்றியிராய் நீ. (திறப்பாதென்னெஞ்சமே) சொல் என்று அலைகிற நெஞ்சமே. (செங்கண்மால்) நம்முடைய விஷயத்திலிருக்கிறபடி கண்டாயே. (அறமித்யாதி) பெறுகைக்கும் இழக்கைக்கும் அவனுடைய நிக்ரஹாநுக்ரஹங்களையொழியப் போக்கில்லை; ஸர்வமும் பகவததீநமன்றோ. (கடைகட்பிடி) அறுதியாகப்பிடி. 96.

---

அரு:— தொண்ணூற்ருரும் பாட்டு. கர்மாதிகளிருக்க அவனைப் பிடிக்கவேண்டுவானென் ? என்ன, அருளிச்செய்கிறூர் (தம்முடைய பக்கலித்யாதி).

கடைபோகப்பிடி-நடுவேவிடாதே முடியப்பிடியென்று க்ரியை யாதல்; கடைப்பிடி- அவன் ஶரீரி, அல்லாதவையெல்லாம் ஶரீரதயா பரதந்த்ரமென்கிற எல்லையான அர்த்தத்தைக் கண்டாயே என்று க்ரியையாதல்; திறம்பாதே-இவ்வர்த்தத்திலே சலியாதே என்று நெஞ்சு ஒத்துக்கூட்டுதல்; திறப்பாது-அறம் பாவமிரண்டும் அவனிட்ட வழக்கென்னுமது தப்பாது என்னுதல்; திறப்பாதே- கடைபோகச்சலியாதே பிடி என்னுதல்.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறூர் (நாட்டார்க்கித்யாதி). 96.

97. பிடிசேர் களிறளித்த பேராளா உன்றன்
அடிசேர்ந் தருள்பெற்ற ளன்றே—பொடிசேர்
அனற்கங்கை யேற்ற னவிர்சடைமேல் பாய்ந்த
புனற்கங்கை யென்னும் பேயர்ப் போன்.

பதவுரை:— பிடி சேர்—பெண் யானையுடன் சேர்ந்து (விஷய ப்ரவணனுய்த்) திரிந்த, களிறு—கஜேந்திராழ்வானை, அளித்த—ரக்ஷித்த, பேராளா—மஹாநுபாவனே! பொடி சேர்—பஸ்மத்தை தரித்தவனுய், அனற்கு—நெருப்புக்கு, அம் கை ஏற்றன்—அழகிய கையை ஏந்தின ருத்ரனுடைய, அவிர் சடை மேல்—ப்ரகாசிக்கிற ஜடையின் மேலே, பாய்ந்த—விழுந்த, புனல்—ஜலத்தையுடைத்தான, கங்கை என்னும் பேயர்—கங்கை என்னும் பேரையுடைய, போன்—சிறந்த பெண், உன்தன் அடி சேர்ந்து—உன் திருவடிகளைக் கிட்டி, அருள்பெற்றள் அன்றே—உன் திருவருளை அடைந்தாளல்லவா.

அவ:— தொண்ணூற்றேழாம் பாட்டு. (பிடிசேர்) "அறம்பாவமென்றிரண்டுமாவான்" என்றதுக்கு வ்யாக்யாநம் இப்பாட்டு.

வ்யா:— (பிடிசேர்களிறளித்த) ஜந்மஜ்ஞாநவ்ருத்தங்கள். (100) "शान्तो दान्त उपरतस्तितिक्षुः" (ஶாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷு:) என்னுமவனிறே மோக்ஷத்துக்கதிகாரி. அன்றிக்கே, தன் பக்கல் ப்ரவணமாகாதே விஷயப்ரவணமாகையிறே பாபமாவது; தன் பிடி பக்கல் ப்ரவணமாய் தன் பக்கலின்றிக்கே இருந்த களிற்றை ரக்ஷிக்கும் போது பாபம் தானிட்ட வழக்காக வேணுமிறே. (பேராளா) பிடி சேர்ந்த களிற்றை ரக்ஷித்தானென்றல் அவன் செய்தானுகில் கூடும் என்றிருக்கை. (உன்றனடிசேர்ந்தருள்பெற்றளன்றே) இத்தால் * தர்மம் அவனிட்ட வழக்கு என்கிறது. (பொடிசேரித்யாதி) பஸ்மச் சந்நனுய் அக்நியைக் கையிலே ஏற்றனுயிருந்துள்ள ருத்ரனுடைய விளங்கா நின்ற ஜடைமேலே பாய்ந்த புனலையுடைத்தான கங்கை யென்னும் பேரையுடைத்தான விலக்ஷணையான ஸ்த்ரீ உன் திருவடி களிலே சேர்ந்தன்றே நாட்டுக்குப் பாவநமாயிற்று.

அவ:— "பொடிசேர்" என்றவித்தால் ப்ராயச்சித்தம் பண்ணி அத்தால் சுத்தனன்றியிலே இருக்கிறவனையும் சுத்தனுக்கிற்று திருவடிகளில் ஸ்பர்ஶத்தாலே என்கிறது.

---

* 'த்ரவிபூதஸ் ததா தர்ம:' இத்யாதி வசனத்தை நினைப்பது.

வ்யா:— (பிடிசேர்களிறு) அவன் பிடியை நினைக்க நீ அவனை நினைத்திலையோ? ஒருகால் நினைத்தாலுகில் முன்பு ஸ்வரூபம் † இதுவன்றே என்கிறது. ஜந்மவ்ருத்தங்களன்று ப்ரயோஜநம் என்கிறார். (அருள்பெற்றாள்) பிறரை சுத்தராக்குப்படி பார்த் தருளினாள். 97.

அரு:— தொண்ணூற்றேழாம் பாட்டு. அன்றிக்கே-மோக்ஷாதி காரிகளன்றிக்கே. அனற்கு அங்கை ஏற்றான்-அநலுக்கு அங்கை ஏற்றான். 97.

98. பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால் திரிவ ரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்.

பதவுரை:— பொன் திகழும் மேனி—பொன்போலே பிரகாசிக்கும் வடிவையும், புரி சடை—பின்னின சடையையும், அம் புண்ணியனும்—அழகிய புண்யத்தையும் உடையனான ருத்ரனும், நின்று உலகம் தாய நெடுமாலும்—நின்று உலகங்களையெல்லாம் அளந்த ஸர்வேச்வரனும், என்றும்—எப்பொழுதும், இருவர் அங்கத்தால் திரிவரேலும்—இரு வடிவுடன் திரிந்தார்களேயாகிலும், ஒருவன்—(ஸாதக வேஷம் பூண்ட) சிவன், ஒருவன் அங்கத்து—நெடுமாலின் சரீரத்தைப்பற்றி, என்றும்—எக்காலத்திலும், உளன்—ஸத்தையுடையனாயிருப்பன்.

அவ:— தொண்ணூற்றெட்டாம் பாட்டு. (பொன்திகழுமேனி) ஈச்வரனும் அதிகாரியாய்த் தானும் சிலர் கார்யத்துக்குக் கடவனா யிருக்கிறவனை, இவனுடைய ஸம்பந்தத்தாலே சுத்தனானென்று சொல்லும்படி எங்ஙனே? என்னில்; ஈச்வராபிமாநியாயிருக்கும் போது சொல்லுமதத்தை ப்ரமாணிக்கவொண்ணாது; இவனுடைய ஸ்வரூபத்தைப் பார்க்கலாகாதோ என்கிறார்.

வ்யா:— (பொன்திகழுமேனி) ஸர்வேச்வரனாயிருக்கும்போது மேகச்யாமமாயிருக்குமிறே. (புரிசடை) தாழ்சடையானுக்கும் நீண்முடியானுக்கும் வாசிபார்த்துக்கொள்ளலாமித்தனையிறே. (அம்புண்ணியனும்) (101) "हुत्वात्मानं देवदेवो बभूव" (ஹுத்வாத்-

† இதுவன்றே—விஷயப்ராவண்யமன்றே.

மாநம் தேவதேவோ பபூவ) என்கிறபடியே. (நின்றுலகந்தாய நெடுமாலும்) ஸ்வைரமாக அதிமாநுஷ சேஷ்டிதத்தைப் பண்ணினவனும். அவன் தலையிலும் பிறர் தலையிலுமாகத் திருவடிகளை வைத்தவனும். (என்றுமித்யாதி) இருவரும் ஸபரிகரராய்த் திரிந்தாரேயாகிலும். (ஒருவனித்யாதி) ஒருவனுக்கு ஸ்திதி ஒருத்தன் ஶரீரத்தைப் பற்றி, * "வலத்தனன் திரிபுரமெரித்தவன்" என்னும் படியே.

அவ:— ருத்ரனுடைய ஐஶ்வர்யம் பொய்யோ? என்னில், பகவததீநம் என்கிறார்.

வ்யா:— (நின்றுலகமித்யாதி) ருத்ரன் தலையிலும் நாட்டார் தலையிலும் ஒக்க அடியிட்டவன். (இருவரங்கத்தால்) இரண்டு வடிவுகளாலே என்றுமாம். அங்கத்தில் ஏகதேசத்திலே உளனென்றுமாம். 98.

---

அரு:— தொண்ணூற்றெட்டாம் பாட்டு. புண்ணியனும்—புண்ணியம் பண்ணுகையாலே தேவனானான் என்றபடி. இருவரங்கம்—அங்கசதுரங்கபலம் என்னுமாப்போலே ஸேநை.

மேலுக்கவதாரிகை அருளிச்செய்கிறார் (ருத்ரனுடையவித்யாதி). அங்கம் ஶரீரமாதல் ஏகதேசமாதல். 98.

---

99. உளன்கண்டாய் நன்னெஞ்சே உத்தமனென்றும்
உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்—துளன் கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தினுள்ளானென் றோர்.

பதவுரை:— நல் நெஞ்சே—அநுகூலமான மனமே! உத்தமன்—புருஷோத்தமன், என்றும்—எல்லாக்காலங்களிலும், உளன் கண்டாய்—(நம்மை ரக்ஷிப்பதற்காகவே) இருக்கிறான்; உள்ளுவார் உள்ளத்து—தன்னை நினைப்பவர்கள் மனதிலே, உளன் கண்டாய்—நித்யவாஸம் செய்கிறான்; வெள்ளத்தில் உள்ளானும்—திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளுபவனும்; வேங்கடத்து மேயானும்—திருமலையிலே நிற்கிறவனும், உள்ளத்தில் உள்ளான் என்று—(என்) ஹ்ருதயத்தில் நித்யவாஸம் பண்ணுகிறவன் என, ஓர்—அறிவாயாக.

---

* திருவாய் (1-3-9).

அவ:— தொண்ணூற்றொன்பதாம் பாட்டு. (உளன்கண்டாய்) நாட்டில் பெரியவராயிருக்கிறவர்களும் தங்களுக்கேற க்ஷேத்ரஜ்ஞரா யிருக்கிறபடி அறிந்திருக்கச்செய்தே ஈஸ்வரர்களாக ப்ரமிக்கிறபடி கண்டு திருவுள்ளம் பபப்பட, நாம் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டால் அறுத்துவிழ விடுகைக்கு ஒருத்தன் உண்டுகாண் என்கிறது.

வ்யா:— (உளன்கண்டாய்) இலனானவனை உளனென்கிறதன்று; அவனுடைய ஸத்தை நம்முடைய ரக்ஷணத்துக்கும் நம்முடைய ஸத்தை நம்முடைய விநாஶத்துக்கும். நாம் ப்ரதிபத்தி பண்ணுகிறது பிறரை அஞ்சியன்று; நம்மை அஞ்சி. பித்தத்தாலே மோஹித்துக் கழுத்திலே கயிறிட்டுக் கொண்டேனாகில் அறுத்துவிழவிடுகிடாய் என்று அறிவுடையார்க்குச் சொல்லிவைக்குமாப்போலே. (நன்னெஞ்சே) எம்பெருமான் நமக்கு உளனென்று சொல்லப் பாங்காயிருக்கிற நெஞ்சே! (உத்தமனித்யாதி) அவனுடைய உண்மை ஸௌஹ்ருத்தாய்க்கொண்டு. அதாவது பரஸம்ருத்யேகப்ரயோஜநனா யிருக்கை. (உள்ளுவாரித்யாதி) இவன் ஒருநாள் உளன் என்றிருக்கில், பின்னை இவன் என்றும் நமக்கு உளன் என்றிருக்கும். தான் புகுரப்புக்கால் விலக்காதவர்களுடைய ஹ்ருதயம் விட்டுப்போக அறியான். (வெள்ளத்தினித்யாதி) திருப்பாற்கடலிலே கிடக்கிறதும் திருமலையிலே நிற்கிறதும் தம்முடைய ஹ்ருதயத்திலே புகுருகைக்கு அவஸரம் பார்த்து என்று அறி.

அவ:— புறப்புள்ளார் கிடக்கிறார்.

வ்யா:— (உளன்கண்டாய்) பிறர்க்கு உபதேசிக்கிறவர். எம்பெருமான் உளன் என்றிருக்கிறாரல்லர்; நாம் நமக்கில்லாதாப் போலே அவன் நமக்கு என்றும் உளன். (நன்னெஞ்சே) இவ்வர்த்தத்திலென்னிலும் எனக்கு உபதேசிக்க வல்ல நெஞ்சே. (உத்தமன்) தன் பேறாக உபகரிக்கை. (என்றும்) (102) "असन्नेव स भवति" (அஸந்நேவ ஸ பவதி) ஆனவன்றோடு, (102) "सन्तमेनं ततो विदुः" (ஸந்தமேநம் ததோ விது:) ஆனவன்றோடு வாசியில்லை. (உள்ளுவார்) புகுர ஸம்பவிப்பார். (உள்ளத்துளன்) * "இடவகை

---

* பெரியாழ்-திரு (5-4-10).

ளிகழ்ந்திட்டு". (வெள்ளமித்யாதி) என்றும் உளனானமை காட்டுகிறார். † "அணைப்பார் கருத்தனாவான்". 99.

அரு:— தொண்ணூற்றொன்பதாம் பாட்டு. பிறரை அஞ்சி—பௌத்தாதிகள் ஈச்வரனில்லை என்கிறதுக்கு அஞ்சி "உளன்" என்கிறதன்று; நம்மை அஞ்சி—நம்முடைய ஸத்தை உண்டாக்குகைக்கு அவன் உளன் என்கிறது. இப்போது "உளன்" என்கிறது எப்படி இருக்கிறது என்ன அருளிச்செய்கிறார் (பித்தத்தாலேயித்யாதி).

மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (புறம்புள்ளாரித்யாதி). அங்கங்கே இருக்கிறதெல்லாம் இவனிடத்திலே இருக்கைக்கோ என்ன அருளிச்செய்கிறார் (அணைப்பார்க்கித்யாதி). 99.

100. ஓரடியும் சாடுதைத்த வொண்மலர்ச் சேவடியும்
ஈரடியும் காணலா மென்னெஞ்சே—ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்
மாயவனையே மனத்து வை.

பதவுரை:— என் நெஞ்சே—என்னுடைய மனமே! ஓர் அடியில் தாயவனை—ஒரு திருவடியால் உலகம் முழுவதும் அளந்தவனை, கேசவனை—கேசி என்னும் அஸுரனை அழித்தவனை, தண் துழாய் மாலை சேர்—குளிர்ந்த திருத்துழாய் மாலையால் அலங்கரிக்கப் பட்டுள்ள, மாயவனையே—ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமானையே, மனத்து வை—ஹ்ருதயத்திலே வைப்பாயாக; (இப்படி அவனைப்பற்றினால்) ஓர் அடியும்—திருவுலகளந்த திருவடியையும், சாடு உதைத்த—சகடம் முறிந்துபோம்படி உதைத்த, ஒண் மலர் சே அடியும்—அழகிய புஷ்பம்போல் சிவந்த திருப்பாதமுமான, ஈரடியும்—இரண்டு திருவடிகளையும், காணலாம்—ஸாக்ஷாத்கரிக்கலாம்.

அவ:— நூறும் பாட்டு. (ஓரடியும்) 'பேறும் அத்தாலே; பெறுவதும் அவன் திருவடிகளை அவனாலே பெறுவது' என்கிறது.

வ்யா:— (ஓரடியுப்) லோகத்தை அடங்கலும் தன்னதாக்கின திருவடிகளையும். (சாடித்யாதி) சகடாஸுரனை நிரஸித்த போக்ய

† நான்-திருவ (36).

மான திருவடியையும். (ஈரடியுங்காணலாம்) இவ்விரண்டு திருவடிகளும் ப்ராப்யம். (என்னெஞ்சே) காணவேணுமென்றிருக்கிற என்னெஞ்சே! இதுக்கு உபாயமேதென்னில்; அவன் என்கிறது. (ஓரடியிற்றாயவனை) ஓரடியாலே எல்லாவற்றையும் அளந்த ஸுலபனை. (கேசவனை) விரோதி நிரஸந ஶீலனானவனை. (தண்டுழாய் மாலை சேர் மாயவனையே மனத்துவை) ஸுலபனுமன்றிக்கே விரோதியைப் போக்குமவனுமன்றிக்கே இருக்கிலும் விடவொண்ணாத போக்யனான மாயவனையே. நாம் உன் ஸஹகாரிகளென்றிராதே காண்பதுவும் அவனையே; காட்டுவானும் அவனே. நமக்கு ப்ரதிபத்தியே உள்ளது.

(ஓரடியித்யாதி) சாடுதைத்த ஓரடியையும் திருவுலகளந்த சேவடியையும் காணலாம். காணவொண்ணாதோ என்றிருக்கிற என்னெஞ்சே! (தாயவனை) கீழ்ச்சொன்னவோரடி. (கேசவனை) சாடுதைத்த திருவடிகளை உடையவனை. திருவடிகளைத் தருவானும் விரோதியைப் போக்குவானும். (தண்டுழாய்) போக்யதை. (மாயவன்) இவனென்று நினையாதபடி பண்ணவல்லவன். (மனத்துவை) அநுஸந்தி. 100.

அவ:— (வையமித்யாதி) நினைத்தவாறு பேசியல்லது நிற்க மாட்டாமல் பேசுகிறார். 1.

முதல் திருவந்தாதி வ்யாக்யாநம் முற்றிற்று.

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

---

அரு:— நூறும் பாட்டு. திருவடிகளே உபாயமும் உபேயமுமாகிலும் அவை இரண்டும் அவனாலே பெறவேணுமென்றபடி. 100.

அந்தாதியாகையாலே முதற்பாட்டுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (நினைத்தவாறித்யாதி). 1.

அரும்பதம் முற்றிற்று.

அப்பிள்ளை திருவடிகளே சரணம்.

—○—

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்க்ருஷ்ண ஸூரயே நம:

முதல் திருவந்தாதி

# வியாக்கியானப் பிரமாணத் திரட்டு.

---

1. பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம ।
கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி ॥

[வானர! பாபிகளாயினும், புண்யமுள்ளவராயினும், கொல்லத் தகுந்தவர்களாயிருந்தாலும் குணவானாயிருப்பவனால் (அவன் விஷயத்தில்) கருணை காட்டப்படவேண்டும். குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.]

2. தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: ।
நாஶயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா ॥

[அந்த பக்தர்களை அநுக்ரஹிப்பதற்காக, அவர்களின் உள்ளக் கருத்தினுள் இருக்கும் நான், (என் விஷயமான) ஞானமாகிற ஒளி மிகுந்த விளக்கினால் அஞ்ஞானத்தினால் ஏற்படும் இருளைப் போக்கடிக்கிறேன்.]

3. ஶாஸ்த்ரயோநித்வாத்

[(ப்ரஹ்மம்) ஶாஸ்த்ரத்தைப் ப்ரமாணமாகக் கொண்டிருப்பதால் (ஶாஸ்த்ரமே ப்ரஹ்மத்தை அறிவிக்கிறது).]

4. ஆர்ஷம் தர்மோபதேஶஞ்ச வேதஶாஸ்த்ராऽவிரோதிநா ।
யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர: ॥

[ருஷிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட வேதங்களையும், தர்மங்களை உபதேசிக்கும் ஸ்ம்ருதி முதலியவற்றையும் (அந்த) வேத சாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத தர்க்கத்தினால் எவனொருவன் விசாரிக்கிறானோ அவனே தர்மத்தை அறிகிறான்; மற்றவன் அறியமாட்டான்.]

---

1. ரா-யு (116-44). 2. கீதை (10-11). 3. ப்ர. ஸூ (1-1-3). 4. மநு (12-106).

5. ந்யாயாநுக்ருஹீதஸ்ய வாக்யஸ்யாऽர்த்தநிஶ்சாயகத்வாத்
[ந்யாயத்தினல் அநுக்ரஹிக்கப்பட்ட வாக்யத்துக்கே அர்த்தத்தை நிச்சயிக்கும் தன்மை இருப்பதால்.]

6. பீஷாऽஸ்மாத் வாத: பவதே। பீஷோதேதி ஸூர்ய: ।
பீஷாऽஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச। ம்ருத்யுர் தாவதி பஞ்சம: ॥
[இந்தப் பரமபுருஷனிடத்தில் பயத்தினலேயே காற்று அடிக்கிறது; (இவனிடத்தில்) பயத்தினலேயே ஸூர்யன் உதிக்கிருன்; அக்னியும், இந்திரனும், ஐந்தாமவனை ம்ருத்யுவும் இவனிடத்தில் பயத்தினலேயே தங்கள் காரியங்களைச் செய்கிருர்கள்.]

7. நிர்விஶேஷசிந்மாத்ரம் ப்ரஹ்மைவ ஸத்யம்। அந்யத் ஸர்வம் மித்யா।
[விசேஷணங்களற்ற ஞானமாத்ரமாயிருக்கும் ப்ரஹ்மமே உண்மை. மற்றவையெல்லாம் பொய்.]

8. பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்
[உலகிற்கு ஸ்வாமியாகவும், தனக்குத் தானே ஈச்வரனுயுமிருப்பவன் (நாராயணன்).]

9. யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:
[எந்தப் பரமாத்மாவானவன், எல்லா வஸ்துக்களுடைய ஸ்வரூபத்தையும், ஸ்வபாவங்களையும் அறிகிருனே, எவனுடைய ஸங்கல்பமானது ஞானமயமாயிருக்கிறதோ.....]

10. யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்। ந பிபேதி குதஶ்சநேதி ॥
[எந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து, மனத்துடன் கூடிய வாக்குகள், (அதை) அளவிட்டறியாமல் திரும்புகின்றனவோ, அந்தப் பரமாத்மாவின் ஆநந்தத்தை அறிந்தவன் எதனிடமும் பயப்படமாட்டான்.]

11. வித்யாதராப்ஸரோயக்ஷரக்ஷோகந்தர்வகிந்நரா: ।
பிஶாசோ குஹ்யகஸ் ஸித்தோ பூதோऽமீ தேவயோநய: ॥
[வித்யாதரன், அப்ஸரஸ், யக்ஷன், கந்தர்வன், கின்னரன், பிஶாசம், குஹ்யகன், ஸித்தன், பூதம் ஆகிய இவை தேவர்களிடமிருந்து உண்டானவை.]

---

5. ஸ்ரீபாஷ்யம் ஆரம்பம். 6. தைத்-ஆநந்த (8-1). 7. ஸ்ரீபாஷ்யம் மஹாபூர்வபக்ஷம். 8. தை-நா-11. 9. முண்ட (1-1-10). 10. தை-ஆ (9-1). 11. அமரகோசம் (1-22).

12. தஸ்யா: ஸ்தநம் பபௌ க்ருஷ்ண: ப்ராணைஸ் ஸஹ நநாத ச ।
ஸ்தந்யம் தத்விஷஸம்மிஶ்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ: ॥

[கிருஷ்ணன் அந்தப் பூதனையின் முலையை பிராணனுடன் கூட குடித்தான்; (பிறகு) முழங்கினான்; ஜகத்திற்கெல்லாம் ஸ்வாமியாகிய அவனுக்கு விஷத்துடன் கூடிய அந்தப் பால் இனிதாயிருந்தது.]

13. சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் ।
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ॥

[கிருஷ்ண! மனம் நிலையற்றதாகவும், நிலைகலங்கச் செய்வதாயும், பலமுள்ளதாகவும், (கீழான விஷயங்களில்) நிலையானதாகவுமிருக்கிறதன்றோ. வாயுவைப்போல், அதை அடக்குவதையும் மிகவும் செய்தற்கரியதாகவே நான் நினைக்கிறேன்.]

14. ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப ஏவ ச ।
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞாநமேவ ச ॥

[ஸத்வகுணத்திலிருந்து ஜ்ஞானமுண்டாகிறது. ரஜோகுணத்திலிருந்து (ஸ்வர்க்கம் முதலிய பலன்களில்) ஆசை உண்டாகிறது. தமோகுணத்திலிருந்து கவனமின்மையினாலேற்படும் அஸத்கர்மங்களில் ப்ரவ்ருத்தியும், (ஒன்றை மற்றொன்றாக அறிதலாகிய) விபரீத ஜ்ஞானமும், (ஞானமின்மையாகிய) அஜ்ஞானமும் ஏற்படுகின்றன.]

15. விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந: ।
ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே ॥

[(இந்திரியங்களுக்கு) ஆஹாரமாகிய விஷயங்களற்றவனான மனிதனுக்கு விஷயங்கள் மட்டும் விட்டுப்போகின்றன; விஷயங்களில் ஆசை நீங்குவதில்லை. ஆசையும் (விஷயங்களுக்கு) மேலான ஆத்ம ஸ்வரூபத்தைக் கண்டவுடன் நீங்குகின்றது.]

16. தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர: ।
ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீரஜய்ய: ஶாஶ்வதோ த்ருவ: ॥

[(ஸ்ரீராமபிரான்) மூலப்ரக்ருதிக்கு மேற்பட்டவனாகவும், (எல்லாவற்றையும்) தரிப்பவனாகவும், சங்கசக்ரகதைகளை உடையவனாகவும், ஸ்ரீவத்ஸமென்னும் மறுவைத் திருமார்பிலே உடையவனாகவும், எப்போதும் ஸ்ரீதேவியுடன் கூடியவனாகவும், எப்போதும் ஜயிக்கப்படாதவனாகவும், நிலையானவனாகவுமிருப்பவன்.]

---

12. ஹரிவம்சம் (65). 13. கீதை (6-34). 14. கீதை (14-17).
15. கீதை (2-59). 16. ரா-யு (114-15) மந்தோதரீவாக்யம்.

17. அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா

[ஸர்வாந்தர்யாமியான நாராயணன் (எல்லா) ஜனங்களினுள்ளும் நுழைந்தவனாய் நியமிக்கிறான்.]

18. ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந: ।
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்தசிந்தக: ॥

[பிறந்துகொண்டிருக்கும்போது எந்தப் புருஷனை மதுஸூதனன் பார்க்கிறானோ அவனே ஸத்வகுணமுடையவனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷபலத்தை நினைப்பவன்.]

19. தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா ।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥

[தேவனாகிய என்னால் நிர்மிக்கப்பட்டதும், முக்குணங்களை உடையதுமான இந்த என்னுடைய மாயை தாண்ட அரிதானது. என்னையே எவர்கள் சரணமடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்.]

20. யஸ்ய நாதேந தைத்யாநாம் பலஹாநிரஜாயத ।
தேவாநாம் வவ்ருதே தேஜ: ப்ரஸாதஶ்சைவ யோகிநாம் ॥

[எந்தப் பாஞ்சஜந்யத்தின் ஒலியினால் அஸுரர்களுக்குக் குறைவு ஏற்பட்டதோ, தேவர்களுடைய தேஜஸ் விருத்தியடைந்ததோ, யோகிகளுடைய ஆநந்தம் அதிகரித்ததோ.....]

21. ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத் ।

[அந்தச் சங்கநாதம் திருதராஷ்ட்ரபுத்ரர்களுடைய ஹ்ருதயங்களைப் பிளந்தது.]

22. அத்யைவ நஷ்டம் குரூணாம் பலமிதி தார்த்தராஷ்ட்ரா மேநிரே ।
ஏவம் தத்விஜயாऽऽகாங்க்ஷிணே த்ருதராஷ்ட்ராய ஸஞ்ஜயோ-ऽகதயத் । ....ஈத்ருஶீ பவதீயாநாம் விஜயஸ்திதிரிதி ॥

[(சங்கநாதத்தைக்கேட்டவுடன்) 'கௌரவர்களின் ஸேனை இன்றே நசித்தது' என்று திருதராஷ்ட்ரபுத்ரர்கள் நினைத்தார்கள். கௌரவர்களின் வெற்றியை விரும்பும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் இப்மாதிரி சொன்னான்;— "........உம்மைச்சேர்ந்தவர்கள் வெற்றியடையும் நிலை இப்படியிருக்கிறது" என்று.]

---

17. யஜு. ஆ (3-11-21). 18. பார. சாந்தி (358-73). 19. கீதை (7-14). 20. வி. பு (5-21-29). 21. கீதை (1-19). 22. கீதாபாஷ்யம் (1-19).

23. ய ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்பஸ் ஸோऽந்வேஷ்டவ்ய:

[எந்த ஆத்மாவானவன், பாபமற்றவனாகவும், கிழத்தனமற்றவனாகவும், ம்ருத்யுவற்றவனாகவும், ஶோகமற்றவனாகவும், பசியற்றவனாகவும், தாகமற்றவனாகவும், வீண்போகாத விருப்பத்தை உடையவனாகவும், வீணாகாத ஸங்கல்பத்தை உடையவனாகவும் இருக்கிறானோ அவன் தேடத்தக்கவன்.]

24. த்யௌ: பதேத் ப்ருதிவீ ஶீர்யேத் ஹிமவாந் ஶகலீபவேத் ।
ஶுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே ! ந மே மோகம் வசோ பவேத் ॥

[க்ருஷ்ணையே ! ஆகாயம் கீழ் விழக்கூடும்; பூமி சுக்கலாகக்கூடும்; ஹிமாசலபர்வதம் தூளாகக்கூடும்; ஸமுத்ரம் வற்றக்கூடும்; என்னுடைய வார்த்தை வீணாகாது.]

25. தாதூநாமிவ ஶைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந் ।

[ஒரு சிறந்த மலை தாதுக்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருப்பது போல், ஸ்ரீராமபிரானும் குணங்களுக்கெல்லாம் பெரியதோர் இருப்பிடமாவர்.]

26. தே தமூசுர் மஹாத்மாநம் பௌரஜாநபதைஸ் ஸஹ ।
பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே ॥

[நகரத்திலும், கிராமங்களிலும் உள்ள ஜனங்களுடன் கூடிய அவர்கள் மஹாத்மாவான அந்த தசரதரிடம் (பின்வருமாறு) சொன்னார்கள்:— "அரசே! உம்முடைய புத்திரனிடம் பல கல்யாணகுணங்கள் இருக்கின்றன"]

27. அக்நிஹோத்ராதி து தத்கார்யாயைவ தத்தர்சநாத்

[அக்நிஹோத்ரம் முதலிய ஆச்ரமகர்மம், பக்தியின் உத்பத்தியாகிற கார்யத்தின் பொருட்டே அநுஷ்டிக்கப்படவேண்டும்; அப்படியே ச்ருதி காணப்படுவதால்.]

28. ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்

[(வித்யை) சாகும் வரையில் அநுஷ்டிக்கப்பட வேண்டியதே; அந்த எல்லாக் காலங்களிலும் (உபாஸநவிதி) காணப்படுகிறதன்றோ.]

---

23. சாந். (8-7-1). 24. பார-உத் (70-48). 25. ரா-கி (15-21) தாரா வாக்யம். 26. ரா-அ (2-26). 27. ப்ர-ஸூ (4-1-16). 28. ப்ர-ஸூ (4-1-12).

29. தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந
தாநேந தபஸாऽநாஶகேந ।

[ப்ரஹ்மஜ்ஞானிகள், இந்தப் பரமாத்மாவை வேதாத்யயனத்தினாலும், யஜ்ஞத்தினாலும், தானத்தினாலும், (பலத்தில்) ஆசையற்ற தபஸ்ஸினாலும் அறிய விரும்புகின்றார்கள்.]

30. விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல: ।
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥

[(ராவணா!) ஸ்ரீராமபிரான் தர்மத்தை அறிந்தவராகவும், சரணமடைந்தவரிடம் வாத்ஸல்யமுடையவராகவும் பிரஸித்தமானவர். நீ உயிர் வாழ விரும்பினையாகில் அவருடன் உனக்கு நட்பு உண்டாகட்டும்.]

31. யஶ்ச ராமம் ந பஶ்யேத்து யஞ்ச ராமோ ந பஶ்யதி ।
நிந்திதஸ் ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே ॥

[எவனொருவன் ராமனைப் பார்க்கவில்லையோ, எவனை ராமனும் கடாக்ஷிக்கவில்லையோ, அவன் உலகத்தில் நிந்திக்கப்பட்டவனாய் வாழ்வான். தன்னுடைய மனமும் இவனை நிந்திக்கும்.]

32. காலேஷ்வபி ச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸு சாச்யுத! ।
ஶரீரே ச கதௌ சாபி வர்த்ததே மே மஹத்பயம் ॥

[அடியவர்களை நழுவவிடாதவனே! (மோக்ஷோபாயங்களான) எல்லாப் புண்யகாலங்களிலும், எல்லா திசைகளிலுமுள்ள புண்ய க்ஷேத்ரங்களிலும், (தர்மஸாதனமான) சரீரத்திலும், சரீராந்த கதியிலும் அடியேனுக்கு மிகுந்த பயமிருக்கிறது.]

33. ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய
பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே ।

[இந்த ஜீவன் இந்த சரீரத்தினின்றும் கிளம்பிப் பரஞ்சோதியான நாராயணனை அணுகி, ஸ்வரூபப்ராப்தியடைகிறான்.]

34. த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத் ।
பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்டவா: ॥

[த்வேஷிப்பவனின் அன்னம் புஜிக்கத்தக்கதன்று; த்வேஷிப்பவனை புஜிப்பிக்கவும் கூடாது. அரசனே! நீ பாண்டவர்களை த்வேஷிக்கிறாய். பாண்டவர்கள் எனக்கு ப்ராணனன்றோ.]

---

29. ப்ருஹ (6-4-22). 30. ரா-ஸு (21-20). 31. ரா-அ (17-14).
32. ஜிதந்தே (1-9). 33. சாந். (8-12-2). 34. பார-உத் (74-27).

35. யஸ்த்வாம் த்வேஷ்டி ஸ மாம் த்வேஷ்டி

[எவன் உன்னை த்வேஷிக்கிருனே அவன் என்னை த்வேஷிக்கிருன்.]

36. த்ருஷ்ட்வா க்ருஷ்ணம் ததாயாந்தம் ப்ரதபந்தமிவௌஜஸா ।
யதார்ஹம் கேஶவே வ்ருத்திமவஶா: ப்ரதிபேதிரே ॥

[தன்னுடைய வீர்யத்தினுல் (பிறரைக்) கொளுத்துபவன் போல் அப்படி எழுந்தருளும் கண்ணனைப் பார்த்துப் பரவசமடைந்த அவர்கள் கேசவனுகிற அவன் விஷயத்தில் நமஸ்காரம் முதலிய காரியங்களைத் தகுந்தபடி செய்தார்கள்.]

37. தத: பத்மபலாஶாக்ஷ: க்ருத்வாऽऽத்மாநம் சதுர்விதம் ।
பிதரம் ரோசயாமாஸ ததா தஶரதம் ந்ருபம் ॥

[பிறகு, தாமரை போன்றதும், பலாசபுஷ்பத்தைப் போன்றதுமான கண்களை உடைய எம்பெருமான் தன்னை நான்கு விதமாக ஆக்கிக்கொண்டு, அச்சமயத்தில் அரசனுன தசரதனைப் பிதாவாக விரும்பினர்.]

38. அத்யுத்கடை: புண்யபாபைரிஹைவ பலமஶ்நுதே ।
த்ரிபிர் வர்ஷைஸ் த்ரிபிர் மாஸைஸ் த்ரிபி: பக்ஷைஸ் த்ரிபிர் திநை: ॥

[மிகுந்ததான புண்யபாபங்களைச் செய்வதினுல் (மனிதன்) மூன்று வருஷங்களிலாவது, மூன்று மாதங்களிலாவது, மூன்று பக்ஷங்களிலாவது, மூன்று தினங்களிலாவது இவ்வுலகிலேயே பலத்தை அடைகிருன்.]

39. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥

[(பலஸாதனமான) எல்லா தர்மங்களையும் வாஸனையுடன் விட்டு என்னை ஒருவனையே உபாயமாக அடை; நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; துக்கிக்காதே.]

40. ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா மநஸா து விஶுத்தேந ।

[(பரமாத்மா) கண்ணுலும், வாக்காலும் அறியப்பட முடியாதவன்; (விவேகம் முதலியவைகளால்) சுத்தியடைந்த மனத்தாலேயே அறியப்படுகிருன்.]

---

36. பார-ஸபா (75). 37. ரா-பா (15-30). 39. கீதை (18 66).

41. வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தந ।
பஹுஶாகா ஹ்யநந்தாஶ்ச புத்தயோऽவ்யவஸாயிநாம் ॥

[குருகுலத்துதித்தவனே! (ஆத்மஸ்வரூபத்தின் உண்மையைப் பற்றிய) நிச்சயத்துடன் கூடிய புத்தி (மோக்ஷபலம் ஒன்றையே குறிக்கொண்டிருப்பதால்) ஒன்றுயிருக்கும்; அந்த நிச்சயமற்றவர்களுடைய புத்திகள் (பல பலன்களைக் குறிக்கொண்டிருப்பதால்) பல கிளைகளுடன் கூடியதாகவும், கணக்கற்றவையாகவுமிருக்கும்.]

42. ஸ்ருஷ்டஸ் த்வம் வநவாஸாய ஸ்வநுரக்தஸ் ஸுஹ்ருஜ்ஜநே ।
ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி ॥

[குழந்தாய்! நீ வனத்தில் வஸிப்பதற்காகவே ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கிருய்; உன்னுடைய ஸுஹ்ருத்தான ராமனிடம் மிகவும் அன்பு பூண்டவனுயிருக்கிருய்; உன் தமையனுகிய ராமன் நடந்து செல்லுகையில், (அந்த நடையழகில் ஈடுபட்டு) (அவனை ரக்ஷிப்பதில்) கவனமில்லாமல் இருந்துவிடாதே.]

43. ஸ ததர்ஶ ததோ ராமம் திஷ்டந்தமபராஜிதம் ।
ஆலிகந்தமிவாகாஶமவஷ்டப்ய மஹத்தநு: ॥

[ஜயிக்கப்படாதவனும், ஆகாயத்தை அளாவிநிற்கும் பெருவில்லை அழுத்திப்பிடித்துக்கொண்டு நிற்பவனுமான ராமனை அந்த ராவணன் பார்த்தான்.]

44. போக்யா வாமபி நாந்தரீயகதயா புஷ்பாங்கராகைஸ் ஸமம்
நிர்வ்ருத்தப்ரணயாதிவாஹநவிதௌ நீதா பரீவாஹதாம் ।
தேவி த்வாமநு நீளயா ஸஹ மஹீ தேவ்யஸ் ஸஹஸ்ரம் ததா
யாபிஸ்த்வம் ஸ்தநபாஹுத்ருஷ்டிபிரிவ ஸ்வாபி: ப்ரியம் ஶ்லாகஸே ॥

[ஹே ஸ்ரீதேவி! உம்முடைய ஸ்தனம், திருக்கை, திருக்கண்ணுக்கு இவைகளைக்கொண்டு உம்முடைய காந்தனை உகப்பிப்பது போல், எந்த பூமிநீளாதிதேவிகளைக் கொண்டும் உகப்பிக்கிறீரோ, உம்முடன் கூடியவளும், நீளாஸஹிதையுமான அந்த பூமிப்பிராட்டியும் மற்றும் ஆயிரக்கணக்கான தேவிகளும், உமக்கும் எம்பெருமானுக்கும், புஷ்பம் சந்தனம் முதலியவைகளைப் போல் விட்டுப்பிரியாத உபகரணமாயிருக்கையால் போக்யர்களாயிருப்பர்கள்; ப்ரணயரஸம் கட்டுக்கடங்காமல் அதிகரிக்கும்போது (அந்த தேவிகள்) (அந்த

41. கீதை (2-41). 42. ரா-அ (40-5). 43. ரா-யு (100-12).
44. ஸ்ரீகுணரத்நகோசம்.26.

ரஸத்திற்கு) வடிகாலாயிருக்கும் தன்மையை அடைவிக்கப்படு கிறுர்கள்.]

45. அப்ரவீச்ச ததா வாக்யம் ஜாதக்ரோதோ விபீஷண: ।
அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந் ப்ராதரம் ராக்ஷஸாதிபம் ॥

[ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடைய விபீஷணன் அப்போது மிகவும் கோபங்கொண்டவனுய், ஆகாயத்தில் கிளம்பினவனுய், ராக்ஷஸர் களுக்கு அதிபதியான தன் ஸஹோதரனைக் குறித்து இந்த வாக்யத்தைச் சொன்னுன்.]

46. யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம் ।

[எந்த பக்தர்கள் எவ்விதமாக நினைத்துக்கொண்டு என்னை ஆச்ரயிக்கிறுர்களோ, அவ்விதமாகவே ஆனவனுய் (அர்ச்சாரூபியான) நான் அவர்களை அடைகிறேன்.]

47. ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்நவதநேக்ஷணாம் ।
க்ருத்வாऽऽத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ணரஜதாதிபி: ॥
தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் யஜேத் தாம் விசிந்தயேத் ।
விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம் ॥

[அழகிய உருவமுள்ளதும், மலர்ந்த திருமுகமண்டலத்தையும் திருக்கண்களையும் உடையதும், தனக்குப் பிரியத்தைத் தருவதுமான விஷ்ணுவின் ஒரு பிம்பத்தை, தங்கம், வெள்ளி முதலிய திரவியங் களாலே செய்து அதைப் பூஜிக்கக்கடவன்; அதை வணங்கக்கடவன்; அதை ஆராதிக்கக்கடவன்; அதை தியானிக்கக்கடவன். (இதைச் செய்தாலுகில்) தோஷங்கள் நீங்கப்பெற்றவனுய், பரரூபத்துடன் கூடிய அந்த எம்பெருமானையே அடைகிறுன்.]

48. அப்ரவீத் த்ரிதசஸ்ரேஷ்டாந் ராமோ தர்மப்ருதாம் வர: ।
ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம் ॥

["நான் என்னை மனுஷ்யனுகவும், தசரதரின் பிள்ளை ராமனுக வும் நினைக்கிறேன்" என்று தர்மவான்களில் மேலானவனுன ராமன் தேவச்ரேஷ்டர்களைக் குறித்துச் சொன்னுன்.]

49. தேவீம் ப்ரதி ருத்ர:,—
தத: க்ரோதபரீதேந ஸம்ரக்தநயநேந ச ।
வாமாங்குஷ்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய சிரோ மயா ॥

45. ரா-யு (16-17). 46. கீதை (4-11). 47. விஷ்ணுதர்மம் (103-16). 48. ரா-யு (120-11). 49. மாத்ஸம்-182.

[தேவியைக்குறித்து ருத்ரன் — 'பிறகு கோபவசப்பட்டவனும், சிவந்த கண்களை உடையவனுமான என்னால், அப்பிரம்மனுடைய தலை இடதுகைக்கட்டைவிரல் நுனியால் வெட்டப்பட்டது.']

50. உபாஸநம் த்ருவா ஸ்ம்ருதி: தர்ஶநஸமாநாகாரதா ப்ரத்யக்ஷதாபத்தி:

[உபாஸனம், நிலையான நினைவு, பார்ப்பதற்கு ஸமானமான ஆகாரத்தை உடைத்தாயிருக்கை, ப்ரத்யக்ஷமாயிருக்கும் தன்மையை அடைதல் (ஆகிய இப்பதங்களெல்லாம் ஒரே பொருளையுடையவை).]

51. பக்த்யா மாமபிஜாநாதி யாவாந் யஶ்சா஽ஸ்மி தத்த்வத: ।
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விஶதே ததநந்தரம் ॥

[(ஸ்வரூபத்தினாலும், ஸ்வபாவத்தினாலும்) நான் எப்படியிருக்கிறேனோ, (குணத்தினாலும், விபூதியினாலும்) நான் எம்மாதிரியிருக்கிறேனோ, அப்படிப்பட்ட என்னை பக்தியினால் உள்ளபடி அறிகிறான். என்னை உள்ளபடி அறிந்து, அதன் பிறகு, அந்த பக்தியினாலேயே என்னை அடைகிறான்.]

52. பரமாபதமாபந்நோ மநஸாऽசிந்தயத் ஹரிம் ।
ஸ து நாகவர: ஶ்ரீமாந் நாராயணபராயண: ॥

[மேலான ஆபத்தை அடைந்தவனும், கைங்கர்யஸ்ரீயை உடையவனும், நாராயணனையே மேலான கதியாகக்கொண்டவனுமான அந்த கஜேந்திராழ்வான் மனதினாலே ஹரியை நினைத்தான்.]

53. தது³பர்யபி பாதராயணஸ் ஸம்பவாத் ।

['ப்ரஹ்மோபாஸனம், (மநுஷ்யர்களைக் காட்டிலும்) மேலானவர்களான தேவர்களுக்கும் (கூடும்)' என்று பாதராயணர் (நினைக்கிறார்); (அவர்களுக்கும்) (மோக்ஷத்தில் விருப்பமுடைத்தாயிருக்கையாகிற) அர்த்தித்வமும், (மோக்ஷஸாதநத்தை அநுஷ்டிக்கத்தக்க) ஸாமர்த்யமும் இருப்பதால்.

54. ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய: ।
தேவகந்தர்வஸங்காஶாஸ் தத்ர தே ந்யவஸந் ஸுகம் ॥

[தேவகந்தர்வர்களைப் போல் விளங்குபவர்களும், வனத்தில் ரமிப்பவர்களுமான (ராமன், லக்ஷ்மணன், ஸீதை ஆகிய) அம்மூவரும், ஓர் அழகிய பர்ணசாலையைக் கட்டி அதிலேயே ஸுகமாக வசித்தனர்.]

---

50. கீதை (18-55). 52. விஷ்ணுதர்மம் (69-47). 53. ப்ர-ஸூ (1-3-25). 54. ரா-பா (1-31).

55. அஹமமரவரார்ச்சிதேந தாத்ரா
ஸம இதி லோகஹிதாஹிதே நியுக்த: ।
ஹரிகுருவஶகோऽஸ்மி ந ஸ்வதந்த்ர:
ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு: ॥

[தேவர்களுள் சிறந்தவர்களாலும் பூஜிக்கப்படும் ஸர்வேச்வரனால் '(எல்லாரிடமும்) ஸமமாயிருப்பவன்' என்னும் காரணத்தினால் உலகத்திற்கு ஹிதத்தைக் கொடுப்பதிலும், அஹிதத்தைப் போக்குவதிலும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; (நான்) ஸ்வதந்திரனல்லேன்; விஷ்ணு என்னையும் நியமிப்பதில் சக்தியுள்ளவன்.]

56. ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாஶஹஸ்தம்
வததி யம: கில தஸ்ய கர்ணமூலே ।
பரிஹர மதுஸூதநப்ரபந்நாந்
ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ॥

[பாசத்தைக் கையில் கொண்ட தன்னுடைய கிங்கரனைக் கண்ணுமேலே நோக்கி, அவனுடைய காதினுள் யமன் (பின்வருமாறு) சொல்லுகிறான்:— "மதுஸூதனனை ஶரணமடைந்தவர்களை அணுகாதே; நான் மற்ற மனிதர்களுக்கே ப்ரபு; வைஷ்ணவர்களுக்கு ப்ரபுவல்ல".]

57. கமலநயந! வாஸுதேவ! விஷ்ணோ!
தரணிதராச்யுத! ஶங்கசக்ரபாணே! ।
பவ ஶரணமிதீரயந்தி யே வை
த்யஜ பட! தூரதரேண தாநபாபாந் ॥

[தூத! "செந்தாமரைக் கண்ணா! வாஸுதேவா! விஷ்ணோ! பூமியை தரிப்பவனே! அடியார்களை நழுவவிடா அச்சுதனே! சங்க சக்கரங்களைத் திருக்கையில் தரித்தவனே! (எனக்கு) நீயே கதியாக வேணும்" என்று எவர்கள் சொல்லுகிறார்களோ, பாபமற்றவர்களான அவர்களை வெகுதூரத்தில் விட்டுப்போ.]

58. கர்த்தா ஸர்வஸ்ய லோகஸ்ய ப்ரஹ்மா ப்ரஹ்மவிதாம் வர: ।

[எல்லா உலகையும் ஸ்ருஷ்டிப்பவரும் ப்ரஹ்மஜ்ஞானிகளுள் சிறந்தவருமான ப்ரஹ்மா.]

59. த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே ।

55. வி-பு (3-7-15). 56. வி-பு (3-7-14). 57. வி-பு (3-7-33).
58. ரா-யு (120-3). 59. முண்டக (3-1-1); ஶ்வேதா (4-6).

தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி ||

[ஸமானமான குணங்களை உடையவையும், (எப்போதும்) கூடியிருப்பவையும், (ஜ்ஞானமாகிற) அழகிய இறக்கையை உடையவையுமான இரு பக்ஷிகள் (ஜீவனும், ஈச்வரனும்), ஒரே மரத்தில் (தேஹத்தில்) இருக்கின்றன. அவைகளில் ஒன்று (ஜீவன்) பழுத்த கனியை (பக்வமான கர்மபலத்தை) புசிக்கிறது. மற்றொன்று (பரமாத்மா) அக்னியை உண்ணுமலேயே பிரகாசிக்கின்றது.

60. ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந: |
மாம் நயேத் யதி காகுத்ஸ்தஸ் தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத் ||

[ஶத்ருக்களின் பலத்தை அழிப்பவரான ஸ்ரீராமபிரான் லங்கையை அம்புகளாலே கலங்கச்செய்து என்னை அழைத்துப் போவாராகில், அப்படிச் செய்வது அவருக்கே தகுந்ததாகும்.]

61. ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந்
நாயம் பூத்வா பவிதா வா ந பூய: |
அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமானே ஶரீரே ||

[(ஆத்மா) ஒருபோதும் பிறக்கிறதுமில்லை; இறப்பதுமில்லை; கல்பாதியிலும் உண்டாவதில்லை; கல்பாந்தத்திலும் மறுபடி அழிவில்லை; பிறப்பற்றவனாகவும், நித்யனாகவும், பரிணாமமற்றவனாகவும், பழைமையானவனாயிருந்தும் புதியவனாகவுமிருக்கும் இந்த ஆத்மா தேஹம் கொல்லப்படும்போது இறப்பதில்லை.]

62. ஜாயஸ்வ ம்ரியஸ்வ

[பிறக்கக்கடவாய்; இறக்கக்கடவாய்.]

63. நாஹம் ப்ரகாஶஸ் ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத: |
மூடோऽயம் நாऽபிஜாநாதி லோகோ மாமஜமவ்யயம் ||

[(மனுஷ்யனாயிருக்கும் தன்மையுடன்) கூடியிருக்கையாகிற மாயையினால் சூழப்பட்டிருக்கும் நான் எல்லாருக்கும் ப்ரகாசிக்க மாட்டேன். அறிவற்றதான உலகம் என்னைப் பிறப்பற்றவனாகவும், அழிவற்றவனாகவும் அறிவதில்லை.]

64. வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந! |
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கஶ்சந ||

---

60. ரா-ஸு (39-30). 61. கீதை (2-20). 63. கீதை (7-25).

[அர்ஜுநா! சென்றவையும், இருப்பவையும், உண்டாகப்போகுமவையுமான பூதங்களை நான் அறிகிறேன்; என்னை ஒருவனும் அறிவதில்லை.]

65. ஸங்கைஸ் ஸுராணாம் திவி பூதலஸ்தைஸ்
ததா மநுஷ்யைர் ககநே ச கேசரை: ।
ஸ்துத: க்ரமாந் ய: ப்ரசகார ஸர்வதா
மமாஸ்து மாங்கள்யவிவ்ருத்தயே ஹரி: ॥

[ஸ்வர்க்கத்தில் தேவஸமூஹங்களாலும், அப்படியே பூமிப்ரதேசத்திலிருக்கும் மனுஷ்யர்களாலும், ஆகாசத்தில் ஆகாச ஸஞ்சாரிகளாலும் துதிக்கப்பட்டவனாய் எந்த பகவான் திருவடிகளை வைத்தருளினானோ, (திரிவிக்கிரமாவதாரம் செய்த) அந்த ஹரி எனக்கு எப்போதும் மங்களங்களின் விருத்தியின் பொருட்டு ஆகட்டும்.]

66. இதம் ஶரீரம் லோகஸ்ய க்ருத்ஸ்நஸ்ய சரதா ஹிதம் ।
பாண்டரஸ்யாதபத்ரஸ்ய சாயாயாம் ஜரிதம் மயா ॥

[எல்லாவுலகத்திற்கும் நன்மையைச்செய்யும் என்னால் இந்த சரீரம் வெண்குடை நிழலின் கீழ் கிழத்தனத்தை அடைவிக்கப்பட்டது.]

67. தயா ஸஹாஸீநமநந்தபோகிநி ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநபலைகதாமநி ।
பணாமணிவ்ராதமயூகமண்டலப்ரகாஶமாநோதரதிவ்யதாமநி ॥

[மேலான ஞானத்திற்கும், ஶக்திக்கும் நிகரற்ற இருப்பிடமானவனும், தன் படங்களிலிருக்கும் மணிஸமூஹங்களுடைய கிரண மண்டலங்களாலே ஒளிவிடும் மத்யப்ரதேஶத்தையுடைய (பகவானுடைய) திவ்யாந்த:புரத்தையுடையவனுமான திருவனந்தாழ்வானுடைய திருமேனியில் அந்தப் பெரியபிராட்டியாருடன் கூட எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை.]

68. யஸ்யாத்மா ஶரீரம்

[எந்தப் பரமாத்மாவுக்கு ஆத்மா சரீரமோ.....]

69. அவஶ்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம் ।
நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி ॥

---

64. கீதை (7-26). 65. விஷ்ணுதர்மம். 66. ரா-அ (2-7). 67. ஸ்தோ-ர (39). 68. ப்ருஹ (5-7-22). 69. ப்ரஹ்மவைவர்த்தம், ப்ரக்ருதிகண்டம் (26-70).

[மனிதனால் செய்யப்பட்ட புண்யபாபரூபமான கர்மங்களின் பலன் கட்டாயம் அனுபவிக்கப்படவேண்டும். நூறுகோடிகல்பங்களானாலும் கர்மம் அனுபவியாமல் கழியாது.]

70. மஹாத்மாநஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதிமாஸ்ரிதா: ।
பஜந்த்யநந்யமநஸோ ஜ்ஞாத்வா பூதாதிமவ்யயம் ॥

[அர்ஜுன! தேவஸ்வபாவத்துடன் கூடிய மஹாத்மாக்களோவெனில் ஸகலபூதங்களுக்கும் காரணனாகவும், குறைவற்றவனாகவுமிருக்கும் என்னை அறிந்து, வேறெதிலும் மனம் செலுத்தாதவர்களாய், (என்னை) உபாஸிக்கிறார்கள்.]

71. த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குஶவிபூதய: ।
ராமாநுஜபதாம்போஜ ஸமாஶ்ரயணஶாலிந: ॥

[எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளை ஆச்ரயித்தவர்கள் பிரமன் முதலியவர்களுடைய தடையற்ற செல்வங்களையும் த்ருணமாக நினைப்பவர்கள்.]

72. ஸம்ஜ்ஞாயதே யேந ததஸ்ததோஷம்
ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம் ।
ஸந்த்ருஶ்யதே வாऽப்யதிகம்யதே வா
தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யதுக்தம் ॥

[எந்த அறிவினால், தோஷமற்றதும், சுத்தமானதும், மிகவும் மலமற்றதும் ஒப்புயர்வற்றதுமான அந்தப் பரவஸ்து அறியப்படுகிறதோ, பார்க்கப்படுகிறதோ, அடையப்படுகிறதோ, அதுவே ஜ்ஞானம்; அதைக்காட்டிலும் வேறானது அஜ்ஞானமெனப்படுகிறது.]

73. தத் கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே ।
ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா ஶில்பநைபுணம் ॥

[எந்தக் கர்மம் பந்தத்திற்குக் காரணமல்லவோ அதுவே கர்மம்; எது முக்திக்குக் காரணமோ அதுவே வித்யை; மற்ற கர்மம் ஶ்ரமத்திற்கே. மற்ற வித்யை ஶில்பஶாஸ்த்ர பாண்டித்யம் போன்றதே.]

74. ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ
அநீஶயா ஶோசதி முஹ்யமாந: ।

---

70. கீதை (9-13). 72. வி. பு (6-5-87). 73. வி. பு (1-19-41).
74. ஶ்வேதா (4-7).

ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶம்
அஸ்ய மஹிமாநமிதி வீதஶோக: ॥

[வ்ருக்ஷம் போல் அழியக்கூடியதான ஒரே சரீரத்தில் அழுந்திக் கிடக்கும் ஜீவன் ப்ருக்ருதியினால் மயக்கப்பட்டு வருந்துகிறான்; (தன்னிடம்) பிரீதியடைந்தவனும் (தன்னைக் காட்டிலும்) வேறுபட்டவனுமான ஸர்வேச்வரனையும், அவனுடைய பெருமையையும் எப்போது காண்கிறானோ, (அப்போது) வருத்தம் நீங்கப் பெறுகிறான்.]

75. அஜாயமாநோ பஹுதா விஜாயதே । தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம் ।
[பிறப்பற்றவனாயிருந்தும் பலபடியாகப் பிறக்கிறான் (பரம புருஷன்); புத்திமான்களில் சிறந்தவர்களே அவனுடைய அவதாரத்தை நன்கு அறிகிறார்கள்.]

76. ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பாஹவ: பரிகோபமா: ।
ஸர்வபூஷணபூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா: ॥
[நீண்டவையும், உருண்டிருப்பவையும், இரும்புலக்கை போல் விளங்குபவையும், எல்லா ஆபரணங்களையும் அலங்கரிக்கத் தக்கவையுமான திருக்கைகள் ஏன் அலங்கரித்து (மறைத்து வைக்கப்) படவில்லை?]

77. மத்யம் பீத்வா குருதாராம்ஶ்ச கத்வா
ஸ்தேயம் க்ருத்வா ப்ரஹ்மஹத்யாஶ்ச க்ருத்வா ।
பஸ்மச்சந்நோ பஸ்மஶய்யாஶயநோ
ருத்ரத்யாயீ முச்யதே ஸர்வபாபை ॥
[கள்ளைக் குடித்தாலும், குருதாரகமனம் பண்ணினாலும், திருடினாலும், ப்ரஹ்மஹத்தி செய்தாலும், சாம்பலைப் பூசிக்கொண்டு, சாம்பலாலான படுக்கையில் படுத்துக்கொண்டு, ருத்ரனை நினைத்துக் கொண்டிருப்பானாகில் (முன் சொல்லப்பட்ட) எல்லா பாபங்களினின்றும் நீங்கப்பெறுகிறான்.]

78. அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ
[இந்த உலகிற்கெல்லாம் ஸ்வாமினியாகவும், விஷ்ணுவுக்குப் பத்னியாகவும் இருப்பவள்.]

---

75. புருஷஸூக்தம் உத்தராநுவாகம். 76. ரா-கி (3-15). 77. ஶாதாதபஸ்ம்ருதி. 78. நீளாஸூக்தம்; தைத்திரீயஸம்ஹிதை (4-4-12).

79. ராஜஸம்ஶ்ரயவஶ்யாநாம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா ।
விதேயாநாம் ச தாஸீநாம் க: குப்யேத் வாநரோத்தம ॥....
தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ தூர்ப்பலா ॥

[வானரச்ரேஷ்டனே! அரசனுகிய ராவணனை ஆச்ரயித்திருப்பவர்களும், அவனுக்கு வசப்பட்டிருப்பவர்களும், அவனுடைய ஆஜ்ஞைப்படி காரியங்களைச் செய்பவர்களும், (அவனுக்கு) அடங்கி நடக்கும் வேலைக்காரிகளுமான இந்த ராக்ஷஸிகளிடம் யார் கோபப்படுவார்?..... (பிறர் நோவு காணமாட்டாமையாகிற) தௌர்பல்யத்தையுடைய நான், ராவணனுடைய தாஸிகளான இவர்களின் குற்றத்தைப் பொறுக்கிறேன்.]

80. தேவர்ஷிபூதாப்தந்ருணாம் பித்ரூணாம்
ந கிங்கரோ நாயம் ருணீ ச ராஜந் ।
ஸர்வாத்மநா ய: ஶரணம் ஶரண்யம்
நாராயணம் லோககுரும் ப்ரபந்ந: ॥

[அரசனே! எவனொருவன் சரணமடையத்தகுந்தவனும், லோககுருவுமான நாராயணனை எல்லா விதத்திலும் சரணமடைந்தானே, அவன் தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பூதங்களுக்கும், பந்துக்களுக்கும், பித்ருக்களுக்கும் அடிமைப்பட்டவனல்லன்; கடன் பட்டவனுமல்லன்.]

81. யுவா குமார:

[யௌவனத்தையும், பால்யத்தையுமுடையவன் (ஸர்வேச்வரன்).]

82. யுவதிஶ்ச குமாரிணீ

[யுவதியாகவும், இளம்பெண்ணுகவுமிருப்பவள் (பிராட்டி).]

83. ஆத்மா வாऽரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ
மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: ।

[கேட்கத்தக்கதும், நினைக்கத்தக்கதுமான ஆத்மா தியானிக்கத்தக்கது; பார்க்கத்தக்கது.]

84. தமேவ தீரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத ப்ராஹ்மண: ।

[ஞானமுடையவர்களுள் சிறந்தவனான ப்ராஹ்மணன் அந்தப் பரமாத்மாவையே (ஶ்ரவணமனனங்களால்) அறிந்து த்யானம் செய்யக்கடவன்.]

---

79. ரா-யு (116-38 & 40). 80. பாக (11-5-41). 81. ருக்-அஷ்ட (2-8-25). 83. ப்ருஹ (6-5-6). 84. ப்ருஹ (6-4-21).

85. ஏதைர் நிமித்தைரபரைஶ்ச ஸுப்ரூ:
ஸம்போதிதா ப்ராகபி ஸாது ஸித்தை: ।
வாதாதபக்லாந்தமிவ ப்ரநஷ்டம்
வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ ॥

[அழகிய புருவமுடையவளான ஸீதா பிராட்டி, நன்மை தருபவையென்று முன்னமேயே ப்ரஸித்தமாயிருப்பவையுமான இந்த நிமித்தங்களாலும், மற்ற சில நிமித்தங்களாலும் உணர்த்தப் பட்டவளாய், மழையினாலும், வெயிலாலும் வாடி நசித்துப்போன விதை மழையினால் (ஸந்தோஷிப்பது) போல் ஸந்தோஷித்தாள்.]

86. ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாऽபயம் மயா ।
விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவண: ஸ்வயம் ॥

[வானரர்களுள் சிறந்தவனான ஸுக்ரீவனே! இவனை அழைத்துவா; விபீஷணனாயிருந்தாலும், ராவணன் தானேயாயிருந்தாலும், இவனுக்கு என்னால் அபயமளிக்கப்பட்டது.]

87. மத்பக்தம் ஶ்வபசம் வாபி நிந்தாம் குர்வந்தி யே நரா: ।
பத்மகோடிஶதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே! ॥

[பூதேவி! சண்டாளனாயிருந்தபோதிலும், என்னுடைய பக்தனை எந்த ஜனங்கள் நிந்தை செய்கிறார்களோ, அவர்களை கோடிக்கணக்கான பத்மகாலங்களானாலும் பொறுக்கமாட்டேன்.]

88. வத்யதாமேஷ தண்டேந தீவ்ரேண ஸசிவைஸ் ஸஹ ।
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண: ॥

[கடுமையான தண்டனையினால் மந்திரிகளுடன் கூட இவன் ஹிம்ஸிக்கப்படட்டும்; இந்த விபீஷணன் க்ரூரமானவனான ராவணனுடைய ஸஹோதரனன்றோ.]

89. தஸ்மாத் க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபிஸ் துல்யோ பவது ராகவ ।
விபீஷணோ மஹாப்ராஜ்ஞ: ஸகித்வம் சாப்யுபைது ந: ॥

[ராகவரே! ஆகையால் மஹாபுத்திமானான விபீஷணன் வெகு சீக்கிரம் நம்மோடு ஒருவனாக ஆகட்டும்; நம்முடன் நண்பனாயிருக்கும் தன்மையையும் அடையட்டும்.]

90. யதி த்வம் ப்ரஸ்திதோ துர்க்கம் வநமத்யைவ ராகவ ।
அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நதீ குஶகண்டகாந் ॥

85. ரா-ஸு (29-6). 86. ரா-யு (18-34). 87. வராஹபுராணம். 88. ரா-யு (17-29). 89. ரா-யு (18-38). 90. ரா-அ (27-6).

[ராகவரே! நீர் இன்றே செல்லவரிதான வனத்திற்குப் புறப்பட்டீரானால், தர்பைகளையும் முட்களையும் மிதித்து அழித்துக் கொண்டு நானும் உமக்கு முன்னால் செல்லுவேன்.]

91. பஹ்வேதத் காமயாநஸ்ய ஶக்யமேதேந ஜீவிதும் ।
யதஹம் ஸா ச வாமோரூரேகாம் தரணிமாஶ்ரிதௌ ॥

['நானும், அழகிய தொடைகளையுடைய ஸீதையும் ஒரே பூமியில் இருக்கிறோம்' என்னும் இதுவே விரஹதாபத்தினால் வாடும் எனக்குப் பெரிதாயிருக்கிறது; இதுவே (எனக்கு) உயிர் வாழவும் போதுமானது.]

92. ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:

[(பரமாத்மா) எல்லா கந்தங்களையுமுடையவன்; எல்லா ரஸங்களையுமுடையவன்.]

93. த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம ।
பரதேந மஹாபாஹோ! லக்ஷ்மணேந யவீயஸா ॥
ஶத்ருக்நேந ச ஶத்ருக்ந! ஸ்வஶரீரேண வா புந: ॥

[நீண்ட கைகளையுடைய ஸுக்ரீவனே! உனக்கு ஏதாவது அவமானம் நேர்ந்ததாகில், ஸீதையால் எனக்கு என்ன ப்ரயோஜனம்? பரதனாலும், இளையவனான லக்ஷ்மணனாலும், சத்ருக்னனாலும் என்ன ப்ரயோஜனம்? சத்துருக்களை அழிப்பவனே என்னுடைய சரீரத்தினால்தான் என்ன ப்ரயோஜனம்?]

94. அத ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம் ।
த்ருஷ்ட்வா ப்லவகஶார்தூலம் கோபஸ்ய வஶமேயிவாந் ॥

[பிறகு, மஹாதேஜஸ்வியான ராமன், ராவணனால் காயப்படுத்தப்பட்டவனும், வானரர்களுள் சிறந்தவனுமான ஹநுமானைப் பார்த்துக் கோபத்திற்கு வசப்பட்டான்.]

95. ஏஷ ஸர்வாயுதோபேதஶ் சதுர்ப்பிஸ் ஸஹ ராக்ஷஸை: ।
ராக்ஷஸோऽப்யேதி பஶ்யத்வமஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஶய: ॥

[எல்லா ஆயுதங்களையும் உடையவனான இந்த ராக்ஷஸன், நம்மைக் கொல்லுவதற்காக நான்கு ராக்ஷஸர்களுடன் கூட வருகிறான் பாருங்கள்; இதில் ஸந்தேஹமில்லை.]

---

91. ரா-யு (5-10). 92. சாந் (3-14-2). 93. ரா-யு (41-4). 94. ரா-யு (59-136). 95. ரா-யு (17-7).

96. யச்ச கிஞ்சிந்மயா லோகே த்ருஷ்டம் ஸ்தாவரஜங்கமம் ।
தத‌பஶ்யமஹம் ஸர்வம் தஸ்ய குக்ஷௌ மஹாத்மந: ॥
[உலகத்தில், அசைபவையும், அசையாதவையுமான எப்பதார்த்தங்கள் என்னால் பார்க்கப்பட்டனவோ, அவையெல்லாவற்றையும், அந்த மஹாபுருஷனுடைய திருவயிற்றில் நான் பார்த்தேன்.]

97. ஸாமாந்யலக்ஷ்யா வயம்
[நாங்கள் சாந்தமாகக் காணத்தக்கவர்கள்.]

98. ஏஷ ஹ்யேவைநம் ஸாது கர்ம காரயதி। தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி। ஏஷ ஹ்யேவைநமஸாது கர்ம காரயதி யமதோ நிநீஷதி ॥
[எந்த ஜீவனை (அண்டத்தினுள்ளிருக்கும்) இந்த லோகங்களிலிருந்து மேலே (பரமபதத்திற்கு) அழைத்துச்செல்ல விரும்புகிறானோ, அவனை இந்தப் பரமாத்மாவே நல்ல கர்மங்களைப் பண்ணும்படி செய்கிறான்; எவனைக் கீழே தள்ள விரும்புகிறானோ, அவனை இப்பரமபுருஷனே கெட்ட கர்மங்களைப் பண்ணும்படி செய்கிறான்.]

99. ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே ஹிரண்ய ஶ்மஶ்ருர் ஹிரண்யகேஶ ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: ।
தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ ॥
[ஸூர்யனுக்கு நடுவில் தங்கம்போல் அழகிய உருவையுடைய எந்த இந்தப் பரமபுருஷன் காணப்படுகிறானோ, அவன் ஸுவர்ணம் போன்று அழகான மீசையையும், கேசங்களையும் உடையவன்; நகத்திலிருந்து எல்லா அவயவங்களும் ஸுவர்ணமயமாயிருப்பவன்; அவனுக்கு ஸூர்யனால் மலரும் தாமரை போன்ற இரு கண்கள் உள.]

100. தஸ்மாதேவம்வித் ஶாந்தோ தாந்த உபரதஸ் திதிக்ஷுஸ் ஸமாஸமா ஹிதோ பூத்வா ஆத்மந்யேவாத்மாநம் பஶ்யேத் ।
[ஆகையால் இப்படி அறிபவன், உள்ளும், புறமுமிருக்கும் இந்திரியங்களை அடக்கினவனாகவும், (காம்யகர்மம் முதலியவற்றில்) ஆசையற்றவனாகவும், பொறுமையுடன் கூடியவனாகவும், கலங்காத மனத்தையுடையவனாகவுமிருந்துகொண்டு (தன்னுடைய) ஆத்மாவில் (அந்தர்யாமியாயிருக்கும்) பரமாத்மாவைப் பார்க்கக்கடவன்.]

---

96. பார-ஆரண்ய (160-124). 98. கௌஷீதகி (2-64 & 65). 99. சாந் (1-6 & 7). 100. ப்ருஹ (6-4-23).

101. மஹாதேவஸ் ஸர்வமேதே மஹாத்மா
ஹுத்வாத்மாநம் தேவதேவோ பபூவ।
ஸர்வாந் லோகாந் வ்யாப்ய விஷ்டப்ய கீர்த்யா
விராஜதே த்யுதிமாந் க்ருத்திவாஸா:॥

[மஹாத்மாவான மஹாதேவர் ஸர்வமேதமென்னும் யாகத்தில் தன்னுடைய ஆத்மாவை ஹோமம் செய்து தேவர்களுள் தலைவரானார்; யானைத்தோலை உடுத்திய அவர் எல்லா உலகங்களையும் கீர்த்தியினால் வியாபித்து, (எட்டு ரூபங்களை) தரித்து, மிகுந்த காந்தியுள்ளவராய் விளங்குகிறார்.]

102. அஸந்நேவ ஸ பவதி। அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்।
அஸ்தி ப்ரஹ்மேதி சேத்। வேத ஸந்தமேநம் ததோ விது:॥

[ப்ரஹ்மம் இல்லையென்று அறிந்தானாகில் அவன் இல்லாதவனாகவே ஆகிறான்; ப்ரஹ்மம் இருக்கிறதென்று அறிந்தானாகில், அக்காரணத்தினாலேயே இவனை இருக்கிறவனாக (நல்லோனாக) அறிகிறார்கள்.]

முதல் திருவந்தாதி வியாக்கியானப் பிரமாணத் திரட்டு முற்றிற்று.

பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

---

101. பார-சாந்தி (20-12). 102. தைத்-ஆந-6.

UNIVERSITY EXTENSION LIBRARY
7 OCT 1962
MADURAI

Edited, Printed & Published by K. Srinivasa Iyengar, at Srinivasam Press, No. 8, Puthur Agraharam, Tiruchirapally.